வெளியீடு—9—8—1970]
Issued—9—8—1970]

3 - OCT 1970

# தமிழ் நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, 1969 ஆகஸ்ட் 19

**Tuesday, 19th August 1969**

தொகுதி XXI—எண் 4

**Volume XXI—No. 4**

©
தமிழ் நாடு அரசு
1970

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்]
**Price, 50 Paise]**

## தமிழ்நாடு சட்டப்பேரவை.

---

*செவ்வாய்க்கிழமை, 1969 ஆகஸ்ட் 19.*

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

*" C. King International "*

* 21 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Commissioner of Police, Madras warned the people against the activities of C. King Internatinal, a British firm, about the 6th October 1968?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆம். இது ஒரு போலி கம்பெனி என்பது புலனாய்வின் மூலம் தெரியவந்தது. எனவே, பொதுமக்கள் பத்திரிகைக் குறிப்பு வாயிலாக எச்சரிக்கப் பட்டனர்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற இதுபோன்ற வெளிநாட்டு நிறுவனங்கள் பற்றி நடவடிக்கை எடுக்கும் முறையில் கண்காணிப்பைக் கடுமை யாக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? இந்தக் கம்பெனி மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு இழப்பு ஏற்பட் டிருக்கிறதென்றால் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது ஒரு போலி கம்பெனி என்று ஒய்.எம்.சி.ஏ. காரியதரிசியும் காப்பாளருமான திரு. சௌந்தரராஜன் அவர்கள் காவல் துறையினருக்குத் தகவல் அனுப்பினார்கள். அவர்கள் லங்காஸ்டரிலுள்ள போலீஸ் துறை யினருக்கு இது சம்பந்தமாக தகவல் கேட்டு எழுதினார்கள். அங்கு அப்படி ஒரு நிறுவனம் இல்லை என்று அவர்கள் தகவல் தெரிவித்தார்கள். எனவே, அதன்மீது நடவடிக்கை எடுக்கப் பட்டது. இதுபோன்ற நிறுவனங்கள்பற்றி காவல்துறை நட வடிக்கை எடுக்கும். ஒய்.எம்.சி.ஏ. காரியதரிசி தகவல் கொடுத் ததைப்போல் ஆங்காங்கே உள்ள பொதுமக்கள் அப்படி ஏதாவது தகவல் அனுப்பினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. வினாயகம் :** இந்தக் கம்பெனி போலி கம்பெனி என்ப தற்கு எந்த ஆதாரம் இருக்கிறது? அவர்கள் எந்தவிதமாக பொது மக்களை ஏமாற்றினார்கள்? ஏமாற்றப்பட்ட பொதுமக்கள் நேரடி யாக அரசுக்கோ அல்லது போலீஸ் கமிஷனருக்கோ தகவல் தெரி வித்திருக்கிறார்களா ?

V211,81 N69
N69.21.4-6

## உள்ளடக்கம்


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் .. .. .. .. .. | 227–253 |
| 2. பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகளை நீக்குவது குறித்து .. .. .. .. .. | 253 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்— | |
| (i) மதுரை மாவட்டத்தில் நிலவும் பஞ்ச நிலை .. | 253 |
| (ii) மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கோரி திரு. ம. பொ. சிவஞானம் அவர்களால் நடத்தப்பட இருக்கும் போராட்டத்தினால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை .. .. .. .. .. .. | 254–259 |
| 4. அவையுரிமைக் கேள்வி— | |
| 'நவசக்தி' நாளிதழ் மீது எழுப்பப்பட்ட அவையுரிமை கேள்வி .. .. .. .. .. .. | 259 |
| 5. கூடுதல் வினாக்களுக்கு விடையளித்தல் .. .. | 259–261 |
| 6. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969–70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி | 261–313 |
| 7. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 313 |

[1969 ஆகஸ்ட் 19,

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பி. கிங் இன்டர்நேஷனல்
என்ற பெயரால் விளம்பரம் செய்யப்பட்டு, அதிலே இரண்டு
பவுண்ட் கொடுத்து யாரும் பதிவு செய்துகொண்டால் அவர்
களுக்கு காமன்வெல்த் நாடுகளிலே வேலை வாய்ப்புத் தேடித்தரப்
படும் என்று அறிவித்தார்கள். அதைக் கண்ணுற்ற ஒய்.எம்.சி.ஏ.
காரியதரிசி லங்காஸ்டரிலுள்ள ஒய்.எம்.சி.ஏ. காரியதரிசிக்கு இது
பற்றி கடிதம் எழுதினார்கள். அவர்கள் அப்படி ஒரு நிறுவனம்
இல்லை, அது போலி நிறுவனம் என்று தகவல் கிடைத்ததும் காவல்
துறையினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் நட
வடிக்கை எடுத்தார்கள். இதுசம்பந்தமாக தமிழ்நாட்டு
மக்களுக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கைதானவர்கள்

**31 வினா—திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு முதல் அமைச்சர்
நயந்துசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இம்மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் 1966-67,
1967-68-ல் எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள்?

(இ) மதுவிலக்குக் கொள்கையினைத் தீவிரப்படுத்த அரசு
ஏதேனும் திட்டம் வகுத்துள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:**

| | |
|---|---|
| (அ) 1966-67 | |
| 1967-68 | 1,66,601 |
| | 2,10,061 |

(இ) மதுவிலக்குக் கொள்கை ஏற்கெனவே கண்டிப்பாகச்
செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. பெ. மலைச்சாமி:** தமிழகத்தில் பார்மசி என்ற முறையில்
லைசன்ஸ் பெற்றுக்கொண்டு மதுக் கஷாயங்கள் அதிகமாக விற்பனை
ஆகிக் கொண்டிருக்கின்றன. எனவே, அதற்காக வழங்கப்படு
கின்ற லைசன்ஸை அரசு ரத்து செய்யுமா, அல்லது மதுவிலக்கை
ரத்து செய்யுமா என்று பொதுமக்கள் சந்தேகப்படுகிறார்கள்.
பொதுமக்கள் கருத்தை இந்த அரசு மதிக்கிறதா என்று அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இது மத்திய அரசினுடைய
டிரக்ஸ் ஆக்டின் கீழ் வருகிறது. ஆகவே, தமிழக அரசுக்கு இதை
ரத்து செய்ய அதிகாரம் இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மதுவிலக்கு சம்பந்தமாகக் கேள்வி
கள் எழுப்பப்படுகின்ற போதெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள்
இது ஒரு கேள்விக்குறியாகவே இருக்கிறது என்று பதில் சொல்லு
கிறார்கள். பொதுமக்களிடையே மதுவிலக்கு ரத்து செய்யப்படுமா
என்ற சந்தேகம் எழுகின்ற காரணத்தினால், இந்த மாநிலத்திலே
மதுவிலக்கை அமல் படுத்துவது பற்றி திட்டவட்டமான கொள்
கையை இங்கே முதல் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?



1969 ஆகஸ்ட் 19]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மதுவிலக்கைப்பற்றிய
கேள்விகள் கேட்கப்படுவதாலே இது கேள்விக் குறியாகவே இருக்
கிறது என்று குறிப்பிட்டேன். அரசாங்கத்தினுடைய
கொள்கை இதைத் தீவிரப்படுத்தவேண்டும் என்பதுதான். ஆனால்
இந்தியாவிலே குஜராத், தமிழகம் இந்த மாநிலங்களைத்தவிர,
மற்ற மாநிலங்களிலெல்லாம் மதுவிலக்கு தளர்த்தப்பட்டுவிட்டது.
நான்கு பக்கம் வேடர்கள் சூழ்ந்திட நடுவில் அகப்பட்ட மான்
போல் எல்லா இடங்களிலும் மதுவிலக்குத் தளர்த்தப்பட்டு நம்
முடைய மாநிலம் மட்டும் அதைத் தீவிரமாக கண்காணித்து திட்ட
வட்டமாக தீவிரமாக நடத்தவேண்டுமென்ற எண்ணம் கொண்டி
ருக்கிறது. இந்த மதுவிலக்குக் காரணமாக 40 கோடி ரூபாய் நம்
அரசு இழந்திருக்கிறது. இதனால்தான் மத்திய அரசு இந்த
மாநிலத்தைப் பாராட்டுகின்ற வகையில் மதுவிலக்கு தீவிரப்
படுத்துவதால் ஏற்படுகின்ற இழப்பிற்கான 40 கோடி ரூபாய்
கொடுக்காவிட்டாலும்கூட அதில் பாதியான 20 கோடி ரூபாய்
ஆவது உதவித் தொகையாகவோ அல்லது பரிசுத் தொகையாகவோ
தருவார்களானால், மதுவிலக்கு இன்னும் தீவிரமாக அமல் படுத்த
வேண்டும் என்ற அக்கறை ஏற்படும். இப்போதே தீவிரமாக
அமல் படுத்திக்கொண்டு வருகிறோம். இதுசம்பந்தமாக நமக்கு
ஏற்படுகின்ற பல கோடி ரூபாய் இழப்பை மிக வருத்தத்துடன்
நாம் தாங்கிக்கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. பி. எஸ். மணி:** இந்த பார்மசி என்ற பெயரால் மதுக்
கஷாயம் தயாரிக்கப்பட்டு குக்கிராமங்களிலுள்ள மக்கள் அதிக
மாகக் குடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இதன் காரணமாக கண்
பார்வை இழக்கவும், மூளைக்கோளாறும் ஏற்படுகின்றன. இது
நமது கொள்கையை அழித்துவிடக்கூடிய நிலைமையில் இருக்
கிறது. எனவே இதை மத்திய அரசு டிரக்ஸ் ஆக்டிலிருந்து
எடுத்துவிடவேண்டும் அல்லது நமது அரசாகிலும் இதைக் குடிக்கக்
கூடாது என்று உத்திரவிடுவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** கனம் அங்கத்தினர் அவர்
களுடைய உணர்வை நாம் அனைவரும் பெற்றிருக்கிறோம். இந்த
உணர்ச்சியை மத்திய அரசு புரிந்துகொண்டு உடனடியாக நட
வடிக்கையில் இறங்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. என். கிட்டப்பா:** தென்னை மரத்திலிருந்து பதனீர் இறக்
குவதற்கு லைசன்ஸ் பெற்றுக்கொண்டு பதனீர் இறக்காமல் கள்
இறக்குவதாகத் தகவல் வந்திருக்கிறதா? அதன் மீது அர
சாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இது சம்பந்தமாக காவல்
துறையினரிடமிருந்து தகவல் வந்தது. வந்ததன் காரணமாகத்
தான் அதை ரத்து செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** தலைவர் அவர்களே,
அரசாங்கத்திற்கு இதனால் ஏற்படுகின்ற இழப்பைவிட பல மடங்கு
லாபம் குடிசைத் தொழிலுக்கு ஏற்படுகிறது. போலீசார்

[1969 ஆகஸ்ட் 19

## கலைக் கல்லூரிகளில் மாணவர்கள் தேர்வு.

*22 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :**
**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1968-69-ம் கல்வி ஆண்டில் அரசினர் கலைக் கல்லூரிகளில் மாணவர்கள் எந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தகுதித் தேர்வில் பெற்றுள்ள மதிப்பு எண்களைக் கொண்டு, திறமை அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் பாடத் திட்டப் புறச் செயல்களான விளையாட்டுகள், விளையாட்டுப்போட்டிகள், சாரணர் படை, தேசிய மாணவர் படை ஆகியவற்றில் சிறப்புத் திறன் பெற்றிருப்பவர்களுக்குக் கூடுதல் மதிப்பெண்களோ அல்லது உயர்நிலையோ கொடுத்துத் தனிச் சலுகை அளிக்கப்பட்டது. கல்லூரி அமைந்துள்ள இடத்தின் சுற்றுப்பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கும் ஓரளவு சலுகை அளிக்கப்பட்டது. அரிசனங்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர் சார்ந்த மாணவர்களுக்கு இடம் ஒதுக்குவது பற்றிய பொது விதிக்கு உட்பட்டே, மேற்கூறிய கோட்பாடுகள் கடைப்பிடிக்கப்பட்டன.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, இப்பேர்ப்பட்ட தகுதிகளுக்கு மாணவர்கள் வருவார்களே, அவர்கள் எந்த அடிப்படையில் கல்லூரிகளில் சேர்க்கப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதிகப்படியான மாணவர்கள் வந்திருக்கும் காரணத்தினாலே ஒரு முறை வகுத்து, அந்த முறைக்கு உட்பட்டு, அது நியாயமாகவும் பட வேண்டும், நேர்மையாகவும் பட வேண்டும் என்பதற்காக இந்த முறை கையாளப்பட்டு வருகிறது. 1968-69-ம் ஆண்டிலும், 1969-70-ம் ஆண்டிலும் இந்த முறைதான் கையாளப்பட்டு வருகிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, மதுரை அரசாங்க மீனாட்சி கல்லூரியில் மாணவிகளைச் சேர்க்கிறபோது, மதுரை மாவட்டத்தில் உள்ளவர்களைத்தான் சேர்ப்போம், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளவர்களைச் சேர்த்துக்கொள்ள முடியாது, மதுரை மாவட்டத்தில் இருக்கிறவர்களுக்கு இடம் கொடுத்தது போக, மீதி இருந்தால்தான் சேர்ப்போம் என்று பிரின்ஸிபால் சொல்லுகிறார்கள். அரசாங்கம் அதுமாதிரி உத்தரவு பிறப்பித்திருக்கிறதா? அப்படிப் பிறப்பித்திருந்தால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அரசாங்கம் மகளிர் கல்லூரி ஏற்படுத்த உத்தேசம் உண்டா?



1969 ஆகஸ்ட் 19]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தரவு ஒன்றும் அரசாங்கம் வெளியிடவில்லை. நான் முதலில் எடுத்துச் சொல்லியது போன்று, திறமை அடிப்படையில், அவர்கள் எடுத்திருக்கும் மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவ மாணவியர்கள் சேர்க்கப்படுகிறார்கள். ஆனால், குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த மாணவர்களாக இருந்தால் அவர்களுக்கு பத்து எண்கள் அதிகமாகத் தரவேண்டும் என்ற முறையும் தேவைப்படுகிறது. ஏனென்றால், குறிப்பாக தர்மபுரியில் கல்லூரி இருக்கிறது, கிருஷ்ணகிரியில் கல்லூரி இருக்கிறது என்றால் அந்த இடத்திலே இருக்கிறவர்களுக்குச் சலுகை தராமல் வெளி இடங்களிலிருந்து வந்த மாணவர்கள் அந்த இடத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பதற்காகத்தான் சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் 10, 15 மார்க்குகள் கூடச் சேர்த்து, ஆனால், சேர்த்துக் கொள்ளுவதற்குள்ளவர்களை வரிசையாகப் போட்டு, அதன்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால், மாவட்ட அளவில் எந்த மாவட்டமும் புறக்கணிக்கப்படவில்லை. பெண்கள் கல்வியைப் பொறுத்த வரையில், பெண்கள் கல்வி வசதி குறைவாக இருந்து, அங்கு பெண்கள் கல்லூரி வேண்டுமென்று விண்ணப்பித்து, அதற்கு அடிப்படியாக மேற்கொள்ள வேண்டியவைகள் நிறைவேற்றப்பட்டு, அதற்கு அவரவர்கள் செய்யவேண்டிய வசதிகளைச் செய்து, ஐந்து இலட்சம் ரூபாயும் கட்டுவார்களானால், அதுபற்றி அரசாங்கம் தக்க முடிவு எடுக்கும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, it was stated that last year English medium sections were not provided in the Government Arts College, Madras, and that on that account many non-Tamil students were not admitted. If this is a fact, will the Hon. Minister be pleased to state whether this inconvenience has been removed and non-Tamil students admitted this year in the Government Arts College, Madras?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தமிழ் தெரியாத பிற மொழி மாணவர்களுக்கு இடம் ஒதுக்கப்படுகிற வகையிலே தமிழகத்தினுடைய எல்லைப் புறங்களில் சில கல்லூரிகளிலும், சென்னையிலுள்ள கலைக் கல்லூரியிலும் அவர்களுக்கென்று போதுமான இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய எண்ணிக்கை கொஞ்சம் அதிகமாக இருந்திருக்கிறது. மற்ற விகிதாசார அளவிலே கணக்கிடும்போது, எவ்வளவுக்கெவ்வளவு தேவைப்படுகிறதோ, அந்த அளவுக்கு உயர்த்தலாம். அந்த அளவு முந்தைய ஆண்டு விகிதாசாரத்தின் அடிப்படையில் அவர்களுக்கு இடங்கள் ஒதுக்கித்தரப்பட்டிருக்கின்றன.

**திரு. நா. கிருட்டிணன் :** சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் மட்டுமே புள்ளியியல் பிரிவு இருக்கிறது. அத்தகைய பிரிவை அங்கே மட்டுமே வைக்கின்றபோது, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி, அதிகப்படியாக மதிப்பெண்கள் பெற்று, சென்னையில்

நேர்மையானவர்கள் இந்த நாட்டில் இல்லாத அளவிற்குத் தொல்லை
கள் கொடுத்துவருகிறார்கள் என்பதை அரசு அறியுமா ? அரசாங்
கம் அதற்காக நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படிப் பொதுப்படை
யாகச் சொல்வதை விட்டுவிட்டு எங்கெங்கே நடக்கிறது என்ற
விவரங்களை உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களானால், இதைப்
பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

(திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது கேள்வி போட
வேண்டியதில்லை. தனியாக எழுதி அனுப்பினால் நடவடிக்கை
எடுக்கப்படும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதுவிலக்குக் காரணமாக
போலீசார்களின் தரம் போய்விட்டது என்பதை முதல் அமைச்சர்
அவர்கள் அறிவார்களா ? குறிப்பாக என்னென்ன எங்கே நடந்
தது என்பதை விட . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதே கேள்வியைத்தான் திரு.
கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்களும் கேட்டார்கள். முதல் அமைச்
சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆகவே, அந்தக் கேள்வியை
மறுபடியும் போடவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இதன் காரணமாக விவசாயி
கள், ஏழைத்தொழிலாளிகள் இவர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள்.
இதற்காக 20 கோடி ரூபாய் வேண்டுமென்று மத்திய அரசைக்
கேட்கும்போது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்க வேண்
டும், இல்லாவிட்டால் மதுவிலக்கை ரத்துசெய்வோம் என்று ஒரு
கால அளவு கொடுக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நம்முடைய கஷ்டங்கள்
மிகவும் அதிகமாகிறவரையில்.

THIRU T. MARTIN : Sir, May I request the Hon. Minister
to state whether the Government have granted permit to Hotels
and Lodging Houses in the city of Madras to run Bars where
they give liquor to the visitors who go there?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது அப்படிப்பட்ட
உத்தேசம் எதுவும் இல்லை.

**திரு. க. மு. ராசகோபால் :** தலைவர் அவர்களே, மது விலக்குச்
சட்டம் இருந்தாலும், பணக்காரர்கள் லைசன்ஸ் பெற்றுக் குடிக்
கிறார்கள். ஆனால், ஏழை மக்கள் குடித்தால் தண்டிக்கப்படு
கிறார்கள். அப்படி இலட்சக்கணக்கில் வழக்குகள் போடப்
பட்டிருக்கின்றன. வாலாஜாபாத் வட்டாரத்தில் வார்னிஷ்
கடை என்ற பெயரில் ஒருவர் லைசென்ஸ் பெற்று வைத்திருந்த



கடையில், வார்னிஷை வாங்கிக் குடித்து பல பேர்கள் இறந்துவிட்
டார்கள். மீண்டும் அந்த நபருக்கு மூன்று இடங்களில் லைசென்ஸ்
கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த லைசன்ஸ் மாநில சர்க்காரால்
கொடுக்கப்பட்டதா ? அல்லது மத்திய சர்க்காரால் கொடுக்கப்
பட்டதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படித் தவறு நடந்த
இடமும், அந்த நபரும் யார் என்பதை மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்
படும்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, மத்திய அரசு
கொடுக்கின்ற சலுகையைப் பொறுத்து மது விலக்குச் சட்டத்தைத்
தீவிரமாக அமல் படுத்துவது அமையும் என்று முதலமைச்சர் அவர்
கள் கூறினார்கள். இப்பொழுது மது விலக்குக் குற்றங்கள் அதி
கரித்தாலும், அதன்பேரில் போலீஸ் நடவடிக்கை மந்தமாக இருப்
பதற்கு அதுதான் காரணமாக இருக்கிறதா என்று அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மதுவிலக்குக் குற்றங்கள்
அதிகரிக்கும் நேரத்தில் போலீஸ் மந்தமாக இருக்கிறது என்று
கூறுகிற மாண்புமிகு உறுப்பினருடைய வாதம் சரியல்ல.
ஏனென்றால், 1967-68-ம் ஆண்டிலே 2,10,061 பேர்கள் கைது செய்யப்
பட்டிருக்கிறார்கள். 1968-69-ம் ஆண்டிலே 2,88,000 பேர்கள்
கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, போலீஸ் மந்தமாக
இருக்கிறது என்று சொல்ல முடியாது. மீறிக் குடிப்பவர்கள்
அதிகமாகிக்கொண்டு வருகிறார்கள் என்பதையும் நாம் மறுப்பதற்
கில்லை. மது விலக்கைப் பொறுத்து, மத்திய சர்க்காரிடமிருந்து
சலுகையைப் பெற்றுத்தான் செய்ய வேண்டும் என்று நான்
கூறியதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்
கள். இந்தியாவில் காங்கிரஸ் கட்சி பல்வேறு மாநிலங்
களிலும் இன்றையதினம் ஆட்சி புரிந்து வருகிறது. இதற்கு
முன்பு, ஒன்றிரண்டு மாநிலங்களைத்தவிர, எல்லா மாநிலங்களிலும்
காங்கிரஸ் அரசாட்சி புரிந்து வந்தது. ஆனால், அந்தக் காலங்
களிலெல்லாம், தங்களுடைய வழிகாட்டியும், தங்களுடைய பெருந்
தலைவருமான உத்தமர் காந்தியடிகள் அவர்கள் சொன்ன கொள்
கையை இந்தியா முழுவதிலும் அமல் படுத்துவதற்கு முயற்சி
எடுக்கிற வாய்ப்பு இருந்தபோதே, பல்வேறு மாநிலங்களில்
தளர்த்துவதற்கு விட்டுவிட்ட காரணத்தால், தமிழ்நாட்டிலே மது
விலக்குக் கொள்கையை நாம் எவ்வளவுதான் தீவிரமாக அமல்
நடத்தமுயன்றாலும், மாண்புமிகு நண்பர்கள் குறிப்பிட்டதுபோல,
பல்வேறு இடங்களில் அணை உடைத்து தவறுகள் நடைபெறுகின்ற
காட்சியை நாம் கண்டு வருகின்றோம். அதைத்தான் குறிப்
பிட்டேன்.

உள்ள மாணவர்கள் மட்டும் சேர்க்கப்படுகிறபோது, மற்ற பகுதி களிலிருந்து வரும் மாணவர்கள், பாதிக்கப்பட மாட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 'அதிகப்படியாக' என்னும்போது மிக அதிகமாக ஆகாது. 10 எண்கள், 15 எண்கள் என்ற அளவிலேதான் அமைய முடியும். இப்படிப்பட்ட பள்ளி யியல் வகுப்பினுடைய தேவையை ஆராய்ந்து இதனைக் கூட்டு வதற்கான வழிமுறைகள் தேவைப்படுமானால், முறைப்படி இயக்கு நர் ஆராய்ந்து அதற்கு வழிவகை செய்யலாம். அதுவரையில் மதிப்பெண்கள் கொடுக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. இதனால் பிற இடங்களிலிருந்து வருகிற மாணவர்கள் மிகு அதிகமாகப் பாதிக்கப்படும் நிலை ஏற்படாது.

**திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வில் குறைந்த மார்க் பெற்று தேர்வு பெற்றுள்ள மாணவர்கள் கல்லூரிகளில் சேர முன்வரும்போது, அவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. அதிக மார்க் பெற்றுள்ளவர்களுக்கே இடம் கிடைக்கிறது. ஆகவே, உயர்நிலைப்பள்ளித் தேர்வில் வெற்றிபெறும் மாணவர்களுக்குரிய மார்க்கை அதிகரிக்கும் உத் தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மார்க்குகள் இப்படித்தான் போடவேண்டும் என்று உத்தரவிடும் அதிகாரம் அரசுக்கு இல்லை. அரசு அதில் தலையிடவும் கூடாது. ஆகவே, திறமையின் அடிப்படையில் பார்க்கும்போதும், வேறுபல சூழ்நிலைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போதும், மதிப்பெண்தான் இதற்கு அளவுகோலாக அமைகிறது. எல்லாப் பேராசிரியர்களும், கல்வித்துறையினரும் எந்தெந்த வகைகளில் மாணவர்களைப் பரிட்சித்தால் திறம்பட தேர்வை நடத்தமுடியும் என்று ஆராய்ந்து கொண்டுதான் வருகிறார்கள். பட்டமளிப்பு விழாச் சொற் பொழிவுகளிலும் கூறிந்தான் வருகிறார்கள். இறுதியாக, தேர்வு எண்ணைத்தான் அடிப்படையாக வைத்துக்கொண்டு கணக்கிட வேண்டியிருக்கிறது. குறைந்த எண் உடையவர்களை எடுத்துக் கொண்டால் நிறைந்த எண் வாங்கினவர்கள் விட்டுவிடப்பட வேண்டியவர்களாக இருப்பார்கள். அதிலே இருக்கும் அநீதி அதிக மாக மக்களுக்குப் படும். அதுவேதான், அதிக மதிப்பெண் பெற்றி ருக்கும் மாணவர்கள், திறமையின் அடிப்படையில் சேர்க்கப் படக்கூடிய தன்மை இருந்துகொண்டிருக்கிறது. குறைந்த எண்ணிக்கை மதிப்பெண் பெற்றிருக்கிறவர்களுக்கும் இடம் கிடைக்கவேண்டும் என்பதற்காகத்தான் அதிகமான கல்லூரிகள் ஆரம்பிக்கும் முயற்சி இந்த ஆண்டும், சென்ற ஆண்டும் எடுக்கப் பட்டு வருகிறது. முதலில் 11 கல்லூரிகளும், சென்ற ஆண்டு 12 கல்லூரிகளும், இந்த ஆண்டு கிட்டத்தட்ட 9, 10 கல்லூரிகளும் அதிகமாக ஏற்படுத்தும் சூழ்நிலை பெருகிக் கொண்டிருக்கிறது. அதிகக் கல்லூரிகளைப் பெருக்குவது இந்தப் பிரச்சனையை நாம் ஓரளவு நிவர்த்திக்க வழிவகை செய்வதாக அமையும்.



**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கோவை யிலிருக்கும் அரசினர் கலைக் கல்லூரியில் பி.காம்., பி.எஸ்ஸி., வகுப்புக்கு திருப்பூர், திருப்பூரைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து செல்லும் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுவது கிடையாது. திருப்பூர் பகுதியில் பி.காம்., பி.எஸ்ஸி. படிப்பதற்குக் கல்லூரி கிடையாது. இதைக் குறித்து, கோவை அரசினர் கலைக் கல்லூரி முதல்வரைச் சந்தித்து விசாரித்ததில், கோவையிலும், கோவையைச் சுற்றியிருக்கும் பகுதிகளிலும் உள்ளவர்களுக்கு பத்து மார்க் சேர்த்துக் கொள்ளுகிறார்களே தவிர, மற்ற இடங்களில் உள்ளவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியாமற் போகிறது. இதனால், திருப்பூர், திருப்பூரைச் சுற்றியுள்ள பகுதியில் இருக்கிறவர்கள் பட்டப் படிப்புக்கு கோவை செல்லக்கூடிய நோத்தில் பாதிப்பு ஏற்படுகிறது. அடுத்த கல்வி ஆண்டிலாவது அப்படிப்பட்ட பாதிப்பு வராமல் இருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கூறியது கவனத்தில் கொள்ளப்பட்டு, அதற்கு என்ன வழிவகை செய்யலாம் என்பது முறைப்படி ஆராயப் படும்.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய அடிப்படையில் திறமையாக இருக்கின்ற மாணவர்களுக்கும் கூட கோவையில் இருக்கும் கலைக் கல்லூரியில் இடம் கிடைப்ப தில்லை. அந்த நிலையைப் போக்க உடனடியாக ஏதாவது நட வடிக்கை எடுத்தால், தற்சமயம் இடம் கிடைக்காமல் இருக்கும் மாணவர்களுக்கு இடம் கிடைக்க உதவியாக இருக்கும். ஆகவே, அதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார் களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கோவையில் அரசினர் கல்லூரி இருக்கிறது. திருப்பூரில் அரசினர் கல்லூரி இருக்கிறது. மற்ற இடங்களில் தனியார்க் கல்லூரிகள் தான் இருக்கின்றன. தனியார்க் கல்லூரியில் சேர்த்துக்கொள் வது அவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. கட்டுதிட்டங் களை அவரவர்கள் வகுத்துக்கொண்டு அதன்படி சேர்த்துக் கொள்ளுகிறார்கள். கோவை, சேலம் போன்ற இடங்களில் ஒரே அரசாங்கக் கல்லூரி இருப்பதால் நெருக்கடி இருக்கிறது. இந்தக் கணக்கு கலைக் கல்லூரியோடு நின்றுவிடுகிறது. தனியார்க் கல்லூரியில் சேர்க்கப்படும் கணக்கு இதில் வரவில்லை. நெருக் கடியைத் தவிர்க்க என்ன செய்யலாம் என்பதை முறைப்படி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

*Drinking water supply to Sriperumbudur Panchayat.*

*23 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minis-
ter for Education and Health be pleased to state whether there is
any proposal with the Government to provide protected drinking
water supply to Sriperumbudur Panchayat in Chingleput district?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. கே. விநாயகம் :** ஸ்ரீபெரும்புதூர் பஞ்சாயத்து போர்டு அங்கே இருக்கிற பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வேண்டும் என்று பல ஆண்டுகளாக முயற்சித்தும், இன்னும் அதற்கு வேண்டிய முறையிலே எதுவும் ஏற்பாடு செய்யப்படவில்லை என்பதை அரசாங்கம் அறியுமா? அங்கிருந்து வேண்டுகோள் வந்திருந்தும் கூட, அதற்குப் போதிய அளவுக்கு பணத்தை ஒதுக்கிவைக்க, அதை நிறைவேற்றவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியிருந்தால் எப்பொழுது அதைப் பற்றி பரிசீலிப்பார்கள்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நகரக் குடிநீர் வழங்கும், கழிவு நீர் அகற்றும் திட்டம் என்பதன் கீழ், அதாவது அர்பன் வாட்டர் சப்ளை அண்டு டிரைனேஜ் ஸ்கீம் என்பதன் கீழ் ஸ்ரீபெரும்புதூர் அடங்காது. ஏனென்றால் 10,000 மக்களுக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்டிருக்கிற பேரூராட்சி மன்றங்கள்தான் இதில் அடங்கும். ஸ்ரீபெரும்புத்தூரில் மக்களின் எண்ணிக்கை 7,085 ஆக இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட ரூ. 12½ கோடி தான் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு ஒதுக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படக்கூடும். அதில் பெரிய திட்டங்கள் 31 திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன. அதற்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், அதற்கு மேல் பணம் கிடைக்கிற வாய்ப்பைப் பொறுத்துத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். ஸ்ரீபெரும்புதூர் அந்த 31 திட்டங்களுக்குள் அடங்காது. ஸ்ரீபெரும்புதூர் மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு இப்பொழுது நான்கு மேல்நிலை தொட்டிகள் இருக்கின்றன. அங்கே மற்றொரு மேல்நிலைத் தொட்டி வேண்டும் என்று ஒரு தீர்மானம் போட்டு 1966-ம் ஆண்டில் ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி மன்றம் அனுப்பிவைத்திருக்கிறார்கள். அதற்கு எவ்வளவு பணம் வேண்டும் என்பதைப் பற்றி அவர்கள் குறிப்பு ஒன்றும் அனுப்பவில்லை. அதை மீண்டும் அனுப்பிவைத்தால் ஐந்தாவது தொட்டி அமைப்பதற்கு என்ன வழி செய்யலாம் என்பது பற்றி ஆராயலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி மன்றத்தைப் பற்றிய கேள்வி. திரு. முனு ஆதி அவர்கள்.

**திரு. முனு ஆதி :** தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி மன்றம் முதல்தர ஊராட்சி மன்றம் என்ற அடிப்படையில் இருக்கிறபொழுது, செங்கற்பட்டு மாவட்டத்தில் எத்தனையோ ஊராட்சி மன்றங்களுக்கு இப்படிப்பட்ட திட்டங்கள் போட்டு அரசாங்கத்தில் தயாராக இருக்கின்றனவா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவேண்டும்.



**திரு. கே. விநாயகம் :** ஸ்ரீபெரும்புதூர் நகரத்தில் போதிய அளவுக்கு மக்கள் தொகை இல்லை. அதற்காக நாங்கள் அந்த ஊருக்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் கொடுக்கமாட்டோம்' என்ற ஒரு கொள்கை வைத்திருந்தால், அங்கு பொது மக்களுக்கு எப்படித்தான் நல்ல தண்ணீர் கிடைக்கும்? அது ஒரு யாத்திரிக ஸ்தலமாக இருப்பதால் அதைவிட அதிகமாக பொதுமக்கள் ஆண்டு தோறும் அங்கே வந்து போகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? மேல் நிலைத் தொட்டி, அதாவது ஓவர் ஹெட் டாங்கு இருக்கிறது என்று சொன்னால், அந்த இடத்திலே இருக்கும் ஏரியிலிருந்து பாதுகாக்கப்படாத தண்ணீரை அங்கே கொண்டு வந்து கொட்டி, மக்களுக்கு தண்ணீர் தருகிறார்கள். அதுவும் இப்பொழுது அந்த ஏரி வற்றிப்போய்விட்ட காரணத்தினால் தண்ணீர் இல்லை. மக்கள் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் அவதிப்பட்டு, இந்த அரசாங்கத்தின் மீது பழி போடுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அர்பன் வாட்டர் சப்ளை அண்டு டிரைனேஜ் ஸ்கீம் என்பதன் கீழ் ஸ்ரீபெரும்புதூர் பொருந்தி வராது என்றுதான் கூறினேன். ஆனால், இந்தத் திட்டம் பொருந்தி வருகிற இடங்களில் மட்டும் தான் குடிநீர் வழங்கப்படும், வேறு இடங்களில் குடிநீர் வழங்கப்பட மாட்டாது என்பது கொள்கை அல்ல. சிற்றூர்களிலும், சேரிகளிலும் குடிநீர் வழங்குவதற்கு பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. ஸ்ரீபெரும்புதூர் குடிநீர் வழங்குவதற்கு நான்கு மேல்நிலை தொட்டிகள் ஏற்கனவே நான்கு பகுதிகளில் இருக்கின்றன. ஐந்தாவது மேல்நிலைத் தொட்டி வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு எவ்வளவு வேண்டும் என்று கேட்கவில்லை, அதற்கு பிரபோஸல்ஸ் அனுப்பவில்லை. அது முறைப்படி வருமானால் கவனிக்கப்படும் என்று சொன்னேன். ஆகவே, இந்த அரசாங்கத்தின் மீது எந்தப் பழியும் இல்லை. இது தொடர்ந்து இருந்து வருகிற பழியே தவிர, புதிய பழி இல்லை.

## வீட்டுமனைகள் ஒப்படை

* 32 வினா.—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பி.என். பட்டி பஞ்சாயத்து, வீரக்கல் புதூர் பஞ்சாயத்துக்களுக்குட்பட்ட கவிபுரம், தேசாய் நகர், ராமமூர்த்தி நகர், கருமலைக்கூடல், சாம்பள்ளி போன்ற ஊர்களில் இருக்கும் வீட்டுமனைகளை அவைகளில் வீடு கட்டிக் குடியிருக்கும் வீட்டில் உரிமையாளர்களுக்கு பட்டா செய்து கொடுப்பது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கருமலைக்கூடல், தெங்கல்வாரை கிராமங்களில் நிலம் வெளியவர்களின் அனுபோகத்தில் உள்ள நிலங்கள், ரயிலடியிலிருந்து ½ மைலுக்குள் அமைந்தி

ருப்பதால், அவை தடை ஆணைப் புத்தகத்தில் பதிவாகியுள்ளன. கனிபுரம், ராமமூர்த்தி நகர், தேசாய் நகர் கிராமங்களில் வவ்வுதல் செய்தவர்களின் அனுபோகத்தில் உள்ள நிலங்களும், நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டிருப்பதால், அவையும் தடை ஆணைப் புத்தகத்தில் பதிவாகி உள்ளன. எனவே, பி.என். பட்டி ஊராட்சி எல்லைக்குள் நிலம் எதுவும் வவ்வுதல்காரர்களுக்கு ஒப்படை செய்து தரப்படமாட்டாது.

வீரக்கல்புதூர் ஊராட்சியில் உள்ள சாம்பள்ளி கிராமத்தைப் பொறுத்தவரையில், 343 வீடுகள் கட்டப்பட்டிருக்கும் நிலங்கள் தீர்வை விதிக்கப்பெற்ற தரிசுப் புன்செயாகவும், வண்டிப் பேட்டை புறம்போக்குகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந் நிலங்களை கிராம நத்தப் புறம்போக்குக்கு மாற்றி அனுபோகதார்களுக்கு அடுத்து ஒப்படை செய்வதற்காக சேலம் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார். இந்தக் கிராமத்தில் உள்ள மற்ற வீடுகள் நெடுஞ்சாலையிலும், ஓடையிலும் அமைந்துள்ளன. எனவே, இவை மறுப்பிற்குரியனவாகக் கருதப் படுகின்றன.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, இதில் குறிப்பிட்டிருக்கிற எல்லா கிராமங்களும் 30, 40, 50 வருஷங்களுக்கு மேலாக குடியிருந்து வருகிற கிராமங்களாகும். இந்தப் பிரதேசத்திலிருக்கிறவர்கள் மேட்டூர் அணை கட்டுகிறபொழுது அங்கே தண்ணீர் தேக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டு இங்கே குடியேறியிருக்கிறார்கள். ஆகவே, அதில் எந்தவிதமான தடைகள் இருந்தாலும், அதை ஊர்நத்தமாக மாற்றி, உடனே அவர்களுக்கு அந்த இடங்களை பட்டா செய்து தருவதற்கான ஏற்பாடுகளை மேலும் இந்த அரசாங்கம் நடத்தி வைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நிலம் இல்லாத ஏழை மக்களுக்கு நிலம் ஒப்படை செய்யவேண்டும் என்பதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிற அக்கறையைக் காட்டிலும் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிற அக்கறை கொஞ்சம் கூட குறைவானது அல்ல. ஆனால், சில வரம்புமுறைகள் இருக்கின்றன, சில சட்டதிட்டங்கள் இருக்கின்றன புறம்போக்கு நிலங்களைப் பற்றி. அவற்றிற்குட்பட்டுத்தான் எந்த அரசாங்கமும் செயல்பட வேண்டும். ஏழைகள், ஏழைகள் என்று சொல்லிக் கொண்டு இருக்கிற இடங்களையெல்லாம் போய் ஆக்கிரமித்துக் கொண்டால், ஏழை பங்காளிகள் என்று சொன்னால், ஒருநாளும் இந்த அரசாங்கம் அதை ஒத்துக்கொள்ளவில்லை. இப்பொழுதுள்ள விதிமுறைகளின்படி ரயில்வே ஸ்டேஷனுக்கு அரை மைல் தொலைவிலுள்ள இடங்களையெல்லாம் ஆக்கிரமித்துக்கொள்ளக் கூடாது. கோவை ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் இரு புறங்களிலும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். சேலம் கலெக்டர் வீட்டிற்குள் 20 பேர்கள் குடிசை போட்டுக்கொண்டு விட்டார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ஆர்.



கிருஷ்ணன் அவர்கள் தயவிலே கலெக்டர் அவர்கள் குடியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஏராளமான பேர்களுக்கு குடியிருப்பு மனைகள் வழங்க வேண்டும். அப்படி குடியிருப்பு மனைகள் வழங்க வேண்டுமென்று சொல்லும்பொழுது, என்ன தடை இருந்தாலும் நீக்க வேண்டும் என்ற முறையில் செயல்பட முடியாது. அதற்கு சில வரம்பு முறைகள் இருக்கின்றன. எங்கெங்கே முடியுமோ அங்கெல்லாம் ஏழைகளுக்கு குடியிருப்பு மனைகள் பட்டா செய்து கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். இந்த அரசாங்கம் இப்படிப்பட்ட காரியங்களில் ரொம்பவும் அதிதீவிரமான திட்டங்களை நிறைவேற்றி வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வீட்டுமனை வழங்குவதிலே எந்தவிதமான பூமியும் இல்லாதவர்களுக்கு மட்டும்தான் வழங்கப் படும் என்பதற்கு உறுதியான நடவடிக்கையை சர்க்கார் எடுத்துக்கொள்ளுமா? பூமி இருந்தும், வீடு இருந்தும் கேட்பவர்களுக்கு வீட்டுமனை கொடுப்பதைத் தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசாங்கம் நிச்சயம் எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், அவர்கள் ஊர் விவகாரத்தை அடிப்படையாக வைத்து, அதுபற்றி ஒரு கொள்கையை வகுக்க விரும்புகிறார்கள். அந்தத் தாவா இப்பொழுது ஹைகோர்ட்டில் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட நபர் ஒருவருக்கு ஏராளமாக நிலம் இருந்தும், அவருக்காக நிலம் ஆர்ஜிதம் பண்ணியிருப்பதுபற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது ஒருவேளை உண்மையாக இருக்கலாம் (திரு. பி. ஜி. கருத்திருமன்: உண்மையாக இருந்தும், சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறது). உண்மையாக இருக்கலாம். சர்க்கார் உத்தரவு பிறப்பித்தது என்றால், ரெவின்யூ போர்டு மெம்பர் சிபார்சுகள் பேரிலும், மேல் அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட்டு, தீர்க்கமாக முடிவு செய்யப்பட்டது. அந்தத் தகராறு இப்பொழுது கோர்ட்டில் இருக்கிறது. அவர்கள் சொல்வது உண்மையாகக் கூட இருக்கலாம். மறுக்கவில்லை. இருந்தாலும் இருக்கும், சந்தோஷம் தான். எந்த அடிப்படையில் கொடுப்பது என்பதை வைத்துத்தான் கொள்கையை வரையறுக்க முடியும். குடியிருப்பதற்கு பொறுத்த வரையிலே, நிலம் இல்லாதவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும், வீட்டுமனை இல்லாதவர்களுக்குத்தான் கொடுக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை, அது கண்டிப்பாக அமல்படுத்தப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிருந்து குறிப்பிட்ட ஊர்களில் இருக்கிற இடங்களையெல்லாம் தற்காலிகமாக ஆக்கிரமித்துக் கொண்டிருக் கிறார்கள் என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்று

நினைக்கிறேன். அந்தப் பகுதியில் இருப்பவர்கள் 10 ஆண்டு, 20 ஆண்டு, 30 ஆண்டு, 40 ஆண்டு காலமாக குடியிருக்கிறார்கள். தற்காலிகமாக ஆக்கிரமிக்கப்பட்டவைகள் அல்ல, இடங்கள் அல்ல அவை. ஆகவேதான் அவர்களுக்கு அந்த இடங்களை பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று சொன்னேன். ஏதாவது ஆட்சேபனை இருந்தால் கூட, 30 வருஷங்களாக இந்த ஆட்சேபனைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. இப்பொழுது ஆட்சேபனை இருக்கிறது என்று சொல்லி, அவர்களை வெளியேற்றினால் அது பெரிய அநீதியாக இருக்கும் என்பதை அரசாங்கம் எண்ணிப் பார்த்து, அரசாங்கம் காரியம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏற்கனவே சொன்னேன். சில வரம்பு முறைகள் இருக்கின்றன. அந்த வரம்பு முறைகளுக்கு உட்பட்டுத்தான் பொதுவாக நிலம் ஒப்படை செய்யப்படுகிறது. அதற்கு மாறாகச் செய்வது நீதி என்பது பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, 1947-வது ஆண்டிலிருந்து, கடந்த 22 ஆண்டுகளில் எத்தனை பேர்களுக்கு வீடு இருக்கின்றவர்களுக்கு நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறமுடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது ஒரு பெரிய கேள்வி. என்னாலே இப்பொழுது பதில் சொல்ல முடியாது. அதற்கு வேண்டிய அனுபவமும் இல்லை. ஆனால் இந்த செவின்யூ துறை என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு, கடந்த ஆண்டில் 50,000 ஏக்கரா தரிசு நிலங்கள் வீட்டு மனைகளுக்காகவும், அதற்கு முந்தைய ஆண்டில் 20,000 ஏக்கராவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 30,000 வீட்டுமனைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு ஒரு லட்சம் ஏக்கரா தரிசு நிலங்கள் ஏழை விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுக்கப்பட வேண்டும் என்றும் வீட்டுமனைகள் கொடுக்கப்பட வேண்டும் என்றும் திட்டங்கள் தீட்டப்பட்டு, பல்வேறு கட்டங்களில் இருக்கின்றன, நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** தலைவர் அவர்களே, பல இடங்களில் பரவலாக புறம்போக்கு நிலங்களில் வீட்டைக் கட்டிக் கொண்டு குடியிருந்து வருகிறார்கள். இந்த நிலைமை மாற, இதற்கென்று ஒரு தனி அதிகாரியை நியமித்து, ஒரு ஜெனரல் சர்வே செய்து, கோரிக்கை இருந்தாலும், இல்லாவிட்டாலும், வீட்டு மனைகள் கொடுக்கத்தக்க நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள். தென்னார்க்காடு மாவட்டத்திலே பல பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிதம்பரம் தாலுகாவிலே 3,000 வீட்டு மனைகள் வழங்கப்பட்டிருக்



கின்றன. அரிஜன மக்கள் சம்பந்தப்பட்டவரை 1960-ம் ஆண்டுக்கு முன்னால் புறம்போக்கு நிலத்தில் குடியிருந்தால், அவர்களுக்கு வேறு விசாரணையில்லாமல், நேரிடையாக பட்டா செய்து கொடுக்க ஆட்சேபனை இல்லை என்று அரசாங்கம் உத்தரவு போட்டு அமல் நடத்தப்பட்டு வருகிறது.

### *Paddy fields in Lalgudi taluk*

*21 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) The extent of paddy fields in Lalgudi Taluk, Tiruchirappalli district converted into sugarcane growing fields in 1968;

(*b*) whether the prior permission of the Government was obtained to effect the conversion;

(*c*) the extent to which this conversion has affected paddy out-put in the district; and

(*d*) how it is proposed to augment the deficit?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) 1966-67-ல் 75,555 ஏக்கரில் நெல்லும், 5,457 ஏக்கரில் கரும்பும் 1967-68-ல் 74,805 ஏக்கரில் நெல்லும், 6,021 ஏக்கரில் கரும்பும் பயிரிடப்பட்டன. விரைவுத் திட்டத்தின் கீழ் லால்குடி வட்டத்தில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுத்ததாலும், திரு. கோத்தாரி, சர்க்கரை ரசாயனப் பொருள்கள் நிறுவனம் வடிமுனைக் குழாய்க்கிணறுகள் அமைப்பதற்கும் கடன் வசதி அளித்ததாலும், புதிய பகுதிகள் பாசனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, கரும்பு விளைவிக்கப்பட்டது. இதனால் நெல் பயிரிடப்படும் எவ்வளவு பரப்பளவுள்ள நிலம் கரும்பு பயிரிடும் நிலமாக்கப்பட்டது என்பதைத் துல்லியமாகக் கணக்கிட்டுக்கூற முடியாது. ஏனெனில், அவைகள் தாற்காலிகமாகவே சுற்றுமுறையில் (இரண்டாண்டுகள் கரும்பும் ஓர் ஆண்டு நெல்லும்) பயிரிடப் பட்டனவே அன்று, எப்போதும் கரும்பு பயிரிடப்படும் பகுதியாக மாற்றப்படவில்லை.

(இ) கரும்பு பயிரிட அனுமதி எதுவும் தேவையில்லை.

(உ) 1967-68-ல் நெல் விளைவிக்கும் பகுதி அதிகப்படியாக குறையவில்லையென்றாலும், அது கரும்பு விளைவிக்கும் பகுதிகளாக மாற்றப்பட்டது காரணமல்ல. இதனால் நெல் உற்பத்தி பாதிக்கப்படவில்லை. ஏனெனில் மிகுபயன்தரும் நெல் வகைகள் பயிரிடப்பட்டதால் நெல் உற்பத்தி பெருகியது. 1966-67-ல், 1.15 லட்சம் டன் நெல்லும், 1.65 லட்சம் கரும்பும், 1967-68-ல், 1.58 லட்சம் டன் நெல்லும், 1.81 லட்சம் கரும்பும் உற்பத்தி செய்யப் பட்டது.

(எ) பற்றாக்குறை ஏற்படும் நிலையில்லை. மிகுபயன்தரும் நெல் வகைகள் பயிரிடப்படும் பரப்பளவை அதிகரிப்பதாலும் இப் பகுதியில் இருபோகம் விளைவிப்பதாலும், நெல் விளைச்சலை மேலும் அதிகரிக்கச் செய்யலாம்.

Dr. H. V. HANDE: From the answer given by the Hon. Minister it is very gratifying to note that reduction in paddy production is not much. It is very negligibly. In view of the number of steps that Government are taking to increase production of paddy, we should have had substantial increase in rice production. But we are not getting that because many people are running away to cultivation of sugarcane. In view of this, will the Government clarify whether it is the procurement policy of Government that frightens a few cultivators to run away from paddy to sugarcane? If so, will the Government re-orient the whole thing and see that such steps are not taken by cultivators? Will they re-orient the procurement policy in such a manner so that these persons will not be shied away from cultivating paddy and switch over to sugarcane cultivation?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கொள்முதல் கொள்கைகாரணமாக, நெல் சாகுபடியை விட்டு, விவசாயிகள் கரும்பு சாகுபடிக்கு மாறிப்போகவில்லை. ஆனால் பொதுவாக, இந்த கோதாரி சர்க்கரை நிறுவனத்தார் அளிக்கும் கடன் வசதி போன்றவைகளால், அதிகப்படியாக கரும்பு உற்பத்தி செய்ய முடிகிறது. ஆகவேதான் நெல்லை விட்டுவிட்டு, கரும்பு சாகுபடிக்குச் செல்கிறார்கள். அதனால் உணவு உற்பத்தி பாதிக்கப்படவில்லை. கரும்பு சாகுபடிக்குச் செல்வதால், நெல் உற்பத்தி, நெல் விளைச்சல் பாதிக்கப்படவில்லை.

**திரு. மா. பா. சாரதி :** தலைவர் அவர்களே, நெல் உற்பத்தி செய்வது சம்பந்தமாக, இனிமேலாவது, நெல்லை விட்டு கரும்பு உற்பத்திக்குச் செல்லக் கூடாது, அப்படிச் செல்வதானால், அரசாங்க உத்தரவு பெற்றுத்தான் மாற்றிக் கொள்ள வேண்டும் என்று ஒரு கட்டுப்பாட்டை சர்க்கார் கொண்டுவருமா? இப்பொழுது அப்படி இல்லாவிட்டாலும், இனிமேலாவது கொண்டு வருவார்களா? அப்படிக் கொண்டு வருவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நெல் உற்பத்தி செய்யக்கூடியவர்கள், நிரந்தரமாக கரும்பு உற்பத்திக்குச் சென்றுவிட்டார்கள் என்ற முறையில் இல்லை நிலைமை. அவர்கள் இரண்டு ஆண்டுக்குக் கரும்பும், அதன் பிறகு ஒரு ஆண்டு நெல்லும், இந்த வகையில் மாற்றி மாற்றிப் பயிர் செய்கிறார்கள். நிரந்தரமாக கரும்பு உற்பத்திக்குப் போகவில்லை. ஆகவே, அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும் என்று கட்டுப்பாடு செய்ய வேண்டிய நிலை இல்லை. அதற்கான எந்த சட்டமும், திட்டமும் வைக்க வேண்டிய அவசியமில்லை.

**திரு. க. ர. நல்லசிவன் :** இந்தத் தொல்லைகளையெல்லாம் தவிர்க்க, விவசாயிகள் வைத்திருக்கும் நிலத்தில் இவ்வளவு பரப்பில் உணவு தானியம் என்றும், மற்ற நிலத்தில் வியாபாரப்



பயிர்கள் என்றும் உற்பத்தி செய்ய வேண்டும் என்று ஒருவித கட்டுப்பாடு கொண்டு வருவதுபற்றி சர்க்காரிடம் ஏதாவது திட்டம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அப்படிப் பட்ட உத்தேசம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, கேள்வி எண் 25 . . .

(திரு. ஹாண்டே அவர்களும், ஹாஜி பீர் முஹம்மது அவர்களும் தங்கள் இருக்கையில் எழுந்து நின்றார்கள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்விகள் நிறைய இருக்கின்றன. நேரமாகிறது. டாக்டர் ஹாண்டே, தங்களுக்கு இரண்டு துணைக் கேள்விகளுக்கு இடம் கொடுத்திருக்கிறேன்.

Dr. H. V. HANDE: Sir, just one more supplementary question please. I am the person who put the main question.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே அவர்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியெல்லாம், இப்பொழுது விவசாயிகளுக்கு பல தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது பற்றிதான். அப்படிப்பட்ட தொல்லைகள் காரணமாக, கொள்முதல் காரணமாக மட்டுமல்ல, வேறு பல தொல்லைகள் ஏற்பட்டிருப்பதன் காரணமாக, விவசாயிகள் இன்றைக்கு நெல் விவசாயத்தை கைவிட்டு, மற்ற 'காஷ் கிராப்ஸ்' பயிர் செய்யப்போகும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் உண்மை நிலைகளைக் கண்டு பிடிக்க அவர்களுக்கிருக்கும் குறைகளைக் கண்டு ஆராய, அரசாங்கம் ஒரு கமிட்டியை அமைத்து, அதன் மூலம் விவசாயிகளுக்கு இருக்கும் குறைகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இப்பொழுது அதிகப்படியாக நெல் விவசாயத்தை விட்டுவிட்டு, கரும்புப் பயிருக்குச் செல்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. அந்தக் காரணத்தால், இப்பொழுது அரசாங்கத்திற்கு அப்படிப் பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

*Protein from leaves*

*25 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state:

(a) Whether the Scientists of Chemistry section of the Agricultural College and Research Institute of Coimbatore have extracted portein from leaves of different plants; and

(b) whether this protein enriches the South Indian dishes like "Omapodi" and "Vadam"?

[1969 ஆகஸ்ட் 19

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) எழா.

திரு. கே. விநாயகம் : இப்படி ஆராய்ச்சி செய்து இலைகளிலிருந்து புரோட்டீன் சத்தை எடுத்துக்கொள்ளும் போது நல்லகாரி சேர்த்துக் கொள்ளலாம் என்பது வியாபார அடிப்படையில் கிடைக்கக்கூடியதாக இருக்கிறதா அல்லது காரியாலயப் பேணியில் பொருட்கள் உபயோகிக்கும் அளவில் வியாபார அளவில் பயன்படுத்துகிறார்களா, இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதுதான் இந்த நிலையத்திலிருந்து தக்க ஆராய்ச்சியின் மேல் கொடுக்கப்பட்டுள்ள தகவல். ஆனால், வியாபார அளவில் விற்பனை செய்யக்கூடிய அளவிற்கு இன்னும் வரவில்லை.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, பலவித இலைகளிலிருந்து புரோடீன் சத்து தயாரிப்பதை ஒரு பரீட்சார்த்த திட்டமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சில மாதங்களுக்கு முன் நெல்லிலிருந்து எரிபொருள், எண்ணெய் வகைகள் கிடைக்க முடியும் என்ற விஞ்ஞானக் கருத்தை பத்திரிகையில்—குறிப்பாக தினத்தந்தி பத்திரிகையில் பார்த்தேன். இந்த விஞ்ஞானக் கருத்துக்கள் அரசுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இலையைப்பற்றித்தான் இப்போது கேள்வி. உறுப்பினர் அவர்கள் நெல்லிலிருந்து கிடைக்கக்கூடிய பொருள்களை தினத்தந்தியில் பார்த்ததாகச் சொல்கிறார். உறுப்பினர் அவர்கள் மீண்டும் தினத்தந்தியைப் பார்த்தால் இன்னும் பல விஞ்ஞானக் கருத்துக்கள் பிரசுரமாவதைப் பார்க்கலாம். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மார்டின் அவர்களுக்கு கேள்வி கேட்க இடம் தருவதில்லையே என்ற குறை. அப்படி கேள்வி கேட்க இடம் கொடுத்தால், அவர் கேள்வியை விட்டு எங்கோ போய்விடுகிறார்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பருப்பு வகைகளிலிருந்து புரோடீன் சத்து கிடைக்கிறது. மேலும் கீரை வகைகளிலிருந்து புரோடீன் சத்து கிடைக்க தனியாக ஆராய்ச்சி செய்வது வேறு, மேலும், வேப்பிலையில்கூட புரோடீன் சத்து இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. விநாயகம் அவர்களுடைய கேள்வி இந்தப் புரதச் சத்தை ஊட்டப்பொருள் வடாம் இவைகளில் சேர்த்து அதிகரிக்க வேண்டும் என்பதுதான்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : வேப்பம் பூவிலிருந்து வடாம் செய்வது எல்லாம் நிபுணர்களுக்குத் தெரியுமா?



1969 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்படித் தயாரித்து ஒரு சிறந்த விருந்து வைத்தால், அருந்துவதற்கு நாங்கள் எல்லாம் தயாராக இருக்கிறோம்.

*Beauty spots in the Nilgiris*

*33 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(a) Whether the Government have decided to maintain the beauty spots in the forest areas in the Nilgiris; and

(b) if so, the anticipated cost of such maintenance?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) நீலகிரி பிரதேசத்தில் ஊட்டி மன்றங்களின் நிர்வாகத்திலுள்ள அழகிடங்களை வனத்துறையின் பராமரிப்பில் மாற்றி, அத்துறை பராமரிக்க வேண்டும் என்ற ஒரு வேண்டுகோள், நீலகிரி சுற்றுலா வளர்ச்சிக் குழுவால் அனுப்பப்பட்டது. அது ஆலோசனையில் இருக்கிறது. முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

(இ) பராமரிப்புக்கான செலவை முன்னதாகவே இப்பொழுது நிர்ணயிக்க இயலாது. எவ்வளவில் அவ்வப்போது எழும் தேவைக்கேற்ப ஒவ்வொரு இடத்திற்கும் செலவு வேறுபடும்.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, பொதுவாக, நீலகிரி மாவட்டத்தில் இருக்கிற மரம், செடிகொடிகள் அதிகமாக வெட்டி வீழ்த்தப்படுகிற காரணத்தில் இப்போது மழை பருவகாலத்தில் பெய்வதில்லை. ஆகவே, இந்த நீலகிரி தகுந்த முறையில் மரங்களை வெட்டுகிற விவசாயிகளுக்கு அரசு உத்தரவு அனுப்பி அதைத் தடுக்க முன்வருமா? மரங்களை வெட்டாமல் பார்த்துக்கொள்ள அரசு ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இப்போதைய கேள்வி காட்சி நயம் கனிந்த இடங்களைப் பொறுத்தது. அழகிய இடங்கள்தான் சுற்றுலா இடங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு, மாளிகையாக, சுற்றுலா அதை அரசாங்கம் அழகு செய்து வருகிறது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீலகிரி மலையில் இருக்கின்ற எழில்பகுதிகளைப் போல ஜவ்வாது மலையிலும், எலகிரி மலையிலும், ஏற்காடு மலையிலும் பொதிகைமலையிலும் எழிற்பகுதிகள் நிறைய இருக்கின்றன. அத்துணை இடங்களையும் எழிற்பகுதி இடங்களாக மாற்றி, சுற்றுலா பயணிகள் கண்டுகளிக்கவும், தங்கி மகிழவும் ஆவன செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, சுற்றுலா பயணிகளின் வசதிகளுக்கேற்ற வகையில் பல அழகிய பகுதிகளை எடுத்து, மேலும் அழகுபடுத்தி ஏற்ற வசதிகளைச் செய்ய சுற்றுலா துறையினர் ஏற்பாடு செய்கிறார்கள்.

உறுப்பினர் அவர்கள் சில மலைப்பகுதிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவில்லை என்று சொன்னார். எல்லா அழகிய இடங்களையும் இத்துறையின்கீழ் எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் விரைவில் ஈடுபடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. பெள்ளி கௌடர்:** தலைவர் அவர்களே, எழிற் பகுதிகளாக எந்தெந்த இடங்கள் அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, கல்லத்தி நீர்வீழ்ச்சி, காதரைன் நீர்வீழ்ச்சி, லாம்ப்ஸ் ராக், டால்பின்ஸ் நோஸ், லேடி கானிங் சீட், லோஜ் நீர்வீழ்ச்சி, மோயார் நீர்வீழ்ச்சி, தொட்டபெட்டா சிகரம், மூர்த்தி சிகரம், குலிகல் துருக் கோட்டை, பிக்னிக் கார்னர் கோர்ன் ஹில் ஆகிய இவைகள்தாம் அந்த இடங்கள். இந்த பதினொன்று இடங்களையும் நீலகிரி பகுதியில் எழிற்பகுதி நிறைந்த இடங்களாக தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.

## குமாரம் அருகிலுள்ள சோதனைச் சாவடி

* 26 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு உணவு, வணிகத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், குமாரம் அருகிலுள்ள சுங்கச் சாவடியில் ( Check Post ) பணிபுரிந்து கொண்டிருந்த Special Revenue Inspector ஒருவர் சென்ற நவம்பர் முதல் வாரத்தில் தாக்கப்பட்டாரா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, இந்த மாதிரியான நிகழ்ச்சி நடைபெற்றதும் அதன்மேல் உடனடியாக நடவடிக்கை எடுக்காமல், சட்ட சபையிலிருந்து கேள்வி போன பிறகுதான் விசாரணை ஆரம்பித்துள்ளது என்பது உண்மையா ? அரசாங்கப் பணிபுரியும்போது அரசு ஊழியர் ஒருவருக்குக் காயம்பட்டாலும், ஊனம் ஏற்பட்டாலும், இறக்க நேரிட்டாலும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அரசாங்கம் என்ன நஷ்ட ஈடு வழங்குகிறது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, எப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. கள்ளக் கடத்தல் செய்பவர்கள் அந்த ஆய்வாளரைப் பயமுறுத்தினார்கள். உடனடியாக அலங்காநல்லூர் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. அந்த நபர்களின் அடையாளம் கண்டுகொள்ள முடியாததால் அவர்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.



## செங்கற்பட்டு மாவட்டத்தில் அரிசி விலை

* 34 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில் 1968 செப்டம்பர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் அரிசி விலை மிகவும் உயர்ந்ததை கட்டுப் படுத்த சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அரிசியின் விலையேற்றத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த செங்கற்பட்டு மாவட்டத்தில், சென்னை நகர் சார்புப் பகுதிகள் நீங்கலாக ஏனைய இடங்களில் 295 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு, அரிசி, கோதுமை முதலியவை அவ்வப்போது அடையாள அட்டையின் அடிப்படையில் வழங்கப் பட்டுவருகின்றன. இம் மாவட்டத்திலுள்ள சென்னை நகர் சார்புப் பகுதிகளான 49 கிராமங்களில் குடும்பக்கார்டு முறை அமலிலுள்ளது. அங்கு நபர் ஒன்றுக்கு வாரம் 1,000 கிராம் அரிசி வழங்கப்படுகிறது. கோதுமையும் தேவையான அளவு வழங்கப் படுகிறது. அச்சார்புப் பகுதிகளில் 269 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. செப்டம்பர் முதல் டிசம்பர் வரையில் இம் மாவட்டத்திலுள்ள மக்களுக்கு ஓரளவுக்கு தொடர்ந்து அரிசி வழங்கும் பொருட்டு தென் ஆற்காடு மாவட்டத்திலிருந்து 20 ஆயிரம் டன் அரிசியும், தஞ்சை மாவட்டத்திலிருந்து 5,000 டன் அரிசி ஆகக்கூடிய நெல்லும் ஒதுக்கப்பட்டன. இதைத்தவிர, இம் மாவட்டத்திலிருந்து வெளியிடங்களுக்கு கள்ளத்தனமாக அரிசி கடத்தலைத் தடுக்க, தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** தலைவர் அவர்களே, இந்தக் கட்டுப்பாடுகளை நீக்கியபிறகும், ஏற்கெனவே கொடுத்துக் கொண்டிருந்த அரிசி தொடர்ந்து மக்களுக்குக் கொடுக்கப் படுகிறதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தொடர்ந்து கொடுக்கப் பட்டு வருகிறது.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, செங்கற் பட்டு மாவட்டத்தில் கொடுக்கப்படுகிற அரிசியைப்போல, அதை யடுத்துள்ள திண்டிவனம், செஞ்சி பகுதிகளிலும் கொடுக்க அரசு வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அரசாங்கம் ஏற்கெனவே ஏற்றுக் கொண்டிருக்கிற இடங்களில் கொடுப்பதற்குத் தடை இல்லை. மேற்கொண்டு இந்தத் திட்டத்தை விரிவாக்க இடமில்லை யென்று நேற்றையதினமே நான் சொல்லியிருக்கிறேன்.

**திரு. கே. விநாயகம்:** தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் குறிப்பாக இந்த மூன்று மாதங்களில் விலை

ஏறியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார். ஏறிய விலை இன்னும் அதிகமாக ஏறிக்கொண்டே இருக்கிறதென்பது அவருக்குத் தெரியுமா? ஏதோ கொஞ்சம் கோதுமை, மைலோ வந்தது என்றால் விலை இறங்கிவிடுமா? இப்போது படி அரிசி 3½ ரூபாய்க்கு திருநெல்வேலியில் விற்பது ஜனாப் அவர்களுக்குத் தெரியுமா? (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் படி அரிசி 3½ ரூபாய்க்கு விற்கிறது என்பதை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அரசாங்க அதிகாரிகளிடமிருந்து எங்களுக்கு வருகின்ற தகவல்களை வைத்துக்கொண்டு தான் நாங்கள் சொல்ல வேண்டும். செங்கல்பட்டு மாவட்டம் உபரி மாவட்டமாகும். இப்பொழுது அங்கு பருவமழை இல்லாததால் சரியான அறுவடை இல்லை. இதனால் விலை சற்று ஏறியிருக்கிறது. அதற்காகத்தான் அரிசிக் கார்டு வழங்கப்பட்டிருக்கிறது.

## பழநி நகரில் டோப்பா தொழிற்சாலை

* 35 வினா.—**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பழநி நகரில் டோப்பா தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, டோப்பா தொழிற்சாலை எந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது? (விடை இல்லை)

## திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள உய்யக்கொண்டான் கால்வாய்

* 27 வினா.—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள உய்யக்கொண்டான் பாசனக் கால்வாயைத் திருத்தியமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆம் ஐயா பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போதிலிருந்து தொடங்கும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளர்களின் குறிப்பு கிடைத்த பிறகுதான், வேலை தொடங்கப்படும்.



**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, உய்யக் கொண்டான் ஆற்றில் கழிவுநீர் ஓடுவதுபற்றி அமைச்சர் அவர்களுக்கு ஏதேனும் குறிப்பு வந்ததா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தனிக் கேள்வி போடவும்.

## மேல் பெரியாறு அணை

* 28 வினா.—**திரு. எஸ். அக்னிராஜு :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பெரியாறு அணைக்கட்டின் மேற்கே மேல் பெரியாறு அணை அமைக்கும் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எந்த அளவில் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் பெரியாறு, வைகை அணை தவிர, வேறு அணை கட்ட அரசாங்கத்திடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா? சில மாதங்களுக்கு முன்னர் அமைச்சர் அவர்கள் சென்று பார்த்து வந்தார்கள். அதைப்பற்றிய விவரம் தெரிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதைப்பற்றிய குறிப்பு ஒன்றும் தற்போது என்னிடம் இல்லை.

## கோவிலார்-பெரியாறு அணை

* 36 வினா.—**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் ஜில்லாவில் கோவிலார்-பெரியாறு (பிளவக்கல்) அணைக்கட்டு திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

(இ) இதற்காகும் செலவுகளுக்கு மதிப்பிடப்பட்டு திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறதா?

(உ) இது எப்பொழுது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) ஆம்.

(உ) இத்திட்டத்திற்கு தொழில் நுட்ப வகையில் ஒப்புதல் அளிக்கும்படி மத்திய நீர்பாசன மின்சார ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

[1969 ஆகஸ்ட் 19

### கோவை நகரசபை

* 37 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை நகரசபையை மாநகராட்சி மன்றமாக ஆக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, நகராட்சிகளை மாநகராட்சியாக, கார்ப்பொரேஷனாக மாற்றுவதற்குத் தேவைப்படுகின்ற நிலை என்ன என்பதை அரசு அறிவிக்குமா ? இரண்டாம் நிலை நகராட்சிகளை முதல் நிலை நகராட்சிகளாக மாற்ற தேவைப்படும் நிலைகளை அரசு அறிவிக்குமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கேள்வி, கோவை நகராட்சியை மாநகராட்சியாக மாற்ற ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா என்பது. உறுப்பினர் அவர்கள் அண்டையிலிருக்கிற தஞ்சை, திருச்சி நகரங்களைப்பற்றிக் கேட்காமல், அக்கறை காட்டி, கோவை நகராட்சியைப்பற்றிக் கேட்டிருப்பதில் நண்பர் திரு. கிட்டப்பா அவர்களின் நல்ல நோக்கத்தையே இது காட்டுகிறது. நகராட்சி மாநகராட்சியாக உயர்த்த அதனுடைய பொருளாதாரம், அளவீடுகள், செய்ய வேண்டிய பணிகள் மற்றவற்றைப் பொறுத்து விதிமுறைகளை ஆராய்ந்து மாற்றுவார். வெறும் மக்கள் தொகையை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்வது இல்லை. அதனுடைய நிர்வாக அளவீடுகள், மக்களுக்கு அதன்மூலம் நன்மை கிடைக்குமா என்பதையும், மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளையும் குறித்து பரிசீலனை செய்த பிறகே மாற்ற முடியும். மேலும் பெரிய நகராட்சிகளிலேகூட கழிவு நீர்த் திட்டம், குடிநீர்த்திட்டம் முதலியவை நிறைவேற்றப்படாமல் இருக்கும் இந்நிலையில், மாநகராட்சியாக மாற்றுவதன்மூலம் இப்போது புதிய பலன் எதுவும் அந்தப் பகுதிக்குக் கிடைக்காது என்பது அரசாங்கத்தின் கருத்தாகும்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மக்கள் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து நகராட்சி மன்றத்தை மாநகராட்சி மன்றமாக மாற்றுவது நன்மை அளிக்காது என்று சொன்னார்கள். கோவை நகரை எடுத்துக் கொண்டால் சிங்கநல்லூர் போன்ற பல பகுதிகள் சேர்ந்து விரிந்திருக்கிறது. மத்திய சர்க்கார் ஊழியர்கள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள், இவை எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டு மாநகராட்சியாக மாறினால் அவர்கள் அதிகப்படியான பஞ்சப்படி போன்ற வருவாயைப் பெற வாய்ப்பு ஏற்படும். கோவை நகரமும் நன்மை அடையும். இனிமேலாவது அதற்கு முயற்சி எடுப்பார்களா ?



1969 ஆகஸ்ட் 19]

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அரசாங்க ஊழியர்களுக்குக் கிடைக்கும் பஞ்சப்படி போன்ற அலவன்சை மட்டும் கருதிச் செய்தால் அங்குள்ள மக்களுக்கு இதர வசதிகளையும் மேற்கொள்ள வேண்டிய நிலை இருக்கும். அப்படிப்பட்ட உத்தேசம் இப்போது இல்லை. அந்த அந்தப் பகுதிகளுக்கு நன்மை தரக் கூடிய தேவையான திட்டங்கள் நிதிநிலை இடம் கொடுக்கிற வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** சென்னை நகரத்திற்கு அடுத்தபடியாக இருக்கக் கூடிய நகரம் மதுரை. மதுரை நகராட்சியை மாநகராட்சியாக மாற்றும் உத்தேசம் உண்டா ? அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கடந்த காலத்திலேயே ரத்தினசபாபதி குழுவினர் நகராட்சி மன்றங்கள் எதையும் மாநகராட்சி மன்றமாக மாற்றத் தேவையில்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்தையே இப்போதுள்ள அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

### ‘லாய்ட்ஸ் எஸ்டேட்’டுக்கு நீர் விநியோகம்

* 29 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை லாய்ட்ஸ் ரோட்டிலுள்ள வீட்டு வசதி வாரியத்தைச் சேர்ந்த குடியிருப்பில் தண்ணீர் சரியாக கொடுக்கப்படவில்லை என்ற புகார் ஏதேனும் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்களிடமிருந்து வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) உறுப்பினர் லாய்ட்ஸ் எஸ்டேட்டில் உள்ள தமது அங்கனத்தில் (Flat) நீர்ப்பற்றாக்குறை இருப்பதாகத் தொலைபேசி மூலம் மாநில வீட்டு வசதி வாரியத்திற்குப் புகார் செய்தார்.

(இ) மாநில வீட்டு வசதி வாரியம் இது குறித்து மாநகராட்சியுடன் கலந்து பேசியது. இப்பகுதிக்கு நீர் வழங்குவதை மேம்படுத்தும் பொருட்டு, நீர் வழங்கு பெருங்குழாய்களைக் கீழிறக்கி, மட்டப்படுத்தும் வேலையை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே குடியிருப்பவர்கள் எல்லாம் சர்க்கார் ஊழியர்களாக இருக்கிற காரணத்தினால் தற்போது கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு மட்டும் சமாளிக்க முடியாத நிலையில் சிரமப்படுகிறார்கள். வீட்டு வசதி வாரியம் கீழே குழாய்கள் அமைத்து தண்ணீர் கிடைக்க வசதி செய்தாலும் முதல் மாடி, இரண்டாவது

மாடியில் உள்ளவர்கள் தண்ணீருக்கு மிகுந்த சிரமப்படுகிறார்கள். ஆகவே வீட்டுவசதி வாரியம் பெரிய கிணறுகளை எடுத்து மாடியில் உள்ளவர்களுக்கும் தண்ணீர் கிடைக்கும்படியாக பம்பு வைத்து இறைக்க தக்க ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** இப்போது தனியாகக் கிணறு வெட்டி, விசையேற்றம் வைத்து குழாய்கள் மூலமாக மற்ற காரியங்களுக்கு வேண்டிய தண்ணீர் தாராளமாக அளிக்கப் படுகிறது. குடிப்பதற்கு ஏற்ற தண்ணீர் மட்டும் தான் இப் போது இரண்டு லைன்கள் மூலமாக அளிக்கப்படுகிறது. மேலே தேக்கி வைத்து கொடுப்பது என்றால் ஒரு லைன் மூலமாகத்தான் அளிக்க முடியும். அப்போது இதைவிட கஷ்டம் ஏற்படும். பொதுவாக குடிதண்ணீர் பிரச்னை எல்லா இடங்களிலுமே இருக் கிறது. ஸோனல் ஸிஸ்டம் ஏற்படுத்தி தண்ணீர் சப்ளை செய்தா லொழிய தண்ணீர் கஷ்டம் நீங்குவது என்பது முடியாத நிலை மையில் இருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** லாயிட்ஸ் ரோடில் உள்ள ஹவுசிங் போர்டு காலனி மட்டும் அல்ல—சைதாப்பேட்டையில் உள்ள டாட்ண்டர் நகர் காலனியிலும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது ஹவுசிங் போர்டு கீழே வருகிறதா, பி.டபிள்யூ.டி.யின் கீழே வருகிறதா ?

**திரு. கே. விநாயகம் :** பி.டபிள்யூ.டி.யின் கீழ் இருக்கும் காலனிக்குப் பின்னால் ஹவுசிங் போர்டு காலனி இருக்கிறது. நான் தெரிந்தே சொல்கிறேன். ஒரு வீட்டில் இருக்கிற தண்ணீரை பைப் மூலமாக அதிகாரம் இல்லாது பக்கத்துவீட்டில் இருப்பவர் கள் எடுத்துக் கொள்கிறார்கள் என்ற புகார் வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அந்தமாதிரியான தகவல் என்னிடம் இல்லை.

*Accounts of Sri Kapaleeswarar Devasthanam*

* 30. *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether any defalcation in the accounts of Sri Kapaleeswarar Devasthanams, Mylapore, Madras, has been reported during 1966-67; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(**குறிப்பு :**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளி குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.)

* * * * *

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

## 2 பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகளை நீக்குவது குறித்து

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று பேரவைத் தலைவர் அவர் களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் ஆரம்பித்த விவாதத்தில் இருக்கிற எல்லாச் சொற்களையும் சட்டமன்ற நட வடிக்கைப் பக்கத்திலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது நானுடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய ஒற்றிவைப்புத் தீர்ப்புத் தீர்மானத்தை நிராகரித்தது குறித்து அவர் ஆரம்பித்த விவாதத்தி லிருந்து அவர்கள் வெளியேறியது வரையிலும் நடந்த நிகழ்ச்சி களைப்பற்றிய குறிப்புகளை சட்டமன்றக் குறிப்புப் புத்தகத்தி லிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன். பத்திரிகைக்காரர்களும் அவற்றை வெளியிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 3 ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

### (i) மதுரை மாவட்டத்தில் நிலவும் பஞ்ச நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. சித்தன் அவர்கள் ஒற்றிவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்து இருக்கிறார்கள். அதில்

"To discuss the acute famine conditions prevailing in areas in and around Madurai district leading to mass evacuation and starvation death".

என்று சொல்லியிருக்கிறார்கள். இது அரசினுடைய அன்றாட நிர்வாகத்தில் இருக்கிற ஒன்றாகும். மேலும் வருகின்ற நிதி நிலை அறிக்கையின்மீது உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்கு வதற்கு வாய்ப்பு இருக்கிறது, எனவே இதற்கு அனுமதி மறுக் கிறேன்.

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

**(ii) மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கோரி திரு. ம. பொ. சிவஞானம் அவர்களால் நடத்தப்பட இருக்கும் போராட்டத்தினால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று திரு. சீமைச்சாமி அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதில் 'மாண்புமிகு ம. பொ. சிவஞானம் அவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டி நாளை முதல் போராட்டம் நடத்த இருப்பதாக அறிவித்துள்ளதால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை விவாதிக்க சபையை ஒத்திவைக்க வேண்டுகிறேன்' என்று கொடுத்திருக்கிறார்கள். இதே கருத்தையொட்டி திரு. ஆ. கு. சுப்பையா அவர்களும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதை இன்று எடுத்துக் கொள்ளக்கூடிய நிலை இருக்காது என்ற நிலையிலே வேண்டாமென்று கூறியிருக்கிறேன். இருப்பினும் அவர்களும் இந்தத் தீர்மானம் எப்படி பேரவையின் விவாதத்திற்கு வரக் கூடியது என்பதைப்பற்றிச் சுருக்கமாக விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** நாளை முதல் திரு. ம. பொ. சி. அவர்கள் ஆறு மாதத்திற்கு முன்பாகவே மாநில சுயாட்சிப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். இந்தச் சட்டமன்றத்திலேயும் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இது சம்பந்தமாகக் கருதியபோது, காலம் வரும், நாங்களும் கலந்துகொள்வோம் என்று கூறியிருக்கிறார்கள். திரு. ம.பொ.சி. அவர்கள் முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசியபோது ஒரு நாளைக்கு அந்தப் போராட்டத்தை நடத்திவிட்டு அதற்குமேலே என்ன செய்யலாம் என்று யோசிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்று பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. சென்னையிலே தொடர்ந்து நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். ஆறு மாதங்களுக்கு முன்பே அறிவித்ததை மத்திய அரசுக்கு தெரிவித்து இருக்கிறார்களா? மாநில அரசாங்கம் இதைப்பற்றி ஒரு தீர்மானத்தைப் போட்டு மத்திய அரசுக்கு அனுப்ப முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடுகள் செய்வார்களா? தொடர்ந்து போராட்டம் நடத்தினால் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளையொட்டி நடவடிக்கைகள் எடுப்பதுப்பற்றி விவாதிக்க இந்த சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழரசுக் கழகம் நடத்த இருக்கின்ற போராட்டம் குறித்து நானும் இந்தச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். இது மிக முக்கியமான அவசரமான விஷயமாகும். மாநிலங்களுக்குப் போதுமான அதிகாரம் இல்லாமல் இன்றைய தினம் எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்தைத்தான் கேட்கக்





கூடிய நிலைமையில் இருக்கிறோம். மாநிலங்களுக்கு எந்த அளவுக்குப் போதுமான அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும், மாநிலங்கள் சுயாட்சியாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுருக்கமாகச் சொல்லுங்கள், டீட்டெய்ல்ஸுக்கு எல்லாம் போகவேண்டாம்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதை எல்லாக் கட்சிகளும் விரும்புகின்றன. அந்த முறையிலே நம்முடைய தமிழக அரசு இதுசம்பந்தமாக தீர விவாதித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம். ஆகவே, இன்றைக்கு இந்தப் சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழரசுக் கழகத் தலைவர் மாண்புமிகு ம.பொ.சி. அவர்கள் நாளையதினம் நடத்த இருக்கின்ற மாநில சுயாட்சிப் போராட்டம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சீமைச்சாமி அவர்களும், திரு. ஆ. கு. சுப்பையா அவர்களும் கொடுத்துள்ள இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையில்லை என்பது என்னுடைய கருத்தாகும். ஏனென்றால், இன்றையதினம் ஆளும் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், மாநிலங்கள் மத்திய அரசிடம் இருந்து அதிக அதிகாரங்களைப் பெற்று சுயாட்சித் தன்மையோடு விளங்கிட வேண்டுமென்ற கொள்கையை மிகவும் அக்கறையோடும், தீவிரமாகவும் எடுத்துச் சொல்லி வருகிற கட்சியாகும்; இந்தக் கட்சியினுடைய தலைவராகவும், முன்னாள் முதல்வராகவும் இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுய ஆட்சியை வலியுறுத்தி அவர்கள் மறைவதற்கு முன்னால் கூட ஒரு பெரும் கட்டுரையை எழுதி இருக்கிறார்கள் என்பதையும் நாடு அறியும். எல்லாக் கட்சி நண்பர்களும் நன்றாக அறிவார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெற வேண்டுமென்பதில் உள்ள அக்கறையின் காரணமாக முதலமைச்சர் என்ற முறையில் நான் டில்லிக்குச் சென்றிருந்த நேரத்திலும், வேறு பல அறிவிப்புகளிலும் 'மாநிலங்களை அதிக அதிகாரங்களைப் பெறவேண்டும், ஆனால் அப்படிப் பெறவேண்டுமென்று கருதுகிற அதிகாரங்கள் எவை எவை என்று நாம் கூறும்போது, மொத்தத்தில் மூன்று அல்லது நான்கு அதிகாரங்கள் போக மிச்சம் உள்ள எல்லா அதிகாரங்களும் மாநிலங்களுக்கு என்று கூறுவதைவிட, திட்டவட்டமாக வரையறுத்து இன்ன இன்ன அதிகாரங்கள் என்று நாமே நாங்களே வரையறுத்துத் தெளிவு படுத்திக் கொள்ளவேண்டுமென்பதற்காக ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று இந்த அரசு கருதுகிறது' என்று நான் அறிவித்திருக்கிறேன். அப்படிப்பட்ட குழுவில் இந்தக் கொள்கைகளை ஒத்துக் கொள்ளுகின்ற அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள்தான் இருக்க

[1969 ஆகஸ்ட் 19

வேண்டுமென்று இல்லை. இந்தக் கட்சியினுடைய கொள்கைகளைப் புரிந்து கொண்டு நம்முடைய கொள்கைகளுக்கேற்ப என்னென்ன அதிகாரங்களை மாநிலங்கள் மத்திய அரசில் இருந்து பெறலாம் என்று திட்டவட்டமாக வரையறுத்துக் கூற சட்ட நுணுக்க அறிவும் வெகு பல ஆற்றல்களும் அமைந்த தகைமை சான்றவர்கள் அந்தக் குழுவில் இருக்க வேண்டுமென்று கருதி அப்படிப்பட்ட குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு மூவர் கொண்ட குழுவாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய பணியாக கூட்டாட்சித் தத்துவம் முழுமையும் அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெறவேண்டும்; மத்திய அரசு அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும்; மாநில அரசு அதிகாரங்கள் விரிவாக்கப்பட்டு மாநிலங்கள் பூரண தன்னாட்சி உரிமை பெற்று விளங்கத் தேவையான திருத்தங்களை அரசியல் அமைப்புச் சட்டத்திலே செய்வதற்கு அவர்கள் தக்க யோசனை கூறவேண்டுமென்ற அடிப்படையில் அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவுக்குத் திரு. பி. வி. ராஜமன்னார் அவர்கள் தலைவராகவும், திரு. ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர்களும், திரு. பி. சந்திரா ரெட்டி அவர்களும் உறுப்பினர்களாகவும் இருந்து நல்ல முறையில் பணியாற்றி மாநிலங்கள் எந்தெந்த அதிகாரங்களை மத்திய அரசிடம் இருந்து பெறலாம் என்பதற்கான திட்டவட்டமான விளக்கங்களைத் தருவதாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த எந்த அதிகாரங்களைப் பெறலாம் என்பதற்கான குறிப்புகள் கொடுங்கள், அறிக்கை கொடுங்கள் என்று அந்தக் குழுவினிடத்தில் கேட்டுக் கொண்டு இருக்கிறேன். அவர்கள் மூவரும் அரசின் வேண்டுகோளுக்கு இணங்கி ஒத்துழைப்புத் தர ஒத்துக் கொண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அவர்களுடைய அறிக்கை வந்த பிறகு என்னென்ன அதிகாரங்களைப் பெற வேண்டுமென்பதிலே திட்டவட்டமான முடிவுக்கு வந்து எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் கூடி முடிவு செய்யலாம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சீமைச்சாமி அவர்களும், மாண்புமிகு சுப்பையா அவர்களும் எடுத்துக் காட்டியது போல் எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெற வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. வேறு மாநிலங்களிலே உள்ள காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்கள் மாத்திரமல்ல, காங்கிரஸ் மாநில முதலமைச்சர்கள் கூட இப்படிப் பட்ட அதிகாரங்களைப் பெறவேண்டுமென்பதிலே அக்கறை கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு இந்தியா முழுமையும் உள்ள மாநிலங்களில் இருந்து நல்லாதரவு கிடைக்கும்.

ஆகவே, இந்த அதிகாரங்களை வரையறுத்துக் கொண்டு நல்ல முறையில் பிரசாரம் செய்து, மற்ற மாநிலங்களுடைய நல்லாதரவையும் பெற்று மத்திய சர்க்காரோடு வாதாட வேண்டும். வாதாடிப் பயன் இல்லை என்றால் போராட வேண்டும். அப்படிப்



1969 ஆகஸ்ட் 19] [திரு. மு. கருணாநிதி]

போராடுகின்ற நேரத்தில் எல்லாக் கட்சிகளும் இணைந்து நின்று அந்தப் போராட்டத்தை நடத்திட வேண்டுமென்றுதான் தமிழரசுக் கழகத் தலைவர், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தேன். அவர்களும் முதலில் தொடர்ந்து இந்தப் போராட்டத்தை நடத்துவதாக அறிவித்திருந்தார்கள். ஆனால் என்னுடைய வேண்டுகோளுக்குப் பிறகு அதை ஒரு நாள் அடையாளப் போராட்டமாக மட்டும் நடத்துவதற்கு முன்வந்தார்கள். ஆனால், இன்று காலைப் பத்திரிகைகளில் தொடர்ந்து சென்னையில் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. நான் அதைப் பற்றி ம.பொ.சி. அவர்களிடம் கேட்ட நேரத்தில், பத்திரிகைகளில் செய்தி தவறாக வந்திருப்பதாகவும், ஒரு நாள் அடையாளமாக மட்டுந்தான் அந்தப் போராட்டம் நடைபெறுவதாகவும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இப்போதுகூட நான் உரிமையோடு கேட்டுக் கொள்கிறேன்—நான் அன்று கேட்டுக் கொண்டதைப் போல் இந்தப் போராட்டத்தை கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மூவர் குழு முடிவுக்குப் பிறகு அனைவரும் இணைந்து, நம்முடைய மாநிலம் மாத்திரமல்லாது எல்லா மாநிலங்களும் இணைந்து நின்று வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைப் பெற தகுந்த யோசனைகளைச் செய்து அதிலே ஈடுபடலாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இந்தப் போராட்டத்தைக் கைவிட வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் இப்போது தேவையில்லை என்றும் தெரிவித்து கொள்கிறேன்.

* திரு. ம. பொ. சிவஞானம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் பற்றியும் முதல்வரவர்கள் வெளியிட்ட அறிக்கை பற்றியும் விளக்கமாக இரண்டொன்று சொல்ல நிற்கிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்து அரசின் கவனத்தைக் கவர்ந்த அன்பர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் "ஒரு குழு அமைத்து, அந்தக் குழு அறிக்கை வெளியான பிறகு மத்திய அரசுக்கு அனுப்பி, அவர்கள் ஏற்கவில்லை என்றால் தொடர்ந்து போராடலாம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்னதை ஓரளவுதான் ஏற்றுக் கொள்ள முடிந்தது.

இதிலே ஒரு அடிப்படைக் குறைபாடு இருப்பதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். என்னென்ன அதிகாரங்களைக் கோருவது என்று நிபுணர்கள் முடிவு செய்வது எப்போது என்றால், கொள்கை ரீதியில் சுயாட்சிக் கோரிக்கையை மத்திய அரசு ஒப்புக் கொண்டால்தான். முதலமைச்சர் அவர்கள் நிலைக்கு வசதியாக இருக்க வேண்டுமென்பதற்காக சுயாட்சிக்

[திரு. ம. பொ. சிவஞானம்] [1969 ஆகஸ்ட் 19

கோரிக்கையை 'கொள்கையளவில் ஒப்புக் கொண்டால் போதும்' என்று பிரதமருக்கு எழுதினேன். இன்னும் பதில் வரவில்லை. மத்திய அரசும் அதை ஆளுகின்ற காங்கிரஸ் கட்சியும், இந்த மாநில சுயாட்சிக் கிளர்ச்சியைப் பற்றிக் கூறும்போது "பிரிவினைக் கிளர்ச்சிக்கு இது முன்னோடி, அடையாளம்" என்ற முறையிலே கூறி, அடிப்படையிலேயே நமது தேச பக்தியையே சந்தேகிக்கின்றார்கள். அப்படி பிரிவினைக் கொள்கைக்கு முன்னோடி என்று சொல்லும் ஆட்சியிடம் நிபுணர் குழுவின் அறிக்கையை அனுப்புவதால் என்ன பயன்? இதைப் பற்றி நிபுணர் குழுவினருக்கும் தெளிவு இருக்கவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் மொழிவாரி இனங்களின் பிறப்புரிமை என்ற வகையில்தான் சுயாட்சித் தன்மையை வலியுறுத்தி வருகிறேன். இந்தக் குழுவில் இருப்பவர்கள் மொழிவாரி மாநில அமைப்பை எதிர்த்து அறிக்கை விட்டவர்கள், கண்டித்து அறிக்கை விட்டவர்கள் என்பதை நாம் அறிவோம். அப்படிப்பட்டவர்களுக்கு இந்தக் கொள்கையிலே எப்படி நம்பிக்கை இருக்க முடியும்? தனிப்பட்ட முறையிலே அவர்களிடம் எனக்கு மதிப்பு உண்டு; அவர்களை நான் மதிக்கக் கூடியவன். சென்னை நகரில் ஆகஸ்டு 20-க்குப் பின்னும் தொடர்ந்து போராட்டம் நடைபெறுமென்று இன்று காலையில் வந்த செய்தி சரியல்ல; ஒருநாள் அடையாள நிகழ்ச்சியாகத்தான் போராட்டத்தை நடத்துகிறேன். தொடர்ந்து நடத்துவதை முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து, பொறுப்பை அவரிடம் தந்து, நிறுத்திக் கொள்கிறேன் என்பதை முதல்வர் அவர்களுக்கு மிகவும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அமைக்கப்பட்ட குழுவைப் பற்றி நம்முடைய தமிழரசுக் கழகத் தலைவர் சில எண்ணங்களை வெளியிட்டார்கள். நம்முடைய மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைப் பெறுவதற்காக அமைக்கப்பட்ட குழுவை நாமே சந்தேகிப்பது நல்லதல்ல. அந்தக் குழுவிலே இருப்பவரும், இன்று மேலவை உறுப்பினராக இருக்கக்கூடியவருமான மதிப்பிற்குரிய டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் மேலவையிலே ஆற்றியிருக்கும் உரைகளைப் பார்த்தாலே, மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருப்பதை எவ்வளவு வன்மையாகக் கண்டித்திருக்கிறார் என்பது தெளிவாகத் தெரியும். நாமே குழுவைச் சந்தேகிப்பது முறையல்ல. அந்தக் குழுவினிடம் பொறுப்பை ஒப்படைத்து அந்தக் குழு அறிக்கை சமர்ப்பித்ததும் நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகம் எல்லாக் கட்சியினரோடும் சேர்ந்து மத்திய அரசிடம் இருந்து பெறவேண்டிய உரிமைகளுக்காக, பெறவேண்டிய அதிகாரங்களுக்காக வாதாடும். வாதாடிப் பயன் இல்லையென்றால் திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் போராட்டத்திற்கு அஞ்சியது அல்ல என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.



1969 ஆகஸ்ட் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்தையொட்டி இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்குத் தேவையில்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி தர நான் மறுக்கிறேன்.

## 4. அவையுரிமைக் கேள்வி

**'நவசக்தி' நாளிதழ் மீது எழுப்பப்பட்ட அவையுரிமைக் கேள்வி.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நவசக்தி பத்திரிகையின் 22—3—1969-ம் நாளிதழில், இப் பேரவையின் நிகழ்ச்சிகளைத் திரித்து வெளியிட்டிருப்பதாக உரிமைப் பிரச்னை ஒன்றை திரு. மு. சின்னசாமி அவர்கள் 24—3—1969 அன்று பேரவையில் கொண்டு வந்தார்கள். அந்தப் பத்திரிகை ஒரு திருத்தம் வெளியிட்டிருந்ததேயொழிய, அதற்கு வருத்தம் தெரிவித்து எழுதவில்லை. அப்படி வருத்தம் தெரிவித்து எழுதும் என்று எதிர்பார்த்து இதைப் பின்னர் எடுத்துக்கொள்கிறேன் என்று பேரவைக்கு 25—3—1969 அன்று அறிவித்தேன்.

அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் தவறுக்கான வருத்தத்தை 26—3—1969 நாளிதழில் வெளியிட்டு விட்டதால் மேற்கொண்டு அப்பத்திரிகையின் மீது நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று அறிவிக்கிறேன்.

## 5. கூடுதல் வினாக்களுக்கு விடையளித்தல்

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, நீங்கள் விதிமுறைகளைப் பற்றியும், நடைமுறையைப் பற்றியும், மரபுகளைப் பற்றியும் சொன்னீர்கள். அதை நான் வரவேற்கிறேன். விதிமுறைகளின் அடிப்படையில் பார்க்கும்போது சென்ற பெப்ரவரி மாதத்திலிருந்து என் கேள்விகள் ஒன்றும் இங்கு வரவேமாட்டேன் என்கிறது. 1,500 கேள்விகள் கொடுத்திருக்கிறேன். டிப்பார்ட்மெண்டிலிருந்து எனக்கு வந்திருக்கிற அதிகாரபூர்வமான லெட்டர் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதிமுறைகள்கூட அதுதான். இவ்வளவு கேள்விகள் கொடுத்திருக்கிறேன், இவ்வளவுதான் வந்திருக்கின்றன என்பதுபற்றி கேட்பதுகூட இந்த அவையில் கேட்கக் கூடாது. அதைக் கூட என் அறையில்தான் கேட்க வேண்டும். 1,500 கேள்விகள் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்கள் கொடுத்ததில் 85 கேள்விகள்தான் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. பேரவை கலைக்கப்பட்டு, காலாவதியாகி பின்னர் உயிரூட்டியிருப்பவை 83 கேள்விகள். புதிதாக 19 கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆக 102 கேள்விகள்தான் திரு. கோதண்டராமன் அவர்கள் பேரில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. நட்சத்திரக் குறியிடாத கேள்விகள் 18 அனுமதிக்கப்பட்டிருக்

[பேரவைத் தலைவர்] [1969 ஆகஸ்ட் 19

இன்றைய டிப்பார்ட்மெண்டுக்கு மூன்று அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்தக் கேள்விகளுக்கு விடைகள் வந்த பிறகுதான் பேரவைக்கு அனுப்ப முடியும். இப்போது கூட நான் முதல் அமைச்சர் அவர்களிடத்தில் கூறியிருக்கிறேன். விடைகள் இலாகாக்களிலிருந்து விரைவில் வருவதில்லை, ஆகவே, அதற்கான **வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறேன்.** எந்தவிதமான காலதாமதமும் இங்கு நடைபெறவில்லை என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எவ்வளவோ கேள்விகளை எழுதி அனுப்பிவிடுகிறோம், ஆனால் அந்தக் கேள்விகள் எல்லாம் அனுமதிக்கப்பட்டுவிட்டன என்று கருதத் தேவையில்லை. எந்தெந்தக் கேள்விகள் எந்தெந்தக் காரணங்களுக்காக அனுமதிக்கப்படவில்லை என்பதும் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், அதைப்பற்றிக் கேட்பதாக இருந்தாலும்கூட அவையில் அதைப் பற்றிக் கேட்பது சரியல்ல. அப்படி ஒவ்வொருவரும் கேட்பதாகயிருந்தால் அவையில் ஒன்றையும் செயல்படுத்த முடியாத நிலை ஏற்படும். ஆகவே அறையில் வந்து கேட்கலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அறையில் ஒருமுறை அல்ல, இரண்டு முறையல்ல, பல முறை நான் கேட்டாகிவிட்டது. அப்படிப் **பலமுறை கேட்டும் கூட எங்களுக்கு மட்டும், குறிப்பாக மார்க்ஸிஸ** கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டும் மறுக்கக் கூடிய அளவிற்கு இருக்கிறது என்பது என் எண்ணம். தொடர்ந்து இந்தச் **சட்டசபை ஆரம்பித்ததற்குப் பிறகுகூட காங்கிரஸ் கட்சியின்** கேள்விகள் மட்டும் வருகின்றனவே தவிர நாங்கள் கேள்விகள் போடுவதற்கு அனுமதிப்பதில்லை. கேள்விகள் வரமாட்டேன் என்கிறது. முக்கியமான பிரச்னைகள், ஒத்திவைப்புத் **தீர்மானங்கள் என்று எது போட்டாலும் அவை வரக்கூடிய** அளவிற்கு கிடையாது. விதிமுறைகள், நடைமுறைகள் இவைகளைப்பற்றியெல்லாம் சொன்னால் மட்டும் போதாது. 1,500 கேள்விகள் அனுப்பியதில் இப்போது 122 தான் இருக்கிறது. இலாகாக்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம், அவை வந்தால் தான் எடுத்துக்கொள்ளமுடியும் என்று சொல்லக் கூடிய அளவிற்கு இருந்தால் இது வேதனைப்படக் கூடிய விஷயமாகும். எதற்காக வேண்டி நாங்கள் கேள்விகள் எழுதி அனுப்புவது. விதிமுறைகளின் அடிப்படையில்தான் நான் இதைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதிமுறைகள்படி எப்படி நடக்க வேண்டுமென்று சொல்லியாகிவிட்டது. அதை வந்து சொல்லவேண்டிய இடம் இந்த பேரவை அல்ல. உங்கள் கேள்விகள் **எவ்வளவு அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன். அந்தக் கணக்கைப்பற்றிச் சொன்னேன். முதல் அமைச்சர் அவர்**களிடமும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இலாகாக்களிலிருந்து விரைவில் விடைகள் வரவில்லை. ஆகவே, அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இப்போதுதான் அறையில் கேட்டுக்கொண்டு வந்திருக்கிறேன். விரைவில் விடைகளை அளிக்க



1969 ஆகஸ்ட் 19]

வேண்டும், எவ்வளவு விரைவில் அறிக்கைகளை அனுப்ப முடியுமோ அவ்வளவு விரைவில் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்து கொண்டு வந்திருக்கிறேன். திரு. கோதண்டராமன் அவர்களின் கேள்விகள் எவ்வளவு அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்று கூறினேன். தனக்கு ஒருவருக்கு வரவில்லை என்பதால் கம்யூனிஸ்ட் கட்சிக்கே வரவில்லை என்ற முறையில் சொன்னார்கள். திரு. கோதண்டராமனின் எண்ணம் தன்னைத் தவிர வேறு யாரும் கேள்விகளை **இந்த அவையில் போடக்கூடாது என்பது. திரு. கோதண்டராமன்** நிறையக் கேள்விகள் கேட்பவர். 236 பேர்களுக்கு கேள்விகள் கேட்க இடம் இருக்கிறது. அதற்கு வாய்ப்பளிக்கவேண்டும். இருக்கிற நோக்கில் ஒவ்வொரு பார்டியையும் பார்த்துப் பார்த்து தான் கொடுத்து வருகிறேன். தி.மு.க., காங்கிரஸ், சுதந்திரா, பி.எஸ்.பி., எஸ்.எஸ்.பி., கம்யூனிஸ்ட் கட்சி இடது, வலது, தனிப்பட்டவர்கள் என்று எல்லோரையும் பார்த்துப் பார்த்துத் **தான் மாறி, மாறி கொடுத்து வருகிறேன்.** அதைப் பார்த்தால் தெரியும். எனக்கு இந்தக் கட்சி அந்தக் கட்சி என்ற மனப்பான்மை **இல்லை. எனக்கு ஒரு வேற்றுமையும் கிடையாது. அந்த முறையில்** தான் நான் அனுமதி கொடுத்து வருகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பாயின்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்பளனேஷன். "கோதண்டராமனின் எண்ணம் தனக்கு மட்டும் வரவேண்டும்" என்று சொல்வது பற்றி ரொம்ப வருத்தப் படுகிறேன். நான் அதுமாதிரி சொல்லவில்லை. சபாநாயகர் அவர்களின் எண்ணம் தி.மு.க.-விற்கு மட்டும்தான், சுதந்திரா **விற்கு மட்டும்தான், காங்கிரஸுக்கு மாத்திரம்தான் கொடுக்க** வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது என்று நானும் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோதண்டராமனை நான் **குறை சொல்ல இதைச் சொல்லவில்லை. திரு. கோதண்டராமனுக்கு அவ்வளவு ஆர்வம் இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்தியாக** வேண்டும். அதைத்தான் சொல்கிறேன். கேள்விகள் கேட்கவேண்டுமென்ற துடிப்பு தப்பு என்று சொல்லவில்லை. அதுபோன்ற துடிப்பு எல்லோருக்கும் இருக்கிறது. அதை மதிக்கவேண்டும் என்றுதான் சொல்கிறேன். நான் குறை சொல்லவில்லை. எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்கவேண்டியிருக்கிறது.

6. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. சி. கோவிந்தராசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியம் இந்தியாவிலுள்ள ஏனைய மின்சார வாரியங்களை விட சிறப்புற்று விளங்குகிறது என்று எல்லோராலும் போற்றப்படுகிறது. அது உண்மை. அத்துடன் திருப்திப்பட்டால் போதாது. அப்படி திருப்திப்பட்டு விட்டால் மின்சார **வாரியத்திற்கு நாம் உதவி செய்தவர்களாக ஆக மாட்டோம். மின் சாரவாரியத்தின் பொருளாதார நிலைமை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதன் மூலதனம் 314 கோடி ரூபாய். இந்த 314 கோடி**

ரூபாயில் அரசாங்கக் கடன் ரூ. 200 கோடி. மீதி 114 கோடி ரூபாய் பாங்குகளிலிருந்தும், எல்.ஐ.சி.-யிலிருந்தும், கடன் பத்திரங்கள் மூலம் மக்களிடமிருந்தும் வாங்கியது. இந்த 314 கோடி ரூபாய்க்கு நாம் வருடந்தோறும் வட்டி கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எல்.ஐ.சி.-யிலிருந்தும், பாங்குகளில் இருந்தும் கடன் வாங்கும்போது வாரியத்திற்கு இருக்கக்கூடிய பல்வேறு கட்டடங்களையும், பவர் ஹௌஸ், இயந்திரங்கள் போன்றவற்றையும் அடகு வைத்துத்தான் அந்தக் கடனைப் பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எல்.ஐ.சி.-க்கும், பாங்குகளுக்கும் வாங்கிய கடன்களுக்காக வாரியத்தின் சொத்துக்களை நாம் அடகு வைத்திருக்கிறோம். இப்படிப்பட்டதொரு மோசமான நிலை இருப்பதை உறுப்பினர் உணர்ந்து அதைத் திருத்தியமைக்கத் தக்க ஆலோசனைகள் சொல்ல நாம் கடமைப்பட்டிருக்கிறோம். எல்.ஐ.சி.-யிலிருந்து நாம் கடன் பெறும்போது நம் வாரியத்தின் சொத்துக்களை அடமானம் வைக்கவேண்டுமா? அது ஒரு பொதுத் துறை ஸ்தாபனம். எலெக்ட்ரிஸிட்டி போர்டும் ஒரு பொதுத் துறை ஸ்தாபனம். நம் மின்சார வாரியத்தின் தலைவர் கடந்த மாதம் நைனிட்டாலில் பேசும்போது, அங்கு வாட்டர் அண்ட் பவர்கமிஷன் கூட்டத்தில் பேசும்போது ஒன்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் நம் மாநில மின்துறை அமைச்சர் அவர்களும் கூட இருந்திருக்கிறார்கள். எல்.ஐ.சி. ஒரு பொது ஸ்தாபனம். மின்சார வாரியமும் ஒரு பொது ஸ்தாபனம். ஆகவே அப்படி ஒரு பொது ஸ்தாபனத்திலிருந்து கடன் பெறும்போது நாம் சொத்துக்களை அடகு வைக்கவேண்டுமா என்ற கேள்வியை அவர்கள் அங்கு கேட்டிருப்பதாக நமக்கு தெரிய வருகிறது. இந்த நிலை மாற்றப்படவேண்டும். அது மட்டுமல்ல. மூலதனத்திற்காக வாரியத்தின் சொத்தை அடகு வைத்திருக்கிறோம். வாரியத்திற்கான மூலதனத்தை மேலும் மேலும் சேகரிக்கக் கூடிய முறையில் சில ஆலோசனைகள் கூற விரும்புகிறேன். மூலதனத்திற்குக் கூட 11 சதவிகிதத்திற்கு மேல்
முற்பகல் 10-30 ரிட்டர்ன் வந்தால் கடன் தொகையில் பாதியை வட்டியில்லாத கடனாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று வெங்கட்ராமன் அறிக்கை கூறுகிறது. அப்படிப்பார்த்தால்கூட, 200 கோடி ரூபாய் மாநில அரசு மின்சார வாரியத்திற்குக் கடனைக் கொடுத்திருக்கிறது, தற்சமயம் கிட்டத்தட்ட 13 சதவிகிதம் ரிட்டர்ன் வருவதால் பாதி தொகை, அதாவது 100 கோடி ரூபாய்க்கு வட்டியில்லாத நிலையில் வைக்க முடியும். அதன்மூலம் 6 கோடி ரூபாயை மின்வாரியத்திற்கு மீதப்படுத்த முடியும். அதுமட்டுமல்ல, எல்.ஐ.சி.-யில் அடைமானம் இல்லாமலே நாம் செய்ய முடியும். மின்சார வாரியத்திற்குப் பல்வேறு ஆலோசனை கூட நான் கொடுக்க முடியும். இன்றைக்கு மின்சார வாரியத்திற்குப் பல கட்டிடங்கள் வாடகையில்தான் இருக்கின்றன. ஏற்கனவே இருக்கும் சொந்தக் கட்டிடங்களையும் அடகு வைத்திருக்கிறோம். அதற்கு 7,68,897 ரூபாய் நாம் ஆண்டுதோறும் வாடகையாகக் கொடுக்கிறோம். நான் என்ன ஆலோசனை கூறுகிறேன் என்றால்,



'ஃபேஸ்ட் புரோக்ராம்' அடிப்படையில் கட்டடம் கட்ட திட்டம் போடவேண்டும். நாம் எவ்வளவோ மூலதனத்திற்காகச் செலவிடுகிறோம். எனவே, ஆண்டுதோறும் 1 கட்டிடம், 2 கட்டிடம் என்று கட்டிவந்தால் இந்த 7 இலட்சத்து சொச்ச ரூபாயை மிச்சப்படுத்த முடியும். நிலக்கரி மானியம் என்று மத்திய சர்க்காரால் கொடுக்கப்படுகிறது. 10 இலட்சம் ரூபாய் 'கோல் சப்ஸிடி'-யாகக் கொடுக்கப்படுகிறது. அந்தப் பத்து இலட்சம் ரூபாய் ஹெச்.டி. உபயோகிப்போர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. இது கூடாது. 10 இலட்சம் ரூபாய் வருமானத்தில்தான் வைக்க வேண்டும் என்று அமைச்சரவர்களையும் வாரியத்தையும் கேட்டுக்கொள்கிறேன்.

அந்நிய நாடுகளிலிருந்து உதவி கிடைக்கிறது. இதிலும் தங்களுடைய பதிலில் மின்சார வாரியம் சொல்லியிருப்பதை அவ்வளவாக ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது. வட்டியில்லாத கடனை மத்திய சர்க்காருக்குக் கொடுக்கிறார்கள். ஆனால், மத்திய சர்க்கார் 6 சதவிகிதம், 7 சதவிகிதம் வட்டிவிகிதத்தில் நமக்குக் கொடுக்கிறார்கள். அந்த அவசியம் கிடையாது. எனவே, இது மத்திய அரசாங்கத்தின் கொள்கை என்று மின்சார வாரியம் பதில் கொடுக்க முடியாது. இதை நம்முடைய அரசு ஆட்சேபிக்கவேண்டும். கொலாபரேஷனில் நமக்குப் பணம் கிடைக்கிறது. முன்பு ஸ்விட்சர்லாந்து கொலாபரேஷன் இருந்தது. இப்பொழுது ஸெக் கொலாபரேஷன் இருக்கிறது. ஸ்விட்சர்லாந்தும் ஸெக்கும் 2½ சதவிகிதத்திற்குக் கொடுக்கிறது என்றால், மத்திய சர்க்கார் அதற்கு 6 சதவிகிதம், 7 சதவிகிதம் வட்டி நமக்கு விதிக்கிறது. இதுகூட 2½ சதவிகிதம்தான் இருக்க வேண்டுமென்று மாநில அரசு இந்த விஷயத்தில் கறாராக, திட்டவட்டமாகக் கூறி, மத்திய சர்க்கார் விதிக்கும் இந்த வட்டிகளை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று அழுத்தம் திருத்தமாகக் கூற வேண்டுமென்று விழைகின்றேன்.

லைன் லாஸ் பற்றிச் சொல்லும்பொழுது அதற்குப் பதில் மின்வாரியம் கொடுப்பது சரியல்ல. இன்னும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட வேண்டுமென்றால் எந்தெந்த இடங்களிலிருந்து லீக்கேஜ் என்று சொல்லப்படுகிறதோ அவைகளைக் கவனிக்க வேண்டும். 5 கோடி ரூபாய் பெறுமானமுள்ள லாஸ், இந்த லீக்கேஜில் லாஸ் ஆகிறது என்பது என்னுடைய அழுத்தம் திருத்தமான அபிப்பிராயம். அதை நிவர்த்திக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதுபற்றிப் பல்வேறு யோசனைகள் இந்தச் சட்டமன்றத்தில் கொடுக்கப்பட்டன. அது பற்றித் திட்டவட்டமாகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதுமட்டுமல்ல, தேய்மான நிதி. அது கணக்குக்காக என்று சொல்லப்படுகிறது. அந்தப் பணம் நம்மிடத்தில்தான் இருக்கிறது என்றும் கூறப்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டு

[திரு. சி. கோவிந்தராசன்] [1969 ஆகஸ்ட் 19

என்றால், 1952-ஆம் ஆண்டு பேனின் பிரிட்ஜ்ஜில், இயந்திரங்கள் வாங்கப்பட்டு தேய்மான நிதி ஒதுக்கப்பட்டு வந்தது. இயந்திரங்களுக்கு 30 ஆண்டுகளுக்குத்தான் என்று நாம் ஆயுள் போடுகிறோம். ஆனால் 57-ஆம் ஆண்டு மின்சார வாரியம் ஏற்பட்ட பிறகு கூட, மறுபடியும் 30 ஆண்டுகள் என்று கணக்கிடப்பட்டு அதே இயந்திரங்களுக்கு தேய்மானம் ஒதுக்கப்படுகிறது. அந்தப் பணம் நம்மிடம்தான் இருக்கிறது என்று சொன்னாலும் கூட, அதனால் தொழிலாளர்களுக்குப் பல சலுகைகள் குறைகின்றன. தேய்மான நிதி ஒதுக்கப்படுவதால் லாபத்தில் பணம் குறைகிறது. அதனால் சட்டப்பிரகாரம் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

'டெப்ரிசியேஷன் ஃபண்ட்' என்பதில் 1960, 61, 62-ம் வருஷங்களில் ஒதுக்கிய ரூபாய் 2,91,730 தனியாகக் காண்பிக்கப்பட்டு வருகிறது. அப்படி தனியாகக் கணக்கு வைப்பது சரியானது அல்ல. ஆடிட் அப்ஜெக்ஷன்படி வருஷ வருஷமாய்க் கணக்கிலே சேர்க்கப்பட வேண்டுமே தவிர, தனியாகக் கணக்கிடுவது கூடாது. அதனால் சிக்கல்கள் பல வருகின்றன என்று தோழர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசும்பொழுது கூறியதைப் பார்த்தோம்.

இன்னொரு விஷயம். மதிப்பீடுகள் போடும்பொழுது ஒரு திட்டத்திற்கு 8 கோடி ரூபாய் மதிப்பு என்று இருந்தால் 10 கோடி ரூபாய் என்று மதிப்பிட்டு, அதில் 9 கோடி ரூபாயில் முடித்து விட்டு, மீதி ஒரு கோடி ரூபாய் என்று சொல்லப்படுகிறது. திட்டம் போடும்பொழுது யாரும் அக்கறை கொடுத்துச் செய்யப்படவில்லை. மதிப்பீட்டிற்கு அதிகமாகப் பணத்தை ஒதுக்குவதால் பணம் விரயம் செய்யப்படுகிறது. மேலும், காண்ட்ராக்ட் முறையில் வேலைகளைச் செய்வதும் சரியில்லை.

தொழிலாளர்கள் ஒருங்கிணைந்து ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமென்று வேண்டப்படுகிறது. மின்சார வாரியத்திற்கும், தொழிலாளர்களுக்கும் நல்ல ஒத்துழைப்பு நல்லமுறையில் இருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. எப்பொழுது அந்த ஒத்துழைப்பு வரும்? மின்சார வாரியத்தில் இன்று பார்க்கிறோம். 16, 17, 18 தேதிகளில் அங்கு என்ஜினியர்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காக ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள். 18, 19 தேதிகளில் அங்குள்ள டிராப்ட்ஸ்மேன், டிரேசர்ஸ் தங்கள் கோரிக்கைகளுக்காக இயக்கங்கள் நடத்துகிறார்கள். என்னூர் அனல் மின்சார நிலையத்தில், வெளியிலிருந்து ஆட்களைக் கொண்டு வரக்கூடாது. எங்களுக்கே பயிற்சி கொடுத்து, ஆப்பரேஷன் அண்ட் மெய்ண்டனன்ஸில் நியமிக்க வேண்டுமென்று அவர்கள் இயக்கம் நடத்துகிறார்கள். எனவே, மின்சார வாரியத்தில் என்ஜினியர்களிலிருந்து சாதாரண கடைநிலை ஊழியர்கள் வரை பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது எப்படி ஏற்பட்டது? அவர்கள் குறைகளைத் தீர்க்க பணம் இல்லை, பணம் இல்லை என்று சொல்லப்



1969 ஆகஸ்ட் 19] [திரு. சி. கோவிந்தராசன்]

படுகிறது. கடந்த 1967-இல் ஹைகோர்ட்டில் வழக்குகள் வாபஸ் ஆனபிறகு தொடர்ந்து அப்பொழுதிருந்த முதலமைச்சர் அவர்களும், தொழிலாளர் பிரதிநிதிகளும் பேச வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆனால், இன்றுவரை என்ன பேசப்பட்டது, என்ன முடிவெடுக்கப்பட்டது? அளவுகடந்த காலதாமதத்தினால் தான் இந்த நிலைமைகள் ஏற்படுகின்றன.

தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரையில் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று அரசாங்கம் கூறுகிறது, அரசாங்கத்திலிருக்கும் பிரதிநிதிகள் கூறுகிறார்கள். ஆனால் அரசாங்கத் துறையிலுள்ள இந்தத் தொழிலில் எப்படி ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற நிலை மீறப்பட்டது? ஏற்கெனவே ஒரு சம்மேளனம், எலக்ட்ரிசிட்டி போர்டு சம்மேளனம் என்றிருக்கிறது. இதில் எல்லாப் பகுதி தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது கணக்காயர்களுக்காக ஒரு சங்கம் என்று ஏன் ஏற்படுத்த வேண்டும்? கணக்காயர்களுக்கு என்று ஒரு சங்கம் தனியாக ஆரம்பித்து அதற்கு அங்கீகாரம் கொடுத்திருப்பது ஏன்? 'கோட் ஆஃப் டிஸிப்ளின்' காற்றில் பறக்கவிடப்பட்டது. அதன் பிரகாரம் மெம்பர்ஷிப்பைப் பரிசீலிப்பது கிடையாது. லேபர் டிபார்ட்மெண்ட் சரியான முறையில் பரிசீலனை செய்து இந்த அங்கீகாரம் வரவில்லை. தொழிலாளர்களை பிரிப்பதற்கான முயற்சிகளை அதிகாரிகள் செய்கிறார்கள். இப்படியிருந்தால் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பை எப்படிப் பெற முடியும்? அவ்வாறு ஒருங்கிணைந்த ஒத்துழைப்பைப் பெறுவதற்கு அதிகாரிகள் தடையாக இருக்கிறார்கள். இந்தக் கொள்கை உதவாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, 65,000 பேர்கள் இருக்கும் ஒரு தொழில் கூடத்தில் 30,000 பேர்கள் கேஷுவல் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். கடந்த ஆண்டு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி 1968-ஆம் வருஷம் நவம்பர் மாதத்தில் 2,000 பேர்களும், 1969-ஆம் வருஷம் மார்ச் மாதம் 2,000 பேர்களும், 1969-ஆம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் 2,000 பேர்களும் ஆக, கிட்டத்தட்ட 6,000 பேர்கள் நிரந்தரமாக்கப்பட்டு இருந்திருக்க வேண்டும். ஆனால் நிலைமை என்ன? இதுவரை ஒரு தொழிலாளி கூட நிரந்தரமாக்கப்படவில்லை. அந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவில்லை. இன்னும் போனஸ் சம்பந்தமாகக் கூற விரும்புகிறேன். 42 லட்சம் ரூபாய் லாபம் வந்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் 4 சதவிகிதத்திற்கு மேல் போனஸ் கிடையாது. நான் ஏற்கனவே கூறிய ஆலோசனைகள் பூராவையும் இந்த மின்சார வாரியம் ஏற்றுக்கொண்டால் வாரியத்தின் நிதிநிலை பெருகும். அரசாங்கத்திற்கு மின்சார வாரியம் 1 சதவிகிதம் அதிகமாக வட்டி கொடுக்கிறார்கள். அரசாங்கம் மற்றவர்களுடைய கடனுக்கு வட்டி கொடுக்கும்பொழுது 5 சதவிகிதம்தான் வட்டி கொடுக்

கிறார்கள். ஆனால், எலக்ட்ரிசிட்டி போர்டு அரசாங்கத்திற்குக் கொடுக்கும் வட்டி என்னவென்றால் 6 சதவிகிதம் ஆகும். இதை நாம் 5 சதவிகிதமாக மாற்றினால் அதன்மூலம் 2 கோடி ரூபாய் நமக்குக் கிடைக்கும். அதன் அடிப்படையில் பாதிகடனுக்கு வட்டியில்லாத கடன் என்று வெங்கட்ராமன் கமிட்டி அறிக்கையில் கூறுகிறது. எனவே, இதன் மூலம் 6 கோடி ரூபாய் கிடைக்க வழிவகை இருக்கிறது. 10 இலட்சம் ரூபாய் "கோல் சப்ஸிடி"-யை நாம் பயன்படுத்திக்கொள்ள முடியும். அப்படிச் செய்தால் தொழிலாளர்களுக்குச் சலுகைகள் செய்வதற்கு வசதியாக இருக்கும்.

கடைநிலை ஊழியர்களுக்கு உடை சலவை செய்வதற்குக் கொடுக்கக்கூட பணம் இல்லை என்று கூறுகிறார்கள். அவ்வாறு சொல்லப்படுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. நான் கூறிய ஆலோசனைகள் மூலம் அதற்கு வழிவகைகள் இருக்கின்றன என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தொழிலாளர்கள் என்றென்றைக்கும் ஒருங்கிணைந்து ஒத்துழைப்பு கொடுத்தால் மின்சார வாரியம் மேலும் மேலும் சிறப்பாகச் செயல்படுத்த முடியும், நல்ல முறையில் இயங்க முடியும். இப்பொழுது எடுத்திருக்கும் நல்ல பெயர் மேலும் கிடைக்கவும் நமக்கு **உதவிகரமாக இருக்கும்.**

இன்னொன்று, இன்ஜினியர்களுக்கு இருக்கிற வேலைப்பளு இன்னும் குறைக்கப்படவில்லை. அவர்களுக்குச் சம்பள மாற்றமே கிடையாது. அதே மாதிரி டிராஃப்ட்ஸ்மென் அண்ட் டிரேஸர்ஸ் **குறைகள் தீர்க்கப்படவேண்டும், மில் கலெக்டர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தீர்க்கப்பட்டதைப் போல் ட்ரேஸர்களுடைய அநீதியும் தீர்க்கப்படவேண்டும்.** அவர்களுக்கு சலுகைகள் கொடுப்பதால் மிகப் பெரிய செலவு ஏற்படாது. அவற்றை நாம் நிச்சயமாக செய்து கொடுக்கமுடியும். அதைச் செய்து கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னூரில் பல்வேறு சங்கங்கள் இருக்கின்றன. ஒரு சங்கத்திற்கு மட்டும் ஆதரவு கொடுத்து, மற்ற எந்த சங்கமாக இருந்தாலும் டாக்டர் ஹாண்டே அவர்களைத் தலைவராகக் கொண்ட சங்கமாக இருந்தாலும், வேறு யாரைத் தலைவராகக் கொண்ட சங்கமாக இருந்தாலும் அந்த சங்கத்தைச் சேர்ந்தவர்களைச் சாதாரண காரியங்களுக்காக டிஸ்மிஸ் செய்கிறார்கள். தொழிற்சங்கச் சட்டத்தின்படி சங்க நிர்வாகிகளுக்குக் கொடுக்கப் **பட்ட உரிமைகளையும் மீறி அதிகாரிகள் செயல் படுகிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்களை தலைவராகக் கொண்ட தொழிற்** சங்கக் கட்டிடத்திற்கு எதிராக சுவர் எழுப்பியதற்காக அதிகாரிகளைக் கேட்டதற்கு உடனே அதன் துணைத் தலைவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். **இன்னும் துண்டு பிரசுரம்**



வெளியிட்டதற்காக மூவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். துண்டு பிரசுரம் வெளியிடுவதே சட்ட விரோதம் என்று சொல்லக் கூடிய நிலையிலே சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்து பாபுசாமி என்பவருக்கு அளிக்கப்பட்ட குவார்ட்டர்ஸில் அவர் இல்லாத நேரத்தில் அவருடைய வீட்டிற்கு ஒரு அதிகாரி சென்று சத்தம் போட்டாராம். அவருடைய மனைவியைப் பார்த்து, அதற்காக அவர் அதிகாரியிடம் குவார்ட்டர்ஸ் சம்பந்தமாக நான் இல்லாத நேரத்தில் என்னுடைய மனைவியிடம் சத்தம் போட்டீர்களாமே என்று கேட்டதற்கு அவர் ஒரு சங்கத்தினுடைய செயலாளர் என்ற காரணத்தினால் ஒரு மாத காலத்திற்கு மேல் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். எதற்காக நான் இதைக் கூறுகிறேன் என்று சொன்னால் இப்படிப்பட்ட ஒரு குறிப்பிட்ட சங்கத்திற்கு மட்டும் தான் மதிப்பு கொடுக்கவேண்டும் என்று அதிகாரிகளுக்கு மேலிருந்து தாக்கீதுகள் போகிறதோ அல்லது அதிகாரிகளே மேலே இருக்கக் கூடிய அரசினரை காக்காய் பிடிப்பதற்காக செய்கிறார்களோ நமக்குத் தெரியாது. நடைமுறையில் தொழிலாளர்களுக்கு கிடைக்கவேண்டிய சலுகைகள் கிடைக்க முடியாத நிலைமை ஏற்படுவது மட்டுமல்ல, அமைச்சரவர்கள் கூறுகிறபோது, ஒருங்கிணைந்த ஒத்துழைப்பைத் தொழிலாளர்களிடமிருந்து பெற வேண்டுமென்றார்களே, அது இப்படிப்பட்ட காரியங்களினால் சாத்தியம் இல்லாது போகிறது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஆலியார் பிராஜக்ட் போன்ற இடங்களில் தொழிற் சங்க சட்டங்கள் எல்லாம் சர்வசாதாரணமாக மீறப்படுகின்றன. ஏன், என்னூரிலேயே மீறப்படுகிறது. அங்கெல்லாம் தொழி லாளர்கள் பல ஆண்டுகளாக வேலை செய்கிறார்கள். 6 ஆண்டுகாலம், 7 ஆண்டுகாலம் வேலை செய்தபிறகும் கூட அவர்கள் நிரந்தரமாக ஆக்கப்படுவது கிடையாது. சட்டப்படிக் கிடைக்கவேண்டிய பிராவிடண்ட் ஃபண்ட் வசதி, ஏர்ன்ட் லீவ் வசதி இந்த வசதிகளும் கிடையாது. இந்த வசதிகள் எல்லாம் அவர்களுக்குக் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மின்சார வாரியம் செய்ய வேண்டும். தொழிலாளர்கள் மனப்பூர்வமாக ஒத்துழைப்பு கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் அளவுக்கு இந்த சிறுசிறு சலுகைகளை எல்லாம் கொடுப்பதற்கு மின்சார வாரியம் முன்வர வேண்டும். நம்முடைய மாநில அரசு மின்சார வாரியத்தில் இருப்பவர்களுக்கு அதை எப்படி நடத்த வேண்டும் என்று கூற வேண்டும். நிதிநிலை அறிக்கைமீது ஓட்டு போடுவதற்கு நமக்கு உரிமை இல்லாவிட்டாலும் கூட மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் இன்றிருக்கிற நிலைமையில் தொழிற்சங்கங்களை அங்கீகரிப்பதற்கு வேண்டிய தகுதி என்ன என்பதைப்பற்றி நிச்சயமாக தாக்கீது கொடுக்கவேண்டும். நேற்று நண்பர் சுரேந்திரன் அவர்கள் பேசியமாதிரி, இந்த ஏதோ கொள்கையா வைத்திருக்கிறோம் என்று மட்டும் [illegible]

[திரு. கி. கோவிந்தராசன்] [1969 ஆகஸ்ட் 19

ஆட்சியில் [illegible] தொழிற் சங்கங்களுக்கு அங்கீகாரம் கொடுக்கவேண்டும். அரசின் தொழிலாளர் இலாகாவில் பதிவு செய்யப்பட்ட பிறகுதான் அங்கீகாரம் கொடுக்கப்பட வேண்டும். எனக்குள்ள சங்கத்திற்கு [illegible] அரசாணையின் அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை பரிசீலித்து அதை முறைப் படுத்தவேண்டும். இல்லாவிட்டால், எதிர்காலத்தில் தங்களுக்கு வேண்டிய தொழிற்சங்கங்களை அங்கீகரிப்பதற்கு அது அடிகோலி விடும்.

நான் கொடுத்திருக்கிற யோசனைகளை, மின்சார வாரியத்தினுடைய மூலதனத்தையும் அதனுடைய பல அம்சங்களையும் பலப்படுத்துவதற்கு வேண்டிய யோசனைகளை, மின்சார வாரிய அதிகாரிகள், அரசினர், அமைச்சர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டு, மூலதனத்தைப் பெருக்குவதற்கும் பலப்படுத்துவதற்கும் தொழிலாளர் உறவை நிலைநாட்டுவதற்கும் எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறிக்கொண்டு, மற்றொன்றை தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆசிரியர் பிரசுரத் சம்பந்தமாக அங்கு ஏற்கனவே ஒரு சங்கம் இருந்தது. அந்தச் சங்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர்தான் தலைவராக இருந்தார். அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர் அனைவரும் பல்வேறு விதமான பிரச்சினைகள் ஒரு போராட்ட இயக்கத்தை நடத்தி அந்தத் தலைமையில் எந்தவிதமான சாதனையும் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் அவர்கள், குறிப்பாக அங்கே இருக்கக் கூடிய எங்கள் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை அணுகி தலைவராக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அப்பொழுதும் அவர்கள் மறுத்தார்கள். அரசியல் காரணத்திற்காக நான் தலைமை தாங்க வேண்டிய அவசியம் கிடையாது என்றார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தொழிலாளர்கள் அத்தனை பேரும் சேர்ந்துதான் அவரைச் சங்கத் தலைவராக ஆக்கி இருக்கிறார்களே தவிர, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அங்கீகரிக்கப்பட்ட சங்கம் இருக்கும்போது போட்டி சங்கம் அமைக்கும் கொள்கையை திட்டவட்டமாக ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை அங்கு இருந்தது இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்ததாக ஒரு தவறான நிலையை, நடந்ததற்குப் புறம்பான ஒரு விஷயத்தை நேற்று பேசிய நண்பர் இராமச்சந்திரன் அவர்கள் இந்த அவைக்கு தெரிவித்து இருக்கிறார்கள் என்பதை தெரிவித்து இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது அவைமுன் இருக்கும் 1969-70-ம் ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது நடந்த 2 நாட்களாக அருமையான, திறமையான விளக்கங்கள் அமைந்த கருத்துக்கள் இந்த மாமன்றத்தில் எடுத்துக் கூறப்பட்டன. பொதுவாக மின்சார



1969 ஆகஸ்ட் 19] [திரு. சி. வி. எம். அண்ணாமலை]

வாரியம் ஏற்பட்டு சற்றேறக்குறைய 12 ஆண்டுகள் ஆகியும் இந்த 12 வருடகாலத்தில் இந்த வாரியத்தினால் தமிழகத்திற்கு ஏற்பட்டிராத பெரு நன்மைகள் எல்லாம் ஈராண்டு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. நடைமுறையில் மிகமிக சிறப்பாகவும், நாட்டினுடைய மின்சாரத் தேவையை உடனடியாக பூர்த்தி செய்து வைக்கக் கூடிய வகையிலும் அது தனுடைய பணியை செவ்வனே ஆற்றிக்கொண்டு வருகிறது என்பதை நான் எடுத்துச்சொல்வது சிறப்புக்குரியது என்பதை நான் மீண்டும் மீண்டும் நினைவுப்படுத்த விரும்புகிறேன். சென்ற ஆண்டில் நான் இதே மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது பேசியபோது எனது சட்டமன்றத் தொகுதியில் மின்சாரக் கம்பங்கள் இருக்கின்றன, விளக்குகள் இல்லை, பல்புகள் இல்லையென்று எண்ணற்ற குற்றங்குறைகளைத் தெரிவித்தேன். ஆனால், இந்த ஆண்டில் இது போன்ற குற்றங்குறைகளை எனது சட்டமன்றத் தொகுதியிலே மட்டுமல்ல, தமிழகத்திலே எங்குமே இத்தகைய குற்றங்குறைகள் இல்லையென்று கூறத்தக்க அளவுக்கு ஒரு பெரும் திருப்பத்தை மாறுதலை மின்சார வாரியம் செய்து கொண்டு வருகிறது என்பதை நாம் எண்ணுகிறபொழுது உண்மையாகவே பெருமைப்படுகிறோம். குறிப்பாக, நான் ஒன்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த 12 ஆண்டுகாலமாக இந்த மின்சார வாரியத்தில் தீராத சிக்கலாக இருந்துவந்த ஒரு பெரும் தலைவலி, அதாவது தங்கள் தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்ற குற்றங்குறைகளை, ஒரு சங்கமாகக் கூட்டி பேசி, கலந்து அவற்றை ஆராய்வதற்காக எடுத்துக் கூறி மின்சார வாரியத்தின் மூலமாகப் பெறவேண்டிய நன்மைகளைப் பெற முடியாத நிலைமையில் மின்சார வாரியம் ஏற்படுத்தப்பட்டிருந்தது ஆகும். இந்த நிலை மாறி, இன்றையதினம் சங்கங்கள் அமைக்கத்தக்க நல்ல சூழ்நிலையை திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய பார்வையிலே இயங்குகின்ற மின்சார வாரியம் இவ்வரசு இல்லாவிட்டால் பெற்றிருக்க முடியாது என்பதை நான் எடுத்துக் கூறத் தேவையில்லை.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாடு முழுக்கமுழுக்க வேளாண்மைத் துறையை நம்பி வாழ்கின்ற நாடு. தமிழகத்திலே சிறு குடிசைத் தொழில்களும் மின்சாரத்தை நம்பி வாழ்கின்றன. ஆகையினாலே மின்சாரத் துறையானது இப்பொழுது இருக்கிற நடைமுறையை மேலும் கொஞ்சம் விரிவுபடுத்தி, மேலும் கொஞ்சம் சுறுசுறுப்பான வகையிலே அது இயங்கத்தக்க அளவுக்கு வேலைத் திட்டங்களை முறைப்படுத்துகின்ற வகையிலே மாற்றி அமைத்தால் நிரந்தரமான பெரும் பயன் ஏற்படும் என்று நான் கருதுகிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வேளாண்மைக் காரியங்களுக்குத் தனிப்பட்டவர்கள் மின்சாரத்திற்காக, மின் இணைப்பிற்காக விண்ணப்பம் போட்டால் 2, 3 ஆண்டுகாலத்திற்குப் பிறகு கூட அவர்களுடைய விண்ணப்பம் என்னவாயிற்று என்று கேட்பாரற்ற நிலைமை இருந்தது. அதையெல்லாம் மாற்றி இப்பொழுது விண்ணப்பங்கள் வந்த உடனே மின் இணைப்

[திரு. சி. வி. எம். அண்ணாமலை] [1969 ஆகஸ்ட் 19

காப்பாடுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. பொதுவாகவே, தமிழகத்தில் இப்பொழுது அளிக்கப்பட்டு வருகின்ற இணைப்பை முறையாக, பூரணமாக அளிக்க வேண்டுமென நான் கருதமாட்டேன். உண்மையாகவே தேவைப்படுகின்ற அளவுக்கு, மேலும் பொருள் நஷ்டம் ஏற்பட்டால் கூட உற்பத்திப் பெருக்கத்திற்காக மின் வாரியம் அதைத் தாங்கவேண்டும். அந்த வாரியம் தன்னுடைய நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் மின் இணைப்பை அளிக்கவேண்டும். அதனை ஒரு நோக்கமாகவே கருதவேண்டுமென்று அதனுடைய அதிகாரிகளை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மின்சார வாரியத்திற்கு தலைவராக இருக்கிற உயர்திரு ........ நல்ல அனுபவம் மிக்கவர்கள். உண்மையாகவே நல்ல அதிகாரி என்று பலரால் போற்றப்பட்டவர்கள். என்னைப் போன்றவர்கள் மதிக்கத்தக்க பெரும் மக்கள் என்றாலும் அவர்களைப் போன்றவர்கள் தலைவராக இருப்பது வாரியத்திற்கு புதிய டெக்னிக்கல் முறைகளை, நவீன இயந்திர முறைகளைக் கொண்டு மேம்படுத்துவதற்கு அது துணை செய்வதாக அமைந்து விடாது. ஆகையினாலே, அந்த மின் துறையிலே மின் இயக்கப் பொறியாளர்கள், நிறைந்த அறிவு பெற்ற அனுபவம் உள்ளவர்கள் தலைவராக ஓராண்டு காலத்திற்கு மட்டும் இருந்தால் போதாது, சுமார் மூன்றாண்டு காலத்திற்கு தலைவராக இருந்து திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நல்ல ஆற்றலைப் பயன்படுத்தினால் இப்பொழுது வாரியத்தில் பெருக்கெடுத்து வருகின்ற மின்சார உற்பத்தி பெரிதும் அதிகமாகவும், மின்சார விநியோகம் முறையாக இருக்கவும் பெரும் துணையை அது அளிக்கும் என்று நான் கருதுகிறேன். இப்பொழுது தலைமைப் பொறியாளர் ஒருவர் மட்டுமே இருக்கிறார். அந்தத் தலைமைப் பொறியாளர் மிகவும் போற்றக்கூடியவர், மிக்க திறமை வாய்ந்தவர் என்பதை தமிழகம் அறியும் என்றாலும், அனைத்து மேற்பார்வையும் அவரே வைத்துக்கொண்டிருக்கிறார். அப்படியில்லாமல் உற்பத்தியைப் பெருக்குவதற்கென்று ஒரு தனி தலைமைப் பொறியாளர் என்று வகுத்துக்கொள்ளவேண்டும். விநியோகம் செய்வதற்கென்று ஒரு தனி தலைமைப் பொறியாளர் என்று வகுத்துக்கொள்ளவேண்டும். நிர்வாகத் துறைக்கு என்று ஒரு தனி தலைமைப் பொறியாளர் என்று வகுத்துக்கொள்ளவேண்டும். அது மட்டுமல்ல, மின்சாரத் துறையிலே வல்லுநர்களாக இருப்பவர்கள், பொறியியல் துறையிலே வல்லுநர்களாக இருப்பவர்கள் அதிகமாக இடம் பெறத்தக்க அளவுக்கு வாரியத்தின் உறுப்பினர்கள் அமைக்கப்பட வேண்டும். இப்பொழுது வாரியத்தில் இரு பெரும் மின்சாரத் துறை வல்லுநர்களே இடம் பெற்றிருக்கிறார்கள். மற்றவர்கள் ஐ.ஏ.எஸ். படித்தவர்கள் என்று கூறப்படுகிறது. அந்தத் துறையிலே உள்ள வல்லுநர்கள் நாட்டு மக்களுக்கு எவ்வளவு மின்சாரம் தேவைப்படுகிறது என்பதை பரிசீலித்து மின்சாரத் துறைத் திட்டங்களை வகுத்து, நடைமுறைப்படுத்தினால், அதில் பெரிய லாபத்தைக் கூட பெற முடியும். மின்சார வாரியம் மூலமாக இந்த நாட்டு மக்களுடைய சிறு கைத்தொழில் பெருகுவதற்கும்,



1969 ஆகஸ்ட் 19] [திரு. சி. வி. எம். அண்ணாமலை]

குடிசைத் தொழில் பெருகுவதற்கும், வேளாண்மைத் துறைக்கு அதிகமாக உற்பத்தியைப் பெருக்குவதற்காக மின் விசை இணைப்பைத் தருவதன் மூலம் அதிகமான லாபத்தைப் பெறுவதற்கும் அந்தத் துறை ஒரு சிறந்த ஸ்தாபனமாக அமைய முடியும் என்று நான் சென்ற முறை பேசும்பொழுது கூறினேன். ஆனால் எதற்கெடுத்தாலும் மின்சாரத் துறை சம்பந்தப்பட்ட உபகரணங்கள், பொருள்கள் இவைகளுக்கெல்லாம் காண்டிராக்ட் மூலம், ஒப்பந்தப் புள்ளி மூலம் வகை செய்யப்படுகிறது. ஒப்பந்தப் புள்ளி மூலம் இந்தப் பொருள்களை வாங்குவதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(திரு. சென்றி வே. முனுசாமி தலைமை)

இந்த நாட்டில் சந்தேகக் கண்கள் கொண்டு பார்ப்பவர்களின் எண்ணிக்கை இருக்கிறது. இந்தக் கம்பெனி சேர்மனுக்கு வேண்டிய கம்பெனி, இந்தக் கம்பெனி தலைமைப் பொறியாளருக்கு வேண்டிய கம்பெனி, ஆகவே அந்தக் கம்பெனிக்கு ஒப்பந்தப் புள்ளி அளிக்கப்பட்டது என்பது போன்ற பழிச் சொற்களை மாறுபட்ட கருத்துக் கொண்டவர்கள் கூறக்கூடும். ஆகவே, மின்சாரத் துறை சம்பந்தப்பட்ட மட்டில் அனைத்துப் பொருள்களையும், டெக்னிகல் சம்பந்தப்பட்ட பொருள்களெல்லாம் மின்சாரத் துறையினரே உற்பத்தி செய்யக் கூடிய அளவுக்கு, அரசாங்கத்தின் மேற்பார்வையில் தனித் தனி தொழில் நிறுவனங்கள் அமைக்கப்பட்டால் அந்தத் தொழில் நிறுவனங்களின் மூலம் நாட்டிலிருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். அப்படிப்பட்ட தொழில் நிறுவனங்கள் மூலம் இந்த வாரியம் பெரும் அளவுக்கு லாபத்தைப் பெறக்கூடும். அதே நேரத்தில் இவருக்கு வேண்டியவருக்கு டெண்டர் கொடுத்துவிட்டார், அவருக்கு வேண்டியவருக்கு டெண்டர் கொடுத்துவிட்டார் என்று சொல்கிற பழிக்கு இடம் ஏற்படாது. நிர்வாகத்தை ஏற்று நடத்துகிறவர்களுக்கு பாதுகாப்பாக அமையும், பழியை தவிர்த்துக்கொள்ளலாம், ஆகவே, இந்த முறை பெரிதும் பயன்படும் என்று கருதுகிறேன். அந்த முறையில், நமது சட்டமன்ற தற்காலிக தலைவர் அவர்களே, இந்த வாரியம் செயல்படுவதற்கு தக்கது செய்ய வேண்டும் என்று நான் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

உண்மையாகவே, 10 ஆண்டு, 15 ஆண்டு காலம் பணி செய்தவர்கள் கூட நிரந்தரம் இல்லாதவர்களாக, காயம் ஆகாதவர்களாக, நிலையற்ற தொழிலாளர்களாக இருக்கிற நிலை வெட்கக்கேடான நிலை. இந்த வாரியத்தின் மீது பெரிய குறைகள் இருப்பதுபோல, பெரிய குற்றங்கள் இருப்பதுபோல எதிர் வரிசையிலே இருப்பவர்கள், காங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்றும், முன்தினமும் கூறினார்கள். அவர்கள் கூறிய குறைகளையெல்லாம், கறைகளையெல்லாம் போக்கத் தக்க வகையிலே தமிழக அரசின் மேற்பார்வையில் இயங்குகின்ற மின்வாரியத் துறை சிறந்த முறையில்

[திரு. சி. பி. எம். அண்ணாமலை] [1969 ஆகஸ்ட் 19

பணியாற்றத் தக்க வகையிலே நீண்டகாலமாக பணியாற்றக்கூடிய ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்கும் பணியை, அப்படிப் பட்ட திட்டத்தை மின்சார வாரியம் மேற்கொண்டிருக்கிறது. அதை அமல் செய்வதிலே, நடைமுறைப்படுத்துவதிலே கால தாமதம் காட்டி வருகிறது. இந்தக் காலதாமதத்தைத் தவிர்த்து, இந்தத் துறையிலே பணியாற்றும் ஊழியர்களுக்கு ஒரு உத்திரவாதத்தை அளிக்கத் தக்க வகையிலே மின்துறை வாரியத் தலைவர் அவர்களும், நம்முடைய பொறியாளர் அவர்களும், குறிப்பாக மின்சாரத் துறை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடைநிலை ஊழியர்களாக இருந்தாலும் சரி, எந்த ஊழியர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் ஓராண்டு அல்லது ஈராண்டு காலத்திற்கு மேல் பணி செய்தவர்களாக இருந்தால், அவர்கள் நிரந்தர ஊழியர்களாக ஆக்கப்படவேண்டும். நிரந்தர ஊழியர்களுக்குத் தரப்படுகிற அனைத்துச் சலுகைகளும் அவர்களுக்கும் தரப்படவேண்டும், அவர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும். அதற்கு வேண்டிய வருவாயை இந்த வாரியம் நிர்வாகத் திறமையைப் பெருக்குவதன் மூலம் தேடிக் கொடுக்கவேண்டும். அப்படித் தேடிக்கொடுக்கின்ற ஆற்றல் எங்களைப் போன்ற அரசியல்வாதிகளுக்கு நிச்சயம் கிடையாது.

பொறியியல் துறையில் பொறியாளர்கள் பெற்றிருக்கிற சிறந்த அறிவு, சிறந்த ஆற்றல் இந்த நாட்டினுடைய ஆக்கபூர்வமான சக்திக்கு பெரிதும் பயன்படும். தமிழகத்தில் இருக்கிற பொறியாளர்கள் பொறி இயல் துறையில் வல்லுநர்கள். பிற மாநிலங்களில் இருப்பவர்கள் அவர்களைப் பற்றி சிறப்பித்துக் கூறியிருக்கிறார்கள். இந்தத் துறைக்கே இலக்கணமாக விளங்கும் தமிழகத்திலுள்ள பொறியாளர்கள், வல்லுநர்கள், ஆற்றல் மிக்கவர்கள். அவர்கள் மின்சார உற்பத்தியை மேலும் மேலும் அதிகரிக்க வேண்டும், அதற்கு வழி வகுக்கவேண்டும். அது மட்டுமல்ல. தேவைப்படுகிறவர்களுக்கு தாராளமாக விநியோகம் செய்யுங்கள். ஒரு விவசாயிக்கு தனி லைன் கொடுப்பதன் மூலம் ரூ. 10,000 நஷ்டம் வருகிறது, ஆகவே தனி லைன் கொடுக்க முடியாது என்று கூறுகிறீர்கள். மனிதன் வாழ்வதற்குத்தான் இந்த நாடு இருக்கிறது. நாடு இருக்கவேண்டுமென்றால் மனிதன் உயிரோடு இருக்கவேண்டும். நாட்டில் தானியம் பெருகவேண்டுமென்றால் மனிதன் உயிர் வாழவேண்டும். உழவன் தான் முக்கியம். உழவன் தான் உற்பத்தி செய்ய வேண்டும். உணவு தான் அதிலும் முக்கியம். அத்தகைய உணவு தானியத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான மின்சாரத்தை வாரி வழங்குவதிலே நீங்கள் சோடை வள்ளலாக இருக்கவேண்டும் என்று விரும்பி வேண்டிக்கொண்டு, இந்த மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையை முழுமனதோடு ஆதரிக்கிறேன் என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையை வரவேற்று, ஆதரித்து ஒரு



1969 ஆகஸ்ட் 19] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1971-ம் ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள்ளே மாநிலம் முழுவதும் உள்ள எல்லா கிராமங்களுக்கும் மின் இணைப்பு தருவோம், அதற்கு ஆவன செய்வோம் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள் கூறிய கருத்துக்களை வரவேற்று, மின்சார வாரியத்தினுடைய நிதி நிலை அறிக்கை ஏட்டிலே பார்க்கிறபொழுது அதற்குரிய நடவடிக்கை அத்தனையும் எடுக்கப்பட்டிருக்கிறது என்று மின்துறை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். மாநிலம் முழுவதும் உள்ள கிராமங்கள் அத்தனைக்கும் மின் இணைப்பு கொடுப்பது என்பது இரண்டு ஆண்டுகளுக்குள்ளே சாத்தியப்படுகின்ற ஒன்று தானா என்று எனக்கு முன்னாலே பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க் கட்சியிலுள்ள காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்களும் ஐயப்பாடு கொண்டார்கள். அது அப்படி ஒன்றும் சாத்தியப்படாத ஒன்று அல்ல.

இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாவதற்குள்ளேயே தமிழகம் முழுவதிலும் உள்ள எத்தனை கிராமங்களுக்கு மின் இணைப்பு தரப்பட்டிருக்கிறது, இன்னும் எத்தனை கிராமங்களுக்கு மின் இணைப்பு தரப்படவேண்டும் என்ற கணக்கை எடுத்து, அதற்குரிய வேலைகளை இன்றே தொடங்கினால், அது ஒரு பெரிய காரியம் அல்ல. இரண்டு ஆண்டுகள் பூர்த்தி ஆகவேண்டும் என்பது கூட அதிகப்படியான காலம். அதற்குத் தேவையான கம்பங்கள், டிரான்ஸ்பார்மர்கள், மீட்டர்கள், வைர்கள் எவ்வளவு தேவை என்று கணக்கெடுத்து, அதற்கு எவ்வளவு தொகை தேவை என்று கணக்கெடுத்து, நிதிக்கு வேண்டிய வழிவகைகள் செய்து, வேலைகளை இப்பொழுதே தொடங்கினால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே, 1971-ம் ஆண்டு டிசம்பர் அல்ல, 1971-ம் ஆண்டு மத்தியிலேயே இந்தக் காரியத்தை வெற்றிகரமாக முடித்துவிடமுடியும் என்று தோன்றுகிறது. இந்த வேலைகளைத் தொடங்குகிறோம் என்பதற்கு அடிப்படையாக மாநிலத்திலுள்ள வரட்சிப் பிராந்தியங்களில் இந்த வேலைகளைத் தொடங்கினால், குழி வெட்டுவது போன்ற மற்ற வேலைகளைத் தொடங்கினால், மிகக் குறைந்த கூலிக்கு தொழிலாளர்கள் கிடைப்பார்கள். 1971-க்குள் மாநிலம் முழுவதும் மின் இணைப்பு தருவோம் என்ற லட்சியத்தை அடைய முதல்படியாக இந்த ஆண்டிலேயே வரட்சிப் பிராந்தியங்களில் இந்த வேலைகளை உடனடியாக துரிதமாகத் தொடங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மூ 11.

அடுத்தபடியாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசும் போது மின்சார அலுவலகம் உசிலம்பட்டியில் அரசியல் காரணத்திற்காகத் திறந்திருப்பதாகவும், அதை நியாயமாக திருமங்கலத்தில் திறந்திருக்க வேண்டும் என்றும் பேசினார்கள். அது அப்படி எந்த அரசியல் காரணத்திற்காகவும் உசிலம்பட்டியில் திறக்கப்படவில்லை. நிர்வாகத்தின் சௌகரியத்திற்காகத்தான் திறக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன், உசிலம்பட்டியை

தனித்தனியாகவோ ஆக்கியதால் நான் அப்படிச் செய்திருக்கிறார்கள், அரசியல் காரணத்திற்காக அல்ல என்பதை மட்டும் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

பேசிய உறுப்பினர்களில் பெரும்பாலோர், பம்பு செட்டுக்களுக்கு மின்சார இணைப்புக் கொடுப்பதில் ஏற்படும் தாமதம் பற்றித்தான் குறிப்பிட்டார்கள். வாரியத்தில் கேட்டால், கம்பம் இல்லை, கம்பி இல்லை, மீட்டர் இல்லை, ட்ரான்ஸ்பார்மர் இல்லை என்கிற குறைகள் தான் இருக்கின்றன. இப்படிப்பட்ட குறைகள் நெடுநாளாக இருந்து கொண்டே இருப்பதாகச் சொன்னார்கள். நானே பல கிராமங்களுக்குச் சென்று பார்த்திருக்கிறேன். அதிகாரிகளைக் கண்டு பேசியிருக்கிறேன். அப்படிக் கேட்கும்போது, அந்த அதிகாரிகள், கம்பிகள் இல்லை, கம்பங்கள் இல்லை என்பார்கள், அல்லது மீட்டர்கள் இல்லை என்பார்கள். உண்மையிலேயே இந்தப் பொருள்கள் இல்லாமல் இருக்கிறதா அல்லது இந்த அதிகாரிகள் வேண்டுமென்றே அப்படிச் சொல்கிறார்களா தட்டிக் கழிக்க வென்று, என்பது புரியவில்லை. இந்த நிலைமை என்போன்றவர்களுக்கே புரியவில்லை என்றால், கிராமத்திலிருக்கும் சாதாரண அப்பாவி விவசாயிகளுக்கு எப்படித் தெரியும்? ஆகவே, மாவட்ட வாரியாக எத்தனை விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன, விவசாயத்திற்கு என்று எத்தனை, கிராமாந்தரங்களிலே விளக்குகள் மற்றவைகளுக்கு எத்தனை என்பதைக் கணக்கெடுத்து, தேவையான சாமான்கள் அதற்குரிய வகையில் இருக்கின்றனவா என்பதையெல்லாம் மாவட்டவாரியாக கணக்கெடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுதுதான் உண்மையிலேயே சாமான்கள் கிடைக்காமல் இருக்கிறதா அல்லது தட்டிக் கழிக்க வேண்டுமென்று சொல்லிவிடுகிறார்களா அல்லது உண்மையிலேயே சாமான்கள் தட்டுப்பாடு இருக்கிறதா என்பதையெல்லாம் கண்டுபிடிக்க முடியும். வேண்டுமென்றே காலதாமதம் செய்கிறார்கள் என்றால், அங்கேதான் ஊழல்கள் நடப்பதற்கு இடம் ஏற்படுகிறது. அப்பொழுது நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த ட்ரான்ஸ்பார்மர், மீட்டர்கள் எல்லாம் இல்லை என்று சொல்வதெல்லாம் சரியாகாது. இவை நமக்குக் கிடைக்காத பொருள்கள் இல்லை. மீட்டர், ட்ரான்ஸ்பார்மர் போன்ற பொருள்கள் இங்கேயே கிடைக்கின்றது. ஈஸ்வர அய்யர் என்பவர் தன்னுடைய கம்பெனியில் நமக்கு வேண்டியதையெல்லாம் செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறார். தன்னால் அந்த வகையில் சப்ளை செய்ய முடியும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, ஈஸ்வர அய்யர் போன்ற தனிப்பட்டவர்களுடைய உதவியை நாம் பயன் படுத்திக் கொண்டு, மின் இணைப்புக் கொடுக்க பொருள்கள் இல்லை என்கிற குறைபாடுகள் இல்லாமல் செய்து அப்படிப்பட்ட கிராமங்களுக்கு இடர் கொடுக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

நாம் ஒரு திட்டவட்டமான கொள்கையைப் பின்பற்றியாக வேண்டும். பம்பு செட்டுகளுக்கு என்று விண்ணப்பங்கள் கொடுத்தால், கொடுத்த 40 நாட்களுக்குள்ளாக இந்த மின்சார



வாரியத்தார் இணைப்புக் கொடுத்தாக வேண்டும் என்கிற கட்டாயமான நிலையை உத்தரவு மூலம் ஏற்படுத்தியாக வேண்டும். எந்த விவசாயியாக இருந்தாலும், பம்பு செட்டுக்கு என்று மனுக் கொடுத்தால், அப்படிக் கொடுத்த நாற்பது நாட்களுக்குள்ளாக அவனுக்கு இணைப்புக் கொடுக்கப்படும் என்கிற உத்திரவாதத்தை சர்க்கார் ஏற்படுத்த வேண்டும். அப்படியிருந்தால்தான் அதிகாரிகள் உடனடியாக மின் இணைப்புக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்கள். கஷ்டங்கள் எவ்வளவு இருந்தாலும், அப்படியொரு உத்தரவு போட்டுவிட்டால் விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் விரைவில் கிடைக்கும் நிலை ஏற்படும். எனக்குத் தெரிந்து எவ்வளவோ விவசாயிகள் நம்பிக்கையில் பம்புசெட்டுகளை வாங்கி வைத்து ஒரு ஆண்டுக்கும் மேலாக இணைப்புக் கிடைக்காமல் அல்லல்பட்டிருக்கிறார்கள். கடந்த காலத்தில் என்று சொல்லிவிட முடியாது, கடந்த காலத்தில் இருந்ததைவிட இப்பொழுது குறைபாடுகளின் அளவு குறைந்திருக்கலாம், ஆனால், குறைபாடு இல்லை என்று சொல்ல முடியாது. பொதுவாக விவசாயத்திற்கு மின்சாரம் எவ்வளவு அவசியம் என்பதைச் சொல்லித் தெரிந்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. வாழ்க்கையில் மனிதனுக்கு சரிபாதிக்குமேல் மின்சாரத்தின் தேவைதான் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் மின்சாரம் வழங்குவதில் ஊழல்கள், குறைபாடுகள், மற்ற கேடுகள் வராமல் தடுத்து, நிவர்த்திக்க வேண்டும். தாமதங்கள் ஏற்படாமல், ஏற்பட்டால் துரிதமான வகையில் அவற்றைத் தவிர்க்க, நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்த வாரியம் மக்களுக்கு நல்ல முறையில் பணிபுரிய முடியும்.

அடுத்தபடியாக, இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பிற்பட்ட மாவட்டம். பெரும் குறைபாடுகள் இருக்கின்றன. மற்றைய மாவட்டங்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால், இந்த மாவட்டத்தில் எத்தனை மின் இணைப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று பார்க்கவேண்டும், அப்படிப் பார்த்தால், மலைக்கும் மடுவுக்கும் போல் இருக்கும். அதனால் இராமநாதபுரத்தில் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறைவு என்று பொருள் இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் திரு ஓ. பி. ராமன் அவர்கள் இராமநாதபுரத்திற்கு என்று ஒரு தனி ஆராய்ச்சி நடத்தி, குறைபாடுகளைக் கண்டறிந்து, அவற்றைத் தீர்க்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியில் பல கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்திருந்தாலும், இன்னும் பல கிராமங்களுக்குக் கொடுக்கப் படாமலே இருக்கிறது. பல இடங்களில் வேலைகள் முடிவுற்றும் கூட, இணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. சில கிராமங்களில் இன்னமும் இணைப்பு வேலை தொடங்க வேலையில்லை. இவற்றிற்கான காரணங்களை அதிகாரிகள் தெளிவாக்க வேண்டும். அவற்றை ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

[திரு. வ. ஆர். பெருமாள்] [1969 ஆகஸ்ட் 19

பொதுவாக பேசப்பட்ட சம்பள வித்தியாசங்கள் பற்றிக் குறிப்பிடும்போது நமது பொறியாளர்களுக்கும் மற்ற மற்ற மாநிலங்களில் இருக்கும் பொறியாளர்களுக்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அப்படியெல்லாம் வித்தியாசங்கள் இல்லாமல் செய்து, நம்முடைய பொறியாளர்களுக்கும் சம்பள விகிதங்களை அதிகப்படுத்தி, தாற்காலிகமாக இருப்பவர்களை நிரந்தரமாக்கி, அவர்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று கூறி, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமைகிறேன்.

1 திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் சார்பாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற அறிக்கையின் பேரில் என்னுடைய ஆலோசனைகளையும் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். எதிர்காலத்தில் மின்சாரம் இல்லாமல் எந்த வேலையும் நடைபெறாது என்கிற நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு துறையின் பிரச்சினைகளை ஆய்ந்து பரிசீலித்து, மேற்கொள்ள வேண்டிய முறைகளையெல்லாம் ஆலோசித்து, 71-ம் ஆண்டுக்குள்ளாக கிராமங்களுக்கெல்லாம் மின் இணைப்புக் கொடுக்க முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுவது என்றால், அதற்கு எவ்வளவு பொருள்தான் வேண்டியதாக இருக்கும் என்கிற நிலையை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் நாம் பொருளாதாரத் துறையில் எந்த அளவில் இருக்கிறோம் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நிறைவேற்றி விடுவோம் என்று அறிக்கையில் சொல்வது மட்டும் போதாது. ஏனென்றால், அப்படிச் சொல்லி நிறைவேற்றாவிட்டால் மக்களுக்கு ஏமாற்றம் ஏற்படும். அப்படி ஏமாற்றம் நிகழ ஆளாகாமல் இருப்பதற்கு அரசாங்கம் எந்த வகையில் செயல்படும் என்பதையும் என்னென்ன வகையில் திட்டம் இருக்கிறது என்பதையும் கூறியாகவேண்டும்.

தொழில்களுக்குக் கொடுக்கும் மின்சாரத்திற்கும், வேளாண்மைக்குக் கொடுக்கும் மின்சாரத்திற்கும் கட்டணத்தில் வித்தியாசம் இருக்கிறது. காரணம், குறைந்த செலவில் மின்சாரத்தை உபயோகிக்கும் தொழில்களில் வருவாய் அதிகமாகக் கிடைக்கும். ஆனால் வேளாண்மையில் அதிகமான செலவில் மின்சாரத்தை உபயோகத்து வருவாய் குறைவாகத்தான் பெற முடிகிறது. இதை மனதில் வைத்துக் கொண்டு கட்டணம் விதிக்க வேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணமாக, அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அலுமினியம் தொழிற்சாலைக்கு குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கொடுப்பதன் மூலம், மின்சாரத் துறைக்கு ஒரு கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்றும், அதே நேரத்தில் விவசாயத் திற்குக் குறைந்த கட்டணத்தில் கொடுப்பதால் ஒன்பது கோடி ரூபாய் நஷ்டம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது, அலுமினியம் தொழிற்சாலையில் 500 பேர்களும், விவசாயத்தில் பல லட்சக்



1969 ஆகஸ்ட் 19] [திரு. கே. என். குமாரசாமி]

கணக்கானவர்களும் இருக்கிறார்கள் என்பதை கவனத்தில் கொண்டால், இது எப்படி சிறிய தாசனையாகும் எந்த அடிப் படையில் சொல்லப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை.

நான் இன்னும் ஒன்றைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயத் துறைக்கு யூனிட் ஒன்றுக்கு 8¼ பைசா வீதம் கட்டணம் ஆக கொடுக்கப்படுகிறது. முன்பெல்லாம் கிணறுகளில் சுமார் நாற்பதடி ஆழத்தில் தண்ணீர் கிடைக்கும். ஆனால் தற்போது 100 அடி, 150 அடி ஆழம் வெட்டினால்தான் தண்ணீர் கிடைக்கிறது. ஆகவே, விவசாயி தண்ணீர் பாய்ச்சுவதற்காக எடுத்துக்கொள்ளும் கரண்ட் செலவு இரண்டு மடங்கு, மூன்று மடங்காக மாறி இருக்கிறது. விவசாயிகளுக்கு 8¼ பைசா வீதம் என்பதை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், அவனுடைய கஷ்டத்தை உணர்ந்து, விவசாயிகளுக்கு இன்னும் குறைந்த விகிதத்திலே மின்சாரம் சப்ளை செய்தால் அவன் விவசாயத்தில் அக்கறையோடு உழைக்க வகை செய்தவர்களாவோம். அவன் விவசாயத்தில் ஈடுபட்டு பாடுபட ஊக்கம் காட்டவேண்டும்.

இன்றையதினம் கோவைப் பிரதேசங்களில் மின் இணைப்பிற் காகப் போடப்பட்ட திட்டங்கள் சரிவர பூர்த்தியடையவில்லை. இன்றைய தினம் விவசாயிகளிடத்திலிருந்து அக்ரிமென்ட் மினிமம் சார்ஜ் என்றும், அடிஷனல் செக்யூரிடி டிபாசிட் என்றும் இரண்டு முறைகளாக பணம் வசூலிக்கிறார்கள். ஒருவருக்கு 100 யூனிட் செலவு செய்யலாம் என்றால் அதில் 80 யூனிட் அளவை செலவு செய்தாலும் அக்ரிமென்டில் உள்ள மினிமம் சார்ஜை வசூல் செய் கிறார்கள். அதிகமான மின்சாரத்தைப் பயன்படுத்தினாலும் அடிஷனல் செக்யூரிடி டிப்பாசிட்டிலிருந்து பணம் வசூல் செய்து கொள்கிறார்கள். இப்படி அடிஷனல் செக்யூரிடி டிப்பாசிட் என்று பணம் வசூல் செய்வது மிகவும் அநியாயமானது. பத்து ஏக்கரா வைத்திருக்கும் ஒரு விவசாயிக்கு ஒரு மாதத்தில் ஆயிரம் ரூபாய், ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் என்று ஆனால், அவைகளை ஒரே சமயத் தில் கட்டுவதற்கு விவசாயியினால் முடியாது. ஆகவே, விவசாயி களுக்கு ஏற்படுகின்ற பளுவை நாம் குறைக்க வேண்டும். அப்படிக் குறைக்க முடியாது என்று அரசு சொல்லியிருப்பதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத்துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்பத்திச் செலவு கூடுதலாகி இருக்கிறது. அரசாங்கம் இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு. தக்க தீர்வு காணவேண்டும். இப்பொழுது நாடு பூராவிலும் பம்பு செட்டு போட்டு விவசாயம் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிற இந் நேரத்தில் விவசாயிகளின் பளுவைக் குறைப் பதற்கு அரசு முன்வர வேண்டும். அப்படி முன் வந்தால் பல ஏழை விவசாயிகள் இந்த அரசாங்கத்தைப் பாராட்டுவார்கள் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விசைத் தறிகள் இப்போது கிராமங்களிலே குடிசைத் தொழிலாக பரவி வருகிறது. ஒரு நாளைக்கு 24 மணி நேரம் மின்விசை கேட்டால், இடையிலே நான்கு மணி நேரம்

[திரு. கே. எஸ். நாராயணசாமி] [1969 ஆகஸ்ட் 19

விசையை 'கட்' பண்ணி விடுகிறார்கள். இதனால் உற்பத்தியாளர்களுக்கும் அதில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கும் மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது. மின் இணைப்பிலே நான்கு மணி நேரம் சப்ளையை நிறுத்தி வைக்கிறீர்கள் என்று சொன்னால் வேறு வழியில்லையென்று சொல்கிறார்கள். ஆகவே, இந்தத் தொழில் உற்பத்தியாளர்களுக்குத் தொடர்ந்து 24 மணி நேரமும் மின்சாரம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். அதற்காக தக்க கவனம் செலுத்தி இப்படிப்பட்ட குறைபாடுகளை உடனடியாக நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பல்லாயிரக்கணக்கான ஊழியர்களுடைய சேவை மின்சாரத் துறைக்குத் தேவை. இந்தத் துறையில் காஷுவல் போன்ற பல தரப்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இரண்டு வருடம், மூன்று வருடம் நிரந்தரமாகப் பெறக்கூடிய தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு முறையாக சம்பளம் போட்டுத் தர வேண்டும். அவர்களுடைய கூலி விகிதத்தையும் அதிகமாக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மக்களுடைய ஒத்துழைப்பு இந்த மின்சார போர்டுக்கு வேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயிகளானாலும், சிறு தொழில்களானாலும் மின் இணைப்புக் கொடுப்பதிலே அதிகக் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை பல அங்கத்தினர்கள் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக மின்சாரக் கருவிகளை உற்பத்தி செய்து கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். அரசே மின்சாரத்திற்கு வேண்டிய கருவிகளை உற்பத்தி செய்து கொள்ள வழிவகை செய்ய வேண்டும். தக்க முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு ஒரு தொழிற்சாலைக்கு மின் இணைப்பு கொடுப்பதில் காலதாமதமானால், அதில் வேலை கிடைக்கும் என்று நம்பிக்கொண்டு உள்ள தொழிலாளர்களுக்கு ஏமாற்றம் அளிக்கும். தான் போட்டிருக்கின்ற முதலுக்குத் தக்க படி பொருள்களை குறிப்பிட்ட நாளில் உற்பத்தி செய்யவில்லை யென்றால் முதலாளி நஷ்டமாவதோடு, அதன் காரணமாக தொழிலாளர்களும் பாதிக்கப்படுகிறார்கள். முதலாளி போட்டிருக்கும் தொகைக்கான வட்டி, அவர்களையும் தொழிலாளர் நிலைகளை யெல்லாம் நாம் அனுசரித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, மின் இணைப்பு கொடுப்பதில் காலதாமதம் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். காலதாமதத்தைத் தவிர்த்தால் உற்பத்தி பெருகி, நாட்டில் சுபிட்சம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு சரியான முறையில் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



1969 ஆகஸ்ட் 19]

* திரு. சோ. அழகர்சாமி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் 1969–70-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மீதும், 1968–69-ம் ஆண்டிற்கான கணக்கு நிதிநிலை அறிக்கையின் மீதும் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பிற மாநிலங்களிலுள்ள மின்சார வாரியங்களைவிட தமிழகத்தி லுள்ள மின்சார வாரியமானது மின் உற்பத்தியிலும், அதிகமான கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதிலும் ஒரு சிறந்த சாதனையை ஏற்படுத்தியிருக்கிறது. இதனை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். குறிப்பாகத் தமிழ் நாட்டில் இருக்கிற 42 ஆயிரம் கிராமங்களில், 31,727 கிராமங்களுக்கு மின் விசை வழங்குகிறது. தமிழ் நாட்டில் இருக்கிற ஏறக்குறைய 9 லட்சம் கிணறுகளில் நான்கு லட்சத்திற்கு மேற்பட்ட கிணறு களுக்கு மின் இணைப்பு வழங்கியிருக்கிறது. பிற மாநிலங் களைக் காட்டிலும் அதிகமான கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுத்திருப்பது மிகப் பெரிய சாதனைதான். நம்முடைய நாட்டிலுள்ள விவசாய பெருமக்களின் பொருளாதாரத்தில், விவசாயத்திற்கு பம்பு செட்டுகள் எவ்வளவு அத்தியாவசியம் என்பதை நாம் உணரு கிறோம். இன்னும் நான்கு அல்லது ஐந்து லட்சம் கிணறு களுக்குத்தான் மின் இணைப்பு வழங்க வேண்டியிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் பம்பு செட்டுகளுக்காவது மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்ற இலக்கை நாம் ஏற்படுத்திக் கொண்டால் வெகு விரைவில் எல்லா இடங்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். அரசாங்கம் அதற்கு வேண்டிய நிதி ஆதாரங்களைத் தேடித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் இன்று பல கிராமங்களை எடுத்துக்கொண்டால் ஒரு 20 கிணறுகளுக்கு மின் இணைப்புக் கிடைத்திருக்கும். மேற் கொண்டு ஒரு 20 கிணறுகளுக்கு மின் இணைப்பு வேண்டும் என்று விண்ணப்பித்திருப்பார்கள். ஆனால் அங்கே உள்ள டிரான்ஸ் பார்மரோடு தாங்காது என்று சொல்லி அவற்றுக்கு இணைப்புக் கொடுக்காமல் காலதாமதம் செய்து வருகிறார்கள். ஆகவே இங்கெல்லாம் போதுமான டிரான்ஸ்பார்மர்களை வைத்து எல்லாக் கிணறுகளுக்கும் மின் இணைப்புக் கொடுக்கவேண்டும். அல்லது இருக்கக்கூடிய டிரான்ஸ்பார்மர்களின் சக்தியையாவது அதிகப் படுத்திப் புதுக் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, விவசாயிகள் மின் இணைப்புக் கோரி மனுச் செய்துகொண்டால் ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங் களுக்குள்ளாக அதன்மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று உத்தரவிட வேண்டும். இப்போது மனுச்செய்துவிட்டுப் பல மாதங்களாகக் காத்துக் கிடக்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்களைத் தேடி அலைகிறார்கள். அல்லது வேறு எந்தப் பிரமுகரை அழைத்துக்கொண்டு செல்வது என்று அலைகிறார்கள். இப்படிச் செலவு செய்யவில்லை என்றால் மின் இணைப்புக் [illegible]

பில்லை என்று புகார் சொல்கிறார்கள். ஆகவே விவசாயிகள் மனுச் செய்துகொண்ட இத்தனை நாட்களுக்குள்ளாக அவர்களுக்குக் கிடைத்தாகவேண்டும் என்று ஏற்பாட்டைச் செய்யவேண்டும். மேலும் மின் இணைப்புக்கொடுக்கிற நேரத்தில் செலவைப் பற்றி மதிப்பீடு போடுகிறார்கள். நான்கு போஸ்டுக்கு மேல் போஸ்டானால் விவசாயிகள் மின் இணைப்புக்கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே இது போன்ற எஸ்டிமேட், நமக்குக் கிடைக்கிற வருமானம் இவற்றை எல்லாம் கணக்குப் பார்க்காது விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கத் தக்க ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக இப்போது மினிமம் சார்ஜை எடுத்து விட்டோம். ஆனால் முன்பு அக்ரிமெண்ட் செய்துகொண்டவர்கள் ஒரு ஹார்ஸ் பவருக்கு 50 ரூபாய் என்று கட்டவேண்டியிருந்தது. அப்படி அக்ரிமெண்ட் பண்ணிக்கொண்டு கட்டாமல் இருந்தார்கள் மீது இப்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அப்படியின்றி அதையும் ரத்து செய்யவேண்டும். இப்போது கொடுத்துள்ள சலுகையை முன்பு அக்ரிமெண்ட் பண்ணிக் கொண்டவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்

அடுத்து மீட்டர்கள் கிடைக்கவில்லை என்பதனாலும் மிகுந்த காலதாமதம் ஆகிறது. போதுமான மீட்டர்களைப் பெறவும் ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு மீட்டர் சார்ஜ் என்று வருடம் 2 ரூபாய் வசூல் செய்யப்படுகிறது. மீட்டர் சார்ஜ் என்று வசூல் செய்யப்படுகிற தொகை மீட்டர் விலை என்னவோ, அதற்கும் அதிகமாகப் போய்விட்டால் மீட்டர் சார்ஜை எடுத்து விடவேண்டும். அல்லது மீட்டர் சார்ஜே இல்லாமல் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சார பில்லுக்குப் பணம் கட்டுவதற்கும் இப்போது விவசாயிகள் பத்து மைல், பதினைந்து மைல்கள் என்று சென்றுவரவேண்டியிருக்கிறது. இந்தக் கஷ்டத்தை நீக்க அங்கங்கே பக்கத்தில் கலெக்ஷன் சென்டர்கள் ஏற்படுத்த வேண்டும், அல்லது கிராமங்களுக்குச் சென்று வசூல் செய்யவேண்டிய ஆட்களை நியமிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 50 யூனிட் வரை யூனிட்டுக்கு 32 பைசா என்று வசூல் செய்து வருகிறார்கள். 50-இல் இருந்து 100 யூனிட் வரை ஒரு சார்ஜ் வசூல் செய்கிறார்கள். 100 யூனிட்டுக்கு மேல் உபயோகப் படுத்திக்கொள்கிறவர்களுக்கு யூனிட்டுக்கு 22 பைசா என்று வசூல் செய்கிறார்கள். இப்படி அதிக யூனிட்டை உபயோகப்படுத்திக் கொள்கிறவர்களுக்குக் குறைந்த ரேட் என்றும், குறைந்த யூனிட்டை உபயோகப்படுத்திக்கொள்கிறவர்களுக்கு அதிக ரேட் என்றும் இருப்பதை மாற்றி எல்லோருக்கும் ஒரேவிதமான ரேட் இருக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாயூரம், மன்னார்குடி, திருவாரூர் போன்ற இடங்களில் உள்ள மின்சார விஸ்திரிப்புக் கம்பெனிகளை இப்போது நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதில் வேலை செய்து வந்த ஊழியர்களுக்குக் குறைந்த சம்பளம் இதுவரை கொடுக்கப்பட்டு வந்தன



மின்சார இலாக்கா ஊழியர்களுக்குக் கொடுப்பதுபோல அவர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அலுமினியத் தொழிற்சாலைக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் சப்ளை செய்துவருவதன் மூலமாக 1 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பல கோடி ரூபாய்களை லாபமாகப் பெறுகிறவர்களுக்கு ஏன் இந்தச் சலுகை அளிக்கவேண்டும்? ஆகவே, அதை ரத்து செய்து இன்னும் அதிகமாக விவசாயப் பெருமக்களுக்குச் சலுகை வழங்க மின்சார வாரியம் முன்வரவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில் கேரள சர்க்கார் தொழிலாளர் பிரதிநிதி ஒருவரையும் அந்த போர்டில் போட்டிருக்கிறார்கள். அதுபோல நம்முடைய மின்சார வாரிய போர்டிலும் தொழிலாளர் பிரதிநிதி ஒருவரைப் போடவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

மின்சார வாரியத்தில் இருந்து சர்க்கார் சர்விசுக்கு வந்த ஊழியர்கள் இருக்கிறார்கள். அங்கே கொடுக்கிற போனஸை இவர்கள் இங்கே பெற முடியாது என்றாலும் இவர்களுடைய சம்பளத்தை அதற்குத் தகுந்தவாறு உயர்த்திக் கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நம்முடைய மின்சார உற்பத்தித் திட்டங்கள் எல்லாம் இவர்களுடைய உழைப்பினால்தான் பெரிதும் வெற்றி பெற்றன. ஆயினும் பல ஆண்டுகளாக பல தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படாமல் டெம்பரரியாகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களை எல்லாம் நிரந்தரமாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. க. ர. நல்லசிவன்:** சபைத் தலைவர் அவர்களே, விவசாயம் தொழில் ஆகிய இரண்டுக்கும் மின்சாரம்தான் அடிப்படை ஆதாரமாக விளங்குகிறது. அந்த ஆதாரத்தை நாம் எந்த அளவுக்கு அதிகமாக, திறமையாகப் பெருக்கிக்கொண்டு விநியோகம் செய்து வருகிறோமோ, அதைப் பொறுத்துத்தான் இந்த ராஜ்யத்தின் முன்னேற்றம் இருக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இதைக் கருத்தில் கொண்டுதான் நமது முதல் அமைச்சர் அவர்கள் சமீபத்தில் 1971-ஆம் ஆண்டுக்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்கிற நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நம்பிக்கை நிறைவேற வேண்டுமானால் மின்சார வாரியம் சில குறிப்பிட்ட விஷயங்களைக் கவனத்தில் கொள்ளவேண்டும். இன்று மின் விஸ்தரிப்புக் காரியங்களில் பெரிதும் முட்டுக்கட்டையாக இருப்பது பல

[திரு. சௌ. அழகர்சாமி] [1969 ஆகஸ்ட் 19

சாதனங்கள் பற்றாக்குறையாக இருப்பதுதான். டிரான்ஸ்பார்மர்கள், கம்பிகள், மீட்டர்கள் இதுபோன்ற பலவிதமான சாதனங்களின் பற்றாக்குறையினால்தான் பெரும் அளவு விஸ்தரிப்பு வேலை பாதிக்கப்படுகிறது. அதுவும் இந்தத் துறையில் பலவிதமாகப் பணம் வீணாகிறது. மின்சார வாரியத்தின் மூலமாக ஆர்டர் வைக்கப்படுவதன்மூலம் 17 ரூபாய் அல்லது 20 ரூபாய்தான் ஆகும். ஆனால் தனிப்பட்ட முறையில் வாங்கப்போனால் 50, 60 ரூபாய்க்கு ஆகிவிடும். மாநிலத்திலேயே மீட்டர்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. நம்முடைய மின்சார வாரியம் இந்தத் துறைக்குத் தேவையான சாதனங்களை உற்பத்தி செய்துகொள்ள தொழிற்சாலைகளை ஏற்படுத்தலாம். அல்லது அரசாங்கமே உண்டு பண்ணலாம். உற்பத்தித் துறை வேலைகள் நல்ல முறையில் நடந்தேறிவிட்டன, விநியோகத் துறையில் உள்ள வேலைகள் பெருமளவில் நிறைவேற்றப்படவேண்டியவையாக இருக்கின்றன. போதுமான சாதனங்கள் நமக்குக் கிடைக்கும்படி செய்தாலேயே பாதிக் குறைகள் நீங்கி விடும்.

அடுத்தபடியாக, 1967-ஆம் ஆண்டு கோவை ஜில்லாவுக்கு மாநாடு ஒன்று நடந்தது. அமைச்சர்கள் வந்திருந்தார்கள். மாவட்ட விவசாயிகள் ஐந்தாயிரம் விண்ணப்பங்கள் கொடுத்தார்கள், வாரியத்தின் தலைவர் திரு. அப்பாதுரை அவர்கள் அப்போது ஓராண்டு காலத்திற்குள் அவ்வளவு விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்பட்டு மின் இணைப்புக்கொடுக்கப்படும் என்றார்கள். இரண்டாண்டு ஆகிவிட்டன. பாதிக்குக்கூடக் கொடுக்கவில்லை. இன்னொரு காரணம், ஒரு திட்டத்திற்கு 90 ஆயிரம்தான் கொடுக்க முடியும் என்கிறார்கள். பைக்காரா திட்டத்தின்மூலம் லட்சத்து அறுபத்தோராயிரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேட்டூர் திட்டத்தின்மூலம் லட்சத்து அறுபத்தி நாலாயிரம் சர்வீஸ் இருக்கிறது. மொத்தமே கோவை மூன்று லட்சத்து இருபத்திநாலாயிரம் சர்வீஸ் இருக்கிறது. ஈரோடு, மேட்டூர் பைக்காரா என்று மூன்று திட்டமாக்கி நிறைய கோவை பகுதியை ஈரோடு திட்டத்தோடு சேர்க்கும் அமைப்பு உண்டு பண்ணினால்தான் இங்குள்ள தேவையைப் பூர்த்திசெய்ய முடியும். சில மாவட்டங்களில் விண்ணப்பம் கொடுக்கத் தயாராய் இருக்கிறோம். விவசாயிகள் முன்வரவில்லை. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகள் முன்னுக்கு வந்து கேட்கிறார்கள். இதுதான் ஒரு சந்தோஷம். மின் இணைப்புப்பெற எங்கள் மாவட்ட விவசாயிகள் ஆவலாக இருக்கிறார்கள். ஆகவே நான் அழுத்தந்திருத்தமாகக் கேட்டுக்கொள்கிறேன், ஈரோடு திட்டம் என்ற ஒரு திட்டத்தை— நான் நினைக்கிறேன், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அப்படி ஒரு திட்டம் இருந்ததாகவும் ஆனால் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதாகவும் நினைக்கிறேன்—ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1969 ஆகஸ்ட் 19]

மின்சாரத் திட்டம், நீர்ப்பாசனத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களும் ஒன்றோடு ஒன்று மோதக்கூடிய நிலைமைகளும் இருக்கின்றன. பெரியாறு, பாபநாசம், மேட்டூர், சர்க்கார்பதி போன்ற இடங்களில் மின்சார உற்பத்தி செய்யும்பொழுது நீர்ப் பாசனத்திற்குத் தண்ணீர் கொடுப்பதில் பாதகம் இல்லாமல் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால் பவானி ஆற்றைப் பொறுத்தவரையில் கீழ்பவானி அணைக்கட்டு இருக்கிறது. குந்தா, மேல் பவானி போன்ற மின்சார உற்பத்தி நிலையங்களும் அங்கே இருக்கின்றன. அதற்கு இந்தச் சர்க்கார் காரணமல்ல, முன்பு இருந்த சர்க்கார்தான் மின்சார உற்பத்திக்கு முதல் முக்கியத்துவம் கொடுத்து விவசாயத்திற்கு இரண்டாம் முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய முறையில் செய்திருக்கிறார்கள். கீழ்பவானியிலே பாசனத்திற்குச் சரிவரத் தண்ணீர் கிடைப்பதில்லை. ஒரு போகத்திற்கு லட்சம் ஏக்கர் புஞ்சைக்குக் கொடுக்கக்கூடிய தண்ணீரை எடுத்துக்கொள்கிறார்கள். அந்தத் தண்ணீரைப் பாசனத்திற்குக் கொடுக்காமல் மின்சார உற்பத்திக்கு வைத்துக் கொள்வோம், பாசனத்திற்குக் கொடுக்கமாட்டோம் என்று சொல்வது லட்சம் ஏக்கராக்களின் விளைவை பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளாகத் தண்ணீர் சரிவரக் கிடைப்பதில்லை. முன்பு ஏற்பட்ட மாறுதல் அடிப்படையான, தேவையான மாறுதல், ஆனால் இன்றைக்குள்ள மாறுதல் அழிந்துபோகக்கூடிய மாறுதலாக இருக்கிறது. நீர்ப்பாசனத் திற்குக் சலுகையைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். அப்படிக் கொடுப்பதால் மின்சார உற்பத்தி தடைபடாது. அதற்குப் பதிலாக மின்சார உற்பத்தியிலே குறைவு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் தான் இருக்கும். அதனால் பாதகம் ஒன்றும் வந்துவிடாது. மின்சார உற்பத்திக்குத் தண்ணீர் தேவைப்படுகிற அதே நேரத்தில் தான் நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் தேவையாக இருக்கிறது. மின்சாரத்திற்கு அதே நேரத்திலே தண்ணீரை எடுத்துக்கொள்வதால் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படுகிறது. திட்டம் போடும்பொழுது கீழ் பவானித் திட்டத்தை மின்சார உற்பத்திக் காகப் போடவில்லை. முன்பு இருந்த அரசாங்கம் விவசாயிகளுடைய கருத்துக்கு மரியாதை கொடுத்து அதை ஏற்றுக்கொள்ளாத காரணத்தாலேதான் இன்றைக்கு அந்தத் தண்ணீரை மின்சாரத் திற்காக ஒதுக்கிவிட்டார்கள். நான் இந்தச் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். குந்தா, மேல் பவானியிலிருந்து டிசம்பர் மாத வாக்கிலே நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் கொடுத்து விவசாயி களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத் துறையிலே வேலைசெய்யக்கூடிய ஊழியர்கள், நண்பர்கள் பலர் குறிப்பிட்டதைப்போன்று, மின்சார உற்பத்தி, மின்சார விநியோகம் இரண்டிலும் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நம்முடைய மாநிலம் சிறப்பாக இயங்குகிறது, அதற்குக் காரணமாக இருக்கின்றவர்கள் அவர்கள், அவர்களில் பலர் நிரந்தரமாக்கப்படாமல் டெம்பரரியாகவே இருக்கிறார்கள், அவர்களை நிரந்தரமாக்கவேண்டும். அதேமாதிரி என்ஜினியர் களுக்குக்கூட மற்ற மாநிலங்களைப்போன்ற சம்பளம் மற்று

[திரு. க. ர. நல்லசிவன்] [1969 ஆகஸ்ட் 19

சலுகைகள் கொடுப்பதற்கும் அவர்களுக்கு உற்சாகம் கொடுப்ப தற்கும் பாதுகாப்புகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வ. ஆர். சுப்பையா முதலியார்:** மின்சார வாரியத்தி னுடைய நிதிநிலை அறிக்கையைப்பற்றி சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற இரண்டு ஆண்டுக் காலமாக பின்தங்கிய பகுதி, பஞ்சப் பகுதி, பேக்வர்ட் ஏரியா, டிராவுட் அஃபெக்டட் ஏரியா இவற்றிற்குச் சலுகைகள் தேவை என்று சொல்லி கொடுக்கப்பட்டிருக்கிறது. 10 சதவிகித ஆதாயத்தின் பேரில் உள்ளவர்களுக்கு மின்சாரத் தொடர்பு கொடுக்க முடியும் என்றும் அதற்குக் குறைவாக உள்ளவர்களுக்குக் கொடுக்கமுடியாது என்றும் மறுக்கிறார்கள். காரணம் கமர்ஷியல் லைனில் அது நடந்துகொண்டிருப்பதால்தான் 10 சதவிகிதத்துக்கு குறைவாக உள்ள இடத்திற்கு அதை அரசு ஈடு செய்தால் கொடுப் போம் என்று சொல்லப்படுகிறது. தஞ்சாவூரில் கிராஸ் புரோ கிராம் என்று சொல்லி 5 சதவிகிதம் இருந்தால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். உற்பத்தியைப் பெருக்குவதற்காக அந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஆண்டவனால் கைவிடப் பட்ட இயற்கை வசதிகள் கொடுக்கப்படாத மக்களுக்கும் உற்சாகத்தை வேலைசெய்யக்கூடிய முறையில் கொடுத்து உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக 5 சதவிகிதம் இருந் தால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோன்று ஆண்டவனால் கைவிடப்பட்ட பேக்வர்ட் ஏரியா, டிராவுட் அஃபெக்டட் ஏரியாக்களிலும் அந்தச் சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்று நான் தாழ்மையோடு அழுத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே மழையில்லை. 50 அடி, 60 அடி ஆழத்தி லிருந்து தண்ணீர் எடுக்கவேண்டும். தண்ணீர் எடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் மின்சாரத் தொடர்பு இல்லாமல் இருப்பதால் கஷ்டப்படுகிறார்கள். ஆகையினால் எக்ஸ்பெரிமெண்டலாகவாவது இரண்டு ஆண்டுகளுக்கு அந்தச் சலுகைகளைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் இந்த அரசு மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் இருப்பதால் இதையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஸ்டாபைப் பொறுத்தவரையும், ஹெல்ப்பர்களைப் பொறுத்தவரையில் டிரெய்னிங் கொடுக்காமலேயே நியமனம் செய்யப்படுகிறார்கள். படித்த கூட்டம் நிறைய இருக் கிறது. ரீடிங்கூடத் தெரியாதவர்கள் எல்லாம் ஹெல்ப்பர்களாக இருக்கிறார்கள். படித்தவர்களுக்கு சர்க்கார் வேலை கொடுக்க வேண்டும். எனவே டிரேட் சர்டிபிகேட் உள்ளவர்களைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மெட்டீரியல்ஸைப் பொறுத்தவரையில் அவை இல்லாத காரணத்தினாலே பல இடங்களிலே மின்சாரம் கிடைப்பது தாமதப்படுகிறது. வேண்டுமென்றால் பல தப்பிதமான வழிகளில்



[திரு. வ. ஆர். சுப்பையா முதலியார்]
1969 ஆகஸ்ட் 19]

தான் திரு கனெக்ஷன் கிடைக்கிறது. மெட்டீரியல்ஸ் வாங்கித் கொடுத்துவிட்டு அதை அவர்கள் போட்டதாகக் கணக்கு எழுதிக் கொண்டு கனெக்ஷன் கொடுக்கிறார்கள். இது உலகம் அறிந்த உண்மையாக இருக்கிறது. இது தவறு. மெட்டீரியல்ஸை கன்ஸ்யூமர்ஸே போடலாம், ஆனால் அதற்குண்டான லேபர் சார்ஜை நாம் வாங்கக் கூடிய முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் கொடுத்துவிட்டு அதை நாம் கொடுத்ததாக எழுதிக் கொண்டு மிடில்மேன் பிராஃபிட் மாதிரி இடையிலே இருக்கிறவர் களுக்குத்தான் அதனால் லாபம் கிடைக்கிறது. போர்டுக்குக் கெட்ட பெயர் ஏற்படுகிறது. எனவே இதையெல்லாம் பரிசீலனை செய்து கன்ஸ்யூமர்ஸ் மெட்டீரியல்ஸைக் கொடுத்துவிடலாம், லேபர் சார்ஜை வாங்கவேண்டுமென்று வைத்துவிடலாம்.

அடுத்தபடியாக, லேபர் விஷயத்தைப் பொறுத்தவரையில் சமாதானம் ஏற்பட்டதை வரவேற்கிறேன். அதேமாதிரி ரூப்பர் வைசரி ஸ்டாஃபைப் பொறுத்தவரையிலும் செய்யவேண்டும். எஸ்.ஓ., ஏ.இ., டி.இ. இவர்களுக்கு எல்லாம் மூன்று மடங்கு வேலை இருக்கிறது. இதனால் கனெக்ஷன் எல்லாம் தாமதப்படுகிறது. எஸ்.ஓ.-விடம் கேட்டால் ஓவர் லோடாக இருக்கிறது என்று சொல் கிறார்கள். ஆப்பரேஷன் சபார்டினேட் ஸ்டாஃபின் வேலைச் சுமையைக் குறைத்ததைப்போன்று இவர்களுக்கும் வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் கால தாமதம் குறைவதற்கு வழி இருக்கும் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மூலதனச் செலவு சம்பந்தமாக எனக்கு முன் பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். நிறையக் கடன் வாங்கப்பட்டு விட்டது; வட்டிக்குத்தான் நம்முடைய முதல் இருந்து கொண்டிருக்கிறது. அழுத்தமாகப் பார்த்தால் வரவுக்கு மேல் செலவு என்ற நிலையில் வாரியம் இருந்து கொண்டிருக்கிறது. இது எந்த இடத்திலும் வரவேற்கக் கூடிய காரியமல்ல. கமர்ஷியல் லைனை வேலை செய்ய எவ்வளவோ வழிவகைகள் இருக்கின்றன. காலதாமதத்தை நிறுத்தலாம். காலதாமதத்திற்குப் பல காரணங்களில் ஒன்று டிரான்ஸ்பார்மர் இல்லை என்பது. இதனால் வருவாயும் குறைகிறது. துரிதமாக வேலை செய்வதற்கும், வருவாயைப் பெருக்குவதற்கும் ஸ்பெஷல் ரிப்போர்ட்ஸ் எல்லாம் இருந்தும் ஏன் செய்யவில்லை என்பதைப் பார்க்கும்போது வருத்தமாக இருக்கிறது. பெண்டிங் கேஸ்களை எடுத்துக் கொண்டால் பல்லாயிரக் கணக்கான மனுக்கள் மின்விசை தேவை என்ற நிலையிலே குவிந்து கொண்டிருக்கின்றன. கேட்டால் ஒரு வார்த்தையில் 'மெட்டீரியல்ஸ் இல்லை' என்று பதில் சொல்லி விடுகிறார்கள். ஒரு பக்கத்தில் மெட்டீரியல்ஸ் குவிக்கப்பட்டிருக்கிறது, ஆனால் பர்சேஸ் பண்ணியது தவறாக இருக்கிறது. இதையெல்லாம் போக்க சுலபமான வழி 'டெஃபர்டு பேமெண்ட்'-ல் மெட்டீரியல்ஸ் வாங்குவதுதான். வட்டிச் சுமை குறையும். டெஃபர்டு பேமெண்டில் பல பேர் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அந்நிய

[திரு. எ. ஆர். சுப்பையா முதலியார்] [1969 ஆகஸ்ட் 19

நாட்டிலிருந்துகூடக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்குவது முக்கியமானதையால் இதற்காக அந்நிய நாட்டுச் செலாவணியைப் பயன்படுத்தி மெட்டீரியல்ஸ் வாங்குவது பயன் தருவதாக அமையும். 1,500 விசை ஏற்றங்களுக்குத் திட்டம் போடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது 1969-70-ல். இது ஒரு சின்னத்திற்குக்கூடக் காணாது என்று நினைக்கிறேன். டிரான்ஸ்பார்மர்களை எல்லாம் டெபர்டு பேமென்ட் முறையில் வாங்கி அதிகமாக விசையேற்றங்களுக்கு வழி செய்ய வேண்டும். முக்கியமாகக் காலதாமதத்தைக் குறைக்கவேண்டும். ஊழல் ஒரு பக்கம் இருந்தாலும் அதை மாற்றுவதன்மூலம் செயல்படலாம். ஓவர்லோடை சூப்பர்வைசரி ஸ்டாபுக்குக் குறைப்பதன்மூலம் வருவாயைப் பெருக்கலாம் என்று சொல்லிக்கொண்டு பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. க. மு. ராசகோபால்:** தலைவர் அவர்களே, 1969-70-ம் ஆண்டு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்ததற்காக நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீண்ட நெடுங் காலத்திற்கு முன்னே உள்ள தமிழகத்தின் வரலாறு இன்று மின்சார வாரியத்தின்மூலம் தெளிவுப்படுத்தப்படுகின்றது. இந்த நாட்டிலே பிறந்த மூதாட்டியார் அவர்கள்—

"ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்."

என்று சொன்னது போல், ஆற்று நீர் வற்றிப் போய் விட்டாலும் அடித்தளத்திலே இருக்கின்ற நீரை வெளியே கொண்டு வந்து விவசாயத்தைப் பெருக்க மின்சார வாரியம் மிக முக்கியமான அமைப்பாக இருக்கின்றது. இந்திய உபகண்டத்திலேயே யாரும் செய்யாத சாதனையைத் தமிழகத்திலே அவர்கள் செய்திருக்கிறார்கள். மேலும் மக்களுக்குப் பயன்படும் முறையில் அவர்கள் பணியாற்ற சில விதிமுறைகளை மாற்ற வேண்டும். அதிகாரிகள் சட்ட விதி முறைகளை விவசாயிகளிடம் காண்பிக்கும்போது அதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் ஏழை விவசாயிகளாகத்தான் இருக்கிறார்கள். அதிலே செல்வாக்குள்ளவர்கள்தான் வெற்றி பெற முடிகிறது. செங்கற்பட்டு மாவட்டத்திலே பாலாறு சர்டிபிகேட் என்று வாங்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. இது எப்போதோ ஒரு தில் வாழல்வுக்காரரால் புகுத்தப்பட்ட திட்டம். அது ஏழை விவசாயிகளுக்குப் பாதகமாக இருக்கிறது. ஆனால் பணக்காரர்களுக்குப் பாலாற்றிலிருந்தே மின்சார இணைப்புக் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்திருக்கிறது.

இப்பேர்ப்பட்ட கொடுமையைச் செய்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. பலராமன் அவர்கள் பேசும்போது 'இவர்களுக்குச் சுயபுத்தி கிடையாது' என்று அமைச்சரவையைப் பார்த்துக் கூறினார். சுய புத்தி இல்லை என்று அவர்கள் சொன்னாலும், எங்களுக்கு இவர்களைப்போல் கடன் வாங்கும் புத்தி கிடையாது.



1969 ஆகஸ்ட் 19] [திரு. க. மு. ராசகோபால்]

காங்கிரஸ்காரர்கள் செய்த அக்கிரமங்களை நான் இந்த மன்றத்தில் சொல்ல விரும்புகிறேன். வல்லப்பாக்கம் என்ற பகுதியில் ஒரு காலனி இருக்கிறது. அங்கு காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஓட்டுக் கேட்கப் போனபோது, அங்கிருந்த மக்கள் ஒருவர் 'இந்தி எதிர்ப்பின்போது எங்கே சென்றிருந்தீர்கள்?' என்று கேட்டதற்காக அங்கிருந்த கம்பத்தை இரவோடு இரவாக எடுத்துக் கொண்டு போய் தேனம்பாக்கத்தில் கொண்டு போய்ப் போட்டார்கள். இந்த மாதிரி அநாகரிகமான போக்கு எந்த ஆட்சிக் காலத்தில் நடந்திருக்க முடியும்? தம்மனூரில் பத்துப் பதினைந்து விவசாயிகள் ஐந்தாறு ஆண்டுக் காலமாக மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டும் பெற முடியாத நிலையில் பொன்னுசாமி முதலியார் என்பவர் எடுத்த கிணற்றுக்கு ஒரே வாரத்தில் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் ஏழை விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கிடைத்தது. இந்த மாதிரிக் கொடுமைகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடந்தனவா? இந்த மாதிரிச் சொல்வதற்கு என்னிடம் பல விவரங்கள் இருக்கின்றன. காங்கிரஸ்காரர்கள் 20 ஆண்டுக் காலத்தில் கொடுத்த மின் இணைப்புகளையும், எங்கள் ஆட்சிக் காலத்தில் கடந்த 2½ ஆண்டுகளில் கொடுத்த மின் இணைப்புகளையும் பார்க்கும்போது கிட்டத்தட்ட நாலில் ஒரு பங்கு இந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு வேகமாக மின்சார வாரியம் பணிபுரிந்து கொண்டிருக்கிறது. இந்த இரண்டரை ஆண்டுக் காலமாக மழை பெய்யவில்லை; வானம் கடுமையாகப் பொய்த்து விட்டது. மின்சார வாரியம் இயற்கையையே மாற்றி அமைத்திருக்கிறது. வள்ளுவப் பெருந்தகை சொன்னார்—

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி." என்று.

மக்கள் மன்னனைப் பார்த்து, ஆட்சியைப் பார்த்து வாழுகின்றார்கள். உலகம் வானோக்கி வாழுகின்றது. அந்த வான் நோக்காமலேயே கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக மக்களுக்கு மின்சாரத்தை வழங்கி விவசாயத்திற்குப் பெரும் உதவியைச் செய்திருக்கிறார்கள். ஏதோ படி அரிசி 2½ ரூபாய் விற்கிறது, 3½ ரூபாய் விற்கிறது என்று காங்கிரஸ் கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். 1966-ம் ஆண்டில் வானம் பொய்க்காத நிலையிலே ஆறு, குளம் பெருக்கோடிய நேரத்திலே அரிசியே கிடைக்காத நிலைமை ஏற்பட்டது. அந்த நிலையை மறந்து இன்று வானம் பொய்த்து விட்ட நிலையிலே உள்ள நிலையைப்பற்றிப் பெரிதாகப் பேசுகிறார்கள். அவர்கள் செய்யாத கொடுமைகள் இல்லை. தேர்தல் நேரத்தில் அவர்கள் அதிகாரிகளை மிரட்டிச் செய்த காரியங்கள் எல்லாம் எனக்குத் தெரியும். இனி இந்தத் துறை நல்ல முறையில்

[திரு. க. மு. ராசகோபால்] [1969 ஆகஸ்ட் 19

நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மின்சார வாரியத்தில் சில விதிமுறைகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த விதிமுறைகளில் உள்ள குறைபாடுகளின் காரணமாக ஏழை விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். தற்போது மின்சார வாரியத்தில் பல பிரிவுகள் இருக்கின்றன. அவ்வாறு இல்லாமல் எல்லாப் பிரிவுகளும் சேர்ந்து ஒரு மொத்தமாக இருக்க வேண்டும். எந்தப் பிரிவுக்கு எந்த அதிகாரி என்று விவசாயிகள் அறிய முடியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலை இல்லாமல் ஒரே பிரிவாக வைக்க வேண்டும். பாலாறு சர்டிபிகேட் வாங்க வேண்டுமென்றால் எங்கே இருந்து எங்கே போகவேண்டும் தெரியுமா? முதலில் கர்ணத்திடம் செல்ல வேண்டும். கர்ணம் அதற்கு பிளான், அடங்கல் காப்பி, சிட்டா ஆகியவற்றைப் பார்த்து கையெழுத்துத் தரவேண்டும். கொஞ்சத்தில் முடிகிற காரியமா அது? பிறகு வி.எம். இடத்தில் வாங்கவேண்டும். பிறகு ஆர்.ஐ.யிடம் போகவேண்டும். அதன்பின் தாசில்தாரிடம் சென்று அங்கு இதற்காக ஒதுக்கியிருக்கும் குமாஸ்தாவிடம் சென்று பேப்பர் நிற்கிறது. இந்த நபர்களை யெல்லாம் தாண்டி வருவதற்குக் கிட்டத்தட்ட இரண்டு மூன்று வருடங்களாகின்றன. பின்னர் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள ஒரு குமாஸ்தாவிடம் சென்று கையெழுத்தாகி வருவதற்குக் கிட்டத்தட்ட நாலைந்து ஆண்டுகளாகின்றன. அதைப் பார்த்து விட்டு மின்சார வாரியத்தைக் குறை சொல்லுகிறார்கள். காலதாமதத்திற்குக் காரணம் ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில் பேப்பர்கள் உழன்று கொண்டிருக்கின்றன. அதை வாங்கிக் கொடுத்தால் தான் மின் இணைப்புக் கொடுக்க முடியும் என்று வாரியம் சொல்கிறது. ஆகவே, இந்த காலதாமதத்தைப் போக்குவதற்கு அந்த, அந்த ஊரிலுள்ள அந்த விவசாயிகள் உள்ளபடியே கிணறு எடுத்திருக்கிறாரா, அது அவருடைய நிலத்தில் இருக்கிறதா என்று கர்ணமே நேரிடையாகத் தெரிந்து கொண்டு உடனடியாக இணைப்பு கொடுக்கலாம் என்ற முறையில் செய்யவேண்டும்.

அடுத்து, பணம் ஒதுக்குவதில் ரூ. 1,000 எ.இ.-க்கு என்றிருக்கிறது. அதை மாற்றி கிட்டத்தட்ட ரூ. 20,000 வரையில் அவருக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். டி.இ.-க்கு இப்போதுள்ள அதிகாரம் ரூ. 10,000 வரையில்தான். அதை ஒரு லட்சம் என்று ஆக்கிக் கொடுக்கவேண்டும். பின்னர் எஸ்.இ.-க்கு மூன்று லட்சம் ரூபாய் வரையில் எஸ்டிமேட் போடும் நிலையில் அந்த அதிகாரத்தை அளித்தால் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உடனடியாகப் பரிகாரம் தேட முடியும். ஆகவே இதற்கேற்றபடி விதிகளை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று மூன்று லட்சம் கிணறுகள் வெட்டவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே அதற்குத் தகுந்த வகையில் இப்போதுள்ள விதிமுறைகளை மாற்றியமைத்து விவசாயப் பெருங்குடி மக்கள்



1969 ஆகஸ்ட் 19] [திரு. க. மு. ராசகோபால்]

வாழ வழிகோல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அறிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியம் உண்மையிலேயே மிகமிகப் பெரிய அளவில் நம் நாட்டுக்கு சேவை செய்கிற இலாகாக்களில் ஒன்று என்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. உள்ளபடியே உவமை சொல்லப்போனால், 'நடு ஊரில் பழுத்த நல்ல மரம்' என்று சொல்வார்கள். சில சமயங்களில் தானாகவே உதிருகிறது. அப்படி உதிராத காலத்தில் கல் அடித்து பழம் எடுப்பதுபோல் நடு ஊரில் காய்த்த நல்ல பழம் என்று சொல்வார்கள். அது பழுத்து உதிரும் முறையில் பலருக்கு அது உபகாரமாயிருக்கிறது. அவர்களின் தேவைக்கு கிடைக்கவில்லையென்றால் பழுப்பதற்கு முன்பு தடி கொண்டு, கழி கொண்டு அடித்து எடுக்கும் முறை இருக்கிறது. உண்மையிலேயே பெரிய இலாகாக்களாக இருப்பவற்றில் சில தவறுகள் நிகழத்தான் செய்யும். அவற்றை நல்லமுறையில் கண்காணித்து நேர்மையான முறையில் குறிப்பாக விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கக் கூடிய வகையில் ஆட்சியாளர்கள் நல்லமுறையில் அக்கறை எடுத்துக் காரியங்கள் செய்யவேண்டும்.

குடியானவர்கள், விவசாயிகள், தொழில்கள் செய்பவர்கள் இவர்களுக்கு மின்சாரம் அளிக்கும் விஷயத்தில் இலாகாவைக் குறை கூறுவதில் தவறு இல்லை. மில்களுக்கு 5, 5½ சதவிகிதம் என்றும், விவசாயிகளுக்கு 8, 8½ சதவிகிதம் என்றும் கொடுக்கப்படுவதில் மின்சார இணைப்பு கொடுக்கும் செலவைக் கணக்கிட்டுத்தான் கொடுக்கிறார்கள். இந்தச் செலவைக் குறைப்பதற்கு சில முறைகளைக் கையாளவேண்டும். பெரியதொரு இலாகாவை நிர்வாகம் செய்யும்போது அவசியம் இல்லாத செலவுகளும், தவறுகளும் நிகழத்தான் செய்கின்றன. தோட்டங்களில் மின்சார இணைப்பு கொடுக்கும்போது நடக்கிற முறையைப் பார்த்தால் வேண்டாத செலவு ஆகத்தான் செய்கிறது. அதைத் தவிர்க்க வேண்டும். நான் ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். புதிதாக ஒரு லைன் போடும்போது ஆட்கள் வந்து குழி தோண்டுகிறார்கள். எங்கள் ஆட்களைக் கொண்டு ஒரு நாளில் செய்து முடிக்கிற வேலையை அவர்கள் பத்து நாட்களில் கூட முடிப்பதில்லை. காரணம், அரசாங்க இலாகா வேலையைச் செய்கிறபோது இப்படி சில தவறுகள் வரத்தான் செய்கிறது. அத்தவறுகளை, காலதாமதத்தை, நிவர்த்தி செய்ய திட்டமிட்டு வழிவகை செய்ய வேண்டும். நான் என் தோட்டத்தில் தென்னம்பிள்ளை வைக்க குழி தோண்டச் சொன்னேன். எங்கள் ஆட்களுக்கு சாதாரணமாக மூன்று ரூபாய் கூலி கொடுக்கிறோம். ஆனால் அந்த மூன்று ரூபாய் கூலியைப் பெற்றுக்கொண்டு ஒரு நாளைக்கு இரண்டு குழி தோண்ட முடியவில்லை. ஆக ஒரு குழிக்கு 1½ ரூபாய் செலவாயிற்று. காண்ட்ராக்ட் முறையில் கொடுக்கும்போது அதே

[திரு. மா. கிருஷ்ணசாமி கவுண்டர்] [1969 ஆகஸ்ட் 19

ஆட்கள் பதினெட்டு குழிகள் தோண்டினார்கள். அப்போது குழி மூன்றுக்கு ஆறு அணா தான் வருகிறது. அப்படிச் செய்வதினால் முக்கால் பங்கு செலவு குறைகிறது, அவர்களுக்கும் இரண்டு மூன்று பங்கு லாபம் கிடைக்கிறது. ஆகவே அரசாங்கத் துறைகளிலும், சிறிய துறையாகயிருந்தாலும் சரி அல்லது பெரிய துறையாக இருந்தாலும் சரி, காண்ட்ராக்ட் முறையில் கொடுத்து வேலைகளைச் செய்தால் செலவை மிக மிக அதிகமாக மிச்சப்படுத்த முடியும். அதில் கருத்து வேறுபாடுகளுக்கு இடம் இருக்கிறது. இருந்தாலும் சொல்கிறேன், அந்தக் கருத்து வேறுபாடுகளையும் நல்லமுறையில் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். காண்ட்ராக்ட்டுக்குக் கொடுத்தால் தொழிலாளர்கள் கசக்கிப் பிழியப்படுவார்கள் என்று எண்ண இடம் இருக்கிறது, அப்படி எண்ணுபவர்களும் இருக்கிறார்கள்.

குறைந்த ரேட்டில் யார் டெண்டர் கேட்கிறார்களோ அவர்களுக்கு அந்த அந்த வேலைகளைவிடலாம். அதோடு ஒரு கண்டிஷன் மூலம் கொடுக்கலாம். ஒரு நிறுவனம் அல்லது ஒரு கம்பெனி டெண்டர் கேட்டால் அவர்களுக்கு கிடைக்கும் லாபத்தில் தொழிலாளர்களுக்கு ஒரு பங்கு கொடுக்கக்கூடிய நிறுவனமாக அது இருக்கவேண்டும் என்று வைக்கலாம். அப்படி ஒரு கண்டிஷனைப் போட்டால் அரசாங்கத்திற்கும் செலவு மிஞ்சும், தொழிலாளர்களுக்கும் நல்ல லாபம் பெற வழி செய்ய முடியும். ஒரு லைன் வேண்டுமென்று கேட்டால் இவ்வளவு ரூபாய் கொடுத்தால்தான் முடியும் என்று கண்டிஷன் போடுகிறார்கள். அப்படி கண்டிஷன் போட்டு ஏழை விவசாயிகளிடமிருந்து ரூ. 500 வாங்குகிறார்கள். ஏழை விவசாயிகள் 36 சதவிகிதம் வட்டிக்கு வாங்கி 3½ சதவிகிதம் வட்டிக்கு கொடுக்கவேண்டியிருக்கிறது. நான் அனுபவித்ததை வைத்து இதைச் சொல்கிறேனே தவிர வேறொன்றுமில்லை. இந்தத் துறை சிக்கனமாக இயங்கவேண்டும், தொழிலாளர்களுக்கும் லாபம் கிடைக்கவேண்டும். ஹைட்ரோ எலெக்ட்ரிக் ஸ்கீமுக்கு அதிகச் செலவாகிறது என்றால் அதைக் குறைப்பதற்கும் வழி காணவேண்டும்.

அடிஷனல் செக்யூரிட்டி பற்றி பலர் பேசினார்கள். திரும்பத் திரும்ப அதைப் பற்றிக் கூறுவது கூறியதைக் கூறுவதாக இருக்கும். ஆனால் அதைப் பற்றிக் கூற வேண்டிய அவசியத்தை அனுசரித்து ஒன்று மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். கிணறுகள் 50 அடியிலிருந்து 150 அடிக்குச் சென்றிருக்கின்றன. கீழே போகப் போக வெட்டுச் செலவு அதிகமாகிறது, தண்ணீரும் குறைகிறது. அடிஷனல் செக்யூரிட்டி கொடு என்கிறார்கள். கிணற்றின் ஆழம் கீழே போகப் போக அதற்காகும் மின்சாரச் செலவையே கொடுக்கமுடியாது திணறும் விவசாயிகள் எப்படி இந்த அடிஷனல் செக்யூரிட்டியைக் கொடுக்க முடியும்? ஆகவே சிறிது நல்ல மனது வைத்து விவசாயிகளுக்கு தொல்லை கொடுக்காமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1969 ஆகஸ்ட் 19]

பல கருத்துக்களை ஏற்கனவேயே சொல்லியாகிவிட்டது. விவசாயிகளுக்குள்ள கஷ்டங்களைப் பற்றி ஏற்கனவே பலர் சொல்லியாகிவிட்டது. அந்தக் கஷ்டங்களை அமைச்சர் அவர்களும் அதிகாரிகளும் உணர்ந்து அதைப் போக்குவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. அ. லெ. சுப்பிரமணியம்: அன்புள்ள மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரிய நிதி நிலை அறிக்கைமீது நான் சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். இன்றைக்கு இந்தக் கருத்துக்களைக் கூற நான் முற்படும்போது காங்கிரஸ் கட்சி தரப்பில் இருக்கிற இடங்கள் எல்லாம் காலியாக இருப்பதைப் பார்க்கிறோம். அவர்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனெனில் அவர்கள் பேசியிருந்தார் களானால் எனக்கு இன்று பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத் திருக்காது. அதற்காக முதலில் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் நான் ஒன்று கருதுகிறேன். காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில், இதில் பலவிதமான கோளாறுகள் இருக்கும். ஏதாவது தாக்கிப் பேசலாம் என்று கருதுகின்ற அவர்களே, இது பாராட்டுகின்ற வகையில் அமைந்துவிட்ட அறிக்கையாக இருக்கின்ற காரணத்தினால் எங்கே முதல் அமைச்சர் அவர்களையும், அவருடைய அமைச்சரவையையும் பாராட்ட வேண்டியிருக்குமோ என்று கருதி இன்றையதினம் அவர்கள் வெளியேறியிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

இன்று, பொதுவாக இந்த வாரியத்திலே இருக்கிற பல அம்சங்களைப்பற்றி எனக்கு முன்னாலே பேசிய பல நண்பர்கள் பாராட்டுத் தெரிவித்து வரவேற்றிருக்கிறார்கள். நானும் என்னுடைய பாராட்டுதல்களையும், வரவேற்பையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இதிலே சென்ற ஆண்டு கூறப்பட்ட பல்வேறு கருத்துக்களையும் நல்லமுறையில் கவனத்திற்கொண்டு நல்ல பதிலையும் ஒரு குறிப்பிலே தந்திருக்கிறார்கள். அதற்காகவும் இந்த வாரியத்திற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் இன்னொரு கருத்தையும் இந்த மன்றத்தில் குறிப்பிட விரும்புகிறேன். பல்வேறுபட்ட கருத்துக் களைச் சென்ற முறை இந்த மன்றத்திலே அங்கத்தினர்கள் கூறி யிருக்கிறார்கள். அப்படிக் கூறிய கருத்துக்களையெல்லாம் எலெக்ட்ரிசிடி போர்டு கன்ஸல்டேடிவ் கவுன்சில் என்ற குழுவில் வைத்து, அதனுடைய பரிந்துரைகள் என்னென்ன என்பதையும் இந்த மன்றத்திலே அடுத்த முறை வைத்தால் அதோடு நம்முடைய கருத்துக்களையும் எடுத்துச் சொல்லி அரசாங்கம் செயல்படுவதற்கு வழியாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தையும் கூறிக் கொள்ளுகின்றேன்.

**சென்ற ஆண்டு வருவாயைவிட** இந்த **ஆண்டு** 5 **கோடி** ரூபாய் அதிகமாகி 53 கோடி ரூபாய் வருமானமாக வரவிருப்பதாகக் காட்டியிருக்கிறார்கள். அதே நேரத்தில் செலவைப் பார்க்கும் பொழுது அதுவும் அதிகமாக இருக்கின்ற ஒரு சூழ்நிலையைப் பார்க்கிறோம். இன்றைக்கு உற்பத்திக்காக 1.2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் வட்டி என்கின்ற இனத்திலே 13.3 கோடி ரூபாய் என்றிருக்கிறது. சென்ற முறை பல நண்பர்கள் இதுபற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த வட்டியைக் குறைக்க வழி இருக்குமா என்று நம்முடைய முதலமைச்சரவர்களும் மற்றவர்களும் முயற்சியெடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்று மத்திய சர்க்காரைப் பொறுத்த வரையில் நமக்குக் கடனைத் தந்து உதவியிருக்கிறார்கள். குந்தா திட்டத்திற்காக கனடா நாட்டைச் சேர்ந்தவர்கள் நமக்கு வட்டியில்லாமலேயே கடன் தந்திருக்கிறார்கள். ஆனால், அதை மாநில அரசுக்குத் தரும்பொழுது 7 சதவிகித வட்டியை இந்திய அரசு விதிக்கிறது. ஸ்விட்ஜர்லாந்திலிருந்து 2 சதவிகித வட்டிக்கு நமக்குக் கொடுத்தும், மத்திய அரசினர் அதைப் பெற்றுத்தரும் பொழுது 7 சதவிகித வட்டியாக உயர்த்தியிருக்கிறார்கள். நான் இங்கே குறிப்பிட விரும்புவதெல்லாம், மத்திய சர்க்காரைச் சேர்ந்தவர்கள் வெளிநாட்டிலேயிருந்து வட்டியில்லாமல் அல்லது குறைந்த வட்டிக்குப் பெற்றுத் தரும் நேரத்தில், அதை நமக்குத் தரும்பொழுது நம்மிடம் அதிகமாக வட்டி வாங்குகிறார்கள். இடையிலே அவர்கள் பெற்றுத்தருவதைத் தவிர அவர்கள் வேறொன்றும் செய்யவில்லை. எனவே, 7 சதவிகிதம் வட்டி தருவது நியாயமில்லை' என்று இந்த மன்றத்திற்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று, நாம் விவசாயிகளுக்கு மிகக்குறைந்த விலைக்கு மின்சாரம் தருகிறோம். 8.25 பைசாவிற்கு ஒரு யூனிட் தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் மத்திய அரசு 12 பைசாவிற்கு மேலே அதிகமாகக் கொடுக்கும் மாநிலத்திற்கு நிதி உதவி தருவோம் என்று சொல்கிறது. 8.25 பைசாவை உயர்த்தினால் தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகளிடம் கெட்ட பெயர் ஏற்படக்கூடிய நிலை உண்டாகும். எனவே, நமக்கு ஏற்படுகின்ற நஷ்டத்திலே ஓரளவு மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டால் இப்படிப்பட்ட செலவுகளும் தவிர்க்கப்படும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், தமிழக அரசாங்கம், பெரிய தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் குறைந்த விகிதத்திலே இன்று மின்சாரம் வழங்குகிறார்கள். அலுமினியம் தொழிற்சாலை பற்றிச் சொன்னார்கள். பெரிய தொழிலில் ஈடுபட்டு அதிக லாபத்தைச் சம்பாதிக்கும் கம்பெனிகளுக்கு இந்த மின்சாரக் கட்டணத்தைச்



சற்று உயர்த்துவது நியாயம் என்று பலரும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை முதலமைச்சர் மற்ற அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதே நேரத்தில் மின் இழப்புபற்றி லைன் லாஸ் என்று சொல்லுகிறார்கள். சென்ற முறை இந்த மன்றத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதற்காக ஒரு நிபுணர் குழுவை ஏற்படுத்த வேண்டும். ஏன் இவ்வளவு இழப்பு ஏற்படுகிறது என்று கண்டறிய வேண்டுமென்று தெரிவித்திருந்தோம். அதற்கு இன்று கொடுக்கப்பட்டிருக்கும் பதிலில் அப்படிப்பட்ட ஒரு குழுவை அமைத்திருக்கிறோம், விரைவிலே கருத்து தெரிவிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அங்கத்தினர்களுடைய கருத்தைக் கருத்த முறையில் கவனித்து நடவடிக்கை எடுத்திருப்பதற்காக அரசாங்கத்திற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இப்படிப்பட்ட குழுவின் அறிக்கையும், இந்த கவுன்ஸிலின் பரிந்துரைகளையும் சேர்ந்து வைத்தால் இங்கேயிருக்கிற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும் தெரிவிப்பதற்கு நல்ல வழியாகயிருக்கும்.

நம்முடைய முதலமைச்சரவர்கள், 1971-க்குள் இந்தத் தமிழ் நாடு பூராவும் மின்சாரம் இல்லாத கிராமங்களே இல்லை என்ற அளவுக்கு விஸ்தரிக்கப்போவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். இது நடக்குமா என்கிற ஐயப்பாட்டினைக் கூடச் சில நண்பர்கள் தெரிவித்தார்கள். ஆனால், 1971-ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றப் படவேண்டுமென்ற ஒரு உறுதி மொழியை. ஒரு உறுதியான எண்ணத்தை மேற்கொண்டால்தான் நிறைவேற்ற முடியுமென்ற அடிப்படையில் நம்முடைய முதலமைச்சரவர்கள் இத்தனை காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டுமென்ற ஒரு நல்லெண்ணத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக அவர்கள் இன்று மூலதனச் செலவிற்காக அதிகப் பணத்தை ஒதுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதை எப்படிப் பெறுவது என்று கருதும் நேரத்தில் அதற்கும் நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்று இந்தியாவைப் பொறுத்தவரையில் மிகப் பரபரப்பான ஒரு சூழ்நிலை உருவாகியிருப்பது பாங்குகளைத் தேசியமாக்கப்பட்ட கொள்கையாகும். பிரதமர் அவர்கள், தேசியமயமாக்கப்பட்டிருக்கும் பாங்குகளின் பணம் நல்ல முறையிலே செலவழிக்கப்படும் என்ற உறுதிமொழியைத் தந்திருக்கிறார்கள். இந்த அரசாங்கமும், நம்முடைய முதலமைச்சரவர்களும், பாங்குகளைத் தேசியமயமாக்கியிருப்பதை மனப்பூர்வமாக வரவேற்றிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, ஒரு பகுதி புறக்கணிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அந்த பாங்குகளின் டைரக்டர்கள் அடங்கிய குழுவிலே, அதற்கு ஆலோசனை சொல்லும் குழுவிலே மாநிலங்களுக்கும் இடம் தர வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சரவர்கள் நல்ல கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள். அதை ஏற்றுக்

[திரு. அ. வெ. சுப்பிரமணியம்] 1969 ஆகஸ்ட் 19]

கொள்ளப்பட்டால் நம்முடைய பிரதிநிதி அந்தக் குழுக்களிலே இடம் பெற்று, மின்சார வாரியத்தை விசாரிக்கும் மூலதனச் செலவுக்கான ஆடிட் பணத்தை பெறுவதற்கு உதவிகரமாக யிருக்கும். அது முதலமைச்சரவர்கள் காலத்தில் நடக்க வேண்டுமென்று என்னுடைய நல்லெண்ணத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஆக, இப்படிப்பட்ட செலவுகளையெல்லாம் நாம் செய்தாலும் நாம் செலவு செய்திருக்கும் அளவுக்கு வருமானம் வந்திருக்கிறதா, பயன் இருக்கிறதா என்று பார்ப்பதற்கு ஆண்டுக்காண்டு ஆடிட் செய்கிறோம். ஆனால், இன்றிருக்கும் நிலையில் இந்த ஆடிட் செய்பவர்கள் சீஃப் என்ஜினியருக்கு உள்ளடங்கியவர்களாக இருக்கும் முறையாக இருக்கிறது. ஆனால் மற்ற இடங்களில் இண்டிபெண்டெண்ட் ஆடிட் முறையிருக்கிறது. அரசாங்கத்தின் கணக்குகளையெல்லாம் கம்ப்ட்ரோலர்கள் ஆடிட் செய்கிறார்கள். ஆனால் எலெக்ட்ரிசிட்டி போர்டில் என்ஜினியருக்கு அடங்கியவர்கள் ஆடிட் செய்வதால், அவர்கள் தங்களுடைய நல்லெண்ணத்தையும் தாங்கள் கூறவேண்டிய கருத்துக்களையும் வலிவோடும், துணிவோடும் கூற முடியாமல் போய்விடுகிறது. இன்றிருக்கும் பொறியாளர்கள்மேல் நம்பிக்கையில்லாத காரணத்தால் நான் இதைக் குறிப்பிடவில்லை. ஆனால் பொதுவாகக் கூறப்படும் நோக்கில், ஒரு அதிகாரிக்குக் கட்டுப்பட்டு இந்தக் குழு இருந்தால் இதிலே நல்ல கருத்துக்களை எடுத்துச்சொல்ல வழியில்லாமல் போகும் என்பதற்காக கூறுகிறேன். எனவே. இண்டிபெண்டெண்ட் ஆடிட், அதாவது தனித்து இயங்குகின்ற ஒரு ஆடிட் இலாக்காவை ஏற்படுத்த வேண்டுமென்று முதலமைச்சரவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மின்சார வாரியத்திலுள்ள ஊழியர்களின் குறைகளைப்பற்றி பல நண்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். 1957-லிருந்து 63 வரை போனஸ் தரப்படவில்லை என்ற கருத்தை இந்த மன்றத்திலே எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை முதலமைச்சரவர்கள் காலத்தில் தீர்க்கப்படுமென்று கருதுகிறேன். அவர்களுடைய சம்பள நிர்ணயங்களையெல்லாம் மாற்றியமைக்க வேண்டுமென்று, அகில இந்திய ரீதியில் ஆல் இண்டியா வேஜ் போர்ட் என்று மூன்றாண்டுக் காலத்திற்கு முன்னாலே ஒரு குழு நிறுவியிருந்தார்கள். ஆனால், மூன்றாண்டுகள் ஆகியும் வேஜ் போர்டின் பரிந்துரைகள் இன்னும் வெளியிடப்படவில்லை. அதற்கான பல நடவடிக்கைகளையும் எடுத்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் டெல்லியிலே கண்டனக்குரலும் எழுப்பியிருக்கிறார்கள். அந்தக் குழுவின் முடிவு விரைவிலே வெளியிடப்பட்டால் நல்ல முறையிலே நடவடிக்கை எடுக்க அது வழியாக இருக்கும் என்ற கருத்தையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1969 ஆகஸ்ட் 19] [திரு. அ. வெ. சுப்பிரமணியம்]

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திருநெல்வேலியைப் பொறுத்தவரையில், அலுவலகங்கள் பல்வேறு இடங்களிலே பரவியிருப்பதை ஒன்றாக இணைத்து 'செண்ட்ரல் ஆபீஸ்' ஆக ஓரிடத்தில் அமைக்க வேண்டுமென்ற கருத்தை முதலமைச்சரவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் எழுதி அனுப்பியிருந்தோம். அதன்படி, இன்றைய தினம், பாளையங்கோட்டையிலே ஹைகிரவுண்டிற்கு அருகில் இந்த சென்ட்ரல் ஆபீஸை வைக்க அனுமதி தந்திருக்கிறார்கள். அதற்காகவும் நான் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக இந்த அரசாங்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, வேலை பார்க்கும் ஊழியர்களுக்கு ஒரு குடியிருப்பு பகுதி அமைக்க எலெக்ட்ரிசிட்டி போர்டு ஊழியர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு சொஸைட்டி அமைத்திருக்கிறார்கள். ஒரு நிலத்தை வாங்கினார்கள். ஆனால் இன்றுள்ள விதிமுறைகளின்படி, என்.ஜி.ஓ. சொஸைட்டி, ஹரிஜன காலனி சொஸைட்டிக்கு மட்டும்தான் பத்திரப் பதிவிலிருந்து விலக்களித்திருக்கிறார்கள். அதேபோல் எலக்ட்ரிசிட்டி போர்டு ஊழியர்களின் சொஸைட்டிக்கும் ஸ்டாம்ப் டியூட்டியிலிருந்து விலக்கு வேண்டுமென்று நாங்கள் நிதியமைச்சரவர்களிடம் தெரிவித்தோம். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டு, திருநெல்வேலி பகுதிக்கு மட்டும் விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். என்னுடைய கோரிக்கையாக, இன்று என்.ஜி.ஓ. சொஸைட்டி, ஹரிஜன் காலனி சொஸைட்டிகளுக்கு ஸ்டாம்ப் டியூட்டியிலிருந்து 'எக்ஸெம்ஷன்' அளித்திருப்பதைப் போல எலெக்ட்ரிசிட்டி போர்ட் ஊழியர்கள் சொஸைட்டி அனைத்திற்கும் பத்திரக் கட்டண விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் திருநெல்வேலியைப் பொறுத்தவரையில், மேல் தாமிரபரணி திட்டத்தையும், மேல் மணிமுத்தாறு திட்டத்தையும் விரைவிலே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் இடம் பெற்றிருப்பதாகக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. இதை விரைவிலே நிறைவேற்றித் தரவும் தூத்துக்குடியிலே இருக்கிற தெர்மல் ஸ்டேஷனை விரைவிலே முடித்துத் தரவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த மூன்று திட்டங்களும் நிறைவேற்றித் தரப்படுமானால் திருநெல்வேலியைப் பொறுத்தவரையில் மின்சாரத்திற்குப் பஞ்சமில்லை என்ற நிலையில் திருநெல்வேலி பகுதியை தொழில் வளமுள்ள ஒரு பகுதியாக ஆக்க அவை உதவும்.

இன்னொன்று, செக்யூரிட்டி டெப்பாசிட் கேட்கின்றபோது கவர்ன்மெண்ட் பாண்டுகளையே இன்றைக்கு மற்ற பகுதிகளிலே செக்யூரிட்டியாக ஏற்றுக்கொள்ளலாம் என்று விதி இருக்கிறது. ஆனால் எலெக்டிரிசிட்டி போர்டைப் பொறுத்தவரையில் சில கவர்ன்மெண்ட் பாண்டுகளை வைத்திருந்தால் அது செல்லாது, சில

தான் வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, காலைக்குப் பதிலாக, அதையே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற சட்டத்தையும் விதியையும் திருத்தவேண்டுமென்ற முறையில் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இந்த அளவில் அமைச்சர் வாரியம் தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே இந்த மின்சார இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு போட்டிபோட்டு, களிடம் குறைந்த கட்டணத்தை வசூலிக்கிறார்கள். அந்த விவசாயி தமிழ்நாடு முழுவதும் 1971-க்குள் ஒளிமயமாகவேண்டுமென்று அளவில் மீண்டும் மீண்டும் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. கொ. இர. ஞானசம்பந்தன்** : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இந்த வாரியத்தின்மீது நான் பேசியபொழுது எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அரிசனப் பகுதியிலே மின் இணைப்புப் போடப்படவில்லை. போடுவதில் தாமதம் ஏற்படுகிறது. அவர்கள் அந்தப் பகுதிகளைப் புறக்கணிப்பதன் காரணமாக, அந்த அரிசனத் தெருக்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதிலே தாமதம் ஏற்படுகிறது என்று பேசினேன். அம்மாதிரி பேசியதற்கு இன்று என்னிடம் கொடுக்கப்பட்டிருக்கிற புத்தகத்தில் ரிமார்க்ஸ் என்ன எழுதியிருக்கிறார்கள் என்று பார்த்தால், அம்மாதிரி அவர்கள் கூறுவது சரியானது அல்ல, மற்ற பகுதிகளுக்கும் சேர்த்துதான் தெரு விளக்குகளுக்கும் கொடுக்கவேண்டி யிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மீண்டும் அரசின் கவனத்திற்கும் மின்சார வாரியத்தின் கவனத்திற்கும் நான் கொண்டு வர விரும்புவது அரிசனப் பகுதிகளுக்குப் பரிபூரணமாகக் கொடுக்கவேண்டுமென்பதற்கு அரசாங்கம் ஏற்பாட்டிருக்கிறது. அதை கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். உதாரணம் சொல்ல வேண்டுமானால் என் தொகுதியிலே ஆவாரணி, புதுச்சேரி பகுதிகளில் எல்லாவிதமான சால்வென்ஸி சர்டிஃபிகேட் போன்றவைகள் கொடுத்தும் அவர்கள் கோரிய தொகையை டெபாசிட் செய்தும் மூன்று வருடங்கள் ஆகியும்கூட இன்னும் மின் இணைப்பு தரப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 1971-க்குள் எல்லா இடத்திற்கும் மின் இணைப்பு கொடுக்கப்படும் என்று அளித்த வாக்குறுதியின் அடிப்படையிலே 2 ஆண்டு, 3 ஆண்டுகளாகியும் மின் இணைப்பு கிடைக்காத அரிசனப் பகுதிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப் படும் என்று நம்புகிறேன். அங்கு மின் இணைப்பு கொடுக்காத நிலையைப் போக்க வேண்டும். அந்நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்ற முறை, மின் வாரியத்தைப் பொறுத்தவரையில் இந்த தவறுகளை எல்லாம் தடுத்து நிறுத்தி, மின்சார வாரியம் சரியாக இயங்குவதற்கு ஒரு ஹை பவர் கமிட்டி அமைக்கப்பட வேண்டு மென்று நான் சொன்னேன். ஆனால் அவர்கள் எனக்கு கொடுத்துள்ள ரிமார்க்கில் அவைகளெல்லாம் தேவையில்லை, ஒவ்வொன்றும் தனித்தனியாக இயங்குகிறது, போலீஸ் மூலமாக





விரயமாவதைக் கண்டுபிடிக்கிறோம் என்றெல்லாம் கூறி இருக்கிறார்கள். ஆனால் இன்னும் பல குறைபாடுகள் இருக்கின்றன. அந்த வாரியத்தை இலாபகரமாக நடத்துவதற்கு நிச்சயமாக அதை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு ஹை பவர் கமிட்டி இப்பொழுது மிகமிக அவசியமென்று நான் கருதுகிறேன். உதாரணமாக இன்றைய தினம் கன்ஸ்யூமர்ஸ் பெறக்கூடிய சிரமங்கள் ஏராளம். மின் இணைப்பு வேண்டுமென்றால் அதற்கான உபகரணங்கள் கிடைக்கவில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். அதே நேரத்தில் 1970-72-க்குத் தேவையான பொருள்களை இப்பொழுதே வாங்கி வைத்து இருக்கிறார்கள். உதாரணமாக, இன்சுலேட்டர்ஸ், ரப்பர் கேபிள்ஸ் எல்லாம் ஏராளமாக தேவைக்கு அதிகமாக வாங்கி வைத்திருக்கிறார்கள். அதே நேரத்திலே இணைப்புக்கு வேண்டிய கம்பிகள் கிடையாது என்ற குறை சொல்லப்படுகிறது. எனவேதான் சென்ற ஆண்டே கூறினேன், தேவையான பொருள்களை வாங்காமலும் தேவை யற்றப் பொருள்களை டம்ப் செய்வதும் அதை எல்லாம் ஒழுங்கு படுத்தவேண்டுமாயின் ஒரு ஹை கமிட்டி அவசியம் என்று கூறினேன். இப்பொழுதும் வற்புறுத்துகிறேன். இன்சுலேட்டர்ஸ், கேபிள்ஸ் இவைகள் ஏன் இந்த அளவிற்கு தேவைக்கு அதிகமாக வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன ? எனவே, இவைகளை எல்லாம் ஆராய ஒரு ஹை பவர் கமிட்டி நிச்சயம் அவசியம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதேபோல் மற்றொன்று, இன்று மீண்டும் பலர் பேசியும் விட்டார்கள். மின் வாரியம் அதை ஒப்புக்கொள்ளவும் இல்லை. அமைச்சரவர்கள் அதை கவனிக்க வேண்டும். தொழில்களுக்கு கொடுக்கக்கூடிய மின்சாரத்தின் கட்டண விலையை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லும்போது இப்பொழுதே குறைவாகத் விட தமிழ் மாநிலத்திலே தொழில்களுக்கு அதிகமாகத்தான் நாங் கள் கட்டணம் விதிக்கிறோம், இன்னும் அதிகரிக்க அவசியம் இல்லை யென்று அவர்கள் கூறி இருக்கிறார்கள். அது சரியான சமா தானம் இல்லையென்று நான் கருதுகிறேன். தொழில்கள் அதிக மாக இலாபம் சம்பாதிக்கும் போது, இந்த மின் வாரியம் அவர் களிடம் அதிகமாகக் கட்டணம் பெறுவதிலே எந்தவிதமான தவறும் கிடையாது. நிச்சயமாக அதைப் பற்றி மீண்டும் பரி சீலித்து அந்த மில் முதலாளிகளிடமும் நிர்வாகிகளிடமும் அதிக மாகக் கட்டணம் வசூலிப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

அதே சமயத்தில் விவசாயி கட்டுகின்ற கட்டணத்தை குறைக்க வேண்டு மென்று சொல்லும்போது இப்பொழுதே குறைவாகத் தானிருக்கிறது, இன்னும் குறைக்கவேண்டிய அவசியம் இல்லை யென்று கூறப்படுகிறது. வாஸ்தவமாகவே குறைவு என்றாலும் கூட இன்று உணவு மிகவும் அத்தியாவசியத் தேவை என்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம். அவர்களுக்கு அளிக் கின்ற மின்சாரத்திற்கு இன்னும் குறைவாக கட்டணம் விதிப்பது நிச்சயமாக அவர்களை உற்சாகப்படுத்தும், உணவு உற்பத்தியை

[திரு. கோ. இரா. ஞானசம்பந்தன்] [1969 ஆகஸ்ட் 19

கிறது. அருள் கூர்ந்து கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதை அங்கீகரித்துவிட்டு, இன்னொரு சங்கத்தை அங்கீகரிக்கிறோம், ஒரு காரியத்துக்கு அல்ல, வேறு காரியத்துக்கு அங்கீகரிக்கிறோம் என்று கூறுவது நொண்டித் தனமான வாதம், யதார்த்தத்தையே தவிடுபொடியாக ஆக்கக் கூடிய வாதம். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பது அத்தனை பேரும் அடிப்படையாக ஒப்புக் கொண்டது. இருந்தாலும், இன்னொரு சங்கத்தை அங்கீகரித்துவிட்டு, வேறு காரியத்துக்குத் தான் அங்கீகரித்திருக்கிறோம், அதே காரியத்துக்கு இல்லை என்று சொல்வது வாதத்திறமை என்று நினைத்துக்கொண்டு கூறினால், அது தவறான கருத்தைச் சொல்வதாகும், அது எனக்குச் சரியாகப் படவில்லை. ஆகவே, இதுபற்றி அருள்கூர்ந்து சிந்திக்கவேண்டுமென்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது இருக்கக்கூடிய சிரமங்களைப் போக்குவதற்கு உடனடியாக அரசு கவனம் செலுத்தி, தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக, எனது தொகுதியைப் பற்றி இரண்டு ஆண்டு காலமாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். மனுக்கள் எழுதிக் கொண்டிருக்கிறேன். யாருக்கு எழுதியும் குறைகள் தீர்க்கப்படவில்லை. எனது தொகுதியில் ஆவராணி, புதுச்சேரி போன்ற கிராமங்களில் அரிஜனமக்கள் மின் இணைப்பு இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டு கால ஆட்சியில் பலன் கிடைக்கவில்லை, இந்த ஆட்சியில் நிச்சயம் பலன் கிடைக்கும் என்று எதிர்பார்த்தும், இப்பொழுதும் துரதிருஷ்டமான நிலை இருக்கிறது. இந்தப் பேச்சுக்குப் பிறகாவது இந்தக் கிராமங்களுக்கு மின் இணைப்பு கிடைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும், இந்த இடத்தில் இருப்பவர்கள் அரசாங்கத்தைப்பற்றி தப்புப் பிரசாரம் செய்வதற்கும் சீக்கிரத்தில் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நிச்சயமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, என்னுடைய பேச்சை இத்தோடு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. இரா. மாணிக்கவாசகம்:** தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையை வரவேற்று, என்னுடைய சிலபல கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். நீண்ட நெடுங்காலமாக கிராம மக்களுக்கு மின்சாரம் வழங்குவதில் குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது, இன்று எந்த அளவுக்கு அதில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சற்று எண்ணிப் பார்க்கவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். பல நாட்களாக, பல மாதங்களாக, பல வருடங்களாக மின்சாரம் வராத காரணத்தினால் அலுத்துக்கொண்டவர்களும், சலித்துக்கொண்டவர்களும் எத்தனையோ பேர்கள் இந்த நாட்டில் உண்டு. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் நாட்டிலுள்ள கிராமங்கள் மின்சார விளக்கு ஒளி பெறவேண்டும் என்ற அடிப்படையில் பல



1969 ஆகஸ்ட் 19] [திரு. இரா. மாணிக்கவாசகம்]

திட்டங்களைத் தீட்டி, நல்ல முறையில் மின்சாரம் தரப்பட்டு வருகின்ற காட்சியை நாம் பார்க்கிறோம். இருந்தாலும் இன்னும் எந்த அளவுக்கு முடிந்திருக்கிறது என்று சற்று ஆராய்ந்து பார்க்கிற நோக்கில் தான், முடிக்க இருப்பவைகள் ஏராளமாக இருக்கின்றன என்பதும் தெரிய வருகிறது. ஆனால் சிறுகக் கட்டி பெருக வாழ் என்ற அடிப்படையில் நமக்குள்ள வசதிகளையும், வாய்ப்பையும் வைத்துக் கொண்டு எந்த அளவுக்கு மின் இணைப்பு தரப்பட்டு வந்திருப்பதை தரப்பட முடியுமோ அந்த அளவுக்குத் தரப்பட்டு வந்திருப்பதை நாம் பார்க்கிறோம்.

மேலும் இந்த வாரியத்தினுடைய வரவு செலவைப்பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, இந்த வாரியத்திலுள்ள 65,000 தொழிலாளர்கள் தங்களுக்குள்ள குறைகளை எடுத்துச் சொல்ல, அந்தக் குறைகளையெல்லாம் நிவர்த்திசெய்யும் வகையிலே இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதை அத்தனை தொழிலாளர்களும் வரவேற்றுக் கூறுகின்ற காட்சியை நாம் பார்க்கிறோம். ஆனால், இன்னும் சில குறைபாடுகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. மேலே உள்ள சில அதிகாரிகள் மெத்தனமாக இருக்கிற காரணத்தினால் தான், இன்னும் சில குறைகள் நீக்கப்படாமல் இருக்கின்றன. தொழிலாளர்கள் சிறந்த முறையிலே ஒன்றுபட்டு செயல்படுவார்களேயானால், நிச்சயம் இந்தக் குறைகளும் தீர்த்துவைக்கப்படும் என்று நான் கூற விரும்புகிறேன். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், வருவாய் துறை வேலை பளு மீதான ஒப்பந்தம் இன்னும் நீண்ட காலமாக செய்யப்படாமல் இருந்து வருகிற காட்சியை நாம் பார்க்கிறோம். இதை எளிதில் நிறைவேற்றித் தரவேண்டும். அதனால் வாரியத்திற்கும் நல்ல பெயர் கிட்டும், அரசாங்கத்திற்கும் நல்ல பெயர் கிட்டும். அப்படி நல்ல பெயர் தேடித்தருவதற்கு உரியவர்களைப் பாராட்டி, அவர்களுக்கு நான் உளமாற நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் மின்சாரம் உபயோகிப்பவர்கள், விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள், அலுமினியத் தொழிற்சாலைக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் தருகிறார்கள் என்று சொன்னார்கள். உள்ளபடியே அலுமினியம் தொழிற்சாலைக்கு செலவு இல்லாமல் விளம்பரம் தேடித் தந்துவிடுகிறோம் என்று தான் நினைக்கவேண்டியிருக்கிறது. மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை வரும்போதெல்லாம் அலுமினியத் தொழிற்சாலையின் பெயரும் வந்துகொண்டிருக்கிறது. விவசாயிகளுக்கு உள்ள குறையை போக்குவதற்கான வகையில், இந்தத் தொழிற்சாலையிடமிருந்து எந்த வகையில் கட்டணத்தைக் கூடுதலாக வசூலிக்கலாம் என்று சிந்தித்து, இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும். உயர்ந்த தொழிற்சாலைகள், நடுத்தரத் தொழிற்சாலைகள், சிறிய தொழிற்சாலைகள் என்று மூன்று வகைகளாகப் பிரித்து கட்டணம் விதிக்க வேண்டும். அப்படிச் செய்தால் சிறிய

[திரு. கொ. இர. ஞானசம்பந்தன்] [1969 ஆகஸ்ட் 19

அதிகப்படுத்துவதற்கு ஊக்கம் ஏற்படுத்தும். அந்த வகையிலே
அவர்களுக்கு மின்சாரத்தை இன்னும் குறைவான விலையிலே
கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பம்ப் செட்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதைப்பற்றி
சொல்லும்போது அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்போது
விவரம் தருவார்கள் என்று நினைக்கிறேன். மோட்டாருக்கு
புதிதாக இணைப்பு கொடுப்பதிலே பல குறைகள். தஞ்சாவூர
பகுதியிலே அப்படி இருக்கிறது. விவரங்களைக் குறிப்பிட்டு
பின்னால் அமைச்சர் அவர்களுக்கு எழுதுகிறேன். அதில் பல
குறைபாடுகள் இருக்கின்றன. பம்ப் செட் வந்ததற்குப் பிறகு,
இணைப்பு தருவதிலே தாமதம். எங்கள் மாவட்டத்திலே ஒரு
கம்பெனி சர்க்காருக்கு எதிராக பிரசாரம் செய்துகொண்டிருக்
கிறது. நாங்கள் இலாபத்தை எதிர்பார்க்கிறோம், ஆகவே,
இணைப்பு கொடுக்கவில்லை என்று மின் வாரியம் கூறுவதாக அவர்
கள் அரசுக்கு எதிராக பிரசாரத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள்.
அந்த நிலைமைகளைப் போக்கி மின் இணைப்பு கொடுப்பதற்கு அரசு
துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து, மீட்டருக்கு வாடகை வசூலிப்பதைப் பற்றியது.
தயவு செய்து அரசும் மின் வாரியமும் அதைப்பற்றி யோசிக்க
வேண்டும். மீட்டருடைய விலை ரூ. 30. ஆனால் வெளியில்
வாங்கினால் ரூ. 40. அந்த மீட்டருக்கு எவ்வளவு வாடகை
போடப்படுகிறது? மாதம் 75 பைசா. வாடகை போடுவது
தொடர்ந்து நடந்துகொண்டு வருகிறது. 75 பைசா வாடகை,
ஆனால் மீட்டர் விலையே ரூ. 30. மாதா மாதம் அவர்கள் 75
பைசா வாடகை வாங்குவதால் அவர்களுக்கு அதனுடைய விலைக்கு
மேலேயே கிடைக்கிறது. எனவே, இதைக் குறைப்பதற்கு மின்
வாரியம் முன் வரவேண்டும். அதற்காக அரசும் மின் வாரியமும்
நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெற்றிலை-பாக்கு கடைக்காரர்களுக்கு அளிக்கப்படும் மின்
சாரத்திற்கான கட்டணம் அதிகம். பெரிய இடத்திற்கு, ஆல்
பர்ப்பசுக்காக இருந்தால் பரவாயில்லை. ஆனால் சாதாரண இந்த
கடைக்காரர்களுக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் குறைச்சல்.
ஆகவே, சிறு கடைகள் போன்றவைகளுக்கு கொடுக்கப்படும் மின்
சாரத்திற்கான கட்டணத்தைக் குறைப்பதற்கு அரசு நிச்சயமாக
நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி
கேட்டுக்கொள்கிறேன்.

அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுடைய பிரச்னையைப்
பற்றி அங்கீகரிக்காத சங்கத்தோடுப் பேசி முடிவு செய்தால் அதில்
என்ன நியாயம் இருக்கிறது? அங்கீகரித்த சங்கத்தோடு பேச
வதற்கு அவர்கள் தயாராக இல்லை. அங்கீகரிக்காத சங்கத்தோடு
பேசுவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். இந்த பார



1969 ஆகஸ்ட் 19] [திரு. கொ. இர. ஞானசம்பந்தன்]

பட்சமான நிலையைப் பற்றி அரசு யோசிக்கவேண்டும். 30-7-1969-லே கணக்காயர் சங்கம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கீகரிக்கப்படாத நேரத்திலேயே அதாவது 9-5-1969-லேயே அந்த சங்கத்தோடு பேசத் தயார் என்று மெமோ கொடுத்திருக்கிறார்கள். அதாவது

Regarding transfer of Accountants, Assistants, Clerks and Typists, separate instructions are being issued in the light of the discussion with the representatives of the Accounts Subordinate Union.

என்று அவர்களோடு 9—5—1969-லே பேசுகிறோம். ஆனால் 30—7—1969-லே தான் அது அங்கீகரிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, பொதுவாகத் தொழிலாளர்களுடைய பிரச்னையைப் பொறுத்தவரையில் எல்லோரோடும் பேசி ஒரு நல்ல முடிவெடுக்கலாம் என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். யாரிடத்தில் பேசுகிறோம் யாரிடத்தில் பேசவில்லையென்ற தகராறுக்கே இடமில்லை. ஆனால் பேசிய அளவில் எல்லாத் தொழிலாளர்களும் நல்ல ஒரு ஒப்பந்தத்திற்கு வரலாம் என்று சொல்லக்கூடிய சுமுகமான சூழ்நிலைக்கு வந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலையிலே தகராறுகளை சுமுகமான முறையில் தீர்த்து வைப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் வரவேற்கத்தகுந்தது. எனக்கு அதில் எந்தவிதமான ஆட்சேபணையும் நிச்சயம் இருக்காது. அமைச்சர் அவர்களுடன் ஒத்துழைப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. வாரியம் எப்படி தவறுதலான முறையில் இந்தப் பிரச்னையை அணுகுகிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பினேனே தவிர, நான் குற்றம் சொல்லவேண்டுமென்பதற்காகக் கூறவில்லை. நான் புதிய முடிவை வரவேற்கிறேன். ஆனால், அங்கீகரிக்கப்படாத ஒரு யூனியனோடு வாரியம் பேச்சுவார்த்தை நடத்துவதும், அவர்களுக்கு சர்குலர் விடுவதும் எந்த அளவுக்கு நியாயம், எந்த அளவுக்கு வாரியம் பாரபட்சமாக நடந்துகொண்டிருக்கிறது என்பதை மட்டும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சென்ற ஆண்டு ஒரு தொழிலுக்கு ஒரு யூனியன் என்ற கொள்கையை நாம் அங்கீகரித்தோம். அது பின்பற்றப்படவில்லை. அது பின்பற்றப்படாததற்குத் தரப்பட்டிருக்கும் என்கையிலே உள்ள விளக்கம் வேடிக்கையாக இருக்கிறது. அந்த விளக்கத்தை நிச்சயமாக யாரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஒரு தொழிலுக்கு ஒரு யூனியன் என்பதை அங்கீகரித்திருக்கிறோம், ஒரு காடிகரிக்கு ஒரு யூனியன், வேறு காடிகரிக்கு ஒரு யூனியனை அங்கீகரிக்கிறோம் என்று கூறுவது பேஷிக்காக நம்முடைய அண்டர்ஸ்டாண்டிங்கையே தவிடுபொடியாக ஆக்கு

[திரு. இரா. மாணிக்கவாசகம்] [1969 ஆகஸ்ட் 19

தொழில்கள் வளரும். பெரிய தொழிற்சாலைகளுக்கு மின்சாரக்
கட்டணத்தைக் கூட்டி, வருகிற நஷ்டத்தை ஈடு செய்வதற்கு ஈடு
செய்யலாம். இப்படிப்பட்ட ஒரு கொள்கையை உருவாக்கி
எங்களுக்கு மின்சார வாரியம் உதவி புரியவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோன்று, ஏராளமான கிராமங்களுக்கு மின் இணைப்பு
வேண்டும் என்று கேட்டிருந்தும், அதற்கு வேண்டிய கருவிகள்
இல்லை என்று கூறப்படுகிற நிலையைக் காண்கிறோம். தேவைப்
படுகிற பொருள்களோ, கருவிகளோ நம்மிடத்தில் இல்லை. ஆனால்,
தேவைப்படாத பொருள்கள் நீண்ட நெடுங்காலமாக, பல ஆண்டு
களாக பல முறைகளில் பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன,
அடைபட்டு கிடக்கின்றன. அந்தப் பொருள்கள் பயன்படா
மலேயே இருக்கின்றன. அதன் மூலமாக பல கோடி ரூபாய்கள்
முடங்கிக் கிடக்கிறது. அருள் கூர்ந்து நமக்குத் தேவையற்ற
பொருள்களை, கருவிகளை வெளியிலே விற்றுவிட்டு, இப்பொழுது
நமக்கு உடனடியாக தேவைப்படுகின்ற பொருள்களை வாங்கு
வதற்கு அத்தத் தொகையை முதலீடு செய்யவேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது மின்சார வாரியத்திற்குப் பொருள்கள் வாங்கு
வதற்கு டெண்டர்கள் கோரப்படுகின்றன. டெண்டர்கள் கோரு
வதிலே ஒரு சிறு திருத்தம் செய்யவேண்டும் என்று பணிவோடு
கேட்டுக்கொள்கிறேன். பெரிய தொழிற்சாலைகளிடத்திலேதான்
டெண்டர்கள் கோரப்படுகின்றன. அதற்கு என்ன காரணங்கள்
சொல்லப்படுகின்றன என்றால், பெரிய தொழிற்சாலைகளாக இருந்
தால்தான் நமக்கு உடனடியாக சப்ளை செய்ய முடியும், வேண்டிய
நேரத்தில் செய்ய முடியும் என்று கூறுகிறார்கள். அந்த ஒரே ஒரு
காரணத்தினால், அந்தத் தொழிற்சாலைகள் எந்தத் தீங்குகள்
இழைத்தாலும், என்ன தவறுகள் நேர்ந்தாலும், அதற்கு உடன்
படுகின்ற சூழ்நிலை உருவாகிக்கொண்டு வருகிறது. ஆகவே, சிறு
சிறு அளவிலே டெண்டர்கள் கோரப்படுமேயானால், சிறு சிறு
தொழிற்சாலைகள் டெண்டர் போடுவதற்கு போட்டி போட்டுக்
கொண்டு முன்வரும். அந்த வகையிலே தவறுகள் ஏற்படாத
வண்ணம் டெண்டர்கள் நிறைவேற்றப்படுகின்ற காட்சியை நாம்
பார்க்க முடியும். மேலும், சிறு தொழில்களுக்கு ஊக்கம் அளிக்
கின்ற வகையிலே நாம் ஆதரவு கொடுத்தவர்களாக ஆவோம். அந்த
வகையிலே ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சில குறைகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. அந்தக்
குறைகளை நிவர்த்தி செய்யவேண்டும். மின்சார வாரியத்தில்
இருக்கிற தலைமைப் பொறியாளருக்கு அலுவல்கள் நிறைய இருக்
கிற காரணத்தினால், பல உப பொறியாளர்கள் ஆங்காங்கு பகுதி
களுக்குச் செல்கின்ற நோக்கில், அந்தப் பகுதியில் இருக்கிற சட்ட
மன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியனின் தலைவர்கள்
மாவட்ட அதிகாரிகள் இவர்களை ஒருங்கிணைத்து, அந்தப் பகுதியில்



1969 ஆகஸ்ட் 19] [திரு. இரா. மாணிக்கவாசகம்]

என்ன நிலைமை இருக்கிறது, மக்களுக்கு என்ன நினைப்பு இருக்
கிறது என்பதை ஆராய்ந்து பார்க்கும் வகையிலே ஒரு குழுவை
அமைக்கவேண்டும். அதே நோக்கில் தொழிலாளர்களுக்கும்
வாரியத்திற்கும் இடையே என்ன நிலைமை இருக்கிறது என்பதை
அறிந்துகொள்வதற்கும் ஒரு குழு இருக்கவேண்டும். இந்தக்
குழுக்களின் வேலைகளை ஆராய்வதற்கும், பொருள்களை வாங்கு
வதற்கும் ஒரு பொருளாதார நிபுணர் தலைமையில் ஒரு குழுவும்
அமைக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.
விடு கட்டுவதற்கும், விவசாயப் பம்பு செட்டுகளுக்கும் இணைப்புகள்
வழங்குவதற்கும் போனால், அவர்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட
தொகையை வாங்குகிறார்கள். அப்படி வாங்கிய பணம், செலவு
போக பாக்கி அவர்களுக்குக் கொடுக்கப் பட்டதாக நான் எங்குமே
காணவில்லை. ஒரு குறிப்பிட்ட தொகையை வாங்கியபிறகு,
மூன்று நான்கு மாதங்களில் இணைப்புக் கொடுத்தாகி விட்டது
என்றால், இன்னின்ன இனத்தில் இன்னின்ன செலவு, மீதி இருப்பது
இன்னது என்று ஒரு கணக்கை அவர்களுக்குக் காட்ட வேண்டும்.
தொகை மிச்சமாக இருப்பது அதிகமாக இல்லையென்றாலும்,
மக்களுக்கு சந்தேகம் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கிறது.
சந்தேகத்தைத் தூண்டும் காட்சியாகத்தான் இருக்கிறது.

ஆகவே, இப்படிப்பட்ட சிறு சிறு குறைகளைக் களைந்து நல்ல
முறையில் பணியாற்றி, விவசாயத்திற்கும் ஊக்கம் அளிக்கும்
வகையில் செயல்படவேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்,
வணக்கம்.

* **ஹாஜி ம. மு. பீர் முஹம்மது** : பேரவைத் தலைவர் அவர்களே,
மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மீது, இந்திய யூனியன்
முஸ்லிம் லீக் சார்பாகப் பேசுவதற்கு எனக்கு அனுமதியளித்
தற்காக நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இந்த ஆண்டு மின்சார வாரியத்தின் வருவாய் ரூ. 53 கோடி
என்பதை அறிகின்ற நேரத்தில், இது சென்ற ஆண்டைவிட இந்த
ஆண்டு மின்சார வாரியத்தின் அதிக வருவாய் ரூ. 5 கோடி கூடு
தலாகக் கிடைத்திருக்கிறது. அப்படிக் கூடுதலான வருவாய்க்கு
வழிசெய்துள்ள மின்வாரியத்தாரை மனமாறப் பாராட்டுகிறேன்.
அதே நோக்கில், பிற மாநிலத்தை விட நம்முடைய மாநிலத்தில்
வேளாண்மைத் துறைக்கு நாம் மின்சாரக் கட்டணமாக வைத்தி
ருப்பது மிக மிகக் குறைவானதாக இருக்கிறது. அப்படிக்
குறைவாக வைத்திருப்பதால், உணவுப் பொருள் உற்பத்திக்கு
நம் அரசு எந்த அளவிற்கு ஆக்ககரமான உதவி செய்கிறது
என்பதை மனமார வரவேற்கிறேன். அப்படி வரவேற்கின்ற
நோக்கில், வேளாண்மைத் துறைக்கு மிகவும் குறைந்த விலையில்
மின்சாரக் கட்டணம் வைத்திருப்பதால், ஆண்டு ஒன்றுக்கு
அரசுக்கு ரூ. 9 கோடி இழப்பு ஏற்படுகிறது என்பதையும் நான்
அறிகிறேன். வேளாண்மைத் துறைக்கு மின்சாரத்தைக் குறைந்த
விலையில் கொடுக்கும் போது, யூனிட்டு ஒன்றுக்கு 12 பைசாவிற்கு

[திரு. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது] [1969 ஆகஸ்ட் 19

மேல் விலை வைத்திருந்தால், அப்படி அதற்குமேல் வைத்திருக்கும் விலையை மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு மானியமாகக் கொடுக்கிறது என்பதையும் அறிகிறேன். நம்முடைய மாநிலத்தை பொறுத்தவரையில், விவசாயத் துறைக்கு நாம் யூனிட்டு ஒன்றுக்கு எட்டே கால் பைசா தான் வாங்குகிறோம். அதனால், மத்திய சர்க்காரிடமிருந்து, பிற மாநிலங்களுக்குக் கிடைப்பது போன்று, அந்தத் துறையில் நம் மாநிலத்திற்கு மானியம் கிடைக்க வில்லை. அப்படி மானியம் கிடைக்கவில்லை என்பதற்காக, அந்த எட்டே கால் பைசா விலை என்று வைத்திருக்கிறோமே, அதைக் கூட்ட வேண்டும் என்று கூறவில்லை. அதே நேரத்தில், 12 பைசாவிற்கு மேற்பட்ட விலையை வைத்தால்தான் மானியம் கிடைக்கும் என்று இருக்கும் நிலையை மாற்றும் வகையில், மத்திய சர்க்காரோடு தொடர்புகொண்டு அதைக் குறைக்க வழி காணவேண்டும் அல்லது வேளாண்மைத் துறைக்குக் குறைந்த கட்டணம் கொடுப்பதால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 9 கோடி இழப்பாக ஏற்படுவதை வேறு வகையில், வேறு துறையில் அவர்களிடமிருந்து மானியமாகப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய மின்சாரத் துறையைப் பொருத்தவரையில், லைனில் பதினேழு சதவிகிதம் மின் இழப்பு ஏற்படுகிறது என்று அறிகிறேன். இப்படி 17 சதவிகிதம் இழப்பு ஏற்படும்போது, அது பெரிய நஷ்டம். அந்த நஷ்டத்தைக் குறைக்க நம்முடைய அரசு நிபுணர்களைக் கலந்தோ அல்லது ஒரு நிபுணர் குழுவை அமைத்தோ அந்த இழப்பைப் பெரிய அளவில் குறைக்க முயற்சி செய்தால் நமக்கு ஏற்படும் நஷ்டம் குறையும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

பெரிய தொழில்களுக்கு குறைந்த விலையில் மின்சாரம் சப்ளை செய்கிறோம். அப்படிச் செய்கின்ற விலையிலிருந்து, ஓரிரு சதவிகித விலையைக் கூட்டுவோமானால், வேளாண்மைத் துறையில் ஏற்படும் நஷ்டத்திற்கு ஒரு வகையில் ஈடு செய்ய முடியும். அதோடு, அந்த வகையில் விலை ஏற்றம் செய்வது பெரிய பெரிய தொழில்களை நஷ்டத்திற்கோ, கஷ்டத்திற்கோ ஆளாக்காது என்று தெரிவிக்கிறேன்.

நம்முடைய மின்சாரத் துறை ஊழியர்களுக்கு ஆறு வருஷங்களாக போனஸ் வழங்கப்படவில்லை என்று அறிகிறேன். அப்படி ஆறு வருஷங்களாக ஏன் போனஸ் வழங்கப்படவில்லை என்பதை ஆய்ந்து, அது வழங்குவதற்கான சூழ்நிலையை அரசு விரைவில் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மத்திய சர்க்கார் நியமித்துள்ள ஊதியக் குழுவினர் தங்கள் அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை. அதன் காரணத்தால் மூன்று ஆண்டுகளாக மின்சார வாரிய ஊழியார்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப் படவில்லை என்று தெரிகிறது. விலைவாசிப் புள்ளி ஏற்றத்தினால், மின்சாரத் துறை ஊழியர்கள் வாழ்க்கையில்



1969 ஆகஸ்ட் 19] [திரு. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது]

தொல்லைகள் ஏற்பட்டு, தவிக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்றும் வகையில், மத்திய சர்க்காருடைய ஊதிய நிர்ணயக் குழு பரிந்துரை கிடைப்பதற்கு முன்னாலேயே, நம்முடைய அரசு அவசர, அவசியமான நடவடிக்கை எடுத்து, நம்முடைய மின்சார வாரிய ஊழியர்களுடைய ஊதியத்தை உயர்த்த ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தாம்பிரபரணி மேல் மின்சாரத் திட்டம், மணிமுத்தாறு மேல் மின்சாரத் திட்டம், தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம் இவற்றை விரைவில் நிறைவேற்றினால், பிற மாநிலங்களில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு ஏறக்குறைய ரூ. 13 கோடி அளவில் மின்சாரம் விலை கொடுத்து வாங்குகிறோமே, அதைக் குறைத்துக் கொள்ளலாம். நமக்கு மின்சாரத்தினுடைய அடக்க விலையும் குறைவாக இருக்கும். ஆதாயத்தையும் பெறலாம். ஆகவே நம்முடைய அரசு அந்தத் துறையில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

புதிய வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டும் என்று கோரிக்கைகள் விடும்போது, போதிய அளவிற்கு சாமான்கள் இல்லை என்று கூறுகின்ற காட்சி நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் பரவலாக இருந்துக் கொண்டிருக்கிறது. அது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. அது மாத்திரமன்று, சில சந்தர்ப்பங்களில், மீட்டர் சப்ளை எங்களுக்கு இல்லை, நீங்கள் விலைகொடுத்து வாங்கித் தந்தால், உடனடியாக மின் இணைப்புக் கொடுக்கிறோம் என்று வாரியத்தார் கூறுகிறார்கள். பொது மக்கள் வெளிச் சந்தையில் விலைகொடுத்து மீட்டர் வாங்கிக் கொடுத்தால், அதைப் பரிசிலனை செய்து, அது ஒழுங்காக வேலை செய்கிறது என்று கண்டதன் பின்னர், 'சீல்' வைத்துத் தருகிறார்கள். மின் இணைப்பும் கிடைக்கிறது. ஆனால் சில மாதங்களுக்குப் பிறகு, இலாகாவினர் எங்களுக்கு மீட்டர் சப்ளை வந்துவிட்டது, நீங்கள் வாங்கி வைத்ததை எடுத்துவிடவேண்டும். எங்கள் மீட்டரைத்தான் வைக்க வேண்டும் என்று வாரியத்தார் சொல்லும் நிலை இருக்கிறது. வெளி மார்க்கெட்டில் வாங்கிய மீட்டரை பொதுமக்கள் வேறுவகையில் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. பொது மக்களுடைய பணம் வீண் விரயமாகிற சூழல் இருக்கிறது. முதலில் மின்சார இலாகாவில் மீட்டர் ஒழுங்காகக் கிடைக்கவில்லை, வெளி மார்க்கெட்டில் நீங்கள் வாங்கித்தாருங்கள் என்று சொல்லி, வாங்கியதை, பரிசீலனை செய்து, ஒழுங்காக இயங்குகிறது என்பதைக் கண்டு, அவர்கள் இணைப்புக் கொடுத்த பிறகு, அதையே தொடர்ந்து மின்சார இலாகா அங்கீகரிக்கும் நிலையை ஏற்படுத்தினால், பொது மக்களுக்கு அந்த வகையில் ஏற்படும் நஷ்டம் இல்லாமல் இருக்கும்.

[திரு. ஹாஜி ம. மு. பீர் முகமது] [1969 ஆகஸ்ட் 19

அதோடு, நேற்று பேசிய காங்கிரஸ் நண்பர்கள், அரிசனக் குடி-யிருப்புக்களுக்கும், குக்கிராமங்களுக்கும் அதிகமாக மின்சாரம் கொடுக்கப்படவில்லை என்று குற்றஞ் சாட்டினார்கள். மேலும், விவசாயத் துறையைப் பொறுத்தவரையில், வேளாண்மைக்கு ஊக்கமளிக்கும் வகையில் பம்பு செட்டுக்கள் போன்றவற்றிற்கு மின் இணைப்புக் கொடுக்கவில்லை என்கிற குற்றச் சாட்டையும் இந்த அரசின் மீது கூறினார்கள். நான் மாண்புமிகு அமைச்சரவர் களைக் கேட்கிறேன், நடந்த பத்தாண்டுக்காலத்தில், காங்கிரஸ் காரர்கள் ஆட்சி செய்த காலத்தில், எந்த அளவிற்கு ஹரிஜனக் குடியிருப்புக்களுக்கும், குக்கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுத்திருக்கிறார்கள், விவசாய வளர்ச்சியைப் பெருக்கு வதற்காக, பம்பு செட்டுகளுக்கு எத்தனை மின் இணைப்புக் கொடுத் தார்கள், நம்முடைய அரசு இந்தக் குறுகிய காலத்தில் எத்தனை கொடுத்திருக்கிறது, என்கிற புள்ளி விவரத்தை, அமைச்சரவர் கள் தந்தால், அவர்கள் குற்றம் சாட்டியது சரியா, சரியில்லையா என்பதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்லா மல், நாட்டு மக்களும் அறிந்துகொள்ளும் ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படும் என்று கூறி, அதற்குரிய புள்ளிவிவரங்களை அமைச்சரவர் கள் தருமாறு கேட்டு, என் உரையை நிறைவு படுத்திக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** தலைவர் அவர்களே, கடந்த மூன்று நாட்களாக மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீதும், துணை நிதிநிலை அறிக்கையின்மீதும் கிட்டத்தட்ட 47 சட்ட மன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு, தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொன்னதன் மூலமாக, நல்ல பல அறிவுரைகளைத் தந்திருக்கிறார்கள். முதலிலே இந்த விவாதத்திலே கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கிய சட்டமன்ற உறுப்பினர் களுக்கு எனது நன்றியைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன்.

தமிழகத்தில் இதுவரையிலும் மின்சார இலாகா என்னென்ன செய்திருக்கின்றது என்பதையும், இனிமேல் செய்ய வேண்டிய வேலைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் எடுத்துச் சொல்லி, அதற்குப் பின்பு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன பல பிரச்சினைகளுக்குப் பதில் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

தமிழகத்தைப் பொறுத்தவரையில் 42 ஆயிரம் குக்கிராமங்கள் இருக்கின்றன. 14,124 சென்சஸ் கிராமங்கள் இருக்கின்றன. ஆக 56,124 கிராமங்களை தமிழகம் பெற்றிருக்கின்றது. இதுவரையில் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிற குக்கிராமங்களும் சென்சஸ் கிராமங்களும் 31,727 என்பதை அறிக்கையிலே கொடுத்திருக் கிறோம். இன்னும் மின்சாரம் கொடுக்க வேண்டியிருப்பவை 24,397 கிராமங்கள் ஆகும். இந்திய உபகண்டத்தில் இருக்கிற



1969 ஆகஸ்ட் 19] [திரு. ஓ. பி. ராமன்]

மின்சார வாரியங்களை எல்லாம் எடுத்துக் கொண்டால், நம்முடைய மாநிலத்தில் இருக்கிற இந்த வாரியம் செவ்வனே பணி செய்கிறது என்பதை எல்லா மாநிலத்தினரும் ஒப்புக்கொள்கிறார்கள். மற்ற மாநிலங்களைவிட நம்முடைய மாநிலம் செய்ய வேண்டிய காரியங்களை வேகமாகவும் ஒழுங்காகவும் செய்திருக்கிறது என்பதையும், இந்த மாநிலத்தினுடைய மின்சார வாரியத்தின் பொருளாதார நிலை நல்ல முறையில் இருக்கிறது என்பதையும் மத்திய அரசிலே இருக்கின்ற அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள், நைனிடால் மாநாட்டிலே கலந்து கொண்டபொழுது என்னிடம் கூறி, உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கிற மின்வாரியம் சிறந்தது என்று இங்கே பேசிய பல நண்பர்கள் எடுத்துப் பேசினார்கள். ஆனாலும் பல உறுப்பினர்கள் பல குற்றச்சாட்டுகளை எடுத்துக் கூறினார்கள். இதற்கும் முன்னால் பேசிய மதிப்பிற்குரிய பெரியவர் அவர்கள், தமிழ்நாட்டில் எத்தனை கிராமங்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு மின்விசை கிடைத்தது, எத்தனை அரிஜனக் கிராமங்களுக்கு மின் விசை கிடைத்தது? என்பதைப் புள்ளிவிவரமாகத் தரும்படிக் கேட்டுக் கொண்டார்கள் ஒரு பத்தாண்டுக் கால புள்ளிவிவரக் கணக்கை எடுத்துச் சொல்லலாம் என்றிருக்கிறேன். 1958-ல் 90 அரிஜனக் கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கிறார்கள். 1959-ல் 110 கிராமங்கள் ; 1960-ல் 144 கிராமங்கள் ; 1961-ல் 173 கிராமங்கள் ; 1962-ல் 235 கிராமங்கள் ; 1963-ல் 228 கிராமங்கள் ; 1964-ல் 276 கிராமங்கள் ; 1965-ல் 300 கிராமங்கள் ; 1966-ல் 370 கிராமங்கள். அதற்குப் பின்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட 1967-ம் ஆண்டில் 436 கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுத்திருக் கிறார்கள். அதற்கு முந்திய ஆண்டில் அதாவது 1966-ல் 370 கிராமங்களுக்குத் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1967-லே 436 கிராமங்கள் ; 1968-லே 448 கிராமங்கள் ; 1969-லே 477 கிராமங்கள் ஆக இந்த அளவில் ஹரிஜனக் கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கிறார்கள்.

அடுத்து, சென்சஸ் கிராமங்கள், சிற்றூர்கள் சேர்ந்த எத்தனை ஊர்களுக்கு பத்தாண்டுக் காலத்தில் மின் இணைப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

1958-ல் மின் இணைப்பு கொடுக்கப்பட்ட ஊர்களின் எண்ணிக்கை 1301; 1959-ல் 1397 கிராமங்கள்; 1960-ல் 1152 கிராமங்கள்; 1961-ல் 1428 கிராமங்கள்; 1962-ல் 1864 கிராமங்கள், 1963-ல் 1218 கிராமங் கள்; 1964-ல் 1620 கிராமங்கள்; 1965-ல் 2502 கிராமங்கள்; 1966-ல் 2617 கிராமங்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட 1967-ம் ஆண்டிலே மின் இணைப்பு வழங்கப்பட்ட கிராமங்கள் 2849 ஆகும். ஆனால் அதற்கு முந்திய ஆண்டிலே அதாவது 1966-ல் மின் இணைப்பு கொடுக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை 2617 என்பதை உறுப்பினர்கள்

[திரு. ஓ. பி. ராமன்] [1969 ஆகஸ்ட் 19

வேண்டும்" என்று கோரினார்கள். தொழிலாளர்களுடைய
பிரச்சினை இந்நாட்டின் இணைந்து இடப்பதன் நாயமைாகத்தான்
கோரிக்கை வருதற்குள் இணைப்புக் கொடுத்திருக்கிறோம். ஆலை
அதிபர்களுக்கு உதவ வேண்டும் என்கிற பிரச்சினையை இல்லை.
பாக்கித் தொகையும் அதிக அளவில் கிடையாது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் இந்த பாக்கி நாங்கள்
வந்த பிறகு வசூல் செய்யாமல் விட்டு வைத்தது என்று சொல்ல
முடியாது. நான் புள்ளிவிவரங்களையே கொடுக்க முடியும்.
கடந்த 20 ஆண்டுக் காலமாக விட்டுவைத்து பாக்கிகளைத்தான்
நாங்கள் வந்த பிறகு நெருக்கி வசூலித்துக்கொண்டு வருகிறோம்.
நாளுக்குநாள் பாக்கியிருக்கும் தொகை குறைந்து வரும்படியான
நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுத்து வருகிறோம். ஆகவே
பாக்கிவிட்டுவைத்துவிட்டோம் என்கிற குற்றச்சாட்டு சரியான
தல்ல என்கிற கருத்தினை அருள் கூர்ந்து அங்கத்தினர்கள் ஏற்றுக்
கொள்ள வேண்டும் என்பதாகக் கேட்டுக் காள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, 1971-ஆம் ஆண்டுக்குள்ளாக தமிழ்
நாட்டில் உள்ள கிராமங்கள் அனைத்துக்கும் மின்சாரம் விஸ்தரிக்க
படும் என்பதாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்த
அறிவிப்பை ஒட்டி இந்த மன்றத்தில் அறிக்கை அளிக்கப்பட்டது.
அதன்மீது நடைபெற்ற விவாதத்தில் பேசுகின்றபோது சில உறுப்
பினர்கள் 71-ஆம் ஆண்டுக்குள் எல்லா கிராமங்களுக்கும் மின்
சாரம் விஸ்தரிக்க முடியும் என்பது சந்தேகமாகத் தான் இருக்
கிறது என்று தங்களுடைய சந்தேகத்தை எழுப்பினார்கள். ஏன்
தான் இவர்களுக்குச் சந்தேகம் வந்ததோ எனக்குத் தெரியாது.
சந்தேகம் வருகிறவர்களுக்கு வந்தால் பாவாயில்லை. வாராதவர்
களுக்கு வருகிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்
இந்த அறிவிப்பைச் செய்வதற்கு முன்னால் மாண்புமிகு
அமைச்சர்கள் எல்லோருடனும், மின்சார வாரிய அதிகாரி
களுடனும் கலந்து பேசினார்கள். இருக்கிற நிதி ஆதாரங்களை
நன்கு அறிந்து, ஏற்படக்கூடிய சிக்கல்களை எல்லாம் எப்படித்
தவிர்ப்பது என்று ஆராய்ந்து, போதுமான நிதி வசதியை எப்படி
எப்படிப் பெற முடியும் என்பதைத் தீர்மானித்த பிறகேதான்
இத்தகைய அறிவிப்பைச் செய்தார்கள். நன்கு ஆலோசனை
நடத்திய பிறகு எடுக்கப்பட்ட முடிவுதான் இது. எடுத்த
முடிவுப்படி காரியங்கள் நடந்தே தீரும். இதில் சந்தேகப்பட
வேண்டிய அவசியமே இல்லை. ஒருவேளை அப்படி 1971-க்குள்
எல்லா கிராமங்களுக்கும் மின் விஸ்தரிப்பை நாங்கள் அளித்து
விட்டால் 72 பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் கதி
என்னாவது என்கிற ஐயப்பாட்டில் அவர்களுக்கு இந்தச்
சந்தேகமும் எழுந்திருக்கலாம்.

மின்சார வாரியத்தின் நிதி நிலை மோசமாக இருக்கிறது. கடன்
வாங்குவதன் மூலமாக நொடித்துவிட்டது என்று சொல்கிறார்கள்.
அப்படி ஒன்றும் இல்லை. மின்சார வாரியத்தின் கடனே 40



1969 ஆகஸ்ட் 19] [திரு. ஓ. பி. ராமன்]

கோடிக்குத்தான் இருக்கும். ஆனால் மின்சார வாரியத்தின்
கோடிக்குத்தான் இருக்கும். இன்னும்
கடன் வாங்கும் சக்தி 55 கோடி ரூபாயாக இருக்கிறது. இந்த வாரியத்தின்
அதிகமாக வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்த வாரியத்தின்
அதிகமாக வாங்க வேண்டிய நிலை இருக்கிறது என்பதை
நிதி நிலை—சவுண்ட் எக்கானமி—திடமாக இருக்கிறது என்பதை
மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகத்
தெரிவித்துக்கொள்கிறேன். எப்படியும் திட்டமிட்டபடி 1971-ஆம்
ஆண்டுக்குள் எல்லா கிராமங்களுக்கும் மின்விஸ்தரிப்பு அளிக்கப்
படும். இதற்காகும் செலவை ஈடுகட்ட எப்படிப் பணம் திரட்ட
யோசித்திருக்கிறோம் என்பதைக்கூட லேசாகச் சொல்ல விரும்பு
கிறேன்.

இந்தியன் பாங்கு ரூரல் எலெக்ட்ரிபிகேஷனுக்காக தாங்களா
கவே கடன் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். இன்னும் பாங்க்
ஆப் பரோடா, யுனைடெட் கமர்ஷியல் பாங்க், எல்.ஐ.ஸி., இன்னும்
ரூரல் எலெக்ட்ரிக் கார்ப்பரேஷன்—இவற்றின் மூலமாகப் போது
மான பணத்தைப் பெற முயன்று கொண்டிருக்கிறோம். இல்லை
என்றாலும் தமிழக அரசே மின்சார வாரியத்திற்குப் பணம்
கொடுத்து நிச்சயமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் என்று
நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது ஒரு தேர்தல் ஸ்டண்ட் என்று திரு. ஜார்ஜ் அவர்கள்
சொன்னார்கள். 1967-க்கு முன்பாக காங்கிரஸ் கட்சியினர்
தங்களுடைய சாதனைகள் எல்லாம் என்ன என்ன என்று
போஸ்டர்கள் அடித்து விளம்பரப்படுத்தவில்லையா? வருகிற
தேர்தலைக் கருத்தில் கொண்டே—1971-க்குள் நாங்கள் எல்லா
கிராமங்களுக்கும் மின்சார விஸ்தரிப்பை அளிக்கத் திட்டமிட்டிருக்
கிறோம் என்றாலும்கூட அதில் தவறு இல்லை. இந்த ஐந்தாண்டு
களில் நாங்கள் மக்களுக்குச் செய்த சேவை என்ன என்பதை
திட்டவட்டமாகப் புள்ளிவிவரங்களோடு எடுத்துச் சொல்லும்
வகையில் நாங்கள் பணியாற்றவே விரும்புகிறோம். எங்களுக்கு
அரசியல் வாழ்வளித்த எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்
கள் எங்களுக்குக் கற்றுக் கொடுத்த பாடம் இது. இருக்கக்
கூடிய குறுகிய காலத்தில் மக்களுக்கு நல்ல பல தொண்டுகளை
ஆற்ற வேண்டும் என்ற அவர்களுடைய அறிவுரைகளை ஏற்றுக்
கொண்டிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு முதல் அமைச்சர்
அவர்கள் எடுத்துள்ளமுடிவைச் செயலாற்ற எல்லா வகையிலும்
தொண்டாற்றுவோம் என்கிற உறுதியினை அளித்துக்கொள்
கிறேன்.

பொதுவாக மின்சார வாரியம் 65 ஆயிரம் ஊழியர்களைக்
கொண்ட பெரிய ஸ்தாபனமாக இருக்கிறது. எல்லோரும் சிறப்
பான முறையில் பணியாற்றுகிற காரணத்தினால்தான் பல வெற்றி
களைக் காண முடிந்திருக்கிறது. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்
தில் அவர்கள் எல்லோரையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

[திரு. ஓ. பி. ராமன்] [1969 ஆகஸ்ட் 19

கூர்ந்து கவனிக்க வேண்டும். அடுத்து, 1968-ல் 3209 கிராமங்கள்; 1969-ல் 3452 கிராமங்கள் என்ற அளவில் மின் இணைப்பு கொடுத்திருக்கிறோம்.

அது மட்டுமல்ல. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ப. பால சுப்பிரமணியன் அவர்கள் பேசும் போது இரண்டு குற்றச்சாட்டு களைச் சொல்லியிருக்கிறார்கள், கடைசியில் ஒன்றுக்குப் பதில் சொல்கிறேன். இப்போது, மின்விசையேற்றங்களுக்கு கடந்த பத்தாண்டுகளில் எவ்வளவு அளவுக்கு மின் இணைப்பு வழங்கப் பட்டிருக்கிறது என்ற கணக்கைச் சொல்ல விரும்புகிறேன். 1958-ல் மின்விசையேற்றத்திற்குக் கொடுக்கப்பட்ட மின் இணைப்புகளின் எண்ணிக்கை 16,956; 1959-ல் 17,073; 1960-ல் 18,573; 1961-ல் 18,448; 1962-ல் 22,387; 1963-ல் 24,842; 1964-ல் 22,882, 1965-ல் 33,194; 1966-ல் 29,947. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட 1967-ம் ஆண்டில் எவ்வளவு என்று பார்க்கும்போது அந்த எண்ணிக்கை 33,355 ஆக உயர்ந்திருக் கிறது. 1968-ல் 51,620; 1969-ல் 57,756 என்ற எண்ணிக்கையை அடைந்திருக்கிறது. ஆகவே, இவைகளை யெல்லாம் பார்க்கும் போது அவர் கூறிய குற்றச்சாட்டு சரியல்ல என்பதை அங்கத் தினர்கள் உணர வேண்டும். திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது, எதையாவது கணக்களவில் இருக்கிறது என்று காட்டி, பொய்க் கணக்காகச் சொல்வார்கள் என்று கூறினார். நான் இந்த மன்றத்தில் சொல்கிறேன், இது உண்மையான கணக்கு, தாலுகாவர்ரியாகக் கேட்டாலும் தரத் தயாராக இருக்கிறேன். உண்மையான நிலையை அறிக்கையாகப் போட்டிருக்கிறேன். எந்தக் காரணத்தை வைத்துக் கொண்டு உறுப்பினர் அவர்கள் இப்படிச் சொன்னார்களோ, எனக்குத் தெரியவில்லை. அவர் சொன்னது உண்மைக்குப் புறம்பானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மொத்தமாக எடுத்துக் கொண்டாலும் சுமார் பத்து லட்சம் சில்லறைக் கிணறுகள் இருக்கின்றன. இது வரை யில் 4.2 லட்சம் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுத்திருக் கிறோம். இன்னும் 6 லட்சம் கிணறுகள்தான் இருக்கின்றன. இந்திய உபகண்டத்தை எடுத்துக் கொண்டால், வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவில் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. இதை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நாம் எந்த அளவிற்கு விவசாயிகளுக்குச் சலுகைகள் செய்து கொண்டிருக் கிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்றையதினம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுத்து, விவசாயிகளிடத்தில் வசூலிக்கின்ற கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 8.25 பைசாக்கள் ஆகும். அண்டை மாநிலமான மைசூர் மாநிலத்தில்தான் மின்சாரம் உற்பத்தியாகிறது. நாம்கூட அங்கிருந்து ஓரளவு மின்சாரத்தை வாங்கிக் கொண்டிருக்கிறோம். மின்சாரம் உற்பத்தியாகும் மைசூர் மாநிலத்தில்கூட யூனிட்



1969 ஆகஸ்ட் 19] [திரு. ஓ. பி. ராமன்]

ஒன்றுக்கு 10 காசுகள் வசூலிக்கிறார்கள். ஆந்திராவிலே 12 காசுகள்; பீகாரில் 15 காசுகள்; அரியானாவில் 15 காசுகள்; இராஜஸ்தானில் 12 காசுகள்; மகாராஷ்டிரத்தில் 13 காசுகள். நம்முடைய தமிழகத்திலேதான் குறைந்த விலையில் மின்சாரத்தை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறோம். நாட்டிலுள்ள விவசாயி களுக்கு நல்ல சூழ்நிலையை அமைத்துக்கொடுப்பதில் அரசுக்கு இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை என்பதால்தான் விவசாயி களுக்குக் குறைந்த கட்டணத்தில் மின்விசை கொடுத்து வருகிறது.

"அலுமினியம் தொழிற்சாலைக்கு மின்சாரம் கொடுத்ததாலே ஒரு கோடி ரூபாய் இழப்பு; இந்த அரசு முதலாளிகளின் கை யாளாகி விட்டது, முதலாளிகளை கைதூக்கி விடலாமா இந்த அரசு?" என்று கேட்கிறார்கள். அலுமினியத் தொழிற்சாலை நம் நாட்டில் ஓரே இடத்தில்தான் இருக்கிறது. நாம் பல மாநிலங் களோடு ஒப்பிட்டுப்பார்த்தாலும் நம் மாநிலத்தில் அலுமினியத் தொழிற்சாலை இருப்பது ஒன்றுதான். இது முதலாளி பிரச்சினை இல்லை. இந்தத் தொழிற்சாலையில் எத்தனை தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள், தொழில் எப்படி விருத்தியாகிறது என்பதைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். இந்த அரசு முதலாளிகளின் கையாளாக இருக்கிறது என்று குற்றம் சாட்டு கிறார்கள். தொழிலாளர்களின் நலனையும், அவர்களுடைய வேலைவாய்ப்புக்களையும் பார்க்கும்போது, ஒரு கோடி ரூபாய் இழப்பை நாம் பொருட்படுத்துவது சரியாக இருக்காது. அப்படிச் சொல்வது சரியல்ல. மேலும், மின்சாரக் கட்டணத்தை சரிவர வசூல் செய்யவில்லையென்ற குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வது போல் அது அவ்வளவு அதிகமான தொகை அல்ல.

பாக்கி இருக்கக் கூடிய புள்ளிவிவரங்களையும் நான் தர விரும்புகிறேன். பைக்காரா சிஸ்டத்தில் மொத்த அளவில் 12,75,650 ரூபாய் நிற்கிறது. திருச்சி 53,708 ரூபாய், தென் ஆற்காடு 61,151 ரூபாய், மெட்ராஸ் 31,870 ரூபாய், மேட்டூர் 16,679 ரூபாய், மதுரை 1,04,384 ரூபாய், திருநெல்வேலி 56,793 ரூபாய், இராமநாதபுரம் 2,57,723 ரூபாய். செங்கல்பட்டு 1,60,681 ரூபாய், மொத்தம் பாக்கியே 49,42,683 ரூபாய்கள் தான் இருக்கின்றன. ஒரு கோடி கூட இல்லை. இதையும் வசூலிப்பதற்கு நாங்கள் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுதான் வருகிறோம்.

பெரிய ஆலை முதலாளிகளை விட்டு வைக்க வேண்டும் என்பது எங்களுக்கு இல்லை. மதுரை தியாகராஜசெட்டியார் ஆலைக்குக் கூட பாக்கித் தொகை கட்டப்படவில்லை என்றதால் மின்சாரத்தைத் துண்டித்துவிட உத்தரவிட்டோம். துண்டித்து விட்டோம். துண்டித்த பிற்பாடு முதலாளி எங்களை அணுகிக் கேட்பதற்கு முன்னால் அங்குள்ள தொழிலாளர்களே கூக்குரல் எழுப்பினார்கள். நாங்கள் வேலையில்லாமல் இருக்கிறோம். உடனேயே கனெக் ஷன் கொடுத்து எங்கங்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பை அளிக்க

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது தனிப்பட்ட முறையில் சில ஊழல்களைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை ஆராய்ந்து பார்த்து அவற்றைக் களைவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்கிறேன். நமது மதிப்பிற்குரிய திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒரு ஊழல் குற்றச்சாட்டைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கும் இந்த நேரத்தில் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பேசின் பிரிட்ஜ் நிர்வாகத்தில் பாய்லர் கட்டுவதற்குக் காண்டிராக்ட் விடுவதில் ஊழல் ஏற்பட்டிருக்கிறது என்று சாட்சிச் சான்றுகளுடன் சொன்னார்கள். மத்திய வாட்டர் பவர் கமிஷன் குறிப்பிட்டுள்ள காண்டிராக்டர்களிடம் இருந்துதான் டெண்டர்கள் கோரப்பட்டிருக்கின்றன. வந்த டெண்டர்களிலும் லோயஸ்ட் கொடேஷன் கொடுத்தவருக்குத்தான் விடப்பட்டிருக்கிறது. போரம் பேசிய அதிகாரி—போர்டு மெம்பர் (திரு. எ. பாலசுப்பிரமணியன்: என்ஜினியரைப் பற்றித்தான் சொன்னேன்.) என்ஜினியர் தவறாக நடந்து கொண்டார் என்பதற்கான ப்ரூப்பை என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று இந்த மன்றத்திற்கு நான் உறுதி அளிக்கிறேன். அப்பழுக்கற்ற நியாயமான முறையில் நடந்து கொள்வோம் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஆகவே, பொதுவாக கடந்த மூன்று நாட்களாக நடந்த விவாதத்தில் பல உறுப்பினர்கள் கலந்து கொண்டு பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி நல்ல ஆலோசனைகளைச் சொன்னார்கள். அவர்களுக்கு எல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் முன்பே குறிப்பிட்டபடி மின்சார வாரிய அதிகாரிகள் இங்கே இருந்து பல்வேறு குறிப்புகளை எடுத்திருக்கிறார்கள். உறுப்பினர்களின் கருத்துக்களை எல்லாம் நல்லமுறையில் பரிசீலனை செய்து காரியங்கள் நிறைவேற்றப்படும். நாட்டிலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க மின்சார வாரியம் நல்லமுறையில் செயல்படும் என்கிற உறுதியினை அளித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எ. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே—ஒரு தன்னிலை விளக்கம். நான் விசையேற்றங்களின் எண்ணிக்கை பொய் என்று சொல்லவில்லை. அக்ரிமெண்ட் அளவற்றின் எண்ணிக்கையை வைத்துச் சொல்லியிருக்கக் கூடும்; அவ்வளவு விசையேற்றங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதாக சொல்வது நம்பிக்கை அளிக்கக் கூடியதாக இல்லை என்று குறிப்பிட்டேன். எழுவதற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் சொல்லும்போது இதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் குறிப்பிட்டது சாதாரண விஷயம் அல்ல, ப்ரைமா பேசி கேஸ் மட்டுமல்ல, ப்ரூப் இருக்கிறது. இதை விசாரணைக்கு விடுவதற்கான உத்தரவாதத்தை அளித்தால் நான்



திருப்தி உள்ளவனாக இருப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று நாளைக் காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். பி. ப. 1-00

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

109. Notification issued with G.O. Ms. No. 82, Public (Services-A), dated the 11th January 1969 in regard to an amendment to the Madras Public Service Commission Regulations, 1954, published at pages 759 to 768 of Part I of the *Fort St. George Gazette*, dated the 9th June 1954, relating to the inclusion of certain posts of the Madras Highways Engineering Subordinate Service within the Commission's purview [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]

110. Notification issued with G.O. Ms. No. 377, Public (Services-A), dated the 25th February 1969, in regard to an amendment to the Madras Public Service Commission Regulations, 1954, published at pages 759 to 768 of Part I of the *Fort St. George Gazette*, dated the 9th June 1954, for inclusion of certain posts of Junior Engineers and Supervisors (Electrical/Mechanical), Grades I and II, in Electrical Branch of Public Works Department within the Commission's purview [Laid on the Table of the House under section 320 (5) of the Constitution of India).]

111. Notification issued with G.O. Ms. No. 2036, Public (Services-A), dated the 13th September 1967, in regard to an amendment to the Madras Public Service Commission Regulations, 1954, published at pages 759 to 768 of Part I of the *Fort St. George Gazette*, dated the 9th June 1954 relating to the Madras Jundical Ministerial Service [Laid on the Table of the House under Section 320 (5) of the Constitution of India).]

### B. *Reports, Notifications and other papers.*

'Nil'.

## LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4
Messrs. Higginbothams, Private Limited Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons, Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. Rukmani Corporation, Vepery, Madras-7.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.
Messrs. Book Corner, Book-Sellers, No. 2/4. Mount Road, Madras-2

### IN MUFASSAL OF MADRAS STATE

Sri B. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
The Oriental Book House, Madurai.
Messrs. Vivekananda Press, Printers, Publishers and Book-sellers, Madurai.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswamy & Co. Tiruchirappalli.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri D. Arunadoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 123, Raja Street, Coimbatore
Sri S. M. Jagannathan, Book-seller and Publisher, Nagercoil, Kanyakumari district.
Messrs A. K. Chandrian Chettiar & Sons, Salem.
Messrs. Meenakshi Pathipagam, Pudukkottai.
Messrs. K. V Narayana Iyer & Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari district.
Messrs. Raby Stores, Book-sellers, Villupuram, South Arcot district
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B, Town Hall Road, Madurai-1

### IN OTHER STATES.

Messrs. Sarasma Agencies, Book-sellers, Gudur.
Messrs. Amy Book Agency, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation, Narayanaguda, Hyderabad-29
Messrs. The Books Syndicate, Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

---

PUBLISHED UNDER RULES 234 AND 267 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

வெளியீடு—30—7—1970)
Issued—30—7—1970)

1028/55
3 - OCT 1970
445

# தமிழ் நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

புதன்கிழமை, 1969 ஆகஸ்ட் 20
Wednesday, 20th August 1969

தொகுதி XXI—எண் 5
Volume XXI—No. 5

©
தமிழ் நாடு அரசு
1970

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்)
Price, 50 Paise)

# உள்ளடக்கம்


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் .. .. .. | 315–340 |
| 2. அறிவிப்புகள்— | |
| (i) வினாக்கள், தீர்மானங்கள் முதலியவற்றை அறிவிப்பதில் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்புகள் .. .. | 340–342 |
| (ii) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதித் திருத்த மசோதா .. | 359 |
| (iii) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு மின்சக்தி (பயன்படுத்துவதற்கு வரி விதித்தல்) திருத்த மசோதா .. .. .. | 360 |
| 3. பேரவை நடவடிக்கைக் குறிப்பேட்டிலிருந்து சில பகுதிகள் நீக்கப்பட்டது குறித்து .. .. | 342–352 |
| 4. நடைமுறைக் கேள்வி— | |
| பேரவைத் தலைவர் அறையில் அளித்த தீர்ப்பு குறித்து .. .. .. .. | 352–353 |
| 5. கவன ஈர்ப்பு— | |
| (i) கிழக்குத் தஞ்சையில் டிராக்டர்களை பயன்படுத்த எதிர்ப்பு .. .. .. | 353–356 |
| (ii) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம் .. .. | 356–358 |
| 6. அரசினர் மசோதாக்கள்— | |
| (i) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதித் திருத்த மசோதா .. | 359 |
| (ii) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு அகதிகள் (நீதி மன்ற நடவடிக்கைகள் தடுப்பு, மசோதா. | 359 |
| (iii) 1969-ம் ஆண்டு நில உடமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) மசோதா. | 359–360 |
| (iv) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (இரண்டாம் திருத்த) மசோதா .. | 360 |
| (v) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு மின்சக்தி (பயன்படுத்துவதற்கு வரி விதித்தல்) திருத்த மசோதா .. .. .. | 360–361 |
| 7. 1965–66-ம் ஆண்டில் அதிகப்படியான செலவிற்கான நிதி கோரிக்கைகளை அளித்தல் .. .. | 361 |
| 8. 1969–70-ம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை அளித்தல் .. .. | 361–363 |
| 9. இரங்கல் தீர்மானம்— | |
| உறுப்பினர் திரு எஸ். சண்முகசுந்தரம் மறைவு குறித்து .. .. .. .. | 363–368 |
| 10. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 368 |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

## புதன்கிழமை, 1969 ஆகஸ்ட் 20.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

*Pension for Political Sufferers*

* 38 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of political sufferers who have been sanctioned pension up to February 1968 district wise;

(b) the number of applications received for the grant of pension; and

(c) the number of applications rejected?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) விடுதலைப் போராட்ட வீரர் (தியாகிகள்) ஓய்வூதியம் 1968 பிப்ரவரி வரை அளிக்கப் பெற்றவர்களின் எண்ணிக்கையை மாவட்ட வாரியாகக் காட்டும் விவர அறிக்கை * ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) 6,106 (1968-ம் ஆண்டு பிப்ரவரி வரை) மனுக்கள் வந்தவை.

(உ) 1,302 (1968-ம் ஆண்டு பிப்ரவரி வரை) மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் வந்த மனுக்கள் 6,106 என்றும், அவற்றில் 1,613-க்குத் தான் 1968 பிப்ரவரி வரையில் பணம் வழங்கப்பட்டிருப்பதாகவும் முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இவ்வளவு அதிகமான மனுக்கள் புறக்கணிக்கப்பட்டதற்குக் காரணம் என்ன? தியாகிகளுக்குப் பென்ஷன் வழங்கவேண்டுமானால் எந்தச் சிறைச்சாலையில் இருந்தார்கள் என்ற அத்தாட்சி வேண்டுமென்று இலாக்காவிலே சொல்கிறார்கள். சிறைச்சாலையில் ரிகார்டுகள் பல பேர்களுக்கு இல்லை என்று சொல்வதால் பென்ஷன் வழங்கப்படுவதில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அவர்கள் எந்தக் கோர்ட்டிலே தண்டனைப் பெற்றிருக்கிறார்களோ, அந்தக் கோர்ட்டிலே இருந்து ரிகார்டுகளைப் பெற்றுக் கொடுத்தால் அவர்களுக்குப் பென்ஷன் வழங்குவதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

---

* 369-ஆம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. கே. வினாயகம் :** இதற்காக மனு போட்டவர்கள் 6,000 பேர்கள். அவர்களுக்குப் பென்ஷன் கொடுத்தால் எவ்வளவுத் தொகை செலவாகும்? அவர்கள் தியாகம் செய்யவேண்டுமென்று சிறைச்சாலைக்குச் சென்றார்களே தவிர எங்களைப் போன்றவர்கள் பென்ஷனைத் தருவார்களே என்று செல்லவில்லை. ஏதோ மாசு கற்பிப்பதற்காக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைப் போடுங்கள். நோக்கங்களையெல்லாம் சொல்லவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. வினாயகம் :** பென்ஷன் வாங்கவேண்டுமென்று சிறைக்குப் போனார்கள் என்று கருதாமல் நாட்டுக்காகத் தியாகம் செய்தார்கள் என்ற நோக்கத்தோடு அவர்களுக்குப் பென்ஷன் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பென்ஷன் கொடுப்பதை மாசு கற்பிக்கக்கூடிய செயல் என்று இதற்கு உத்திரவு போட்ட போது அப்போது இருந்த அரசுக்கு எடுத்துச்சொல்ல திரு. வினாயகம் இந்தச் சபையில் அப்போது இல்லையே என்று வருத்தப்படுகிறேன்.

**திரு. மு. ச. சிவசாமி :** அரசியல் தியாகிகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களை விற்பனை செய்யக்கூடாது என்று கண்டிஷன் போடப்பட்டிருந்தும்கூட சில தியாகிகள் விற்பனை செய்கிறார்களே, அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கேள்வி, தியாகிகளின் பென்ஷனைப் பற்றியது.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** அரசியல் தியாகிகளுக்கு பென்ஷன் வழங்குவதுபற்றிச் சொல்லும்போது அவர்கள் மூன்று மாத காலம் சிறைச்சாலையில் இருந்தால்தான் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவைகளில் இரண்டு மாதம் சிறைச்சாலையில் இருந்து, பொது விடுதலை காரணமாக விடுதலை செய்யப்பட்டவர்களும் இருக்கிறார்கள். ஒரு ஆண்டு சிறைதண்டனை கொடுக்கப்பட்டு அது முடிவதற்குள்ளாக, பொது விடுதலை காரணமாக விடுதலை ஆனவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் பென்ஷன் கொடுக்க முடியுமா? அல்லது இரண்டு மாதம் 26 நாட்கள் என்று இருந்தாலும்கூட கொடுக்கக்கூடாதென்று மறுப்பார்களா? அப்படிக் கூடாதென்றுதான் நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மூன்று நாள் நான்கு நாள் கொசுறுகள் இருந்தாலும்கூட அரசாங்கம் பென்ஷன் வழங்குவதிலிருந்து பின்வாங்காது.



**திரு. சா. மெய்யப்பன் :** சிறையிலே மூன்று மாதங்கள் தண்டனை அனுபவித்தவர்கள் தவிர, ரிமாண்டிலே இருந்தவர்களுக்கும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்ற காரணத்தினால் பென்ஷன் கொடுப்பதற்கு அரசாங்கம் உத்தரவு போடுவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சிறைச்சாலையில் இருந்தார்கள் என்பதற்கு சான்று தேவையில்லை என்ற அந்த விதியைத் தளர்த்தவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் வினா எழுப்பினார்கள். அதை மாற்ற வேண்டுமென்றால் அரசு பரிசீலனை செய்துதான் முடிவு எடுக்கவேண்டுமென்று முன்பே கூறியிருக்கிறேன்.

**திரு. ஆர். கருப்பையா :** தியாகிகளுக்கு மான்யத்தொகை கொடுக்கப்படுகிறதே அது குறைவாக இருப்பதனால், இப்போதுள்ள விலைவாசிக்கு ஏற்றபடி அந்தத் தொகையை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 1967-68-ல் பத்து லட்சமும், 1968-69-ல் 20 லட்சமும், 1969-70-ல் 24 லட்சமும் அரசுக்கு செலவாகிறது. இதை உயர்த்துவதற்கு இயலாது. அப்படி உயர்த்த வேண்டுமானால் மத்திய அரசு உதவி செய்தால் அதை உயர்த்துவது பற்றி யோசிக்க முடியும்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, தியாகிகள் அதிகம் நிறைந்த ஜில்லா தென்னார்க்காடு ஜில்லாவாகும். அந்த ஜில்லாவிலிருந்து தியாகிகள் பென்ஷன் கோரி எத்தனை மனுக்கள் வந்தன? அந்த மனுக்களின் பேரில் எத்தனை தியாகிகளுக்கு இது வரையில் பென்ஷன் வழங்கப்பட்டிருக்கிறது? மனுக்களில் எத்தனை நிராகரிக்கப்பட்டன? அதற்குக் காரணம் என்ன? நிராகரிக்கப்பட்ட மனுக்களைத் திரும்பவும் இந்த அரசாங்கம் பரிசீலித்து நல்லதொரு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 1968 வரையில் வந்த மனுக்களின் கணக்கைப் பார்த்தால், கனம் உறுப்பினர் சொல்கிற கூற்று பொருந்தாததாக இருக்கிறது. தென்னார்க்காடு மாவட்டத்தில் 1968-ம் ஆண்டு பிப்ரவரி வரையில் வந்த மனுக்கள் 267 தான். ஆனால், 1968 பிப்ரவரி மாதம் வரையில் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து வந்த மனுக்கள் 1,155 ஆகும். இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்துதான் அதிகமான மனுக்கள் வந்திருக்கின்றன. ஆகவே, தியாகிகள் அதிகம் நிறைந்த மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம்தான் என்று தெரிகிறது.

**திரு. மு. இரத்தினசபாபதி :** தலைவர் அவர்களே, இப்பொழுது நமது தமிழக அரசு, கட்டபொம்மன் வாரிசுக்கு மானியம் கொடுத்துக்கொண்டு வருகிறது. அது, இந்த அரசியல் பென்ஷன் அடிப்படையில் கொடுக்கப்படுகிறதா? தனிப்பட்ட முறையில் வேறு விசேஷ சிறப்புத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்படுகிறதா? அப்படிக் கொடுக்கும்போது விடுபட்டுப்போன இன்னும் பல குடும்பங்களுக்கும் கொடுக்க இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த அடிப்படையில்தான் தரப்படுகிறது. விடுபட்டுப் போனவர்கள், நல்ல சான்றுகளோடு அந்த வாரிசுதான் என்று நிரூபிக்கப்படுவார்களானால், அதுபற்றிக் கவனிக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஜெயில் சர்ட்டிபிகேட் கிடைக்காத அரசியல் தியாகிகளுக்கு முன்னாள் அமைச்சர்கள் யாராவது, "சிறையில் இருந்தார்" என்ற அத்தாட்சி வழங்குவாரானால், அதன் அடிப்படையில் பென்ஷன் வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உடன் இருந்தவர்கள்தான் முன்னாள் அமைச்சர்கள். நாங்கள் மதிக்கத் தகுந்தவர்கள்தான். அவர்கள் அப்படிப்பட்ட நற்சான்றுகளை வழங்குவார்களானால் அதுபற்றி அரசு கவனிக்கும்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, "தியாகி" என்று நிர்ணயிப்பதற்கு எந்தக் கால அளவை நாம் வைத்திருக்கிறோம்? சமீப காலம் வரையில் மக்கள் இயக்கத்தில் சிறை சென்றவர்களுக்கு மானியம் வழங்கப்படாவிட்டாலும், உடல் ஊனமுற்றவர்களுக்கும், உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கும் மானியம் வழங்க அரசு புனர் பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** "ஃப்ரீடம் ஃபைட்டர்ஸ் பென்ஷன்" என்ற தலைப்பில்தான் இந்த அரசு ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. அந்த அடிப்படையில் எழுகின்ற கேள்விகளுக்குத்தான் நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். கனம் உறுப்பினருடைய கேள்வி தனித்தன்மை வாய்ந்ததாகும்.

**திரு. என். ராஜாங்கம் :** தலைவர் அவர்களே, தியாகிகளுக்கு ஐந்து ஏக்கர், அதற்கும் குறைவாக உள்ள நிலங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நிலம் கொடுக்கப்பட்ட தியாகிகளுக்கும் இந்தப் பென்ஷன் தொகை உண்டா? நிலமும் பென்ஷனும் சேர்த்துக் கொடுப்பதுண்டா? அல்லது, ஏதாவது ஒன்று மட்டும் அரசாங்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறதா? விவரம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுபற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

## *Reorganisation of Agriculture Department*

* 39 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is a proposal to reorganise the State Agriculture department;

(*b*) if so, what are the details of those proposals; and

(*c*) the object which the proposals would achieve?



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) வேளாண்மைத் துறை இயக்குநர் அரசுக்கு செயற்குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார். இது ஆலோசனையில் உள்ளது.

(இ) வேளாண்துறை இயக்குநர் செயற்குறிப்பின் முக்கிய விவரங்களாவன :—

(1) குறிப்பிட்ட வேளாண்மைப் பணிகளுக்காக மாவட்ட வேளாண்மைத் துறை சிறப்பு அதிகாரிகளை நியமிக்கும் ஏற்பாட்டிற்குப் பதிலாக, மாவட்ட வேளாண்மைத் துறை அதிகாரிகள் ஒவ்வொருவரையும் தங்களுடைய ஆட்சிப்பகுதிகளுள் வேளாண்மைப் பணிகள் அனைத்தையும் குறித்து பொறுப்பு வகிக்கும்படி செய்தல் ;

(2) வேளாண்மைத் துறை துணை இயக்குநரை மாவட்டத்தில் துறையின் நிர்வாகப் பொறுப்பு வகிக்கும்படி செய்தல் ;

(3) (திட்டமிடுதல், நிர்வாகம், மும்முர வேளாண்மைத் திட்டம், வளர்ச்சி, பொறியியல் ஆகியவற்றின் பொறுப்பு வகிக்கும், வேளாண்மைத் துறை இணை இயக்குநர்கள் மூவரைத் தவிர) தற்போது வேளாண் துறை இயக்குநர் அலுவலகத்தில் உள்ள வேளாண்மைத் துறை இணை இயக்குநர் நால்வரை அந்தப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அவர்களை நான்கு வட்டாரங்களில், வட்டாரத்திற்கு ஒருவராக வேளாண்மை நடவடிக்கைகள் அனைத்தையும் குறித்துப் பொறுப்பு வகிக்கும்படிச் செய்தல் ; இந்தச் செயற்குறிப்புகள் அரசினால் இனிமேல்தான் ஆய்வு செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்.

(உ) எய்த விழையும் முக்கிய குறிக்கோள்கள் கீழ்க்கண்டவையாகும் :—

(1) மாநிலத்தில் வேளாண்மைப் பணிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, கோட்ட, மாவட்ட, வட்டார, மாநில நிலையில் நான்கு அடுக்கு நிர்வாக அமைப்பில், பகுதி அடிப்படையில் ஒரே அதிகார வரம்பின்கீழ் அவற்றைக் கொண்டு வந்து, ஒவ்வொரு நிலையிலும் அதிகாரிகளை நியமித்தல்; அந்த அதிகாரிகள் அவர்களுடைய அதிகார வரம்பின் கீழ் உள்ள பகுதிகளில் வேளாண்மைத் திட்டங்கள் அனைத்திற்கும் பொறுப்பு வகிப்பர்.

(2) துறையின் வளர்ச்சி, ஆராய்ச்சி, பொறியியல் பிரிவுகள் ஒன்றுக்கொன்று முழுவதும் இணைந்து செயல்படுவதை உறுதிப்படுத்தல்.

(3) பல்வேறு நிலைகளில் உள்ள அதிகாரிகள் திறம்படச் செயல்புரிவதற்காகவும், அவர்கள் தங்களுடைய பணியை விரைந்தும், கால தாமதமின்றியும் நிறைவேற்ற இயலும்படியாகவும் அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்து, அவர்களுக்கு போதுமான கூடுதலான அதிகாரங்களை வழங்குதல்.

[1969 ஆகஸ்ட் 20

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மொத்தம் 6,106 மனுக்கள் வந்தன. 1968 பிப்ரவரி வரையில் 1,613 பேர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்கப்பட்டிருக்கிறது. மிச்சம் உள்ள மனுக்கள் பரிசீலனையில் உள்ளன. அவற்றைத் தள்ளிவிடவில்லை. தியாகிகள் சிறைச்சாலையில் இருந்தார்கள் என்பதற்கு சிறைச்சாலைகளில் அத்தாட்சிகள் இல்லாத காரணத்தினால் எந்தக் கோர்ட்டிலே தண்டனைப் பெற்றார்களோ அங்கிருந்து ரிகார்டுகளைப் பெற்று அவர்களுக்கு பென்ஷன் வழங்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். கோர்ட்டிலே தண்டனை பெற்று விடுதலை ஆகி இருக்கலாம். காங்கிரஸ் சர்க்கார் உத்தரவில் மூன்று மாத சிறைத்தண்டனை பெற்றிருக்கவேண்டுமென்ற நிபந்தனையைப் போட்டிருக்கிறார்கள். கோர்ட்டு தண்டனையை வைத்துக்கொண்டு பென்ஷன் கொடுப்பதுபற்றி புதிதாகத்தான் ஆராயவேண்டும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** சிறையிலே ரிகார்டுகள் இல்லை யென்ற காரணத்தினால் பென்ஷன் வழங்காமல் இருப்பது நியாயம் ஆகுமா? இப்பொழுது இருக்கும் விதியைத் திருத்தி அவர்களுக்குப் பென்ஷன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சென்ட்ரல் ஜெயிலில் 20 ஆண்டுக்குள் இருக்கின்ற ரிகார்டுகளைப் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். முந்தைய அரசு பிறப்பித்துள்ள ஆணையின்படி ஜெயில் சர்ட்டிபிகேட் கண்டிப்பாக மனுவுடன் இருந்தாக வேண்டுமென்று சொல்லப்படுகிறது. விதியை மாற்றக்கூடாதா என்று கேட்டார்கள். விதியை மாற்றினால் சிறைச்சாலையில் தண்டனை அனுபவிக்காதவர்களுக்குக்கூட பென்ஷன் கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். சில ஒன்றிரண்டு நபர்களினுடைய கோரிக்கை நியாயமானதாக இருக்கலாம். பெரும்பாலும் துஷ்பிரயோகம் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். எனவே பரிசீலனை செய்துதான் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எஸ். முருகையன் :** 1947 முதல் 1967 வரையில் தியாகிகளுக்கு எவ்வளவு பென்ஷன் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது? கடந்த இரண்டு ஆண்டுகளிலே எவ்வளவு பென்ஷன் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தத் திட்டம் 1966-ல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டு காங்கிரஸ் சர்க்கார் இருக்கும் போது 67 பேர்களுக்குப் பென்ஷன் அளிக்கப்பட்டது. அதற்குப் பிறகு 1—3—1967 முதல் 30—6—1969 வரையில் 3,948 தியாகிகளுக்குப் பென்ஷன் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஜீ. கு. சுப்பையா :** அரசியல் தியாகிகள் என்றால் அவர்களுக்குத் தகுதிகள் என்னென்ன என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?



1969 ஆகஸ்ட் 20]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தியாகிகளுக்குப் பென்ஷன் வழங்குவதற்கு பிறப்பித்த அரசு ஆணையில்—ஜி.ஓ. எண். 2064, தேதி 28-9-1966—விதிக்கப்பட்ட நிபந்தனைகள் :—

1. குறைந்தது மூன்றுமாத சிறை தண்டனை பெற்றிருக்க வேண்டும்.

2. தியாகிகளது மாத வருமானம் 100 ரூபாய்க்குக் குறைந்ததாக இருக்கவேண்டும்.

3. தியாகிகள்—தமிழ்நாட்டில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும்.

4. தியாகிகளுடைய வாரிசுகளுக்கு விதவை மனைவி, மைனர் மகன், திருமணம் ஆகாத மகள் இவர்களுக்குப் பென்ஷன் உண்டு (ஒருவருக்கு).

இவ்வூதியம் பெறுவதற்கு சிறை தண்டனை அனுபவித்த சிறைச் சாலையிலுள்ள சான்றிதழ் மனுவுடன் கொடுக்கவேண்டும்.

**திரு. கரு. ராம கரியமாணிக்கம் அம்பலம் :** பல பேர்களுக்கு சிறைச்சாலையிலிருந்து சர்ட்டிபிகேட் கிடைக்காமல் இருக்கிறது. சில பேர்கள் தண்டனை பெற்றிருக்கிறார்கள். சில பேர்கள் ரிமாண்டிலே பல மாதங்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் பரிசீலனை செய்து அவர்களுக்குப் பென்ஷன் கொடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைத்தான் திரு. சித்தன் அவர்களும் கேட்டார்கள். அந்த விதியைத் தளர்த்தி விடுவோமானால் சிலர் துஷ்பிரயோகம் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். மிகப் பொருத்தமானவர்கள் கஷ்டநஷ்டத்திற்கு ஆளானவர்கள் மூன்று மாதம் சிறை தண்டனை அனுபவித்தவர்களாக இருந்தால் அதைப்பற்றி ஆராய்ந்து பார்த்து முடிவு எடுக்க அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. பி. எஸ். மணியன் :** அரசியல் தியாகிகளுக்குப் பென்ஷன் கொடுப்பது சம்பந்தமாக 1947-ம் ஆண்டுக்கு முன்னால் சுதந்திரப் போராட்டத்திலே கலந்து கொண்டவர்களைத்தான் கணக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் காரணமாக சிறைச்சாலை சென்ற தொண்டர்களுக்கும் அவர்கள் தியாகிகள் என்ற முறையில் பரிசீலனை செய்து பென்ஷன் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதைப்பற்றி முன்பே இந்த அவையில் கேட்டபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்திலே கூறியதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன் : மொழிப் போராட்டம் காரணமாக உயிர்நீத்தவர்களுடைய குடும்பங்களையும் பாதிக்கப்பட்டவர்களுடைய குடும்பங்களையும் தமிழகம் தாங்கிக் கொள்ளும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, if these new proposals were given effect to by the Government, what will be the financial commitment involved in this move?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இவரைப் பதவியிலிருந்து நீக்கி அதனால் ஏற்படும் சேமிப்பிலிருந்து கூடுதல் பணியாளர்கள் குறித்து ஏற்படும் அதிகப்படிச் செலவை ஈடுசெய்வதால், கூடுதல் செலவு ஏதும் ஆகாது.

**திரு. இல. பலராமன் :** வேளாண்மைத் துறை சீரமைப்பு என்ற முறையில் கிராம சேவக் பயிற்சிக் கல்லூரியின் முதல்வராக விவசாயத் துறையிலிருந்து நியமிக்கப்பட்டவர் மாற்றியமைக்கப் பட்டாரா? இது குறித்து விவசாயக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்தினார்களே அதற்கு என்ன நடவடிக்கை அரசு எடுத்தது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** விவசாயத் துறை சீரமைப்புக்கும், தற்சமயம் கோவை விவசாயக் கல்லூரியில் மாணவர்கள் நடத்தும் போராட்டத்திற்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது. ஆனாலும், மாணவர்களது கோரிக்கைகளை இன்றைய அரசாங்கமும் தகுந்த முறையில் பரிசீலனை செய்துகொண்டு வருகிறது. அவர்கள் கோரிக்கைகளைப் பரிசீலித்து; ஏற்றுக் கொள்ளுவதற்கு வாய்ப்பு இருந்தால் அவை ஏற்றுக்கொள்ளப்படும்.

**திரு. சா. மெய்யப்பன் :** விவசாயிகள், நஞ்சைகளைக் கரும்புத் தோட்டம் ஆக்குவதைத் தடை செய்வதற்கு ஏதாவது இந்தச் சீரமைப்பில் இடம் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** விவசாயத் துறையில் இருக்கும் அதிகாரிகளை மாற்றியமைத்து நல்ல முறையில் பணி செய்வதற்காக அவர்களுக்கெல்லாம் வட்டார, மாவட்டப் பொறுப்புகள் தரவேண்டும் என்றுதான் சீரமைப்பே தவிர, கரும்பு சாகுபடி, நெல் சாகுபடி செய்வது என்பதுபற்றிய பிரச்சினை இதில் வரவில்லை.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, கிராம சேவக் பயிற்சி நிலையங்களில் மாவட்ட விவசாய அதிகாரி நிலையில் உள்ள ஒருவரை முதல்வராக நியமித்திருந்தார்கள். அதைத் தற்போது மாற்றி வேறு டிபார்ட்மெண்டில் இருக்கக்கூடியவரை முதல்வராக நியமிப்பதன் நோக்கம் என்ன? இந்தச் சீரமைப்பில் அதையும் ஒன்றாக அரசாங்கம் கருதுகிறதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அதைப் பற்றி இங்கே முழு விவரம் இருக்கவில்லை. ஆனால், கோயம்புத்தூரில் உள்ள வேளாண்மைத் துறை கூட்டு இயக்குநர் பதவி இந்த அலுவலகத்திற்குக் கொண்டுவரப்படும். இப்போதுள்ள டாக்டர் பொன்னையாவின் பதவிக் காலம் முடிந்த பிறகு இந்தப் பதவி, வேளாண்மைத் துறை துணை இயக்குநர் பதவியாகப் பதவி இறக்கம் செய்யப்படும் என்று செயற்குறிப்புதான் இருக்கிறது.



**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, வேளாண்மையை அபிவிருத்தி செய்யவேண்டுமென்பதற்காக ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் இந்த வேளாண்மை ஊழியர்களைக் கொண்டுவருவதற்கு இந்த அரசுக்கு எண்ணம் உண்டா? அதற்காக எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இல்லை.

## மண்வள ஆய்வுக் கூடம்.

* 40 **வினா.—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டத்திற்கொரு மண்வளப் பாதுகாப்புப் பரிசோதனை நிலையம் ஏற்படுத்த தமிழக அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பதின் மூன்று மாவட்டங்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மண்வள ஆய்வுக்கூடங்கள் 7 உள்ளன. 1969-70-ம் ஆண்டில் மேலும் ஓர் ஆய்வுக்கூடம் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இந்திய-ஜெர்மனி நீலகிரி திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்திற் காக மேலும் ஒரு மண்வள ஆய்வுக்கூடம் ஏற்படுத்தக் கருதப் பட்டுள்ளது. இவ்வாறாக படிப்படியாக திட்டத்தின்கீழ் மண்வள ஆய்வுக்கூடங்களை மாவட்டத்திற்கொன்றாக ஏற்படுத்த அரசு முயன்று வருகிறது.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் இந்தமாதிரி ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த ஏதாவது திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இல்லை.

**திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து இண்டோ-ஜெர்மன் முன்னேற்றத் திட்டத் தின்கீழ் ஒரு மண்வள ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்துவதாகக் கூறினார்கள். ஆனால், ஏற்கனவே ஜெர்மனியிலிருந்து வந்துள்ள ரூ. 3,60,000 பெறுமானமுள்ள மண்வள ஆராய்ச்சி சாதனங்கள் வைப்பதற்கு ஒரு தகுதியான இடம் ஏற்பாடு செய்து கொடுக்காமல் அவை அப்படியே கிடக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நீலகிரியில் அரசாங்கத்தின் சார்பில் ஒரு மண்வள ஆய்வுக்கூடம் துவங்குவதற்கான செயற்குறிப்பு இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. ஆனால், தனியார் சார்பில் இப்படிப்பட்ட மண்வள ஆராய்ச்சி செய்வதற்கும் அரசாங்கம் அனுமதி அளித்துக் கொண்டு வருகிறது. அவர்களெல்லாம் ஏற்கனவே செய்துகொண்டு

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கோழிப் பண்ணை மூடப்பட்டதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கோழிப் பண்ணையை மூடுவதைப்பற்றிய யோசனைகளை நான் கேட்கவில்லை. டாக்டர்கள் அவைகளாகவே மூடலாம் என்று எழுதிக் கொடுத்தார்கள். அதனைத்தான் மூடப் பட்டதே தவிர நான் மூடவில்லை. செட்டிநாடு பண்ணையை மூடுவதற்கு எந்தவிதமான யோசனையும் இல்லை. அதை நஷ்ட மில்லாமல் எப்படி நடத்தலாம் என்பதைப்பற்றி அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இந்த செட்டிநாடு பண்ணை, ஹொசூர் பண்ணை, அலிஜெகபாடு பண்ணை இவை அரசாங்கத் தினுடைய பொறுப்பிலே நடந்து வருகின்றன. சரியாக இருக்கின்ற பாலை சென்னைக்குக் கொண்டுபோய் அரசாங்கம் செய்யுமா? இந்த லைவ்ஸ்டாக் ஆராய்ச்சியை விரிவாக்குவதற்கு அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, ஹொசூரிலிருந்து சரியாக இருக்கின்ற பாலை சென்னைக்குக் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. 93 லிட்டர்தான் சராசரியாகக் கிடைக்கிறது என்று சொன்னேன். மற்ற இடங்களிலே கால்நடைப் பண்ணைகளை நிறுவுவதைப் பற்றி அரசாங்கம் கொள்கை வகுத்தபொழுது கால்நடை அபிவிருத்தி பற்றிதான் இருந்தது. பால் அபிவிருத்தி என்பதைப் பற்றி கொள்கையிலே இல்லை. அதைத் திருத்தியமைக்கவேண்டுமென்று அரசாங்கம் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது.

**திரு. சா. மெய்யப்பன் :** நியூட்ரிஷன் டிவிஷன், டிஸீஸ் டிவிஷன், ஜெனடிக்ஸ் டிவிஷன் இந்த டிவிஷன்களிலே ஒரு டிவிஷன் மூடப்பட்டதால் பல பேர்கள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தனிக்கேள்வி போடவும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** இந்த செட்டிநாடு பண்ணை ஆரம்பிக்கப்பட்டபொழுது பிரயோஜனம் இல்லை என்று அதிகாரிகள் சொல்லியும் கூட தனிப்பட்டவர்களுடைய அனுசரணைக்காக இது செய்யப்பட்டதாகத் தெரியும். முன்னால் உள்ள ரிக்கார்டுகளைப் பரிசீலனை செய்தால் தெரியும். பரிசீலனை செய்யவேண்டும். இது லாபகரமாக இல்லாவிட்டால் ஒருவிதத்தில் மூடவோ அல்லது திருத்தவோ அல்லது ஏதாவது சீர்திருத்தம் செய்யவோ அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இது யாருடைய லாபத் திற்காக ஆரம்பிக்கப்பட்டது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. பொதுவாக இந்தப் பண்ணை லாபகரமாக இல்லை. நஷ்டம் ஏற்படாமல் செய்வதற்காக அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



*Mechanical driers*

*42 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) the number of mechanical driers installed in our State;

(b) the cost of each drier; and

(c) the amount of paddy dried by each drier per day and expenditure per day?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) முதல் (உ) வரை சபைமுன் ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஏ. எம். ராஜா :** இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே பார்க்கும்பொழுது 30 இயந்திரங்கள் வேலை செய் தால் 360 டன் உலர்த்த முடியும் என்று இருக்கிறது. தஞ்சையிலே 60 நாட்களுக்குள் அறுவடை முடியவேண்டிய நிலைமை இருப்ப தாலே 2½ லட்சம் டன் கொள்முதல் செய்ய வேண்டிய நிலை இருப்பதாலே அரசு மேலும் உலர்த்தும் இயந்திரங்களை நிறுவ முயற்சி எடுத்துக் கொள்ளுமா? அப்படி நிறுவினால் எங்கே எப்பொழுது எப்படி நிறுவப்போகிறார்கள் என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தஞ்சாவூரிலே நெல் உலர்த்தும் இயந்திரங்கள் 30 இடங்களிலே அமைக்கப்பட்டிருக் கின்றன. இந்திய ஃபுட் கார்ப்பரேஷன் அவர்களால் 110 லட்சம் ரூபாய் செலவிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஈரம் இல்லாத காரணத்தாலேயும், அறுவடைக் காலத்தில் மழையில்லாத காரணத்தாலும் இயந்திரங்களைப் பயன்படுத்தவில்லை. இந்த ஆண்டு அதிக அளவுக்கு உபயோகப்படுத்த அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, 110 லட்சம் ரூபாய் செலவிலே ஃபோர்ட் பவுண்டேஷனால் ஏற்படுத்தப்பட்ட இந்த நெல் உலர்த்தும் இயந்திரம் நிறுவும் திட்டம் எந்த ஆண்டிலே உத்தேசிக்கப்பட்டது? முப்பது நெல் உலர்த்தும் இயந்திரங்களில் —மொத்த நெல் உலர்த்தக்கூடிய சக்தி—எத்தனை டன் உலர்த்த முடியும் என்பதைக் கூறமுடியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எந்த ஆண்டிலே என்பது பற்றி எனக்குத் தகவல் இல்லை. 1967-ஆம் ஆண்டு நவம்பரில் 14 இடங்களில் இந்த இயந்திரங்கள் ஆரம்பிக்கப்பட்ட விவரம் இருக் கிறது. அதனுடைய டோட்டல் கபாசிடி எவ்வளவு என்பது பற்றித் தனிக்கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

**திரு. அ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, நெல் உலர்த்தும் இயந்திரம் மேட்டூர்த் தண்ணீர் பாய்கின்ற சேலம் மாவட்டத்திலே ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

---

* 57–58-ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, குறுவை அறுவடையின்போது மழை பெய்கிற காரணத்தினாலே உலர்த்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. உலர்த்தாமலே ஸ்டாக் வைத்தால் பாழாகி விடுகிறது. எனவே தஞ்சையில் இது மிக இன்றியமையாததாக இருப்பதாலேதான் அங்கே நிறுவப் பட்டிருக்கிறது. மற்ற இடங்களிலே விரிவுபடுத்த வதற்கு அரசாங்கத்திடம் இப்பொழுது உத்தேசம் இல்லை.

Thiru T. MARTIN : To cope up with the increased production of rice and to meet the increased necessities of the people regarding the same sometime back it was announced that some giant rice mills will be established in the State of Tamil Nadu. May I request the Hon. Minister to state whether so far any giant rice mill has been established in Tamil Nadu and if so the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தனிக் கேள்வி போட்டால் அதுபற்றிய விவரங்களைத் தருகிறேன்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெல் உலர்த்துகின்ற ஆலையை திருநெல்வேலி மாவட்டத்தில் அமைக்கும் திட்டம் ஏதாவது உண்டா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இதற்கு முன் ஒரு கேள்விக்குப் பதில் சொன்னது போல், இது தஞ்சை மாவட்டத் தில் இன்றியமையாததாக இருக்கும் காரணத்தால் அங்கு மட்டும் அமைக்கப்பட்டிருக்கின்றது. மற்ற மாவட்டங்களுக்குத் தற்சமயம் தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

### *Lower Bhavani water for irrigation*

* 43 Q.—Thiru A. M. RAJA : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government are aware of the fact that lands belonging to Pattagar of Palayakottai in Kangayam sub-taluk and Erode taluk are not brought under ayacut in spite of the fact that Lower Bhavani water is used for irrigation?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பழையகோட்டை பட்டக்காரருக்கும் இன்னும் சிலருக்கும் சொந்தமான சில பூமிகள் லோயர் பவானி ஆயக்கட்டில் சேர்க்கப்படாததற்குக் காரணம் பாசன வசதியை மேற்படி பூமிகளுக்கு நிரந்தரமாக உறுதிப்படுத்த முடியாததுதான். லோயர் பவானி பிராஜக்ட் கழிவு நீர், கசிவு நீர் ஆகியவைகளால் சாகுபடி செய்யப்படும் இந்தப் பூமிகளுக்கு லோயர் பவானி ஆயக்கட்டுக்கு விதிக்கப் படும் தீர்வை விதிக்கப்படுகிறது.







* 44 வினா.—**திரு. இரா. மாணிக்கவாசகம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பவானியாற்றில் உள்ள தண்ணீரை அரசாங்க அனுமதியின்றி இறைத்து வந்ததை அரசு கண்டு பிடித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அவ்வாறு செய்தவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) அனுமதியின்றி அவ்வாறு பாசனம் செய்பவர்களுக்குப் பாசன வரி விதிகளின் கீழ் தண்டம் விதிக்கப்பட்டு வருகிறது. எல்லா ஆற்றுத் திட்டங்களிலும் அனுமதியின்றிப் பயன்படுத்தப் பட்டு வரும் விசை ஏற்றங்கள் பற்றிக் கணக்கு எடுப்பது பற்றிய செயற்குறிப்பு உள்ளது. கணக்கு எடுக்கப்பட்ட பின்னர் அவற்றை முறைப்படுத்துவது அல்லது நீக்குவது பற்றி ஆலோசிக் கப்படும்.

**திரு. ஏ. எம். இராஜா :** நில உச்ச வரம்புச் சட்டத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளுவதற்காக மேய்ச்சல் நிலம் என்று சுமார் 1,800 ஏக்கர் நிலங்களைப் பழையகோட்டை பட்டக்காரர் குடும்பம் வைத்துக்கொண்டிருக்கிறது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டு இருக்கக்கூடாது.

**திரு. ஏ. எம். இராஜா :** மேய்ச்சல் நிலம் என்று ஒதுக்கப் பட்ட அந்த 1,800 ஏக்கரில் கீழ் பவானி வாய்க்காலில் தண்ணீர் வரும்போது சுமார் 500 ஏக்கருக்கு மேல் நெல் பயிரிடப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி நெல் பயிரிடப்படும் நிலங்களுக்கு உண்டான தண்ணீர்த் தீர்வை, தண்டத் தீர்வை கட்டப்படவில்லை என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அது நில உச்ச வரம்புச் சட்டத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளும் ஒரு உபாய மாக இருக்கலாம். அப்படி ஒரு தவறு ஏற்பட்டிருக்குமானால் அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சு. துரைசாமி :** கோவை மாவட்டத்தில் மேட்டுப்பாளை யத்தில் பவானி ஆற்றில் இருந்து அரசாங்கத்திற்குத் தெரியாமல், அனுமதியின்றி தண்ணீர் எடுத்ததற்காகத் தண்டத் தீர்வை போடப்பட்டது எந்த நிலையில் இருக்கிறது ? அவ்வாறு தண்டத் தீர்வை போட்டதை நீக்கிவிடும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றிய விவரம் இல்லை.

வருகிறார்கள். ஆனால், நீலகிரிக்கு என்று தனியாக துறையில் வேறு யாரும் துவக்குவதாக செயற்குறிப்பு அனுப்பியிருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து 13 மாவட்டங்களிலே மண்ணைப் பாதுகாப்புப் பரிசோதனை நிலையங்கள் ஏற்படுத்தியதாகச் சொன்னார்கள். அந்த 13 மாவட்டங்கள் எவை எவை என்று அறியலாமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நான் சொன்னதே 13 மாவட்டங்களிலே 7 மாவட்டங்களில்தான் இவை இருக்கின்றன என்பதைத்தான். ஏழு மாவட்டங்கள் என்பது கோவை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களைச் சேர்த்துக் கொண்டும், தஞ்சாவூரை எடுத்துக்கொண்டால் தஞ்சாவூருக்கும், கோவில்பட்டியிலே இருப்பதை எடுத்துக் கொண்டால் திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்த்துக்கொண்டும், கடலூரிலே இருப்பதை எடுத்துக் கொண்டால் தென் ஆற்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்த்துக்கொண்டும். காஞ்சிபுரத்தை எடுத்துக்கொண்டால் செங்கற்பட்டைச் சேர்த்துக்கொண்டும், குடியாத்தத்தில் இருப்பது வட ஆற்காடு மாவட்டத்திற்காகவும், மதுரையிலே இருப்பது மதுரைக்காகவும் இயங்கி வருகின்றன. இப்படி ஏழு இடங்களில் தான் இருக்கின்றன என்று கூறினேன். மேலும் 13 மாவட்டங்களுக்கும் தனித்தனியாக நிறுவவேண்டும் என்று சொன்னால் ஒரு மண்வளப் பாதுகாப்பு ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்குப் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவாகின்ற நிலைமை இருப்பதால் எந்த இடத்திலே அவசியம் ஏற்படுகிறதோ அந்த இடத்திலேதான் செய்வதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

### செட்டிநாடு மாநில கால்நடை ஆராய்ச்சி நிலையம்.

* 41 **வினா.—திரு. சா. மெய்யப்பன் :** மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விளக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செட்டிநாடு State Livestock Research Station -ல் இருக்கும் கால்நடை இனவாரியாக எவ்வளவு ?

(இ) 1967-68-ல் உற்பத்தியான பால் சராசரி நாள் ஒன்றுக்கு எவ்வளவு ?

(உ) மேலும் அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்புகள் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) & (இ) பேரவை முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

370–ம் பக்கத்தில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



(உ) தீவனப்பயிர் விளையும் நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள் ஆகியவற்றின் பரப்பை அதிகரிப்பதற்காக துளைக்கிணறுகள், புதிய தரை மட்டக் கிணறுகள் ஆகியவற்றை அமைத்தல், தற்போதுள்ள தரைமட்டக் கிணறுகளில் துளைகள் அமைத்தல் ஆகிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திரு. சா. மெய்யப்பன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசினரால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 10 லட்ச ரூபாய் திட்டத்தில் கால்நடை ஆராய்ச்சிப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. தீவன ஆராய்ச்சியைப் பொறுத்து 24—7—1964 அன்றும், நோயைத் தடுப்பதைப் பொறுத்து 6—5—1965 அன்றும், உற்பத்திப் பெருக்கைப் பொறுத்து 20—11—1965 அன்றும் 6,83 லட்சம் ரூபாயில் 2,34 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. அதிலே வாட்டர் சப்ளை, எலக்ட்ரிசிடி, லேபரட்டரி சாதனங்கள் போதுமான அளவுக்கு இன்னும் நிறைவு செய்யப்படவில்லை. எனவே, இந்தப் பண்ணை வளர்ச்சியடையவில்லை என்பதை அரசு ஒப்புக்கொள்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அங்கு இருக்கிற கிணறுகள் போதவில்லை என்பதாலே துளைக் கிணறுகள், குழாய்க் கிணறுகள் போட்டு வருகிறோம். இருக்கிற கிணறுகளிலே தண்ணீர் அதிகமாகப் பெறுவதற்காகக் கிணறுகளை ஆழப்படுத்துகின்ற வேலையும் நடைபெறுகின்றது. அந்த வேலைகள் எல்லாம் துரிதமாக நடந்தால் தண்ணீர்ப் பஞ்சம் அங்கே இருக்காது. அந்த நிலையில் தீவனங்களை வெளியிடங்களிலிருந்து வாங்க வேண்டிய அவசியமில்லை ; நாமே பயிர் செய்யலாம்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, செட்டிநாடு கால்நடைப் பண்ணை, மற்றும் அனைத்து மாநிலப் பண்ணைகளிலும் கிடைக்கின்ற சாணம், குப்பை அனைத்தும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படாமல் வீணாகப் போவதால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த அவையிலே, அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்வதாகச் சொன்னார்கள். இப்பொழுது அந்த சாணம், குப்பை எல்லாம் விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எனக்குத் தெரிந்தமட்டில் கால்நடைப் பண்ணைகளிலே கிடைக்கின்றவற்றை எருவாகத்தான் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், இந்த செட்டிநாடு பண்ணையை மூடிவிட வேண்டுமென்று டைரக்டர் ஆப் அனிமல் ஹஸ்பன்டரியிடத்தில் ஏதாவது அபிப்பிராயம் இருக்கிறதா ? அப்படியென்றால் அதை மூடுவதற்குக் காரணம் என்ன? கோழிப் பண்ணையை மூடியதற்காக நான் மந்திரியைப் பாராட்டுகிறேன். இதையும் மூடுவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்கிறதா?

[1969 ஆகஸ்ட் 20

THIRU K. VINAYAKAM: Is the Hon. Minister aware of the fact that under certain provisions of the Land Ceiling Act, certain lands have been exempted and if an individual has taken advantage of it, it shows his intelligence and it does not amount to circumventing the Act?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: I do not think it is necessary to answer that question.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி, பவானி ஆற்றைப் பற்றியது. சீலிங் ஆக்டைப் பற்றியது அல்ல.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** பொதுவாக ஒரு வாய்க்காலில் இருந்து வருகின்ற தண்ணீரை இந்த இந்தக் குளங்களுக்குத்தான் பாசனத்திற்கு என்று வரையறுத்திருக்கிறது. அதற்கு முன்பாக தண்ணீரை வெட்டி நடுவிலே 50 ஏக்கருக்குப் பாசனத்திற்காக தண்ணீரைப் பிரித்து விடுவதால் குளத்திற்குப் போகும் தண்ணீர் பாதிக்கப்படுவதன் காரணமாக 500, 600 ஏக்கருக்கு மேல் பாதிக் கப்படுகிறது. இந்தமாதிரி திருச்சி மாவட்டத்தில் அக்கினி ஆற்றில் ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது, பவானி ஆற்றைப் பற்றியது. பொதுவான கேள்வியாகப் போட முடியாது.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** இதேமாதிரி பவானி ஆற்றில் இருந்து நீரை நடுவிலே எடுப்பதன் காரணமாக அதிகமான நிலங்கள் பாசனம் பெற முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கனம் அங்கத் தினர் அவர்கள் எவ்வளவு ஆயக்கட்டுப் பகுதிகள் என்ற விவரங்களைக் கொடுப்பார்களானால் தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

DR. H. V. HANDE: Will the Government be able to tell us whether there is any substance in the charge that water let into Bhavani river has been regularly reduced and is going to be reduced on account of the recent river pact agreement between Tamil Nadu and Kerala?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The hon. Member may put a separate question.

**திரு. எம். சுரேந்திரன்:** பாசன வாய்க்கால் ஓரங்களில் தற்போது கிணறு வெட்ட அனுமதிக்கப்படுகிறது. அப்படி இருக்கும்போது பவானி ஆற்றில் ஓடிக் கொண்டிருக்கும் தண்ணீரை எடுத்துக் கொள்ள அனுமதிப்பதிலே எவ்விதத் தவறும் இல்லை. ஆகவே, அப்படி தண்ணீர் எடுத்தவர்களுக்குத் தண்டத் தீர்வை போட்டிருப்பதை நீக்கவும் மேற்கொண்டு தாராளமாகத் தண்ணீர் எடுத்துக் கொள்வதற்கு அனுமதிப் பதற்கும் அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?



1969 ஆகஸ்ட் 20]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஆயக்கட்டில் சேர்த்துக் கொள்ளப்படாத பூமிகளுக்குத் தண்ணீர் எடுத்துக் கொள்ளும்போதுதான் தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது.

**திரு. டி. மார்டின்:** சில நாட்களுக்கு முன்பு, பசுமைப் புரட்சித் திட்டம் என்ற திட்டத்தை இந்த அமைச்சரவை அதிக ஆக்கறையோடு நிறைவேற்றப் போவதாகப் பத்திரிகையில் பார்த்தேன். கசிவு நீரை வசதி இல்லாத விவசாயிகள் பயன்படுத்தி விவசாயம் செய்வதன் மூலம் பசுமைப் புரட்சித் திட்டத்திற்கு அனுகூலமாக இருக்கும். ஆகவே, இந்த மாதிரி விவசாயிகளுக்கு அபராதம் விதிக்காத முறையைக் கையாளுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பசுமைப் புரட்சித் திட்டம் பற்றித் தான் பேசப்பட்டதே தவிர, கழிவு நீர்ப் புரட்சி பற்றிப் பேசப்படவில்லை.

### வேலூர்-காட்பாடி சாலையில் பாலாற்றின் குறுக்கே பாலம்

* 45 வினா.—**திரு. மா. பா. சாரதி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர்-காட்பாடி சாலை மத்தியில் பாலாற்றின்மீது இருக்கும் பழைய பாலத்தைப் புதுப்பித்து அகலப்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை தொடங்கும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. மா. பா. சாரதி:** மேற்படி பாலம் எந்த ஆண்டில் கட்டப் பட்டது? எந்த ஆண்டில் அந்தப்பாலம் போக்குவரத்திற்கு உகந்தது அல்ல என்று முடிவு செய்யப்பட்டது? இப்போது அந்தப் பாலத்தின் நிலைமை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அந்தப் பாலம் 102 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது. அந்தப் பாலம் போக்குவரத்திற்கு உகந்தது அல்ல என்று 1930-ம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டது. மேற்படி திட்டத்தைப் பற்றி இந்த ஆண்டு அரசு பரிசீலித்து தற்போது நிதியமைச்சரின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** 102 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டிய பாலம் என்று சொன்னார்கள். அன்றைக்கு இருந்ததை விட இன்று பல மடங்கு, நூறு மடங்காவது, போக்குவரத்து அதிக மாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் உணருவார்கள். தற்போது போக்குவரத்து ஸ்தம்பித்து விபத்துக்கள் ஏற்படு கின்றன. அந்தப் பாலத்தை அகலப்படுத்திக் கட்டுவது ஆலோசனையில் இருக்கிறது என்று கூறிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக உடனடியாக அதைக் கட்டி முடிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இத்திட்டம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளது என்ற போதிலும், நிதி நிலைமையின் காரணமாக இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படலாம்.

## தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியம்

* 49 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை வீட்டு வசதி போர்டுக்கு வீடு, நிலங்கள் மூலம் 1965, 1966, 1967 ஆகிய ஆண்டுகளில் கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) 1966-67-ம் ஆண்டு வசூல் ஆகாமல் பாக்கி இருப்பது எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) & (ஆ) பேரவை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

* 50 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether Tamil Nadu Housing Board has taken any loan from the Life Insurance Corporation for its schemes during the year 1967–68 and 1968–69?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து நேரடியாகக் கடன் எதையும் பெறவில்லை. ஆனால் மாநில அரசு இம்மாநிலத்தில் வீட்டு வசதித் திட்டங்களுக்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து 1967-68-ல் 150 லட்சமும், 1968-69-ல் அதே அளவுள்ள தொகையும் கடனைப் பெற்றுள்ளது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** வைக்கப்பட்டுள்ள அறிக்கையின் விவர அறிக்கை 2-ல், 31-3-1967 முடிய ரூ. 7.14 லட்சம், 30-6-1967 முடிய 7.23 லட்சம் ரூபாய் என்ற அளவில் வரவேண்டிய பாக்கித் தொகை இருக்கிறது. விவர அறிக்கையின் 4-ல், 2.13 லட்சம் ரூபாய் பாக்கி இருந்து கொண்டேயிருக்கிறது. குறிப்பாக, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில், பல்வேறு துறைகளிலும் ஊழல்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே பாக்கியையாவது வசூலிக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் படி இரண்டு மாதங்களுக்கு மேலே பாக்கி விழுந்தால் அவர்களுக்கு நோட்டீஸ் சர்வ் செய்யப்பட்டு வாடகை அல்லது ஹயர் பர்சேஸ் மூலம் கட்டவேண்டிய பாக்கிகளை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

---

*372–374-ம் பக்கங்களில் நான்காம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**திரு. என். எஸ். வி. சித்தன் :** தமிழ்நாடு வீட்டுவசதி போர்ட்டிலிருந்து வீட்டு மனைகள், வீடுகள் கட்டுவதற்கான நிலங்கள், அமைச்சரவையில் அங்கம் வகிப்பவர்கள் அல்லது அவர்களின் உறவினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றனவா ? ஆமெனில், அதன் விவரங்கள் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. கே. விநயகம் :** தமிழ்நாடு வீட்டுவசதி போர்டுக்காகக் கடன் கேட்டு மத்திய சர்க்காரிடமிருந்து பணம் பெற்று வீடுகள் கட்டப்படாமல், எந்தக் காரணத்திற்காகவோ தள்ளப்பட்டிருந்து பின்னால் அதற்கு சேரவேண்டிய வட்டியை போர்டார் தானே கொடுக்காமல் அலாட்டீஸ்-இடமிருந்து, யார் யார் நிலம் அல்லது வீடு வாங்கியிருக்கிறார்களோ அவர்களின் மீது வட்டியைப் போட்டு இப்போது அதற்குத் தகுந்தாற்போல் விதிகளைத் தயார் செய்து வசூல் செய்வது நியாயமா? தவறு செய்தது போர்டார் தானே, போர்டார் தங்கள் தவறுகளை ஏற்றுக்கொள்ளாமல் ஏன் அலாட்டீஸிடமிருந்து வட்டிக்கான பணத்தை வசூல் செய்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அந்த விவரங்கள் என்னிடமில்லை. நிலங்களை அக்வயர் செய்கிறபோது என்ஹான்ஸ்ட் காம்பன்சேஷன் வேண்டுமென்று ஹைகோர்ட்டில் கேஸ்கள் போடப்படுகின்றன. அதனால் தடை ஏற்படுகிறது. அந்த வட்டியை ப்ளாட் வாங்குபவர்களிடமிருந்துதான் வாங்கவேண்டியிருக்கிறது. ஏனெனில், இந்த ஸ்கீம் 'நோ ப்ராபிட், நோ லாஸ்' என்ற முறையில் வேலை செய்வதால் அரசாங்கத்திற்கும் வீட்டுவசதி வாரியத்திற்கும் லாபம் கிடையாது. ஆகவேதான் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகிறது.

**திரு. சு. துரைசாமி :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது இரண்டு மாதங்களுக்கு மேலேயானால் ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் படி வசூல் செய்வதாகத் தெரிவித்தார்கள். அப்படி எவ்வளவு பேர்களிடம் இருந்து வசூலிக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** எவ்வளவு பேர்களிடமிருந்து என்று சொல்ல முடியாது. 1965-66-ல் ரூ. 84.22 லட்சம், 1966-67-ல் ரூ. 126.17 லட்சம், 1967-68-ல் 111.28 லட்சம் வசூலாகியிருக்கிறது.

**THIRU T. MARTIN :** When lands are acquired for the purposes of the State Housing Board, notifications under the Land Acquisition Act are issued. These notifications are published in the Gazette. As people have no easy access to the Gazette, they could not see the notifications. May I request the Hon. Minister to

state whether steps will be taken to notify these notifications in the office of the State Housing Board itself and send a copy to the Sub-Registrar's office so that the intending purchaser may know that this particular land is under land acquisition proceedings?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** லான்ட் அக்விஸிஷன் ப்ரொஸீடிங்க்ஸ் எடுக்கிறபோது மோட் ஆஃப் நோட்டிபிகேஷன் என்றிருக்கிறது. சம்பந்தப்பட்ட ப்ளாட்டில் ருச்சி ஊன்றி சர்வே செய்யப்படுகிறது. டாம் டாம் மூலம் விளம்பரப்படுத்தப்படும். நோட்டீஸ் போர்டில் ஒட்டப்படும். தாசில்தார் ஆபீஸ், கலெக்டர் ஆபீஸ், வீட்டு வசதி வாரியம் ஆகிய இடங்களில் எல்லாம் நோட்டீஸ்கள் ஒட்டப்பட்டு விளம்பரப்படுத்துகிறோம்.

**திரு. நா. வீராசாமி :** வீட்டுவசதி வாரியத்தில் வீட்டுமனைகள் அல்லது வீடுகள் இல்லாத ஏழைகளுக்கு மனைகள் அல்லது வீடுகள் வழங்கப்படுகின்றன. அப்படி வழங்கப்படுகிற ஏழைகளிடமிருந்து வாங்கப்படுகிற வட்டி விகிதம் அதிகமாகயிருக்கிறது. அதைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** இது நியாயமான வட்டி என்றுதான் இதுவரையில் வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஏனெனில் இதில் லாப நோக்கம் கிடையாது. 'நோ ப்ராஃபிட் நோ லாஸ்' என்ற அடிப்படையில் செயல்படுகிறது. ஆகவே வட்டியைக் குறைக்க வழி இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** நோ லாஸ், நோ ஃப்ராபிட் ஸ்கீம் என்பதாலும், வழக்குகள் தொடரக் கூடிய நிலை இருப்பதாலும், அதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை அவர்களிடம் இருந்து தான் வசூலிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால் அந்த வீட்டுமனைகள் அல்லது வீடுகள் வாங்குவதற்கு முன்னால் இதுபோன்ற நிபந்தனைகள் போட்டு ஏதாவது எக்ரிமென்ட் ஆகியிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** எக்ரிமெண்டில் அப்படித் தான் இருக்கிறது. பின்னால் அது சம்பந்தமாக என்ஹான்ஸ்ட் காம்பன்சேஷன் கொடுப்பதாக இருந்தால் பொறுப்பு வாங்குகிறவர்களுக்குத்தான் என்று இருக்கிறது.

## மீனாட்சியம்மன் கோவிலில் வழிபாடு

* 51 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சி ஆலயத்தில் சுவாமியை அருகிலிருந்து தரிசிப்பதற்கு டிக்கட் வசூல் செய்யப்பட்டதா?

(இ) அதை நிறுத்திவைக்க அரசு ஆணையிட்டுள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) ஆம். மக்கள் கூட்டத்தை முறைப்படுத்தும் பொருட்டு மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் பொறுப்புக் கழகத் தீர்மானத்தின்படி 1—1—1969 முதல் காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரையில் அர்த்த மண்டபத்தில் நுழைவதற்காக தலைக்கு 25 காசு விதிப்பதற்கும், பிற வழிபாட்டு நேரங்களில் இலவச தர்சனத்திற்கு அனுமதிக்கவும் இந்து சமய அறக் கட்டளை ஆணையாளரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவரவர்களே, இறைவன் சந்நிதியில் ஏழைகளாக இருந்தாலும், பணக்காரர்களாக இருந்தாலும் சரிநிகர் சமானமே. அப்படியிருக்கும் பொழுது, பணக்காரர்களுக்கு மட்டும் இப்படி டிக்கெட் வைப்பதன் மூலம் வசதி செய்து கொடுப்பது நியாயமா ? எல்லோருக்கும் வசதி செய்துகொடுக்கும் முறையில் இந்த டிக்கெட் முறை ரத்து செய்யப்படுமா? அந்தக் கோயில் தர்மகர்த்தர்களிடமிருந்து டிக்கட் முறையை எதிர்த்து ஆட்சேபித்து கோரிக்கை வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** இதுவரைக்கும் அப்படிப்பட்ட கோரிக்கைகள் வரவில்லை. ஆனால் இது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. உதாரணமாக, வேதகிரீஸ்வரர் கோயிலில், திருக்கழுக்குன்றத்தில் 25 காசு வசூல் செய்யப்பட்டு வருகிறது. திருப்பதியிலேகூட, 10 ரூபாய், 15 ரூபாய் என்று வசூல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் அந்த அடிப்படையிலே வசூல் செய்கிறார்களே தவிர, கோயில் வருமானத்திற்காக, 10 ரூபாய், 20 ரூபாய் என்று செலவு செய்து கொண்டு வருபவர்களிடமிருந்து 10 காசு 20 காசு வசூலிக்கலாம் என்று கருதி, டிரஸ்டிகள் போர்டு தீர்மானத்தின்மீது ஆணையாளர் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவரவர்களே, மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் பக்தர்கள் பிறந்த நட்சத்திரத்தையும், நாமத்தையும் சொல்லி அர்ச்சனை செய்யக் கோயிலில் கட்டணம் செலுத்தி வருகிறார்கள். அந்தக் கட்டணத்தொகை அறநிலையப் பாதுகாப்பு இலாக்காவினால் நிர்ணயிக்கப்பட்டதா? அவ்வாறு வசூல் செய்யும் தொகையில் பட்டாசாரியர்களுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும், தேவஸ்தானத்திற்கு எவ்வளவு வர வேண்டும் என்று விதி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அதுசம்பந்தமான விவரம் என்னிடம் இல்லை.

**திரு. சா. மெய்யப்பன் :** ஐயா, கடவுள் கோயிலுக்குப் போவதற்குக் கட்டணம் வாங்குவது சரியா? மகாபலிபுரம் பெருமாள் கோயிலில் வாங்குவது போல் வாங்குவது சரியா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் சொன்ன எல்லாக் கருத்துக்களையும் பரிசீலித்துப் பார்த்த பிறகுதான் தற்போது இந்தத் திட்டம் நிதியமைச்சரின் பரிசீலனைக்கு அனுப்பட்டிருக்கிறது.

**திரு. இல. பலராமன் :** அதிகமான பளுவைத் தூக்கிச் செல்லக் கூடிய வண்டிகள், இயந்திரங்களைத் தூக்கிச் செல்லக்கூடிய வண்டிகள் அந்தப் பாலத்தில் போகக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. பொதுமக்களுக்கும் சில நேரங்களில் காரியமாற்ற தடைப்படுகிறது. ஆகவே, அந்தப் பாலத்தை விரைவாகக் கட்டுவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இதே போன்ற கேள்விக்கு ஏற்கனவே அளித்த பதில் இதற்கும் பொருந்தும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இந்தப் பாலம் கட்டி 102 வருஷங்களுக்கு மேலாகிறது. இதைப் புதுப்பித்துக் கட்டுவது பரிசீலனையில் இருக்கிறது என்றார்கள். அதற்கு நிதி இலாகாவில் அனுமதி தேவை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நிதி இலாகா அதைத் தட்டிக் கழித்துக் கொண்டு போகாமல் நிதி இலாகாவுடன் சண்டை போட்டாவது அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நிதி இலாகாவிலே எந்தவிதமான சங்கடமும் இல்லை. நிதி இருக்கும் நிலைதான் சங்கடமாக இருக்கிறது. தற்போது அது நிதியமைச்சரின் பரிசீலனையில் இருந்து வருகிறது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

### இடைக்கழி நாடு பகுதியில் பனஞ்சீனி ஆலை

*** 46 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இடைக்கழி நாடு பகுதியில் பனை, தென்னை மரங்கள் அதிகமாயிருப்பதால் மற்றொரு பனஞ்சினி சர்க்கரை ஆலை திறக்கிற உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இல்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** ஏற்கெனவே அங்கிருக்கிற பனஞ்சீனி சர்க்கரை ஆலை நவீன முறையில் செயல்படாமல் பழைய முறையிலேயே செயல்படுவதால் அதை மாற்றியமைப் பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தற்போதைக்கு நவீன முறையில் அமைப்பதற்காக, நான்கு இடங்களில் அமைப்பதற் கான திட்டங்கள் இருக்கின்றன. அவற்றில் சேலம், கோவை,



திருநெல்வேலி, ஆகிய மாவட்டங்களில் அதற்கான ஆக்க வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. பம்பாயிலுள்ள கதர், கைத்தொழில் நிறுவனத்தினர் ஒப்புதலோடு தமிழ் நாடு கதர் கைத்தொழில் வாரியம் இத்திட்டங்களை மேற்கொள்ளுகிறது. நவீனப்படுத்த அது சம்பந்தமான நிதி உதவிகளைப் பெறுவதற்கு வாரியம் முயற்சி எடுத்துக்கொள்ளும்.

### வயலூர், சிவாயம் பகுதிகளுக்கு பாசன வசதி

*** 47 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சப்பட்டிப் பகுதியிலிருந்து வரும் புங்காற்றின் குறுக்கே தடுப்புச் சுவர் அமைத்து வயலூர், சிவாயம் பகுதி களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தரும் திட்டத்திற்கு திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுமதி கோரப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன உத்தரவு பிறப்பிக்கப் பட்டது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** நான் அந்தப் பகுதி சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் மேற்படி புங்காற்றின் குறுக்கே ஒரு சிறிய தடுப்புச் சுவர் அமைக்கவேண்டுமென்று இந்த மன்றத்தில் தற்போது கோரிக்கை எழுப்புகிறேன். அதை ஏற்றுவது இனிமேலாவது அது பரிசீலனை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பரிசீலிப்பதற்கு முன்னால் சில தகவல்களைத் தர வேண்டியிருக்கிறது. திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களி டத்தில் இதுபற்றிக் கேட்டபோது அந்த நீர்தேக்கத்திற்கு வர வேண்டிய தண்ணீர் பஞ்சப்பட்டு நீர்தேக்கத்திலிருந்துதான் பெற வேண்டியிருக்கிறது. பஞ்சப்பட்டு நீர்தேக்கத்திற்கே போதிய உபரி நீர் இருப்பதில்லை. ஆகவே, அணைக் கட்டை மீண்டும் கட்ட வாய்ப்பில்லை என்ற குறிப்பை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். நல்ல மழை பெய்து புங்காற்றில் போதுமான அளவிற்கு நீர் வந்தால் அப்போது இது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

### கொங்கணாபுரம் பகுதியில் இணைப்புப் பாலம்

*** 48 வினா.—திரு. அ. ஆறுமுகம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுகாவை சேர்ந்த கொங்கணா புரம் பகுதி கோண சமுத்திரம் கிராமத்தையும், புதுப்பாளையம் கிராமத்தையும் இணைக்கின்ற வகையில் ஒரு சிறு பாலம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

[1969 ஆகஸ்ட் 20

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் கோயிலைப் பார்ப்பதற்காகவும், ஆர்கலாஜிகல் பியூட்டியைப் பார்ப்பதற்காகவும் வருகிறார்கள். அவர்களிடமிருந்து வசூல் செய்யலாம் என்ற எண்ணத்தில் இதைச் செய்கிறார்கள். கோயில் வருமானத்திற்கு என்று ஆவதால் அதைச் செய்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மிகப் பெரிய கோயிலாகிய திருப்பதி கோயிலிலேகூட ஏழைகள் பார்ப்பதற்கென்று ஒரு நேரமும், பணக்காரர்கள் பார்ப்பதற்கென்று ஒரு நேரமும் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. பணக்காரர்களுக்குக்கூட, கேட்கிற வரத்திற்குத் தகுந்தாற்போல கட்டண விகிதமும் உயர்ந்துகொண்டு போகிறது. எதையெதை எதிர்பார்க்கிறார்களோ அதற்குத் தகுந்தாற்போல் கட்டணம் விதிக்க வேண்டுமென்ற வகையில் இருந்து வருகிறது.

**திரு. கே. வினாயகம் :** இறைவன் சந்நிதானத்திலே, குறிப்பாக மதுரை மீனாட்சியம்மன் கோயில் கர்ப்பக் கிரகத்திற்கு அருகாமையிலே போக வேண்டுமென்றால் ஆண்கள் சட்டையை எடுத்துவிட்டுப்போக வேண்டுமென்று விதி இருக்கிறது. இது இருபாலருக்கும் பொருந்தாது என்பதால், இனி ஆண்களும் சட்டைகளை அப்புறப்படுத்த வேண்டியதில்லை என்று கருதி, அந்த விதியை அமல் நடத்தக்கூடாது என்ற கட்டளையை அந்தத் தர்மகர்த்தாக்களுக்கு அரசாங்கம் விதிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. வினாயகம் அவர்கள் ஆண்கள் சட்டை அணிந்துகொண்டு போக வேண்டுமென்று விரும்புகிறார்களா? அல்லது சமத்துவம் வேண்டுமென்று விரும்புகிறார்களா?

## உத்திரகோசமங்கை கோவிலில் திருட்டு

*** 52 வினா.—திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுர மாவட்டத்தில் உத்திரகோசமங்கை கோவிலில் 1968 ஏப்ரலில் 'தபசு அம்மன்' சிலையின் வெள்ளியிலான ஒரு பகுதி காணாமல் போய் விட்டதா?

(இ) ஆம் என்றால் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) ஆம்.

(இ) வெள்ளிக் கவசமிட்ட அலங்கார திருவாட்சி மரப்பீடம் ஒன்று காணாமற் போய் விட்டதென 17—4—1968 அன்று இரவு தெரியவந்தது. இவ்வழக்கில் புலனாய்ந்து காவலர் கைப்பற்றிய திருட்டுப்போன வெள்ளிக் கட்டி பரமக்குடியிலுள்ள குற்றவியல் துணை நீதிபதியின் நீதி மன்றத்திலிருந்து திரும்பிப் பெறப்பட்டு தற்போது வட்டக் கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளது.



1969 ஆகஸ்ட் 20]

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், பொதுவாகத் தமிழ்நாட்டிலேயுள்ள கோயில்களிலுள்ள சிலைகள் திருட்டுப்போவது சர்வ சாதாரணமாகியிருக்கிறது. சிலைகளைத் திருடுவதற்கு ஒரு பெரிய கோஷ்டியே இருப்பதாகத் தெரிகிறது. அதைக் கண்டுபிடிக்க அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அதற்கு வேண்டிய நடவடிக்கைகளெல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. போலீஸ் ஸ்டேஷனே திருட்டைக் கண்டுபிடிக்கத்தான் இருக்கிறது. அவர்களுடைய உதவி அடிக்கடி நாடப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தச் சிலைகள் ஆலயங்களிலிருந்து திருட்டுப்போவது ஆண்டாண்டு காலமாக இருந்து வருகிறது. இப்பொழுதுதான் என்று இல்லை. ஆனாலும், இப்பொழுது போலீசார் அதில் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவரவர்களே, கோயிலில் சிலைகள் காணாமற்போய்க் கொண்டிருக்கின்றன. ஆகையால், அறநிலையப் பாதுகாப்பிலே, ஒரு தனி போலீசோ அல்லது நிர்வாகமோ வைத்து இதைக் கண்காணிப்பதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுக்க யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஏற்கெனவே, தஞ்சை மாவட்டத்தில் இப்படி ஒரு தனிப் பிரிவு வைக்கப்பட்டதாக அறிகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையைப் பரிசீலிக்கலாம்.

**திரு. கரு. ராம கரியமாணிக்கம்அம்பலம் :** சார், இந்தச் சிலை திருட்டுப்போவதைப் பிற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை ஒரு சிலர் பிஸினஸாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்காக சட்டத்திலே இடம் செய்து, இதற்குத் தகுந்த தண்டனையை ஏற்படுத்தினால் ஒழிய இந்த நிலை மாறுவதாக இல்லை. பல பக்தர்களின் மனதைப் புண்படுத்தக்கூடிய நிலையிருப்பதால் இதைச் சட்டமாக மாற்றி அவர்களுக்குக் கடுமையான தண்டனையை அரசாங்கம் ஏற்படுத்துமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்படிச் சிலர் குழுக்களாகப் பிரிந்து இந்தக் காரியத்தைப் பல ஆண்டுகளாகச் செய்து வருகிறார்கள். அதிலும், கோயிலிலுள்ள பழைய விக்கிரகங்களில், அதனுடைய வளைவு நெளிவுகளைக் கொண்டு அதில் எவ்வளவு தங்கம் இருக்கிறது என்று கண்டு பிடித்துவிடுகிறார்கள். அதைச் சிலர், ஆங்காங்குள்ள அர்ச்சகரின் உதவியோடு இந்தக் காரியத்தைப் பல ஆண்டுகளாகவே செய்து வந்தார்கள். இது கண்டு பிடிக்கப்பட்டால் தண்டிப்பதற்கு இப்பொழுதிருக்கும் சட்டமே போதுமானது. இதில் போலீசாரும் தீவிரக் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

கூறி இருப்பது, அவ்வளவு பொருந்தாதது என்பதை உறுப்பினர்
கள் தெரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காகத்தான் இந்தத்
தகவலை இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பார்மேஷன்,
சார். இந்த அவையிலே ஆட்சி செய்வது திராவிட முன்னேற்றக்
கழகம் (குறுக்கீடு). அதாவது, அரசாங்கத்தைத் திராவிட
முன்னேற்றக் கழகத்தினர் நடத்துகிறார்கள். எதிர்க்கட்சி
நாங்கள் தான், காங்கிரஸ் கட்சி. வேறு எவரும் எதிர்க்கட்சி
யாகக் கருதப்பட முடியாது. அப்படி இருக்கும்பொழுது அதிக
நேரம் என்று எங்களுக்குச் சொல்லி எந்த அளவுக்குக் கொடுக்
கலாமோ, அந்த அளவுக்குக் கொடுக்கலாம். ஏதோ கொஞ்சம் நீதி
இருக்கிறது எங்களிடம். ஆயினும் எந்த அளவுக்கும் கொடுக்க
வேண்டுமோ அந்த அளவுக்குக் கொடுக்கப்படவில்லையென்று
சபாநாயகர் தெரிந்து கொள்ளவேண்டுமென்று கூறி, இனியாயினும்
அதிகமாகக் கொடுப்பீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொடுத்திருப்பதே அதிகம்
என்பதுதான் இப்பொழுது கூறியது. இங்கே சட்டப் பேரவையில்
பல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருக்கலாம். ஆனால்,
பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே இருக்கிற அத்தனை பேரையும்
ஒரே கண்கொண்டு பார்க்க வேண்டும். அந்தக் கட்சி, இந்தக்
கட்சி என்று பார்க்கக் கூடாது. ஒவ்வொருவருக்கும் தொகுதி
இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் தொகுதிப் பிரச்னைகள் இருக்
கின்றன. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தொகுதிப் பிரச்னைகளை
இந்த மன்றத்திலே எடுத்துக் கூற வாய்ப்பளிக்க வேண்டியதும்,
சமமாக எடுத்துக் கூற வாய்ப்பளிக்க வேண்டியதும்தான்
பேரவைத் தலைவர் அவர்களுடைய கடமை. இதிலே அப்படிப்
பார்க்கின்ற வகையிலே கூட அதிகமாகக் கொடுத்திருக்கிறோம்
என்பதைப் பார்த்த பிறகும் 'கொஞ்சம் நீதி அளித்திருக்
கிறீர்கள்' என்று சொல்கிறார்கள். ஆக, நீதியே அளிக்கவில்லை
யென்று சொன்ன சொல்லை மாற்றிவிட்டு—இந்தக் காப்பிலே
இருந்து வந்த சொல்தான்—கொஞ்சம் நீதி அளித்திருக்கிறீர்கள்
என்று நம்முடைய எதிர்க்கட்சி கொறடா அவர்கள் கூறியதற்காக
நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. பேரவை நடவடிக்கைக் குறிப்பேட்டிலிருந்து சில பகுதிகள் நீக்கப்பட்டமை குறித்து.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே,

"If the Speaker is of opinion that a word or words has or
have been used in debate which is or are defamatory or indecent,
or unparliamentary or undignified, he may in his discretion, order
that such word or words be expunged from the Official Report of



the proceedings of the House, and all consequential alterations
made such report and make an announcement in the Assembly
of the fact of his having made such order".

என்று சட்டப்பேரவையின் 235-வது விதியில் இருக்கிறது.
நேற்று சட்டசபையிலே என்னுடைய ஒத்தி வைப்புப் பிரேரணை
யை, கனம் சபாநாயகர் அவர்கள் சபைக்கே கொண்டு வராமல்
ஒத்தி வைத்தது பற்றி இங்கே விவாதம் இருந்த சமயத்திலே,
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறுக்கீடு செய்து, இந்த
விவாதம் பூராவையுமே அவைக் குறிப்பேட்டிலிருந்து எடுத்துவிட
வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால், அப்பேர்ப்பட்ட வார்த்தை
கள், தகாத வார்த்தைகள், முறையில்லாத வார்த்தைகள்,
அன்பார்லிமெண்டரி வார்த்தைகள் இவற்றை நீக்கவேண்டும்
என்று தான் இருக்கிறதே தவிர, அப்படியே பூராவையும் எடுத்து
விட வேண்டுமென்று சொல்லியிருப்பது, சபாநாயகர் பேசியது
பூராவும், நான் பேசியது பூராவும் எல்லாம் ஒழுங்கீனமாக,
அதாவது சட்டமன்ற மரபுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறதா
என்று அறிய விரும்புகிறேன். அதையெல்லாம் எக்ஸ்பஞ்ச் செய்ய
வேண்டும் என்று சொல்லும்படியான சமயத்திலே, இங்கு நாம்
பேசியவையெல்லாம், வெளியிலே. குறிப்பேட்டிலே வராமல்
இருக்குமானால் அது என்ன முறை என்று தெரிந்துகொள்ள
விரும்புகிறேன். சட்டப்பேரவைத் தலைவருக்குத்தான் எக்ஸ்பஞ்ச்
பண்ண உரிமை இருக்கிறதே தவிர, முதலமைச்சரவர்கள் எக்ஸ்
பஞ்ச் பண்ண வேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள்
வெளிநடப்பு செய்ததற்கு முன்னால் நடந்தவை பூராவையும்
எக்ஸ்பஞ்ச் செய்தால் அது ஜனநாயகத்திற்கு ஒத்துவரக்
கூடியதா? சர்வாதிகாரத்திலே தான், அதிலிருந்து இதுவரைக்கும்
பேசக்கூடாது, அதிலிருந்து இதுவரைக்கும் செய்யக் கூடாது
என்ற முறையைக் கடைப் பிடிக்கலாம். ஆக, நடந்த விவாதத்தை
யெல்லாம் எக்ஸ்பஞ்ச் செய்வது, சபாநாயகர் பேசியதும்
ஒழுங்கீனமானதுதான், எதிர்க்கட்சித் தலைவர் பேசியதும்
ஒழுங்கீனமானதுதான் என்று பொருள்படும். அதே மாதிரி
ஒழுங்கீனமானதை நாங்கள் எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமென்று
கேட்டபோது அதை மறுத்து, இருக்கட்டும் குறிப்பேட்டிலே
என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்
கிறார்கள். மறைந்த அண்ணாதுரை அவர்கள் சொன்னார்கள்.
அவைகளெல்லாம் குறிப்பேட்டில் இருக்கவேண்டாமென்று கூட
நான் சொன்னேன். இல்லை இல்லை, பதிவேட்டிலே இருக்கட்டு
மென்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது
அது கேலியாகப் போய் விட்டது. மறைந்த முதலமைச்சரவர்கள்
ஒரு பெண்ணைப் பற்றி தொடை தட்டிப் பேசினார்கள் என்று
சொன்னார்கள். அது கேடான, தப்பான சொல் என்று சொன்னேன்.
அது வேண்டாம், தயவுசெய்து குறிப்பேட்டிலிருந்து எடுத்து
விடலாம், அது கண்ணியக் குறைவான சொல் என்று சொன்னோம்.
இப்பொழுது இருக்கிற முதலமைச்சர் அவர்கள், அது இருக்கட்டும்
என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர்களே, இந்தச் சிலை திருட்டுக்களைத் தடுக்க, நமது அரசு, மகாபலிபுரத்திலுள்ள சிற்பப் பள்ளியில் உள்ள சிற்பிகளைக் கொண்டு இத்தகைய சிலைகளைப் போல் உலோகத்தாலும், கற்களாலும் சிலைகளைச் செய்து அவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பினால் திருட்டுக்களும் தடுக்கப்படும், அந்நியச் செலாவணியும் பெருகும். நாட்டுக்குப் பெருமையும் உண்டு. இதை அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வெளிநாட்டிலேயிருப்பவர்கள், தமிழகத்திலேயுள்ள சிலைகளைப் பார்த்து, பழைய சிலைகளைத்தான் விரும்புகிறார்களேயல்லாமல் அப்படிப்பட்ட சிலைகளை அல்ல. அதிலும், திருடிய சிலைகளை அவர்களும் விரும்புவதில்லை.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர்களே, இந்தச் சிலைகள் திருட்டுப்போவதிலிருந்து, தெய்வ சக்தியைவிட தங்கத்திற்கும், வெள்ளிக்கும் சக்தி அதிகம் என்பது வெளிப்படை. இதனால் இந்தத் திருட்டுக்களைத் தடுக்கும்படி தெய்வத்தின்பேரிலே விடுவதில் என்ன தவறு இருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பெரிய பக்தர்களைப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வி.

திரு. கே. விநாயகம் : தமிழ்நாட்டுக் கோயில்களிலே அடிக்கடி சிலை திருட்டுப் போகிறது என்று சொல்லி, அதைக் கண்டுபிடித்த பிறகு இது திருட்டுச் சிலை என்று நிரூபிக்கப்படுகிறது. எனவே, இதற்காக ஒரு 'இன்வெண்டரி ரெஜிஸ்தர்' வைத்து கோயிலில் இவ்வளவு சிலையிருக்கிறது, இன்ன மாதிரி சிலை என்று ஜாபிதாவை அந்தந்தக் கோயில் நிர்வாகத்திலே வைக்கப்படுகிறதா? அப்படி யென்றால் அது எந்தெந்தக் கோயில்களில் இருக்கின்றன? எந்தெந்தக் கோயில்களில் இன்னும் வைக்கவில்லை?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சிலைகள் மாத்திரம் அல்ல, கோயிலிலேயுள்ள அணிமணிகள்கூட ஆங்காங்குள்ள பட்டியலில் சேர்க்கப்பட்டு அடிக்கடி கணக்குப் பார்க்கப்படுகிறது. சோதனையிடப்பட்டுக்கொண்டும் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்

### வினாக்கள், தீர்மானங்கள் முதலியவற்றை அனுமதிப்பதில் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் தனக்குப் போதிய கேள்விகள் கேட்பதற்கு வாய்ப்புத் தரவில்லை என்ற



குற்றச்சாட்டைச் சொன்னார்கள். சென்ற நிதிநிலை அறிக்கை தொடர்க் கூட்டத்திலே எவ்வளவு கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன என்ற கணக்கை நான் கொடுக்கிறேன். 24 நாட்கள் சட்டப்பேரவை நடைபெற்று இருக்கிறது. அனுமதிக்கப்பட்ட மூலக் கேள்விகள் 598. சட்டமன்றத்தில் எவ்வளவு உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கு இந்த மன்றத்திலே இருப்பவர்களுக்குத் தெரியும். 598 கேள்விகள் என்றால் ஒவ்வொரு உறுப்பினருக்கும் எவ்வளவு கேள்விகள் வரும் என்றும் தெரிந்து கொண்டிருப்பார்கள். திரு. கோதண்டராமன் அவர்களுக்கு மட்டும் 35 கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு 221 கேள்விகளும், காங்கிரசுக்கு 230 கேள்விகளும், சுதந்திராவிற்கு 81 கேள்விகளும், கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்டு)-க்கு 50 கேள்விகளும், பி.எஸ்.பி-க்கு 12 கேள்விகளும், கம்யூனிஸ்டிற்கு 3 கேள்விகளும், எஸ்.எஸ்.பி-க்கு 1 கேள்வியும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கேள்விகள் மூலக் கேள்விகள். துணைக் கேள்விகளைப் பொறுத்தவரையில் 1,625 துணைக்கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு உறுப்பினருக்கும் 7 கேள்விகள் வர வேண்டும். அந்த முறையில் பார்த்தால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 959 கேள்விகள் வந்திருக்க வேண்டும். ஆனால் 541 துணைக் கேள்விகள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. காங்கிரஸுக்கு 343 கேள்விகள்தான் வரவேண்டும். ஆனால் 552 கேள்விகள் கேட்க வாய்ப்புக் கொடுக்கப் பட்டிருக்கின்றது. சுதந்திராவிற்கு 140 கேள்விகள் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் 168 கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்டு)-க்கு 70 கேள்விகள் கொடுத்திருக்க வேண்டும், ஆனால் 185 கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுபோல மற்றக் கட்சிகளுக்கும் விவரங்கள் இருக்கின்றன. இதிலே, ஓர் உறுப்பினருக்கு 7 கேள்விகள்தான் ஏற்கக்கூடிய ஒரு இடத்திலே திரு. கோதண்டராமன் அவர்களுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்டிருக்கும் துணைக் கேள்விகள் 81.

அடுத்து, இந்த 41-ம் விதியின்கீழ் கொண்டு வரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்காகக் கொடுக்கப்பட்ட அறிக்கைகள். சென்ற மு. ப. 11-00
முறை சட்டப்பேரவை 24 நாட்கள் நடந்திருக்கிறது. மொத்தம் 100 அறிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். இரண்டுக்கு மேல் அறிக்கைகள் கொடுக்கவேண்டுமென்றால் அதற்குரிய விதியைத் தளர்த்தவேண்டும். சென்ற முறை ஒவ்வொரு நாளும் விதியைத் தளர்த்திக் கொடுத்திருக்கிறோம். ஆக, அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 26, காங்கிரஸுக்கு 29, சுதந்திராவுக்கு 22, மார்க்ஸிஸ்டுக்கு மட்டும் 13, பி.எஸ்.பி. க்கு 6, கம்யூனிஸ்டுக்கு 2, தனியாருக்கு 2, திரு. கோதண்டராமன் அவர்களுக்கு மட்டும் 2 கொடுத்திருக்கிறோம். முறைப்படி திரு. கோதண்டராமனுக்கு 1/2 தான் வரலாம். ஆனால் அவருக்கு இரண்டு வந்திருக்கின்றன. ஆக, இதிலே திரு. கோதண்டராமன் அவர்களுக்கு பேரவைத் தலைவர் ஒரு பெரிய அநீதி இழைத்திருப்பதாக இந்த மன்றத்திலே

/1969 ஆகஸ்ட் 20

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அது இருக்க வேண்டுமென்று
நான் எப்பொழுது சொன்னேன்? அது குறிப்பில் இருக்கிறதா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர் சொன்னதாகத்தான்
ஞாபகம். குறிப்பிலிருப்பதை நீக்கவேண்டும். அது குறிப்பில்
வேண்டாமென்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அப்பொழுது
அவர், அது இருக்கட்டும் என்று சொன்னதாக ஞாபகம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நிரூபிக்
கின்ற ஆற்றல், அல்லது நிரூபிக்கின்ற தன்மை இவைகள் எதாவது
இருக்கவேண்டும். முதலிலே, முதலமைச்சரவர்கள் இருக்க
வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுவிட்டு,
நான் "எப்பொழுது அதைச் சொன்னேன், அதை நிரூபிப்பீர்
களா?" என்று கேட்டவுடனே, சமாளித்துக் கொண்டு,
அப்படிச் சொன்னதாக ஞாபகம் என்று சொல்வது எதிர்க்கட்சித்
தலைவர் அவர்களுக்கு முறையானதா என்பதைத் தயவுசெய்து
எண்ணிப்பார்க்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்
கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதைத்தான் திருப்பித் திருப்பிச்
சொல்கிறேன். ஞாபகம் இருக்கிறது என்று சொல்வதில் தவறில்லை
என்று சொல்கிறேன். அப்பொழுது முதலமைச்சராக இருந்த
அண்ணாதுரையவர்கள், பெண்ணினுடைய கொடையைப் பற்றிப்
பேசி இருக்கிறார்கள். அதை எடுத்துவிட வேண்டுமென்று நான்
சொல்லி இருக்கிறேன். அப்படி நான் சொல்லும்படியான சமயத்
திலே, இப்பொழுது இருக்கும்படியான முதலமைச்சர், அவர்களி
டத்திலே சொல்லி, இருக்கவேண்டுமென்றார். அல்லது இருந்
தாலும் பாதகம் இல்லை என்று சொன்னதாக ஞாபகம், இருந்தால்
தவறில்லையென்று சொன்னதாக ஞாபகம். ஆக, அது மாதிரி
வார்த்தைகள் எல்லாம் சபைக் குறிப்பிலே இருக்கும்படியான
சமயத்திலே, நேற்று சபாநாயகர் அவர்கள் நன்றியான முறை
யிலே அவையைக் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னார்கள்.
தானும் சபையினுடைய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது எதிர்க்கட்சித்
தலைவர் நேற்று இந்த சபை நிகழ்ச்சிக்குறிப்பிலிருந்து நீக்க
வேண்டுமென்று சொன்ன சொற்கள், அந்தத் தொடர்கள் மீண்டும்
வரவேண்டுமென்பதற்குத் திருப்பித் திருப்பிச் சொல்கிறாரோ,
அவை வேறு வழியிலே இடம் பெறுவதற்காக வழிவகை செய்
கிறாரா என்பதை நான் தெரிந்துகொள்ளவேண்டும். எதிர்க்
கட்சித் தலைவர் அவர்கள் இரண்டு கேள்விகள் கேட்டார்கள்.
அதற்கு நான் பதில் சொல்கிறேன். இந்த மாதிரி நீக்க வேண்டி
யவைகளைப் பற்றிய அந்த விதியை எடுத்துக்காட்டினார்கள். அந்த
விதிகள் எல்லாம் எனக்குத் தெரியும். முதலமைச்சரவர்கள்
சொல்லலாமா என்று கேட்டார்கள். இந்த அவையிலே எந்த
உறுப்பினராவது பேசுகிற நேரத்தில், அவர் பேசுவது இந்த



1969 ஆகஸ்ட் 20] [பேரவைத் தலைவர்]

அவையிலே கூறத்தகாத பேச்சுக்கள், சொற்கள் என்று படுமானால்,
இந்த மன்றத்திலே இருக்கிற ஒவ்வொரு உறுப்பினருக்கும்
அவற்றைப் பேரவைத் தலைவருக்குச் சுட்டிக் காட்டுவதற்கு உரிமை
இருக்கிறது. ஆக, அந்த உரிமையின்படி முதலமைச்சரவர்கள்
சொன்னார்கள். பேரவைத் தலைவர் கூறியது கூடவா? என்று
கேட்டார்கள். இதையெல்லாம் போட்டுவிட்டால், இந்த வாக்கு
என் வந்தது என்ற கேள்வி எழும். அதையொட்டி என்னென்ன
நடந்தது என்ற நிகழ்ச்சிகள் எல்லாம் வரும். ஆகையால்,
இடையிலே சில தவறான சொற்றொடர்கள், நிகழ்ச்சிகளைப்
பற்றிய சொற்றொடர்கள். அதையொட்டிய பகுதிகள் இவைகளை
நீக்க வேண்டி வரும். அந்த முறையிலே, மாண்புமிகு எதிர்க்
கட்சித் தலைவர் அவர்கள் கூறியது முறையற்றது என்றோ, அதை
யொட்டிப் பேரவைத் தலைவர் அவர்கள் கூறியது எல்லாம் முறை
யற்றது என்றோ யாரும் எண்ணிக் கொள்ளத் தேவையில்லை. அதை
யொட்டி முன்னும் பின்னுமாக நீக்கவேண்டிய இன்றியமையாத
நிலையிலேதான் நீக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்பொழுது தான் ஒரு பெரிய
பிரச்னையாக வளர்ந்துவிட்டது. சொற்களை நீக்குவதிலேகூட அது
நியாயமாக இருக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை முடிவு பண்ண
வேண்டியது பேரவைத் தலைவர். அது பார்லிமெண்டரியா,
அன்பார்லிமெண்டரியா என்று முடிவு செய்யவேண்டியது
பேரவைத் தலைவர்; இந்த மன்றத்திலே வழங்குவதற்கு ஏற்ற
சொல்லா, இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டியது
பேரவைத் தலைவருடைய பொறுப்பு. இவற்றை மன்றத்திலே
வழங்குவது முறையற்றது என்று பேரவைத் தலைவர் அவர்கள்
உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட தீர்ப்பைக் கூறி
இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, தங்க
ளுடைய நினைவுக்கு நான் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன்.
1957 முதல் இங்கே, சட்ட மன்றத்திலே, திராவிட முன்னேற்றக்
கழகம் எதிர்க்கட்சிக் குழுவாகப் பணியாற்றிய நேரத்தில், சட்ட
மன்ற உறுப்பினராக இருந்த திரு. நாகராஜ மணியகார் என்பவர்
முதல் நாள் பேசிய பேச்சு கழகத்தையும் மற்றவர்களையும் புண்
படுத்துகிற முறையிலே அமைந்தது என்பதற்காக, மறுநாள் சட்ட
மன்றத்திற்கு வந்த, அப்பொழுது நிதி அமைச்சராக இருந்த திரு.
சி. சுப்பிரமணியம் அவர்கள் அந்த பேச்சைப் பற்றிக் கேள்விப்
பட்டு, அதைக் குறிப்பாளர்கள் எல்லாம் எழுதிக்கொண்ட பிறகு,
அந்த முழுப் பேச்சினையும் ஏறத்தாழ 2 பக்க அளவுக்கு நீக்க
வேண்டுமென்று கோரி, எடுக்கப்பட்டது. திரு. சுப்பிரமணியம்
அவர்களுடைய வேண்டுகோளுக்காக அன்றைய தினம் அவ்வளவும்
எடுக்கப்பட்டது என்பதை நான் சபாநாயகருடைய கவனத்
திற்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கும்
கொண்டு வருகின்றேன்.

[பேரவைத் தலைவர்] [1969 ஆகஸ்ட் 20

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இருக்கும்படியான பிரச்னை என்னவென்றால், ஏதாவது தவறுதலாகப் பேசியிருந்தாலோ அல்லது உங்களைப் புண்படுத்தும்படியாகப் பேசியிருந்தாலோ அதை நீக்கவேண்டும் என்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. நானும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறேன். நான் சொல்வது எல்லாம், என்ன அபிப்பிராயம் இருக்கிறது என்றால், ஏதோ நேற்று நடந்த திலெல்லாம் தவறான வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டு விட்டது போலவும், சபாநாயகருக்கும் எனக்கும் நடந்த விவாதம் முற்றிலும் தவறான விவாதம் என்பது போலவும், நடந்தது பூரா வையுமே நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து எடுத்துவிடவேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நான் * * என்று சொல்லிவிட்டேன் என்று சொன்னார்கள். இது தர்மமா? * * என்பது எப்படி அன்பார்லிமெண்டரி வெர்டு ஆகும்? * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. கருத்திருமன் அவர்கள் தமிழ் படித்தவர்கள். நான் அவரைவிடக் கொஞ்சம் குறைவாகக் கூட படித்திருக்கலாம். ஆனால், எனக்கும் கொஞ்சம் தமிழ் தெரியும் எந்தச் சொல்லுக்கு எந்த நேரத்தில், எந்த வகையில், அதைக் கையாள்கிற முறையில் எப்படிப்பட்ட பொருள் என்பதையும்; கருத்திருமன் அவர்கள் உணர்வார்கள் * * என்ற சொல் எப்படி ஆளப்பட்டது என்றால், * * என்று சொன்னால் * * என்ன பொருள் என்பதை திரு. கருத்திருமன் அவர்கள் உணர்ந்திருக்கவேண்டும். சொல்லைக் கையாண்ட நிலையைக் கவனிக்கவேண்டும். எந்தத் தொடர், எந்த நேரத்தில், எந்த சூழ்நிலையில் எப்படி ஆளப்பட்டது என்பதைக் கவனிக்க வேண்டும். அந்தச் சொல்லை ஆண்ட முறை, ஆண்ட நேரம் தவறானது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : ஒருவரைப் பார்த்து * * என்று சொன்னால், எனக்கோ, திரு. கருத்திருமன் அவர்களுக்கோ கோபம் வாராதா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : நான் * * என்று சொல்ல வில்லை. இவ்வளவு நாட்களாக, இவ்வளவு வருஷங்களாக எதிர்க் கட்சித் தலைவர் சபையின் கண்ணியத்தைக் காப்பாற்றவேண்டும் என்ற முறையில் நடந்து கொண்டிருக்கிற நிலையில், என்னுடைய * * இப்படி இருக்கிறது என்றுதான் குறிப்பிட்டேன். என்னைவிட சபாநாயகர் அவர்கள் படித்தவர்கள், பட்டம் பெற்ற வர்கள். இந்த நிலையில் எந்த இடத்தில் தவறு என்று புரியவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் அதைத் தவறு என்று சொன்ன பொழுது கூட, நான் வருத்தப்படுகிறேன் என்று கூட சொன்னேன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இந்த நிகழ்ச்சியில் தாங்கள் ஆண்ட சொற்கள், ஆண்ட முறை இவற்றைப் பார்க்கிற நேரத்தில், நம்முடைய சட்டமன்ற விதிமுறைப்படி எதிர்க்கட்சித் தலைவர்

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க, அகற்றப்



1969 ஆகஸ்ட் 20] [பேரவைத் தலைவர்]

மீது ஒரு உரிமை மீறிய பிரச்னையை எழுப்பவேண்டிய ஒரு நிலையை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு உண்டாக்கக் கூடாது. 'பேரவைத் தலைவர் சபையின் கண்ணியத்தைக் காப்பாற்றுவார் என்று எதிர்பார்த்தேன்' என்று சொன்னால், பேரவைத் தலைவர் சபையின் கண்ணியத்தைக் காப்பாற்றவில்லை என்று பொருள்படும். அது பேரவைத் தலைவருக்கு இழுக்குத் தேடுவது ஆகும். சட்டமன்ற விதி முறைகளின்படி பேரவைத் தலைவருக்கு மாசு கற்பிக்கக்கூடாது. அது சட்டமன்ற விதிமுறைகளின்படி உரிமை மீறிய பிரச்னையாகும், அப்படிப்பட்ட ஒரு நிலையை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குக் கொண்டுவரக்கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தை மனதில் வைத்துத்தான் நான் இதைச் சொல்கிறேன். வேறு ஒன்றுமில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : அதே மாதிரி முதல் அமைச்சர் அவர்களும் உரிமையை மீறியிருக்கிறார்கள், அவர்கள் மீதும் உரிமைப் பிரச்னை வரும். பூராவும் எக்ஸ்பஞ்ச் செய்துவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அதாவது தலைவர் அவர்கள் கூறியதும் அன்பார்லிமெண்டரி என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். பூராவையும் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடவேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னால், தலைவர் அவர்களும் தவறாகப் பேசியிருக்கிறார்கள் என்று தானே பொருள்படும்? ஆகவே, எங்கள் இரண்டு பேர்கள் பேரிலும்தான் உரிமைப் பிரச்னை இருப்பதாகக் கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர். இந்தச் சபையின் நடவடிக்கைகளைப் பற்றி கருத்து தெரிவித்துக் கொள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிமை இருப்பது போலவே நானும் தெரிவித்துக்கொண்டிருக்கிறேன். நான் உரிமையை மீறியிருக்கிறேன் என்று சொன்னதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் திரும்பப் பெறவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : உரிமைப் பிரச்னை இவர்கள் மீது வராது என்று சொல்கிறார்கள். அவர் மட்டும் சொல்லலாம், நான் மட்டும் சொல்லக் கூடாதா? அப்படி தைரியம் இருந்தால் என் மீது உரிமைப் பிரச்னை எடுங்கள். எனக்கு ஒன்றும் பயம் இல்லை. தைரியமாக நேற்று பேசிய பேச்சையெல்லாம் எடுத்து வைத்து, என் மீது உரிமைப் பிரச்னை எடுங்கள். அது ஜனநாயக முறைக்குக் கட்டுப்பட்டதாகும். என்னுடைய உரிமையை நான் சரியான முறையில் தான் பிரயோகித்திருக்கிறேன். என்னை ஒருவர் காப்பாற்றவேண்டும் என்ற நிலையில் நான் இல்லை. அப்படி உரிமைப் பிரச்னை எடுக்கவேண்டுமென்றால், பேசின பேச்சு பூராவையும் வைத்து எடுங்கள் . . .

(சில உறுப்பினர்கள் : பாயிண்டு ஆப் ஆர்டர்)

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், முதல் அமைச்சர் உரிமையை மீறி இருக்கிறார் என்று அழுத்தம் திருத்தமாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். நான் எப்படி உரிமையை மீறியிருக்கிறேன் என்று அவர் நிரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால், இதை அவர் திரும்பப் பெற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 'சட்டமன்றத்தில் பல ஆண்டுகளாகப் பணி புரிந்திருக்கிறேன், கொறடாவாகப் பணிபுரிந்திருக்கிறேன், நாடாளுமன்றத்தில் பணி புரிந்திருக்கிறேன்' என்றெல்லாம் சொன்னார். அப்படிப் பணி புரிந்திருந்தும், இந்தச் சட்டமன்ற நடைமுறை விதிகளின்படி முறையாக இந்தச் சட்டமன்றத்தை நடத்திச் செல்வதற்குப் பேரவைத் தலைவருக்கு அவர் துணை புரியவில்லை என்று தான் சொன்னேன். சட்டமன்றத்தில் முறை மீறிய நேரத்தில் அதைச் சுட்டிக்காட்டும் உரிமை ஒவ்வொரு உறுப்பினருக்கும் இருக்கிறது. முதல் அமைச்சராக இல்லாதபோதிலும் கூட, தனிப்பட்ட உறுப்பினர் என்ற முறையில் அவர்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. அப்படி சுட்டிக்காட்டுவது எப்படி உரிமை மீறியது ஆகும், எந்த விதியை அவர்கள் மீறியிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும். மீறாத ஒன்றை மீறியதாகக் கூறுவது தவறு.

அதே நிலையில் மீண்டும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதல் அமைச்சர் அவர்கள் அப்படிச் சொன்னதால் பேரவைத் தலைவர் சொல்லியது அவ்வளவும் அன்பார்லிமெண்டரி தானா என்று கேட்டார். நான் அதற்கு விளக்கம் கொடுத்தேன். இடையிலே சில சொற்றொடர்களை நீக்குகின்ற நேரத்தில், அந்த சொற்றொடர்களை ஒட்டி வருகிற, முன்பின் வருகிற சொற்றொடர் களையும் நீக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்ட காரணத்தினால்தான் பேரவைத் தலைவர் கூறியது, நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் கூறியது அவ்வளவையும் நீக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கடைசியாக நான் இன்னொன்றையும் சொல்லிவிடுகிறேன். விதி முறைகள் இருக்கின்றன. எந்தத் தீர்ப்பைப் பேரவைத் தலைவர் அவர்கள் சொல்கிறாரோ, அந்தத் தீர்ப்பே முடிவானது. இது பார்லிமெண்டரியா, அன்பார்லிமெண்டரியா என்று முடிவு செய்ய வேண்டிய உரிமை பேரவைத் தலைவருக்கு இருக்கிறது. தவறாகக் கூட முடிவு எடுத்திருக்கலாம். பேரவைத் தலைவர் ஒரு முடிவு எடுத்துவிட்டால் அதுதான் முடிவு. அதுதான் சட்டமன்ற விதிமுறை. அந்த விதிமுறை வேண்டாமென்றால் அதை மாற்ற வேண்டும். இப்பொழுது இருக்கிற விதிமுறைகள் அப்படித் தான் இருக்கின்றன. அந்த விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பது இந்த மன்றத்தின் ஒவ்வொரு உறுப்பினருடைய தலையாய கடமையாகும். அதுவும் எதிர்க்கட்சித் தலைவரின் மிகத் தலையாய கடமையாகும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நல்ல முறையில்





பணிபுரிந்து, எனக்குத் துணையாக இருந்து, தமிழ்நாட்டு சட்டமன்றத்தின் மாண்பையும், பெருமையையும் காப்பாற்றவேண்டும் என்று நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், நேற்று நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி இன்று காலை 10 மணி முதல் இப்பொழுது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவைத் தலைவர் அவர்கள் இப்பொழுது சொன்னார்கள், அது அவைத் தலைவர் ஒரு தீர்ப்பு கொடுத்துவிட்டால், பிறகு அதைப்பற்றி எந்தவிதமான கருத்தும் சொல்லக்கூடாது என்று விதிமுறைகள் இருக்கிற நேரத்தில், இந்த அவையின் நேரத்தை அதற்காக இவ்வளவு செலவழிப்பது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். சட்டப்பேரவை நடைமுறை விதிகளில் எந்த விதியின் அடிப்படையில் இப்பொழுது நடக்கக்கூடிய விவாதம் இருக்கிறது என்பதை அருள் கூர்ந்து தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 235-வது விதியின்கீழ் குறிப்பேட்டிலிருந்து சில பகுதிகளை நீக்கியதைப் பற்றி விளக்கம் கேட்டிருக்கிறார். அதற்கு நான் தீர்ப்பு அளித்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நேற்றைய தினம் உபயோகப்படுத்தப்பட்ட ஒரு சொற்றொடரை மையமாக வைத்து நடைபெற்ற இன்றைய விவாதத்தில் தாங்கள் நீக்கவேண்டும் என்று ஆணையிட்ட அதே சொற்றொடரை இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பல முறை உபயோகித்திருக்கிறார்கள். இது சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பில் அப்படியே இருப்பதற்கு அனுமதிக்கப்படுமா அல்லது இது எடுத்துவிடப்படுமா என்பதைப் பற்றித் தங்கள் தீர்ப்பு அளிக்கவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இப்பொழுது தான், தாங்கள் கொடுத்த தீர்ப்பு தவறாக இருந்தாலும் சரியே, அதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொல்லிவிட்டீர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் தடம் புரட்ட வேண்டியதில்லை. நான் கொடுத்த தீர்ப்பு தவறு என்று நான் ஒப்புக்கொண்டதாக ஒரு நிலை ஏற்படுத்தப் பார்க்கிறீர்கள். பேரவைத் தலைவர் ஒரு நேரத்தில் கொடுக்கிற தீர்ப்பு தவறாக இருந்தாலும் அவர் அளித்த தீர்ப்பு, முடிவான தீர்ப்பு தான் என்பது சட்டமன்ற விதிமுறைப்படி ஏற்படுகிறது. நான் கொடுத்த தீர்ப்பு தவறு என்று நானே ஒத்துக்கொள்ளும்படி செய்துவிடலாம் என்று திரு. கருத்திருமன் அவர்கள் நினைத்தால், அந்த அளவுக்கு ஏமாறக்கூடிய ஒருவர் பேரவைத் தலைவராக

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : அவர்கள் முதலிலே சொன்னது, மலிவான சரக்கு, விலைபோகாத சரக்கு என்பதாகத்தான் பத்திரிகைகளிலே வந்தது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : "'மலிவான', 'விலை போகாத' சரக்கு என்று நான் கூறவில்லை" என்று அன்றைவே கூறியிருக்கிறார்கள். "ஒரு பெண் தொண்டையைத் தட்டிப் பேசினார் என்றால், அவ்வளவு வலிவான தொண்டை அவர்களுடையது என்று சொன்னதாகவும், பத்திரிகைகளில் அதைத் திருத்திப் போட சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்" என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

## 4. நடைமுறைக் கேள்வி

### பேரவைத் தலைவர் அறையில் அளித்த தீர்ப்பு குறித்து.

THIRU T. MARTIN : On a point of order, Sir, Give me two minutes to explain my point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : எந்த விதியின்கீழ் எழுப்பு கிறீர்கள் ?

THIRU T. MARTIN : Under Assembly Rules . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அதிலே, எந்த விதி மீறப் பட்டிருக்கிறது ?

THIRU T. MARTIN : I will bring it under the Assembly Rules. If it is not permissible, you can rule it out.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அப்படியில்லை; நீங்கள் சொல் லுங்கள் ; எந்த விதி மீறப்பட்டிருக்கிறது என்று முன்னால் சொல்லி விட்டு, பாயிண்டைச் சொல்லுங்கள்.

THIRU T. MARTIN : I shall explain. Just now I was given to understand that whatever takes place inside your Chamber cannot be a matter for a proceeding here inside this Assembly. You are the elected Speaker of this august Assembly and you hold all the privileges and powers of this Assembly so long as you are continuing as Speaker of this Assembly. Wherever you go, in whichever place you are, if anybody shows disrespect to you as Speaker, naturally this House will take it as a serious matter and it will be a matter of privilege inside the House and it could be debated inside this House. That is why I want to know from the Hon. Speaker, whether when you give a ruling inside your Chamber, you cease to be Speaker. I want you to give your ruling on that. In other wards, suppose you give a certain ruling inside your Chamber regarding a notice under Rule 41 or 42, whatever it may be, when you give such a ruling, do you cease to be Speaker? When you exercise your power inside your Chamber, am I to understand you are the Speaker or you are the Speaker when you are sitting in the Chair inside the Assembly alone?





**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. மார்ட்டின் அவர்கள் ஒரு வழக்கறிஞர்; படிக்கப் பார்க்கிறார். நம்முடைய சட்ட மன்ற விதி முறையில் பேரவைத் தலைவர் அறையில் கொடுக்கப்பட்ட தீர்ப்புக் களை அவையில் விவாதிக்கக் கூடாது என்று இருக்கிறது. திரு. மார்ட்டின் அவர்கள் அறையில் எனக்குப் பதவியிருக்கிறதா, அதிகாரம் இருக்கிறதா என்று கேள்வி போடுகிறார்கள். அந்த விதிமுறையைப் போட்டவர்களிடம் திரு. மார்ட்டின் அவர்கள் அதைக் கேட்டுவிட்டால் நன்றாக இருக்கும்.

## 5. கவன ஈர்ப்பு

### )கிழக்குத் தஞ்சையில் டிராக்டர்களைப் பயன்படுத்த எதிர்ப்பு

**திரு. கரு. சீமைச்சாமி** : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின் கீழ்,

கிழக்கு தஞ்சை நிலச்சுவான்தார்கள் டிராக்டர்களை பயன் படுத்துவதற்கு எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் பீதி யடைந்துள்ளதை முன்னிட்டு அரசு விவசாயிகளுக்குத் தகுந்த பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

* THIRU N. S. V. CHITHAN : I wish to call the attention of the Hon'ble Chief Minister to a matter of urgent public importance, namely; the need for affording necessary protection to the farmers who are scared as a result of the opposition to the utilisation of tractors by the landlords of East Thanjavur.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: பேரவைத் தலைவர் அவர்களே,
தஞ்சாவூர் மார்க்ஸிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு, நன்னிலம்
வட்டத்தைச் சேர்ந்த பேரளத்தில் 13—7—1969 அன்று கூடி, மு. ப. 10-30
கீழ்த் தஞ்சாவூர் மாவட்டத்தில் மார்க்ஸிஸ்டுகள் நடத்த
எண்ணிய "டிராக்டர் எதிர்ப்புக் கிளர்ச்சி" குறித்து விவாதித்தது.
நாகப்பட்டினம் வட்டத்தைச் சேர்ந்த வலிவலம், பெரியதம்பூர்,
திருத்துறைப்பூண்டி வட்டத்தில் உள்ள பம்மந்தூர், பணங்குடி,
ஆலத்தம்பாடி, நன்னிலம் வட்டத்தில் உள்ள திருக்கொட்டாரம்,
மாயூரம் வட்டத்தில் உள்ள ஆக்கூர், மன்னார்குடி வட்டத்தைச்
சேர்ந்த தேவங்குடி ஆகிய இடங்களில் உள்ள நிலக்கிழார்
களுக்குச் சொந்தமான டிராக்டர்கள் பயன்படுத்தப்படுவதைத்
தடுக்க வேண்டும் என்று அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.
மார்க்ஸிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் பத்து பேர்
கொண்ட தொகுதியாக 25-7-1969 முதல் 30-7-1969 வரையில் ஆறு
நாட்களுக்கு ஒவ்வொரு நில உடைமையாளரின் டிராக்டர் விட்டு
வைக்கும் கொட்டகைகளுக்கு முன்பாக நின்று கொண்டு
டிராக்டர்கள் பயன்படுத்துவதைத் தடைசெய்ய வேண்டும்
என்றும் அப்போது முடிவு செய்யப்பட்டது. மேலும், ஒரு

இருக்கமாட்டார். அப்படிப்பட்ட பேரவைத் தலைவரை இந்த மன்றம் தேர்ந்தெடுத்திருக்காது. அப்படிப்பட்ட ஏமாளிகள் அல்ல சட்டமன்ற உறுப்பினர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, விதியின் படி சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு கொடுத்துவிட்டால், அது அன்அக்ஸெப்டபிளாக இருந்தாலும், ஏதுவாக இருந்தாலும் அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். நேற்று, நான் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டு வருகிறேன் என்று சொன்னபொழுது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி மறுபடியும் இப்பொழுது பேசத் தேவையில்லை. நேற்றே அது முடிவான விவகாரம், கொடுத்த தீர்ப்பு முறையானது, எக்ஸ்பஞ்ச் செய்தது. இவைபற்றியெல்லாம் இப்பொழுது பேசியாகி விட்டது. நேற்று இங்கு என்ன பேசப்பட்டது, நேற்று என்ன நீங்கள் மறுத்தீர்கள் என்பதைப்பற்றியெல்லாம் இப்பொழுது மறுபடியும் ஒருமுறை பேசுவது முறையாகாது என்று சொல்லிவிடுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** 'எக்ஸ்பஞ்ஜ்' பண்ணியதில், பூராவையும் எக்ஸ்பஞ்ஜ் செய்தது சரியா என்றுதான் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது பற்றித் தீர்ப்புக் கொடுத்தாகிவிட்டதே.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உரிமைப் பிரச்னை என்று ஏதோ சொன்னீர்களே என்று கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று, அப்படிச் சொன்னதாகச் சொன்னேன். பேரவைத் தலைவர் கண்ணியமாக நடப்பார் என்று எதிர்பார்த்தேன் என்று சொல்லும்போது, பேரவைத் தலைவர் அப்படி நடக்கவில்லை என்பது தொக்கியிருக்கிறது. அதைத்தான் வள்ளுவர்,

'நயன் இலன் என்பது சொல்லும் பயன்இல
பாரித்து உரைக்கும் உரை'

என்று சொன்னார். வள்ளுவர் வழியில் வந்த நாம் அதைப் புரிந்து கொள்ளவேண்டும். (குறுக்கீடு) ஆமாம். அதைத்தான்,

'பேதமை ஒன்றோ பெருங்கிழமை என்று உணர்க
நோதக்க நட்டார் செயின்'

என்று உரிமையோடு சொல்லியிருக்கிறார் வள்ளுவர். ஆகவேதான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அந்தக் காரணத்தால், அவர்களுக்குப் பெருமை தரவேண்டும், இழுக்கு வரக்கூடாது என்பதற்காகச் சொன்னேன், இப்பொழுது எழுப்பிய கேள்வி, முழுவதையும்



நீக்கியது சரிதானா என்பது, அதற்கு தீர்ப்புக் கொடுத்தாகி விட்டது. ஆக இந்த நிகழ்ச்சியை இந்த அளவோடு நிறுத்தி விட்டு . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, தாங்கள் 'வாய்மை' பற்றியும் கவனிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுவும் தெரியும். மறுபடியும் சொல்லுகிறேன். அந்த இடத்தில் பேசியதைப் பற்றி திரு. கருத்திருமன் சொன்னார்கள். பல நேரங்களில், எதிர்க் கட்சித் தலைவர் இங்கே சொல்லும் பல்வேறு கருத்துக்களை, நான் சபையின் நிகழ்ச்சியாக ஏற்றுக் கொள்வதானால், அது எவ்வளவு தகுதியற்றதாக இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆகவே, நான் அங்கேயும் எந்த வாக்குறுதியும் கொடுக்கவில்லை. 'நாளைக்கு எடுத்துக்கொள்ளுகிறேன்' என்று சொன்னேன். நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னால், இங்கே நம்முடைய அவையில் எடுத்துக் கொள்கிறேன் என்று பொருள் இல்லை. ஆகவே, அதை அவைக்குக் கொண்டுவருகிறேன் என்ற உறுதி மொழி எதுவும், நான் கொடுக்கவில்லை. ஆகவே, நான் ஏதோ உறுதிமொழியை மீறியதுபோல் என்மீது பெரிய குற்றம் சாட்ட இடமில்லை. வாய்மை பற்றி நன்றாகத் தெரிந்தவன்தான் நான். ஆகவே, இந்த நிகழ்ச்சிக்கு இதோடு முற்றுப்புள்ளி வைத்து விடுவதுதான் எதிர்க் கட்சித் தலைவருக்கு அழகாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அண்ணா அவர்களைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் ஒன்றைச் சொன்னார்கள், தன்னைப் பற்றிப் பத்திரிகைகளில் தவறாக வரும் என்று சொன்னதாகச் சொன்னார்கள். அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், "நாம் பேசாத வாக்கியத்தைத் தங்கள் பத்திரிகையிலே வெளியிட்டிருப்பதும், அதை வைத்துக்கொண்டு மற்ற பத்திரிகை விமரிசனம் எழுதுவதும் இரண்டு பிரச்னைகளும் உரிமைப் பிரச்னைகளின் கீழே வரும்" என்று சொல்லியிருக்கிறார்கள். அது நம்முடைய சட்டமன்றக் குறிப்பேட்டில் வந்திருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அது இரண்டாவது நிகழ்ச்சி. முதலிலே பேசியதிலே, அவையில் பேசும்போது, ஒரு பேச்சாளர் தொடை நடுமையானது, வலிமையானது என்று சொன்னார்கள். இல்லாவிட்டால் எதற்கும் குறிப்பை எடுத்துப் பார்க்கட்டும். [illegible] தயார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது நம்முடைய அண்ணா குறிப்பிட்டதாக ஒரு எதிர்க் கட்சித் தலைவர், விஷயத்தைப்பற்றிச் சொன்னார்கள். அது சட்டமன்ற வெளியீட்டில் ஆகஸ்ட் 31-ம் தேதி, சனிக்கிழமை, பணித்துறை வெளியீடு, 717-ம் பக்கத்தில், நடவடிக்கையாக வெளிவந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்தக் கிளர்ச்சி நின்றுவிட்ட காரணத்தினாலும், இப்போது டிராக்டர் தாராளமாகப் பயன்படுத்தப்படுகிறபடியாலும், கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கவேண்டியதில்லை என்று அரசாங்கம் கருதியது.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, இனிமேல் டிராக்டர் எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபடுவது இல்லை என்ற வாக்குறுதியை அவர்கள் தந்தார்களா? அப்படி வாக்குறுதி கேட்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வாக்குறுதி எதையும் பெற்றுக்கொண்டு கிளர்ச்சிக்காரர்களை விடுவிக்கவில்லை. டிராக்டர் எதிர்ப்புக் கிளர்ச்சி நின்றுவிட்டபடியாலும், டிராக்டர்கள் தாராளமாகப் பயன்படுத்தப்படுவதாலும், கிளர்ச்சிக்காரர்களின் தலைவர்கள் இதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியபடியாலும் கிளர்ச்சிக்காரர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

### (ii) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம்.

DR. H. V. HANDE: I call the attention of the Hon. Minister for Education and Health to a matter of urgent public importance, namely, the strike by the Chingleput Medical College students from 28—7—1969 on account of their apprehension that the training given to them is inadequate as they do not have enough number and variety of cases to enable them to receive training on a par with the students of other medical colleges and the need to implement the observations made by the Indian Medical Council when the Council inspected the Chingleput Medical College sometime back and give the students alternative clinical training in the City medical colleges.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN: Sir, the apprehension of the students that the training given to them is inadequate as they do not have enough number and variety of cases to enable them to receive training on a par with students of the other Medical Colleges, is ill-founded. On a careful examination it is observed that the facilities available at the Chingleput Medical College Hospital by way of—

1. Clinical Material (Number and variety of cases);
2. Equipment in the various sections of the hospital; and
3. Academic staff in charge of the various sections (their qualifications and experience) are quite adequate for the training of the under-graduate students and satisfactorily meet the requirements set out by the Medical Council of India. However, the



students of the Chingleput Medical College will be given supplemental training in the City Medical Institutions for a period of 15 days in each of the following—

1. Ophthalmology—during the 2nd year of clinical studies.
2. Radiotherapy }
3. Orthopaedics } during the final year of study.
4. Psychiatry }

This supplemental training is only by way of abundant caution to ensure that the under-graduate students do not miss any necessary part of the training which their fellow-students of the City medical colleges get.

There has been no inspection of the Chingleput Medical College so far by the Medical Council of India and as such, the need to implement the observations made by them does not arise. There have been three inspections so far by the Commissions appointed by the University of Madras. The first commission inspected the hospital and college in 1964, before the commencement of the Condensed MBBS Course and after considering their report, the University of Madras permitted the commencement of the Condensed MBBS Course from January 1965, for 80 annual admissions. Then the second inspection was in July 1966 and based on their report, the University of Madras permitted the commencement of the Second Integrated MBBS Course at the Chingleput Medical College. The third inspection was in January 1968, and based on their report the University of Madras permitted the commencement of the clinical courses (III Integrated MBBS onwards) for the regular MBBS students at the Chingleput Medical College with effect from January 1968. The recommendations made by the last inspection commission were for certain improvements, which have been and are being implemented to the extent necessary for 50 annual admissions at the Chingleput Medical College. The recommendations made by the Commission were for an anticipated increase in admissions to 100 in the number of annual admissions at the Chingleput Medical College, which is not contemplated at present.

There is no need for giving alternative clinical training for the students of the Chingleput Medical College in the City Medical Colleges except for the supplemental training mentioned above. It is a known fact that the Chingleput Medical College Hospital has

grown in popularity and is attracting more and more patients as evidenced by the figures given below:—

| | 1965 | 1966 | 1967 | 1968 |
|---|---|---|---|---|
| Total number of attendance at out-patient .. | 130,407 | 208,560 | 207,707 | 307,448 |
| Average number of in-patients per day .. .. | 300 | 344 | 481 | 490 |
| Number of operations done in the Main Theatre .. | 1,056 | 1,566 | 1,435 | 1,557 |
| Number of patients in Surgical wards .. .. | 2,720 | 2,948 | 3,404 | 4,915 |
| Daily average attendace at Eye out-patient .. | .. | 69 | 87 | 98 |

The students of the College have informed the Principal on 7—8—1969 that they have called off the strike and would be attending classes from 11—8—1969. Six students of the II Integrated MBBS Course, four students of the III Integrated MBBS Course and fifteen (students of the I Integrated MBBS Course attended classes on 11—8—1969 forenoon. It has been ascertained from the Director of Medical Education that more than 90 per cent of the students have attended the classes on 19—8—1969.

DR. H. V. HANDE : Sir, while we are happy that the students have attended their lasses, will the Ministry examine the basic problems of the students, viz., the absence of adequate quality cases? Of course, a number of cases of operations are registered there but the cases of major operations which are performed in the General Hospital or other hospitals may not be available there and we have already made representations in that regard. In view of that, will the Minister make proper assessment of the whole matter and pay surprise visit there? Usually the Director of Medical Education informs in advance when he is going to visit the hospital and at the time of visit the beds will be filled up. So, will the Hon. Minister pay a surprise visit or issue instructions to the Director of Medical Education to pay a surprise visit? Also, will the Hon. Minister post some senior doctors there so that their very presence will attract patients of particular quality which is required by the students? So, will the Hon. Minister take a decision to post some senior doctors with good reputation and ask them to stay there itself and they need not go from Madras to Chingleput every day?

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Now I am studying the problem. I am going to have a discussion with the Director of Medical Education and after discussion with him, I will take necessary action in the matter.



2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ii) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு 1969-ம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) மசோதாவைச் சட்டப் பேரவைமுன் அறிமுகம் செய்வதற்கும், அம்மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிவித்துக் கொள்ளுகிறேன்.

6. அரசினர் மசோதாக்கள்.

(i) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) மசோதா.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I beg to move for leave to introduce the Tamil Nadu Contingency Fund (Amendment) Bill, 1969.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(ii) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு அகதிகள் (நீதிமன்ற நடவடிக்கைகள் தடுப்பு) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1969-ம் ஆண்டு அகதிகள் (நீதிமன்ற நடவடிக்கைகள் தடுப்பு) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, நான் இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(iii) 1969-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல்) (தமிழ் நாடு திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, 1969-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ் நாடு திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

நாளைக்கு, குறிப்பிட்ட ஓர் இடத்தில் பத்துத் தொண்டர்கள் மட்டுமே கைது செய்யப்பட முன்வர வேண்டும் என்றும், அந்த நாட்களில் வருவாய்க் கோட்ட அதிகாரிகளின் அலுவலகத்திற்கு முன்பும், கும்பகோணம், தஞ்சாவூர், சீர்காழி, பாபநாசம், ஒரத்த நாடு ஆகிய இடங்களில் உள்ள வட்ட அலுவலகங்களுக்கு முன்பும் மறியல் செய்யப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. பின்னர், தங்கள் கிளர்ச்சித் திட்டத்தை முன்னதாகவே தொடங்கி விடுவதென முடிவுசெய்து, டிராக்டர்கள் பயன்படுத்துவதற்கு எதிரான கிளர்ச்சியை 22—7—1969 முதல் தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

கீழ்த் தஞ்சாவூர் மாவட்டத்தில் கலவர நிலை மூண்டதன் காரணமாக, காவல் துறை, வருவாய்த் துறை அதிகாரிகளின் கூட்டம் ஒன்று மாவட்ட ஆட்சித் தலைவரால் 19—7—1969 அன்று நாகப்பட்டினத்தில் கூட்டப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலவிய சட்ட ஒழுங்கு நிலைமை, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துவதற்காகக் காவல்துறை, வருவாய்த் துறைகளினால் செய்யப்பட்ட ஏற்பாடுகள், ஊதியத் தகராறுகளைத் தீர்த்து வைத்தல், மார்க்ஸிஸ்டுகளின் டிராக்டர் எதிர்ப்புக் கிளர்ச்சி முதலியவைகுறித்து அக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டன. டிராக்டர் பயன்படுத்தப்படுவது தடுக்கப்படும் நேர்வுகளில் கண்டிப்பான நடவடிக்கை எடுத்து, அத்தகைய கிளர்ச்சிகளை ஒடுக்குமாறும், கிளர்ச்சி செய்தவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுத்து, எந்த ஒரு சூழ்நிலையிலும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துமாறும் வருவாய்த் துறை, காவல் துறை அதிகாரி களுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்) டிராக்டர் எதிர்ப்புக் கிளர்ச்சியை 22—7—1969 தேதியிலிருந்து தொடங்கி 28—7—1969 வரை தொடர்ந்து நடத்தினர். டிராக்டர் எதிர்ப்புக் கிளர்ச்சி காலத்தில் கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் 21 மகளிர் உட்பட 282 மார்க்ஸிஸ்ட் உழவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள்மீது வழக்குகள் பதியப்பட்டுள்ளன. 28—7—1969 தேதிக்குப்பிறகு டிராக்டர் எதிர்ப்புக் கிளர்ச்சி ஏதும் நடைபெறவில்லை.

டிராக்டர்கள்கொண்டு உழுவதை அல்லது பிற வேளாண்மை நடவடிக்கைகளை மறியல் செய்வதற்காகப் பல்வேறு கிராமங்களி லிருந்து உழவர் பலர் திரண்டு ஊர்வலமாக வயல்களை நோக்கிச் செல்வார்களென்றும், அங்கு வன்முறைச் செயல்கள் நிகழலா மென்றும் தெரியவந்ததாலும், ஊர்வலங்கள், கூட்டங்கள் ஆகிய வற்றை முறைப்படுத்தி ஒழுங்குற நடைபெறச் செய்ய வேண்டிய அவசியம் இருந்ததாலும், நாகப்பட்டினம், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் நாகப்பட்டனம், மாவட்ட துணை ஆட்சித் தலைவரைக் கலந்தாலோசித்து காவல்துறை சட்டம் 30 (2) பிரிவின் கீழ் ஆணை ஒன்றைப் பிறப்பித்தார். 24—7—1969 தேதியிலிருந்து





15 நாட்களுக்கு வலிவலத்திலும், 3 மைல் தொலைவுக்குள் அண்மை யிலுள்ள பிற கிராமங்களிலும் கூட்டம் நடத்தப்படுவதை அந்த ஆணை முறைப்படுத்தியது. திருத்துறைப்பூண்டி காவல் துறை துணைக் கண்காணிப்பாளரும், மன்னார்குடி வருவாய்க் கோட்ட அதிகாரியைக் கலந்தாலோசித்து 27—7—1969 தேதியிலிருந்து வலிவலம் காவல் நிலையத்தின் எல்லைகளிலிருந்து 3 மைல் தொலைவுக்குள் செயல்படுவதற்கான இதேபோன்றதொரு ஆணையை பிறப்பித்தார்.

30—7—1969 தேதியன்று திருவாரூரில் நடந்த கூட்டத்தில் மார்க்ஸிஸ்ட் கட்சித் தலைவர்கள் காவல் துறைச் சட்டத்தின் 30(2) பிரிவின்கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணை ரத்து செய்யப்படுகிற வரையில் 1—8—1969 தேதியிலிருந்து அந்த ஆணையை மீறி நடப்ப தென்றும் ஒவ்வொரு நாளும் 25 தொண்டர்கள் கிளர்ச்சியில் பங்கு கொள்ளுவதென்றும் முடிவுசெய்தனர். இந்தத் தீர்மானத்தின் படி திருவாரூரைச் சேர்ந்த திரு. பி. எஸ். தனுஷ்கோடி, எம்.எல்.ஏ. அவர்கள் 23 உழவர்களுடன் சேர்ந்து 1—8—1969 தேதியன்று நாகப்பட்டினம் வட்டத்தில் வலிவலம் அருகே கீழ்ப்பாடு கிராமத்தில் காவல் துறைச் சட்டத்தின் 30(2) பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணையை மீறினர். அவர்கள் 24 பேர்களும் காவல் துறைச் சட்டத்தின் 143, 32 பிரிவுகளின்கீழ் குற்றம் செய்ததாகக் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். வலிவலம் பகுதியில் 2—8—1969 தேதியன்று செல்லூர் கிராமத்தில் 18 பேரும், 3—8—1969 தேதியன்று அனந்தபுரம் கிராமத்தில் 21 பேரும் கைது செய்யப்பட்டனர்.

4—8—1969-ல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை.

5—8—1969-ல் கீராங்குடி கிராமத்தில் 10 பேர்களும்,

6—8—1969-ல் வலிவலம் கிராமத்தில் 40 பேர்களும்,

7—8—1969-ல் வலிவலம் கிராமத்தில் 14 பேர்களும்,

ஆக 127 பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டுகள் நடத்திய டிராக்டர் எதிர்ப்புக்
கிளர்ச்சி நின்றுவிட்டது. தற்போது இந்த மாவட்டத்தில் டிராக்
டர்கள் தாராளமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

ஆகஸ்ட் 16, 1969-ம் தேதியிட்ட உள்துறைக் குறிப்பாணை எண்
122526/சிறை-சிறப்பு/1969-ல் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டுகளால்
நடத்தப்பட்ட டிராக்டர் எதிர்ப்புக் கிளர்ச்சியினால் கைது செய்யப்
பட்ட நபர்கள் அனைவரையும் விடுவிக்கும்படி அரசு உத்திர
விட்டுள்ளது.

**திரு. கரு. சீமைச்சாமி:** தலைவர் அவர்களே, டிராக்டர்
எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபடுபவர்களின்மேல் கடுமையான நட
வடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டும், அரசாங்
கம் கிளர்ச்சியாளர்களின்மேல் கடுமையாக நடவடிக்கை எடுத்துக்
கொள்ளாமல் விட்டுவிட்டதற்குக் காரணம் என்ன?

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 ஆகஸ்ட் 20

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, நான் இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

**(iv) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (இரண்டாம்**
மசோதாவை அறிமுகம்செய்ய அனுமதி கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1969-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (இரண்டாம் திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நான் இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

### 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(iii) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு மின்சக்தி (பயன்படுத்துவதற்கு வரி விதித்தல்) திருத்த மசோதா.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ் நாடு 1969-ம் ஆண்டு மின்சக்தி (பயன்படுத்துவதற்கு வரி விதித்தல்) திருத்த மசோதாவைச் சட்டப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

### 6. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி

**(v) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு மின்சக்தி (பயன்படுத்துவதற்கு வரி விதித்தல்) திருத்த மசோதா.**

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1969-ம் ஆண்டு மின்சக்தி (பயன்படுத்துவதற்கு வரி விதித்தல்) திருத்த மசோதாவை அறிமுகம்செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.



1969 ஆகஸ்ட் 20]

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:** தலைவர் அவர்களே, நான் இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

### 7. 1965-66-ம் ஆண்டில் அதிகப்படியான செலவிற்கான நிதி கோரிக்கைகளை அளித்தல்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I rise to present the Statement of Demands for excess expenditure relating to the year 1965–66, covering cases where, under certain grants, the actual expenditure was found to be in excess of the final sanctioned appropriation for that year.

The Public Accounts Committee for 1968–69 having examined these cases of excess expenditure, has, in paragraph 21 of its Report on the Accounts of the State of Tamil Nadu for 1965–66, recommended that Demands for Grants for excess expenditure, as listed in Appendix I of their Report, may be presented to the Legislature for approval. It is in pursuance of this recommendation of the Public Accounts Committee, that the Statement of Demands for Grants to cover excess expenditure relating to the year 1965–66 is presented now. The annexure to the Statement of Demands details the reasons for the excess in each case. The excess on the whole aggregates to about Rs. 145.35 lakhs and the approval of the Legislature is sought to regularise this excess.

I commend the Statement of Demands for Grants for excess expenditure relating to the year 1965–66 for acceptance of this House.

### 8. 1969-70-ம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை அளித்தல்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, 1969–70-ம் ஆண்டுக்குரிய முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றப் பேரவை முன் வைப்பான் வேண்டி உங்கள் முன்பு வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான விவர அறிக்கை ஒன்று இம் மன்றத்தின்கண் வைக்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ. 21.3 கோடிக்குத் துணை மானியக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 15.6 கோடி வருவாய்க் கணக்கின்பாற்படும். சென்ற மார்ச் திங்களில், நடப்பு ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்ட பிறகு, ஒப்புதல் வழங்கப் பட்ட "புதுப் பணித்" திட்டங்களும் துணை மதிப்பீடுகளில் சேர்க் கப்பட்டுள்ளன. வரவு-செலவுத் திட்ட காலத்தில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட இப்போது செலவு அதிகமாகும் என்று எதிர் பார்க்கப்படுகிற சில மானியங்களின் கீழ் கூடுதல் நிதி ஒதுக்கம் பெறவும் நாம் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டுள்ளோம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சண்முக சுந்தரம் அவர்கள் இன்று காலை 10 மணிக்குத் தலைமை மருத்துவ மனையில் இறந்துவிட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது என்பதை இப்பேரவைக்கு மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மா னத்தை முன்மொழிவார்கள்.

* **மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறைத் தொகுதியிலிருந்து அண்மையில் இப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. எஸ். சண்முகசுந்தரம் அவர்கள் இன்று காலை 10 மணி அளவில் திடீரென்று இயற்கை எய்தியமைக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறது" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, தோழர் சண்முகசுந்தரம் அவர்கள் இப்போதுதான் பெருந்துறைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தப் பேரவையிலே ஒரே ஒரு நாள்தான் அமர்ந்திருந்தார்கள். கடந்த 14-ம் தேதி நடைபெற்ற பேரவைக் கூட்டத்திலே இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றினோம். அந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் கூட்டத்திலே அவர்களும் கலந்து கொண்டார்கள். இன்று அவருக்கே இரங்கல் தீர்மானம் நிறைவேற்றத் தக்க வகையில் நம்மை எல்லாம் விட்டு விட்டு அவர்கள் இயற்கையெய்தி விட்டார்கள். எதிர்பாராத நிலையில் லாரி விபத்து ஒன்றில் காயமுற்று அவர்கள் மறைந்து விட்டது உள்ளத்தை நெக்குருகச் செய்கிறது. அவருடைய குடும்பத்தாருக்கு இடிமேல் இடி, பேரிடி ஏற்பட்டிருக்கிறது. அவருடைய தமையனார் எஸ். பாலசுப்பிரமணியம் அவர்கள் இந்த அவையிலே கடந்த இரண்டு ஆண்டு காலத்திற்கு மேலாக துடிதுடிப்போடும், உணர்ச்சியோடும் பணிபுரிந்தவர். உண்மைக்குப் பரிந்து பேசும் பண்பாளர். அவருடைய நேர் தம்பிதான் தோழர் சண்முகம்சுந்தரம் அவர்கள். தோழர் சண்முகசுந்தரம் அவர்களும் நல்ல பண்புக்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர். அடக்கமும், பணிவும், பண்பும் நிறைந்தவராக இருந்தார். அப்படிப்பட்டவர்கள் இந்த மன்றத்திலே இருந்து பணிபுரிய முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. லாரியில் வரும்போது எதிர்பாராத விபத்துக்குள்ளாகி இந்த முடிவு ஏற்பட்டு விட்டது. இந்த மாதிரிப் போவதிலே இப்படிப்பட்ட ஆபத்து இருக்கிறது என்பதை நாம் எல்லாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். அவருடைய இழப்பு பேரிழப்பு. ஒருநாள் தான் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டார். பிறகு விபத்துக்குள்ளாகி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். கழுத்திலும் தொடையிலும் எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கிறது, உயிருக்கு ஆபத்தில்லை என்று முதல் நாள் மருத்துவ வல்லுநர்கள் தெரிவித்தார்கள். எதிர்பாராத நிலையில் காலையில் மோசமான நிலைமையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டு பத்து மணிக்கு உயிர் பிரிந்து விட்டதாகச் செய்தி வந்திருக்கிறது.





இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டது முதல் நாம் மிகுந்த துக்கத்தையும் துயரத்தையும் கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றிவைப்பதன் மூலம் அவர்தம் குடும்பத்தாரை ஆறுதல் பெறுமாறு கேட்டுக்கொள்ள வேண்டியது அவசியம். இந்த அவையின் முன்னவர் என்ற முறையிலே தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை மிகவும் வருத்தத்தோடு வழிமொழிகிறேன். அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்ததோடு மட்டுமல்லாமல் அந்தத் தொகுதிக்கும் எனக்கும் எப்போதும் நெருங்கிய தொடர்பு உண்டு. நண்பர் பாலசுப்பிர மணியம் அவர்கள் இறந்ததைக் கூட ஓர் அளவு மறந்துவரும் நிலையில் திரு. சண்முகசுந்தரம் அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும்—தற்போது மறைந்து விட்டது பெரும் துக்கத்தைக் கொடுக்கிறது. அவர்கள் பெரும் குடும்பத்தில் இருந்து வந்தவர்கள். உயர்ந்த பண்புள்ளவர்கள்; மிகவும் அன்புள்ளம் கொண்டவர்கள். அப்பேர்ப்பட்டவரைப் பெருந்துறை மக்கள் சட்டசபைக்குத் தேர்ந்தெடுத்தார்கள். அவை முதல்வர் அவர்கள் சொன்னது போல் ஒரே ஒரு நாள் தான் இந்தச் சபையிலே இருந்தார்கள். நேற்று மாலை ஆஸ்பத்திரிக்குச் செல்லும்போது, மயக்க நிலையில் இருக்கிறார், தொந்தரவு பண்ண வேண்டாம் என்றார்கள். இன்று அவர் மறைந்து விட்டார். பெருந்துறை மக்கள் மீண்டும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவரை தேர்ந்தெடுத்ததன் மூலம் அந்தக் குடும்பம் எவ்வளவு செல்வாக்குப் பெற்றிருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியும். அவர் எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளாகி இறந்து விட்ட நிலையில் சட்ட மன்ற உறுப்பினர்களாகிய நாம் அனைவரும் அவருடைய குடும்பத்தாருக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இது மாதிரி ஆபத்தான பயணங்களை யாரும் செய்யாமல் இருக்க வேண்டுமென் பதற்கு இதை ஒரு படிப்பினையாக எடுத்துக் கொள்ளவேண்டும். நம்முடைய முதல்வர் அவர்கள் கூட முன்பு வேகமாகப் போன ஒரு காரினால் அடிபட்டார்கள். லாரிப் போக்குவரத்திலே யாரும் பயணம் செய்யக் கூடாது என்று கண்டிப்பான சட்டத்தைக் கூடப் போட வேண்டுமென்று நான் கூறுவேன். அவருடைய குடும்பத்தாருக்குச் சட்டமன்ற அங்கத்தினர்களின் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. எஸ். அதிமூலம்:** தலைவர் அவர்களே. பெருந்துறைத் தொகுதி அங்கத்தினர் காலமான செய்தி வாழ்க்கையிலேயே அதிர்ச்சி தரத்தக்க செய்தியாகும். அவர் பெரும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நல்ல பண்புள்ள நண்பர். அந்தக் குடும்பமே அமெரிக்காவில் உள்ள கென்னடி குடும்பம் மாதிரி—

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 ஆகஸ்ட் 20

வறட்சித் துயர் தணிப்பு நடவடிக்கைகளின் விளைவாக ஏற்பட்ட செலவு குறித்தே மிக அதிகமான நிதி ஒதுக்கப் வேண்டப் படுகிறது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் காணலாம். நடப்பு ஆண்டில் நம் மாநிலத்தைப் பிடித்துள்ள வறட்சியின் கடுமையையும் அதன் காரணமாக மக்கள் படும் அவதியையும் உறுப்பினர்கள் சிந்தை நோய் கூர அறிவர். மக்களின் தேவைகளை உடனடியாகக் கண்டறிந்து, வறட்சியினால் வாடும் மக்களின் இன்னல்களைத் தீர்க்க ரூ. 17.6 கோடிக்கு மேல் செலவாகும் திட்டங்களை அரசு வகுத்துள்ளது. இத் தொகையில் குடிநீர் வழங்குதல், பாசனக் கிணறுகளையும், ஊருணிகளையும் வெட்டுதல், ஏரிகளைப் பழுது பார்த்தல், மண் வளப் பாதுகாப்புத் திட்டங்களை நிறைவேற்றுதல் உள்ளிட்ட துயர்தணிப்புப் பணிகளுக்காக ரூ. 14.3 கோடி செலவிட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. வறட்சிப் பகுதிகளில் தக்காவிக் கடன் வழங்குவதற்கென ரூ. 2.6 கோடி ஒதுக்கியுள்ளோம். எஞ்சியது கடும் குடிநீர்ப் பற்றாக்குறையினால் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்குத் தேவையான துளையிடு கருவிகள் போன்றவற்றை வாங்குவதற்காகப் பயன்படுத் தப்படும். இதுவரையில் நமக்கு இந்த வகையில் ரூ. 15 கோடி செலவு நேரிட்டுள்ளது. இந்திய அரசு இப் பணிக்காக இதுவரை ரூ. 11.25 கோடி வழங்கியுள்ளது. நமது இன்னல்களை மத்திய அரசு கழிவிரக்கத்துடன் காணவேண்டும் என்றும் நமக்கு ஏற்பட்டுள்ள செலவு முழுவதையும் மானியங்கள், கடன்கள் மூலமாக ஈடு செய்ய விரைவில் முற்பட வேண்டும் எனவும் மத்திய அரசை வற்புறுத்துவதில் உறுப்பினர்கள் என்னுடன் தோளோடு தோள் நிற்பர் என்பதை நான் திண்ணமாய் அறிவேன். வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்கையில் இந்த அளவிற்குக் கடுமையான ஒரு வறட்சியை நாம் எதிர்பார்க்கவில்லை. எனவே, வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காக எதிர்பார்க்கப்படும் செலவு குறித்து ரூ. 15.3 கோடி நிதி ஒதுக்கம் செய்யுமாறு தற்போது வேண்டப் படுகிறது. ஏனெனில், இதனை இப்போதுள்ள நிதி ஒதுக்கங் களினின்றும் ஈடு செய்ய முடியாது.

மிகக் கடுமையான வறட்சி நிலைமைகளின் காரணமாக, நம் மக்களுக்கு உடனடியாகப் பயன்படும் வகையில் இடையீடில்லாது தூநீர் வழங்க வேண்டிய தேவையை மிகக் கொடிய தற்போதைய வறட்சி கோடிட்டுக் காட்டியுள்ளது. நமது கிராமப்புற மக்கள் அனைவருக்கும் நீர் வழங்குவதற்கான விரைவுத் திட்டம் ஒன்றைத் தொடங்க அரசு முடிவு செய்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பர் என்று நான் நம்புகிறேன். வறட்சித் துயர் தணிப்புத் திட்டத்தின் ஒரு அங்கமாக, நடப்பாண்டில் இம் மாநிலத்தில் 94 நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் நீர் வழங்கல் குறித்து ரூ. 110 லட்சம் அனுமதித்துள்ளோம். இதற்கென்று 31-வது மானியத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளது.



1969 ஆகஸ்ட் 20] [திரு. கே. ஏ. மதியழகன்]

பின்தங்கிய வகுப்பினர் நலனில் இவ்வரசு எப்போதும் மிக்க அக்கறை காட்டி வந்துள்ளது. பின்தங்கிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்குவது குறித்து நாம் அண்மையில் காட்டியுள்ள தாராள மனப்பான்மையை இப்பேரவை வரவேற்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். பின்தங்கிய வகுப்பினருக்கும், மிகப் பின்தங்கிய வகுப்பினருக்கும் இடையே உள்ள வேறுபாட்டை நாம் நீக்கியுள்ளோம். பின்தங்கிய வகுப்பு மாணவர்கள், கடைசித் தகுதிகாண் தேர்வில் குறைந்த அளவு 40 சதவீத மதிப்பெண்களைப் பெற்றிருந்தால், அவர்கள் தற்போது உபகாரச் சம்பளங்களைப் பெறத் தகுதி உடையவர்கள் ஆவர். இந்தச் சலுகையின் விளைவாக ஆண்டு தோறும் எதிர்பார்க்கப்படும் கூடுதல் செலவு ஏறத்தாழ ரூ. 1.6 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான நிதி மானியம் 25-ன் கீழ் வேண்டப்பட்டுள்ளது.

நம் மக்கள் தொகையில் வறியவர்களாய் உள்ள மக்களுக்கு நிலங்களை ஒப்படை செய்யும் திட்டம் குறித்தும், நமது அரசு ஆழ்ந்து சிந்தித்து வருகிறது. குடியிருப்பிற்கான குடிசைகள் கட்டிக்கொள்வது மூலம் மறுப்பிற்கு இடமில்லாத வகையில் செய்யப்பட்டுள்ள வவ்வுதல்களை enervachments முறைப்படுத்துவதற்கான திட்டத்தை நாம் தற்போது வகுத்துள்ளோம். அத்தகைய ஒப்படைகளுக்கான நடைமுறை, சிறப்புப் பணியாளர்களை நியமித்தது மூலம் தற்போது விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இம் மாநிலத்தில் ஏழை உழவர்களுக்கு நிலங்களை ஒப்படை செய்யும் நமது திட்டத்திற்குத் தேவையான பணியாளர்களை நியமிக்கவும் நாம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளோம். மானியம் 9-ன் கீழ் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்டத்தைச் சட்ட மன்றத்தில் வைத்த பிறகு, இந்த அரசு மேற்கொண்ட மற்றொரு குறிப்பிடத்தக்க சமூகநல நடவடிக்கை என்னவென்றால், கோயம்புத்தூர், மதுரை, இவற்றின் புறநகர்ப் பகுதிகள் ஆகியவற்றில் உள்ள ஈட்டுறுதி செய்து கொண்டவர்களது குடும்பத்தினருக்குத் "தொழிலாளர்களுக்கான அரசு ஈட்டுறுதித் திட்டத்தை" நீட்டித்ததே ஆகும். துணை மதிப்பீட்டில் 14-வது மானியத்தின் கீழ் ரூ. 10 லட்சம் ஒதுக்கியதன் மூலம், இந்த நடவடிக்கைக்கு சட்ட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

இந்தத் துணை மதிப்பீடுகளில் கண்டுள்ள ஏனைய செயற் குறிப்புகள் பற்றிச் சிறப்பான விளக்கம் எதுவும் தேவையில்லை என்று கூறி, 1969–70-ம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றம் ஏற்குமாறு நான் வேண்டிக்கொள்கிறேன்.

## 9. இரங்கல் தீர்மானம்

**உறுப்பினர் திரு. எஸ். சண்முகம்சுந்தரம் மறைவு குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பெருந்துறைத் தொகுதியிலிருந்து அண்மையில் இப்பேரவைக்குத்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நானே சொல்லி விடுகிறேன். மறைந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முக சுந்தரம் அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் பேரவையின் நிகழ்ச்சிகளை இன்று இந்த அளவோடு ஒத்தி வைக்கிறேன். பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## 10. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

'Nil'.

### B. Reports, Notifications and other papers.

32. The Report of the Special Team of Police Officers on the fire accidents in Madras City in 1968.

@ 33. The Tamil Nadu Co-operative Land Mortgage Banks (Amendment) Bill, 1969 (L.A. Bill No. 12 of 1969) with Annexure.

* 34. Draft outline of Fourth Five-Year Plan of Tamil Nadu (English and Tamil).

@ Despatched to members on 18th August 1969.

* Circulated to members in the chamber and despatched to members on 19th August 1969.



## APPENDIX I.

(*Vide* answer to Starred Question No. 38 on page 35).

Statement showing the district-wise stage of applications relating to the Scheme for the grant of Pension to Freedom Fighters up to February 1968:

| Serial number. (1) | Name of the district. (2) | Number of persons who applied for freedom Fighters' Pension. (3) | Number of persons who have been granted freedom fighters' Pension. (4) | Number of persons to whom the freedom fighters' Penson has been rejected. (5) |
|---|---|---|---|---|
| 1 | Madras | 330 | 153 | 55 |
| 2 | Chingleput | 135 | 47 | 39 |
| 3 | North Arcot | 335 | 112 | 127 |
| 4 | South Arcot | 267 | 96 | 67 |
| 5 | Dharmapuri | 95 | 29 | 49 |
| 6 | Salem | 300 | 141 | 58 |
| 7 | Coimbatore | 753 | 90 | 94 |
| 8 | The Nilgiris | 54 | 13 | 22 |
| 9 | Madurai | 959 | 267 | 283 |
| 10 | Tiruchirappalli | 281 | 91 | 68 |
| 11 | Thanjavur | 864 | 149 | 145 |
| 12 | Ramanathapuram | 1,155 | 279 | 147 |
| 13 | Tirunelveli | 498 | 125 | 113 |
| 14 | Kanyakumari | 80 | 21 | 35 |
| | Total | 6,106 | 1,613 | 1,302 |

[திரு. டி. எஸ். ஆதிமூலம்] [1969 ஆகஸ்ட் 20

அண்ணன், தம்பி எல்லோருமே அரசியலில் ஈடுபட்டவர்கள். அமெரிக்காவில் எப்படி கென்னடி குடும்பத்திற்குத் துன்பத்திற்கு மேல் துன்பம் வந்ததோ அதே மாதிரி இவர்கள் குடும்பத்திற்கும் வந்திருக்கிறது. இவர் தமிழ்நாடு சட்டசபையில் இருந்து மக்களுக்கு அவருடைய கட்சியின் மூலம் பாடுபடக்கூடிய சிறந்த வாலிபராக இருந்தார். அவர் மறைந்தது பெரிய அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. அன்னாருடைய குடும்பத்தாருக்கு எங்களுடைய கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய ஆத்மா சாந்தியடைவதாக.

* **திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின் உணர்வோடு எங்கள் கட்சியின் சார்பாக நானும் கலந்து கொள்ளுகிறேன். எதிர்பாராத ஒரு அதிர்ச்சி, எதிர்பாராத ஒரு வேதனை. இந்த நேரத்தில் வார்த்தைகளுக்குப் பொருளே இல்லை. இது சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சிக்கு இழப்பு மட்டுமல்லாமல் நம்முடைய சட்டமன்றத்திற்கும் பேரிழப்பாக அமைந்துவிட்டது. அன்று இந்த விபத்து ஏற்பட்ட நேரத்திலெல்லாம் மாண்புமிகு நல்லசிவம் அவர்கள் 'சிறிது அடிதான் ஏற்பட்டிருக்கிறது, பிழைத்துக் கொள்ளுவார்கள்' என்று சொன்னார்கள். அதிக நம்பிக்கையோடு இருந்தோம். ஆனால், திடீரென்று நம் அனைவரையும் விட்டுவிட்டுப் பிரிந்துவிட்டார்கள். இந்த நேரத்தில், அவர்களுடைய தாயின் வேதனையை என்னவென்று சொல்வது? எப்படிப்பட்ட பயங்கரமான வேதனைக்கு அவர்கள் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்? அந்தத் தாய்க்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் சம்யுக்த சோஷலிஸ்டு கட்சிக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு அமருகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, நானும் என் கட்சி சார்பில் மறைந்த சண்முகசுந்தரம் அவர்களுக்கு அஞ்சலியைச் செலுத்திக் கொண்டு எங்களது ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** தலைவர் அவர்களே, மறைந்த சண்முகசுந்தரம் அவர்களுக்குக் கொண்டு வந்திருக்கின்ற இரங்கல் தீர்மானத்தில் முஸ்லீம் லீக் சார்பில் நானும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் இறைவன் மன ஆறுதலைத் தர வேண்டுமென்று இறைவனிடத்தில் பிரார்த்தனை செய்கிறோம்.

* **திரு. கே. பி. எஸ். மணி :** நானும் என் கட்சி சார்பில் மறைந்த சண்முகசுந்தரம் அவர்கள் ஆத்மா சாந்தி அடையவும், அவர்களது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.



1969 ஆகஸ்ட் 20] [திரு. மு. கருணாநிதி]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, மிகக் கடுமையாக ஆரம்பமான இன்றைய மன்றம் கண்ணீர் வடிக்கக் கூடிய அளவிற்கு இன்றையதினம் கலைகிறது. நம்முடைய அன்பை யெல்லாம் கொள்ளை கொண்டவர் இன்று மறைந்து விட்ட நண்பர் சண்முகசுந்தரம் அவர்களாவார்கள். பெருந்துறை தேர்தல் நேரத்தில் அவரோடு நான் மிகவும் நெருக்கமாகப் பழகுகிற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. எவ்வளவு எளிய சுபாவம் உள்ளவர் என்பதையும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் மிகப் பெரிய குடும்பத்தில் செல்வாக்கான குடும்பத்தில் பிறந்து அந்தப் பகுதி மக்களிடத்தில் எந்த அளவிற்கு நிறைந்த ஆதரவைப் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் நேரடியாகக் காண்கிற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அவர்கள் மற்றவர்களிடம் எவ்வளவு அன்பு காட்டுகிறார்கள் தன்னலமற்று என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு அவர் அன்று லாரி விபத்தில் அடிபட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நேரத்தில் நானும் அமைச்சர்களும் உடனடியாகச் சென்று அவர்களை அங்கு பார்த்த போது கை கால்கள் எல்லாம் கட்டு போடப்பட்டு பிரக்ஞையற்ற நிலையில் சற்று கண்களை மட்டும் விழித்துப் பார்த்து ஆள்களை அடையாளம் தெரிந்து கொள்ளும் சூழ்நிலையில் இருந்தார்கள். நான் அவர்களைப் பார்த்தவுடன் தான் நன்றாகயிருக்கிறேன் என்று கூறிவிட்டு பக்கத்துப் படுக்கையிலுள்ள க்ளீனர் எப்படியிருக்கிறார், அவரைப் பார்த்துக் கவனித்துக் கொள்ளுங்கள் என்று எங்களிடம் சொன்னார்கள். அவ்வளவு நல்ல உள்ளம் படைத்த இளைஞர். முப்பது வயதைக் கூட கடந்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். மணமாகாதவர். நம் மனதையெல்லாம் கொள்ளை கொண்டவர். அவர் மறைந்ததற்கு இம்மன்றம் செலுத்துகிற ஆழ்ந்த இரங்கலில் நானும் கலந்து கொண்டு, எனது இறுதி வணக்கத்தை செலுத்திக் கொள்வது சால்புடையது என்ற அளவில் அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மறைந்துவிட்ட பாலசுப்பிரமணியம் அவர்களின் உடன் பிறந்தவர் என்ற நிலையைக் காட்டுகிற அளவில் நல்ல அடக்கத்தோடும் அன்போடும் பழகக் கூடிய அந்த நண்பர் எதிர்பாராத விதத்தில் இறந்துவிட்டது எல்லோரும் கூறியதுபோல் மிகவும் வேதனை தரக்கூடிய நிகழ்ச்சியாகும். அவையின் வருத்தத்தோடு எனது வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டு அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் இரண்டு நிமிடங்கள் எழுந்து நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்க, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்ட இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

THIRU K. VINAYAKAM : As a mark of respect to the departed soul, I move . . . . . . .

## இணைப்பு 2.

[324-ம் பக்கத்திலுள்ள 41-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.]

(அ) விவரங்கள்—

| | |
|---|---|
| காங்கேயம் | 7 |
| தார்பார்கர் | 98 |
| ஹரியானா | 17 |
| புலிக்குளம் | 60 |
| தார்பார்கர் * ஹரியானா | 113 |
| உயர்வகை தார்பார்கர் | 61 |
| தார்பார்கர் * காங்கேயம் | 26 |
| தார்பார்கர் சிந்தி | 2 |
| சிந்தி | 1 |
| உயர்வகை சிந்தி | 13 |
| உம்பளாச்சேரி | 2 |
| முர்ரா | 218 |
| மொத்தம் | 618 |

(இ) 1967-68-ல் ஒவ்வொரு நாளும் சராசரியாக உற்பத்தியான பால் 293 லிட்டராகும்.

**A.—**

(a) Details :—

| | |
|---|---|
| Kangayam ... ... | 7 |
| Tharparkar ... ... | 98 |
| Hariana ... ... | 17 |
| Pulikulam ... ... | 60 |
| Tharparkar x Hariana ... ... | 113 |
| Tharparkar Graded ... ... | 61 |
| Tharparkar x Kangayam ... ... | 26 |
| Tharparkar * Sindhi ... ... | 2 |
| Sindhi ... ... | 1 |
| Graded Sindhi ... ... | 13 |
| Umblachery ... ... | 2 |
| Murrah ... ... | 218 |
| Total ... | 618 |

(b) Daily average of milk produced during 1967-68 is 293 litres.





## இணைப்பு 3.

[327-ம் பக்கத்திலுள்ள 42-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.]

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட 30 நிலையங்களில் நெல் உலர்த்தும் இயந்திரங்களை இந்திய உணவுக் கார்ப்பொரேஷன் நிறுவியுள்ளது.—

| | |
|---|---|
| 1 தஞ்சாவூர் | 16 முருந்தனூர். |
| 2 பூதலூர். | 17 ஓகை. |
| 3 மேல்திருப்பூந்துறை. | 18 ஆலங்குடி. |
| 4 உள்ளிக்கடை | 19 கோவில் வெண்ணி. |
| 5 பாபநாசம். | 20 சாலியமங்கலம். |
| 6 கும்பகோணம். | 21 வாண்டையாரிருப்பு. |
| 7 சோழபுரம். | 22 ஒரத்தநாடு. |
| 8 திருவாலங்காடு. | 23 பேராவூரணி. |
| 9 மல்லியம். | 24 பட்டுக்கோட்டை. |
| 10 பாலையூர். | 25 முதுக்கூர். |
| 11 அரசூர். | 26 பெருகவளர்ந்தான். |
| 12 செம்பனார்கோவில். | 27 விளக்குடி. |
| 13 கொல்லுமாங்குடி | 28 கச்சனம். |
| 14 சியாத்தமாங்கை | 29 மூலங்குடி. |
| 15 கீவளூர். | 30 மன்னார்குடி. |

(இ) ஒவ்வொரு நிலையத்திலும் நிறுவப்பட்ட இந்த இயந்திரத்துக்கான சோதனைச் செலவு ரூ. 2 இலட்சம் ஆகும்.

(உ) 30 நெல் உலர்த்தும் இயந்திரங்களில், 5-10-1967-லிருந்து 25-11-1967 வரை பல்வேறு தேதிகளில் கடந்த குறுவைப் பருவத்தில் 14 நெல் உலர்த்தும் இயந்திரங்கள் வேலை துவங்கின. 5-10-1967 தேதிக்கும், 16-12-1967 தேதிக்குமிடையே 14 இயந்திரங்களில், மொத்தம் 7,730 டன் நெல் உலர்த்தப்பட்டது. நாள்தோறும் கொள்முதலாகும் நெல் அளவு, நாள்தோறும் வெளியே அனுப்பப்படும் நெல் அளவு, இயந்திரக் கோளாறு, மின்சாரக் கோளாறு போன்ற பல்வேறு கூறுகளை அனுசரித்து ஒவ்வொரு இயந்திரத்திலும் நாள்தோறும் உலர்த்தப்படுகிற நெல்லின் அளவு வேறுபடுகிறது. இந்த இயந்திர வேலைகளைக் கொண்டு, நெல் உலர்த்துவதற்கு ஆகும் சராசரிச் செலவு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2.37 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு இயந்திரத்துக்காகவும் நாளொன்றுக்கு ஆகும் செலவைக் கணக்கிடுவது இயலாது.

(a) Mechanical driers have been set up in the following 30 centres in Thanjavur district by the Food Corporation of India :—

| | |
|---|---|
| 1 Thanjavur | 16 Mukundanur. |
| 2 Budalur | 17 Ohai |
| 3 Melathirupunthurthi | 18 Koilvanni |
| 4 Ullikkadai | 19 Alangudi |
| 5 Papanasam | 20 Salimangalam |
| 6 Kumbakonam | 21 Vandayariruppu |
| 7 Sholapuram | 22 Orathanad |
| 8 Tiruvalangadu | 23 Peravurani |
| 9 Malliam | 24 Pattukkottai |
| 10 Palayur | 25 Mudukkur |
| 11 Arasur | 26 Perugavalandan |
| 12 Sembanarkoil | 27 Vilakkudi |
| 13 Kollumankudi | 28 Kachanam |
| 14 Siyyartamangai | 29 Moolangudi |
| 15 Kivalur | 30 Mannargudi. |

(b) The approximate cost of the equipment at each Centre is about Rs. 2 lakhs.

(c) Out of the 30 driers. 14 were commissioned during the last Kuruvai season on various dates between 5th October 1967 to 25th November 1967. A total quantity of 7,730 tonnes of paddy was fed into the driers for drying in all the 14 driers between 5th October 1967 and 16th December 1967. The quantity of paddy dried daily in each drier will vary according to several factors like quantity procured daily, quantity moved out daily, break-down in machinery and electricity. The average drying cost for the mechanical operations involved has been assessed at Rs. 2·37 pee quintal. It may not be possible to work out the cost per day for each drier.

## இணைப்பு 4.

[334-ம் பக்கத்தில் 49-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க].

### தொழிலாளர் துறை

### விவர அறிக்கை I

மாநில வீட்டு வசதி வாரியத்திற்கு வீடுகள் மூலமாகவும், வீட்டு மனைகள் மூலமாகவும் 1965–66, 1967 ஆகிய ஆண்டுகளில் கிடைத்த வருவாயைக் காட்டும் விவர அறிக்கை.

| ஆண்டு | (தொகை ரூ. லட்சத்தில்) |
|---|---|
| 1965–66 | 10·73 |
| 1966–67 | 12·23 |
| 1967–68 | 17·45 |

### விவர அறிக்கை II

கட்டிடங்கள், குடிசைப்பகுதி மனைகள் ஆகியவை மூலம் வாடகையாகச் சேரவேண்டிய தொகையைக் காட்டும் விவர அறிக்கை.

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 31–3–1967 தேதி அன்று உள்ள நிலுவைத் தொகை (தோராயமாக). | 7·14 |
| 30–6–1967 தேதி முடிய முதல் காலாண்டுக்குரிய கேட்புத் தொகை. | 3·58 |
| 30–6–1967 தேதி முடிய முதல் காலாண்டுவரை வசூல் தொகை. | 3·49 |
| 30–6–1967 தேதி அன்று எஞ்சியுள்ள நிலுவைத் தொகை. | 7·23 |



### விவர அறிக்கை III

மாநில வீட்டு வசதி வாரியத்திற்கு 1965–66, 1967 ஆண்டுகளில் வீடுகள் மூலமாகவும், வீட்டு மனைகள் மூலமாகவும் கிடைத்த வரவுகளைக் காட்டும் விவர அறிக்கை.

| பொருள். (1) | | நில விற்பனை மூலம் கிடைத்த தொகை (ரூ. லட்சத்தில்). (2) | குத்தகைத் தவணைத் தொகை (ரூ. லட்சத்தில்). (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|---|
| மாநில வீட்டு வசதி வாரியத்திற்கு 1965–66, 67 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் வீடுகள், வீட்டு மனைகள் மூலம் கிடைத்த வரவுகள். | | | | |
| 1965–66 | .. | 65·50 | 18·72 | 84·22 |
| 1966–67 | .. | 104·01 | 22·16 | 126·17 |
| 1967–68 | .. | 86·22 | 25·06 | 111·28 |

### விவர அறிக்கை IV

குத்தகைத் தவணைத் தொகைகள், மனைகளை விற்று கிடைக்கிற தொகைகள் குறித்த நிலுவைகளைக் காட்டும் விவர அறிக்கை.

(ரூபாய் லட்சத்தில்).

| வேலைத் திட்டங்கள். (1) | 31–3–67 அன்று உள்ள நிலுவைத் தொகை (தோராயமாக). (2) | 30–6–67 முடிய முதல் காலாண்டிற்குரிய கேட்புத் தொகை (தோராயமாக). (3) | 30–6–67 தேதி முடிய முதல் காலாண்டு வசூல் தொகை. (4) | 30–6–67 தேதி அன்று எஞ்சியுள்ள நிலுவைத் தொகை. (5) | குறிப்புகள். (6) |
|---|---|---|---|---|---|
| தவணைத் தொகை முதல் கட்டிடங்களின் குத்தகைத் தவணைத் தொகை. | 5·36 | 5·55 | 5·88 | 5·03 | |
| வீட்டுமனை விற்பனை மூலம் வரவுத் தொகை. | 2·44 | 21·00 | 21·31 | 2·13 | |

**குறிப்பு.**—விவர அறிக்கை III, IV ஆகியவைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் வாரியத்திற்குக் கிடைத்த வருவாயாகக் கருதப்படுவதில்லை. ஏனென்றால், வசூல் செய்யப்படும் தொகை வேலைத் திட்டங்களுக்காக அரசு வழங்கும் கடன்களுக்கு அசலாகவும், வட்டியாகவும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியவையாகும்.

### Statement I.

Statement showing the income derived by the State Housing Board through houses and plots during 1965-66 and 1967.

| Year. | | | | Amount. (RS. IN LAKHS) |
|---|---|---|---|---|
| 1965-66 | .. | .. | .. | 10·73 |
| 1966-67 | .. | .. | .. | 12·23 |
| 1967-68 | .. | .. | .. | 17·45 |

### Statement II.

Statemeut showing the arrears rented income from buildings and slum plots.

| | (RS. IN LAKHS.) |
|---|---|
| Arrears as on 31st March 1967 (Approx) .. | 7·14 |
| Demand for 1st quarter ending 30th June 1967. | 3·58 |
| Collection during the 1st quarter ending 30th June 1967. | 3·49 |
| Balance as on 30th June 1967 (Approx.) .. | 7·23 |

### Statement III.

Statement of recipts derived by the State Housing Board through houses and plots during 1965-66 and 1967.

| Subject. | Sale proceeds of lands. | Premia on leases. | Total. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (RS. IN LAKHS.) | | |
| Receipts derived by the State Housing Board through houses and plots during each of the year 1965-66 and 1967. | | | |
| 1965-66 .. .. | 65·50 | 18·72 | 84·23 |
| 1966-67 .. .. | 104·01 | 22·16 | 126·17 |
| 1967-68 .. .. | 86.22 | 25·06 | 111·28 |

### Statement IV.

Statement showing the arrears of receipts on premia on leases sale proceeds of plots.

| Scheme. | Arrears as on 31st March 1967 (approx). | Demand for 1st quarter ending 30th June 1967 (approx). | Collection during 1st quarter ending 30th June 1967. | Balance as on 30th June 1967 (approx). | Remarks. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (RS. IN LAKHS). | | |
| Premia on leases of hire purchase buildings. | 5·36 | 5·55 | 5·88 | 5·03 | |
| Sale proceeds of plots. | 2·44 | 21·00 | 21·31 | 2·13 | |

NOTE.—The figures given in statements III & IV are not considered as income for the Board as the amounts realised have to be paid back towards repayment of principal and interest on loans given by the Government for the schemes.

## LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY

Messrs. ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
THE CITY BOOK Co., Mylapore, Madras-4
Messrs. HIGGINBOTHAMS, PRIVATE LIMITED Madras-2.
Messrs. NEW CENTURY BOOK HOUSE (PRIVATE) LIMITED, Madras-2.
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
THE EDUCATIONAL AGENCIES, BOOK-SELLERS, Madras-1.
THE UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET, Madras-3.
Messrs. RUKMANI CORPORATION, Vepery, Madras-7.
Messrs. MOHAN PATHIPAGAM AND BOOK DEPOT, Madras-5.
Messrs. BOOK CORNER, BOOK-SELLERS, No. 2/4, Mount Road, Madras-2

IN MUFASSAL OF MADRAS STATE

Sri B. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTERS, PUBLISHERS AND BOOK-SELLERS, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district
Messrs. P. V. NATHAN & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. KRISHNASWAMY & Co. Tiruchirappalli.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. NELLAI PUTHAGA NILAYAM, BOOK-SELLERS, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. ARUNBOSE, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 128, Raja Street, Coimbatore
Sri S. M. JAGANNATHAN, BOOK-SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.
Messrs. A. K. CHANDRIAH CHETTIAR & Sons, Salem.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukkottai.
Messrs. K. V. NARAYANA IYER & SONS, Dindigul, Madurai district.
Messrs. BALAJI BOOK HOUSE, Vellore, North Arcot district.
Messrs. JAYAKUMARI STORES, Nagercoil, Kanyakumari district.
Messrs. RAJY STORES, BOOK-SELLERS, Villupuram, South Arcot district.
Messrs. DINAMANI STORES, Coimbatore-12.
Messrs. BHARATHI PUTHAGA NILAYAM, PUBLISHERS AND BOOK-SELLERS, 1-B, Town Hall Road, Madurai-1.

IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK-SELLERS, Gudur.
Messrs. AM BOOK AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum
Messrs. FIRMA K. L. MUKHOPADHYAY, Calcutta-12.
Messrs. BOOK LINKS CORPORATION, Narayanaguda, Hyderabad-29
Messrs. THE BOOKS SYNDICATE, Hyderabad-1.
Messrs. LABOUR LAW PUBLICATIONS, Hyderabad.

---

PUBLISHED UNDER RULES 234 AND 267 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

வெளியீடு—16—9—1970]
Issued—16—9—1970]

1028
R.R. 453/70
14 OCT 1970
ASO (R)
1028

# தமிழ் நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, 1969 ஆகஸ்ட் 21
Thursday, 21st August 1969

தொகுதி XXI—எண் 6
Volume XXI—No. 6

©
தமிழ் நாடு அரசு
1970

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்]
Price, 50 Paise]

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

## வியாழக்கிழமை, 1969 ஆகஸ்ட் 21

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. ஜி. ஆர். எட்மண்ட்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

### *Services of Fire Service Personnel*

*53 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether the services of the Fire Service Personnel were requisitioned by the slum dwellers opposite to the Government Poultry Farm in Mount Road about the 23rd February 1969?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆம். 23—2—1969 அன்று தேனாம்பேட்டை சத்தியமூர்த்தி நகரில் உள்ள ஏரிக்கரைத் தெருவில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து தொலைபேசிச் செய்தி வந்தது. உடனடியாக மூன்று தீயணைப்பு வண்டிகள் அனுப்பப் பட்டு, தீ 25 நிமிடத்திற்குள் அணைக்கப்பட்டது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு விபத்து ஏற்பட்டது பற்றி தொலைபேசியில் சொல்லி வெகுநேரம் கழித்தே தீ அணைப்பு வண்டிகள் வந்ததாகவும், தீ எல்லாவற்றையும் எரித்துவிட்ட பிற்பாடு வந்ததனால் அவை தேவையில்லை என்று சொல்லப்பட்டதாகவும் செய்தி கிடைத் திருக்கிறது. இனிமேலாவது இந்தமாதிரி விபத்துக்கள் ஏற்பட்டால் துரிதமாக தீ அணைப்பு வண்டிகளை அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்படுமா? தீ விபத்தினால் பாதிக்கப்படாத வீடுகளை கட்டித்தரும் திட்டம் எந்த அளவில் செயல்பட்டு வருகிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப் பினருக்குக் கிடைத்திருக்கும் தகவல் தவறானது என்று கருதுகிறேன். அன்று 12.16 மணிக்குத் தொலைபேசி மூலமாகச் செய்தி வந்தது. வந்தவுடன் 3 தீ அணைப்பு வண்டிகள் 5 நிமிடங் களுக்குள் அந்த இடத்தை அடைந்து 25 நிமிடங்களுக்குள் தீயை அணைத்தார்கள்.

அடுத்து, தீப் பிடிக்காத வீடுகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இதுவரை 17,52,990 ரூபாய் செலவில் 2,971 தீயில் எரியாத வீடுகள் கட்டித்தரப்பட்டிருக்கின்றன. தீயில் எரியாத இந்த வீடுகள் பற்றி கூறப்பட்ட சிலபல குறைகளை ஆராய்வதற்காக நடுவில் நிறுத்தி வைக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டன. தற்போது 3,400 தீப் பிடிக்காத

## உள்ளடக்கம்


பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள் .. .. .. 375–405

2. ஒத்திவைப்புத் தீர்மானம்—
அரசு போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்கள் திடீர் வேலைநிறுத்தமும் பொது மக்கள் அல்லலும் .. .. .. .. 405–407

3. முதலமைச்சரின் விளக்க உரை—
சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டம் குறித்து .. 407–411

4. அரசினர் தீர்மானங்கள்—
(i) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம் .. 411
(ii) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல் .. 412
(iii) அவையினர் குழுவிற்குத் தேர்தல் .. 413

5. அரசினர் மசோதாக்கள்—
(i) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதா .. .. 411
(ii) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாயக்கூலி மசோதா. 411–412
(iii) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா .. 412

6. அறிவிப்புகள்—
(i) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா .. 412
(ii) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல் .. 413
(iii) அவையினர் குழுவிற்குத் தேர்தல் .. 413–414

7. தனியார் அலுவல்கள்—
தனித் தீர்மானங்கள்:
(i) அரசாங்கப் பணிமனைகளிலும், தொழில் நிறுவனங்களிலும் தனியார் தொழில்கங்களிலும் அணு மின் இயந்திரத்தைப் புகுத்துதல்—தொடர்ச்சி .. .. 414–443
(ii) தமிழ் நாட்டில் சிமெண்ட் தொழிற்சாலைப் பிரிவுகள் .. .. .. 443–452
(iii) மாநில தன்னாட்சி பெற மத்திய அரசிடம் உள்ள அதிகாரங்களைப் பரவலாக்குதல் .. 452–471

8. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 471–472

வீடுகளை 2,86,000 ரூபாய் செலவில் கட்ட முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு வீட்டின் செலவு 827 ரூபாய் ஆகிறது. இந்த வேலை செப்டம்பர் மாதம் தொடங்கி நவம்பர் மாதத்திற்குள் முடிவுறும் என்று எதிர்பார்க்கிறேன்.

**திரு. சா. மெய்யப்பன்:** தீ அணைப்புப் படையை தாலுக்காவுக்குக் குறைந்தது 2 யூனிட்டுகளாவது அமைக்க இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** முன் வரலாம். ஆனால் நிதிநிலை இடம் தரவில்லை.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** தீ வைக்கின்ற இந்தக் தீயவர்கள் யார் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறார்களா? அவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறதா? இது போன்ற தீ விபத்துக்கள் ஏற்படாதிருக்க அரசு புதிய திட்டம் ஒன்றை ஆராய்ந்து வருகிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் தண்டிக்கப்பட்டு, அந்த வழக்கு அப்பீலிலும் இருந்து வருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீப் பிடிக்காத வீடுகள் பற்றி முதல் அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். இதுவரை கட்டப்பட்டுள்ள வீடுகள் எத்தனை பேர்களுக்கு உபயோகத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இதுவரை 2,971 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அனைத்தும் உபயோகத்தில் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வி எண் 54 பின்னால் எடுத்துக்கொள்ளப்படும். இப்போது கேள்வி எண் 55 எடுத்துக்கொள்ளப்படுகிறது.

### டிராக்டர்கள் பழுது பார்க்குமிடங்கள்

* 55 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டிராக்டர்கள் பழுது பார்க்கும் மெகானிக்குகள், பணிமனைகள் ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) ஒவ்வொரு வட்டத்திலும் டிராக்டர்களைப் பழுது பார்க்கும் நிலையங்களை அமைக்கும் செயற்குறிப்பு எதும் இல்லை.

(இ) இந்த வினாவுக்கு இடமில்லை.



**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலும் ஒன்று அல்லது இரண்டு டிராக்டர்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. அவை பொது மக்களுக்கும் பெரிதும் பயன்படுகின்றன. ஆனால் சிறிய பழுது ஏற்பட்டாலும் மாவட்ட அளவில் உள்ள பழுது பார்க்கும் நிலையத்திற்குச் சென்று வருவதில் தாமதமேற்படுகிறது. ஆகவே ஒவ்வொரு வட்டத்திலும் பழுது பார்க்கும் நிலையத்தை ஏற்படுத்தி அவ்வப்போது ஏற்படும் சிறு சிறு குறைகளை நிவர்த்தி செய்ய இனியாவது அரசாங்கம் ஒவ்வொரு வட்டத்திலும் தொழிற்சாலையை ஆரம்பிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இப்போது தஞ்சை மாவட்டத்தில் திருவாரூரிலும், கோயம்பத்தூரிலும் ஆக, இரண்டு நிலையங்கள் இருக்கின்றன. மேலும் மதுரையில் ஒன்று நிறுவ எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன. பணியாளர்கள் அனுப்பப்பட்டவுடன் வேலை தொடங்கவேண்டியது தான். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 47 வட்டங்களிலும் 47 நிலையங்கள் வைக்க செயற்குறிப்பு இருக்கிறது. 1969-70-இல் 15 நிலையங்கள் வைக்க ஒப்புக்கொள்ளப்பட்டது என்றாலும் நம்முடைய நிதி நிலை இடம் தராத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இதைத்தவிர மெட்ராஸ் அக்ரோ இண்டஸ்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக பழுது பார்க்கவும், டிராக்டர்களை வாடகைக்கு விடவும் ஒரு நிலையம் ஏற்படுத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

**THIRU B. VENKATASWAMY:** Sir, I came to know that a German Voluntary agency's technicians have undertaken free service to tractors in Mysore State? May I know whether there is any such proposal to invite them to our State?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** ஒவ்வொரு ப்ளாக்கிலும் டிராக்டர்கள், ஜீப்புகள் ரிப்பேர் செய்யப்படாமல் மாதக் கணக்கில், சில நேரத்தில் வருஷக்கணக்கில் கிடக்கின்றன. ஆகவே, தாலுக்காவுக்கு ஒன்று இல்லை என்று சொன்னாலும் மாவட்டத்திற்கு ஒன்றாவது உடனடியாக ஏற்படுவதற்கு வகை செய்யும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு பழுது பார்க்கும் நிலையம் ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறது. தற்சமயம் நிதிப் பற்றாக்குறை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

**திரு. எம். சுரேந்திரன்:** சபாநாயகர் அவர்களே, விவசாயம் இயந்திர மயமாக்கப்படுகிற நிலை வளர்ந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையில் டிராக்டர்கள் மட்டும் அல்ல வேறு பல இயந்திரங்கள்

(இ) சென்னை நகரத்தில் வாழும் தமிழரல்லாதோரின் வசதியை முன்னிட்டுத்தான் பங்கீட்டு அட்டைகளில் தமிழிலும் ஆங்கிலத்திலும் வாசகங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

திரு. கே. விநாயகம் : இந்தப் பங்கீட்டு அட்டைகள் ஆரம்பத்தில் தமிழில் அச்சடித்துக் கொடுக்கப்பட்டு, பிறகு தமிழ் பேசத் தெரியாத தெலுங்கர்களும் மற்றவர்களும் வேண்டுகோள் விடுத்த பிறகுதான் ஆங்கிலத்திலும் சேர்த்து அச்சடித்துக் கொடுத்ததாகப் புகார் சொல்லுகிறார்களே அது உண்மைதானா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எனக்கிருக்கும் தகவல் அப்படி ஒன்றும் புகார் வந்ததிருந்து அரசாங்கம் திருத்தியதாக இல்லை. அரசாங்கமே மேற்கொண்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : With regard to printing of ration cards in Tamil and other languages, there is a democratic need to print them in Telugu also in Madras City. The Commission for Linguistic Minorities has specified the areas where Telugu is to be used and Madras is one of them. The Madras Government also have issued a G.O. that Telugu also will be used in Madras City. Will the Government implement this as quickly as possible?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்த இரண்டு மொழிகளில் தவிர வேறு மொழிகளில் வெளியிடுவதற்கில்லை.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், சில நாட்களுக்கு முன்பு, ரூபாய்க்கு ஒரு படி அரிசியை வாங்க விரும்பாதவர்கள் உயர் ரக அரிசியை வாங்க விரும்பப்பட்டால், அதற்காகப் புதிதாக ஏற்படப் போகிற கடைகளில் வாங்கிக்கொள்ளலாம் என்று அரசுத் தரப்பிலிருந்து ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டதே, அந்தக் கருத்தின்படி அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வி அட்டையைப் பற்றி; அரிசியைப் பற்றி அல்ல.

திரு. சா. மெய்யப்பன் : படங்களை அச்சடிப்பதன்மூலம் மொழிப் பிரச்சினையை இந்த விஷயத்தில் புகுத்துவதைத் தடுக்கலாம் அல்லவா ?

(விடை இல்லை)

*Staff on deputation in Civil Supplies Department*

* 57 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state whether it is proposed to release some of the staff of the Office of the Accountant-General now working on deputation in the Civil Supplies Department?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம். உணவு வழங்கல் ஆணையாளர் அலுவலகத்தில் (கணக்குப்பிரிவில்) முகமை அடிப்படையில் பணியாற்றி வந்த தமிழ்நாடு கணக்காய்வாளர் அலுவலகப் பணியாளர்களில் சிலர் முகமைக்காலம் முடிவு பெற்றவுடன், தங்கள் சொந்த அலுவலகத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இப்படி சிவில் ஸப்ளைஸ் டிபார்ட்மென்டுக்காக அகவுண்டென்ட்-ஜெனரல் ஆபிசிலிருந்து எத்தனை பேர் அழைக்கப்பட்டிருந்தார்கள் ? அவர்கள் எவ்வளவு காலம் இங்கே வேலை செய்தார்கள் ? அதன் காரணமாக தமிழக அரசு ஊழியர்கள் யாரும் பாதிக்கப்பட்டார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 30 பேர்கள் அப்படி வந்து பணியாற்றினார்கள். இப்பொழுது அந்த முப்பது பேரில் ஐந்து பேர் இருக்கிறார்கள். பாக்கியுள்ளவர்கள் திருப்பி அனுப்பப்பட்டு விட்டார்கள். இங்கிருக்கும் ஐந்து பேர்களின் முகமைக் காலம் முடிவுறும்போது, அவர்களைத் தொடர்ந்து வைத்துக் கொண்டிருப்பதா இல்லையா என்பதை அரசாங்கம் பரிசீலிக்கும்.

THIRU K. VINAYAKAM : Is it a fact that officials working in the Civil Supplies Department competent enough to do the Accounts job are now complaining that their chances of promotion to the higher cadre are damaged by the influx of officers from the Accountant-General's Office?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இவர்கள் துவக்கத்திலே நம்முடைய உணவு வழங்கல் ஆணையாளர் அலுவலகத்தில் (கணக்குப் பிரிவில்) கணக்கு ஆய்வுக்காக கொண்டுவரப் பட்டவர்கள். முகமைக்காலம் முடிவுற்றவர்கள் திருப்பி அனுப்பப் பட்டுவிட்டார்கள். பாக்கி ஐந்து பேர்கள்தான் இருக்கிறார்கள். இவர்களால் தமிழக அரசு ஊழியர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை. இந்த ஐந்து பேர்களுடைய முகமைக்காலம் (டெபுடேஷன் பீரியட்) முடிந்தவுடனே, அரசாங்கம் அவர்களைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளுவதா, திருப்பியனுப்புவதா என்பதைப்பற்றிப் பரிசீலிக்கும்.

திரு. நா. சௌந்திரபாண்டியன் : தலைவர் அவர்களே, உணவுப் பங்கீட்டுத் துறையில் இந்தக் கணக்குகளை உடனடியாகப் பரிசீலனை செய்யாததன் காரணமாகத்தான் அதில் பல ஊழல்கள் நடந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ? இனிமேலாவது இந்தக் கணக்குகளை உடனுக்குடன் பரிசீலிக்க அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கணக்குப் பரிசீலனையில் ஊழல் இருப்பதாக கனம் உறுப்பினருக்கு ஏதாவது தகவல் இருந்தால் தெரிவிக்கலாம். அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

உபயோகப்படுகின்றன. இந்த இயந்திரங்களை வாங்கி உபயோகிக்கும்போது—அடிக்கடி பழுதுபட்டால் சரி செய்தாக வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, இதை எப்படிச் செய்யலாம் என்பதை யோசனை செய்து திட்டமிட்டு செயலாற்ற முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இதன் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. அதன் காரணமாகத்தான் நான்காவது திட்டத்தில் ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு பழுதுபார்க்கும் நிலையத்தை ஏற்படுத்தும் யோசனை இருக்கிறது. 1969-70-இல் 15 நிலையங்கள் துவங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நிதிப் பற்றாக்குறை காரணமாக எடுத்துக்கொள்ளவில்லையே தவிர அவசியத்தை உணராமல் இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனில் விவசாயிகள் கட்ட வேண்டிய பணம் கட்டியும் ஓராண்டுக்கு மேலாக டிராக்டர்கள் வழங்கப்படாமல் இருப்பதும், குறிப்பிட்ட டிராக்டரைத்தான் வழங்குவதும், மற்ற டிராக்டர் ரகத்தை வழங்க மறுப்பதும் தெரியுமா ? இதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மூலக் கேள்வி டிராக்டர்கள் பழுது பார்க்கும் நிலையங்களைப் பொறுத்தது: ஆகவே இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஏறக்குறைய டிராக்டர்கள் ஒன்று இரண்டுக்கு மேல் இருக்கின்றன. அவை பழுதுபட்டால் இப்போது ரிப்பேர் செய்வதற்குக் காலதாமதமாகிக்கொண்டிருக்கிறது. இப்போது மதுரையில் இரண்டு வொர்க்ஷாப்புகள் இருக்கின்றன. இவற்றை விஸ்தரித்துக் கொடுத்தால் மதுரை மாவட்டத்தில் உள்ள டிராக்டர்களை அவ்வப்போது பழுது பார்த்துக்கொள்ள முடியும். குறைந்த செலவில் இப்படிப் பழுது பார்த்துக்கொள்ள வகை செய்யும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மதுரையில் ஒரு பழுது பார்க்கும் நிலையம் ஏற்படுத்தும் அடிப்படை வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டன. இயந்திரங்களும் கொண்டு போய் அமைக்கப்பட்டுவிட்டன. போதுமான பணியாளர்களை அமைப்பிய பிறகு அந்த வேலை தொடங்கும்.

**திரு. எம். சண்முகம் :** மற்ற ஸ்தாபனங்கள் டிராக்டர்கள் வழங்கினால் அவற்றுக்கு ப்ரீ சர்விஸ் கொடுக்கிறார்கள். அதுபோல அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலம் வழங்கும் டிராக்டர்களுக்கு ப்ரீ சர்விஸ் கிடையாது என்கிறார்கள். மற்றவர்களைப் போல இவர்களும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இவர்களும் டிராக்டர்களை வாடகைக்குக் கொடுக்கவும், பழுது பார்க்கவும், ஒரு நிலையம் ஒன்றை ஏற்படுத்த முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறார்கள்.

THIRU B. VENKATASWAMY : In the answer given by the Hon. Minister it is stated that this Government is not in a position to open more workshops due to financial commitments. My question is that a German Voluntary Agency is giving free service to some States in India and whether this Government would be kind enough to address the German Voluntary Agency for getting **free service from it?**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தனிக் கேள்வி போடவும்.

**திரு. சா. மெய்யப்பன் :** சர்க்காரே பணிமனைகள் நடத்துவதைக் காட்டிலும் தனிப்பட்டோர் பணிமனைகளில் பழுது பார்ப்பது சிக்கனமாக இருக்கும் என்பதை அரசு ஏற்றுக் கொள்ளுகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தாக இருக்கலாம்.

**திரு. சி. வீரமணி :** இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களில் ஒரு டிராக்டர் அதிகமாக இருக்கிறது. விவசாய இலாக்காவில் உள்ள டிராக்டர்களைப் பழுதுபார்ப்பதற்கு ஒரு சென்ட்ரல் ஒர்க்ஷாப் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் டிராக்டர்களைப் பழுதுபார்ப்பதற்கும், விவசாய கிடங்குகளில் இருக்கும் டிராக்டர்களைப் பழுதுபார்ப்பதற்கும் ஒரே சென்டராக இருப்பதால், அந்த டிராக்டர்களை உடனடியாகப் பழுது பார்ப்பதற்கு முடியாமலிருக்கிறது. ஆகவே, பஞ்சாயத்து யூனியனுக்குத் தனியாக ஒரு ஒர்க்ஷாப் ஏற்படுத்த அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அது குறித்து ஆலோசிக்கலாம்.

### *Ration Cards distributed in Madras City*

* 56 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) Whether all ration cards (for rice, sugar and wheat) in the City of Madras are printed in Tamil language; and

(b) whether Non-Tamilians in the City of Madras are supplied their ration cards in English language?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) சென்னை நகரத்தில் எல்லா பங்கீட்டு அட்டைகளும் (அரிசி, சர்க்கரை, கோதுமைக் கானவை) தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டுள்ளது.

[1969 ஆகஸ்ட் 21

திருச்சிராப்பள்ளி சிறைகளிலுள்ள ஆயுள் தண்டனைக் கைதிகள்

* 58 வினு.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி சிறைச்சாலைகளில் தண்டனைக் காலத்தைக் கழித்து வரும் ஆயுள் தண்டனைக் கைதிகளை 1969-ம் ஆண்டு ஜனவரி 15-ம் நாள் அளவில் இந்திய வானொலி அதிகாரிகள் பேட்டி கண்டனரா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறைக் கைதிகள் வாழ்க்கை முறையைப் பற்றியும், அவர்கள் என்ன என்ன வசதிகளைப் பெறுகிருர்கள் என்பதைப் பற்றியும், கல்வி வசதி என்ன என்ன செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றியும் அவர்கள் கேள்வி கேட்டார்கள். அதற்குப் பதில் சொன்னுர்கள்.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், மத்திய சிறைச்சாலைகளில் ஆயுள் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கும் கைதிகள் தங்களுடைய சொந்தச் செலவில் ரேடியோ போன்ற வசதிகளைச் செய்துகொள்ளுவதற்கு முந்தைய ஆட்சி அனுமதித்திருந்ததாகவும், தற்சமயம் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு அது நிறுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறதே, அது உண்மையா ? ஆமெனில், அதற்கான காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறைச்சாலைகளில் எல்லாக் கைதிகளுக்கும் ஒரே மாதிரி வானொலிச் செய்திகளைக் கேட்பதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்தது. ஏற்கனவே அப்படியில்லாமல் தனிப்பட்டவர்கள் அறையிலே வைத்திருக்கலாம் என்று இருந்ததை மாற்றி விட்டோம்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : தலைவர் அவர்களே, சிறைச் சாலைகளில் இருக்கிற ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளுக்கு நடந்த பேட்டியின்போது, தாங்கள் ஆயுள் தண்டனை பெற்றிரு தாலுங்கூட, ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் தங்களை விடுதலை செய்தால் நலமாக இருக்கும் என்று கருத்துத் தெரிவித்த தாகச் சொல்லுகிருர்கள். அது உண்மையாக இருந்தாலும், உண்மையல்லாததாக இருந்தாலும், ஆயுள் தண்டனை பெற்றவர் களுக்கு வெள்ளைக்கார ஆட்சிக் காலத்தில், பதினான்டுகள் பன்னிரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்திருந்தால் அவர்களை விடுதலை செய்தது மாதிரி இந்த ஆட்சியிலும் அத்தகைய வர்களை விடுதலை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?



1969 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதிருக்கும் விதி முறைகளில், ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குப் பின்னல் அதற் கென்று உள்ள போர்டுக்குப் பெயர் அனுப்பப்பட்டு, நன்னடத்தை யுள்ள கைதிகளை வெளியே விட்டால் அவர்களுடைய பகுதியில் அவர்கள் செய்த குற்றத்தின் காரணமாக ஏதாவது கிளர்ச்சி ஏற்படுமா என்பதையெல்லாம் அந்த போர்டு பரிசீலித்து அரசாங்கத்திற்குப் பரிந்துரை தருகிருர்கள். அதன்மீது அரசாங்கம் முடிவு எடுக்கிறது. இந்த அரசாங்கம் பொறுப் பேற்றதற்குப் பிறகு, மிகக் குறைந்த காலத்திலேயே ஏராளமான கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருக்கிருர்கள் என்பதை நாடு அறியும்.

திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, புதிய தமிழக அரசு பொறுப் பேற்றதற்குப் பிறகு, பழைய விதிமுறைகளை மாற்றி ஏதேனும் சிறைச் சீர்திருத்தம் கொண்டுவர அரசு ஆலோசித்திருககிறதா ? அப்படியானுல், என்ன என்ன சீர்திருத்தங்கள் செய்ய உத்தேசம் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது மிகப் பெரிய பொதுவான கேள்வி. இதை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டால், பதில் சொல்வதற்குச் சுவையாக இருக்கும்.

திரு. ஆர். கருப்பையா : ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் குறிப்பிட்ட சில ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவித்து முடித்திருந்தால் அவர்களை விடுவித்து விடலாம் என்ற விதி இருக்கிறதே, அது எத்தனை ஆண்டுகள் என்று கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மூன்றில் இரண்டு பங்கு காலம் அவர்கள் சிறைத்தண்டனை அனுபவித்ததற்குப் பின்னர் அவர்களுடைய பெயர்கள் போர்டுக்கு அனுப்பப்படலாம் என்று விதி இருக்கிறது. அதன்படி அப்படிப்பட்டவர்களுடைய பெயர்கள் அனுப்பப்படுகின்றன. அந்த போர்டு அவர்கள் பெயர்களை அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்யலாம். ப்ரீமெச்சூர் ரிலீஸ் செய்யலாம் என்று சொல்லுவார்கள். அல்லது, அடுத்த போர்டுக்கு வைக்கவேண்டும் என்று மாற்றுவார்கள். இதுதான் விதிமுறை.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : தலைவர் அவர்களே, சிறையில் கைதிகளுக்கு இருந்தாலும், வானொலி கேட்கின்ற வாய்ப்பு அனைத்திந்திய வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்புகின்ற நிகழ்ச்சிகளை மட்டிலும்தான் கேட்கும் வாய்ப்பு இருக்கிறது. இலங்கை பாமர ரஞ்சகமான இசை நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்ற வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கு அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது ரொம்ப நாளுக்கு முன்பிருந்த நிலை. இப்பொழுது நம்முடைய வானொலியில் அதே போல் சில முறைகள் பின்பற்றப்பட்டு அழகான, இனிமையான பாடல்கள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன.

**திரு. என். கிட்டப்பா :** தண்டனையடைந்திருக்கும் கைதிகளின் நன்னடத்தையைக் கவனித்து அவர்கள் நல்ல நடத்தையில் இருந்தால், அவர்களுடைய தண்டனைக் காலத்தைக் குறைக்க போர்டு இருப்பதாக அறிவிக்கப்படுகிறதே, அந்த போர்டில் எத்தகையவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதையும், அதிலே சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சட்ட மன்ற உறுப்பினர் அரசாங்கத்தினிடம் வாதாடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்பொழுது அங்கேயிருக்கக்கூடிய போர்டில் கலெக்டர் இருக்கிறார்; ஜெயில் சூபரின்டெண்ட் இருக்கிறார். வேறு சில நான் அஃபிஷியல்ஸ் என்ற வகையில் மக்கள் பிரதிநிதிகளைப் போடுகிறோம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், ஜென்ம தண்டனை அடைந்தவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ ஆத்திரத்திற்கு இரையாகி முதல் முறையாகப் போனவர்களும், இரண்டாவது முறையாகப் போனவர்களும் உண்டு. ஆகையால் முதல் முறையாக ஆத்திரத்திற்கு இரையாகிப் போனவர்களுக்கு 5 வருடங்களுக்கு மேலும் தண்டனை முடிந்திருக்கிறது என்றால் அவர்களை விடுதலை செய்வதற்கு ஏற்பாடு செய்ய இருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உள்ளே சென்றவர்களுக்காக கனம் அங்கத்தினர் அவர்கள் வருத்தப்படுகிறார்கள். ஆனால், கொலை செய்யப்பட்டு மாண்ட அவர்களுடைய குடும்பத்தினரின் பரிதவிப்பையும் அவர்கள் பார்ப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** தலைவரவர்களே, அமரர் அண்ணா அவர்களின் 60-வது நிறைவு விழாவினையொட்டி, 10 ஆண்டுக்காலம் தண்டனை பெற்ற ஆயுட் கைதிகளை விடுதலை செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதைப்பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. டி. மார்டின் :** தலைவரவர்களே, வானொலி நிலையத்தார் அங்கு வந்து பேட்டி கண்ட நேரத்தில் சிறைச்சாலையிலுள்ள கைதிகள் அவர்களுடைய பேட்டியில் பதில் கூறியிருக்கிறார்களா ? அவர்கள் எந்த விதமான பதிலைக் கூறினார்கள் என்பதைப்பற்றி வானொலி நிலையத்தார் திரும்ப வெளியே ஒலிபரப்புச் செய்தார்களா ? அதுபற்றி அரசுக்கு தகவல்கள் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** என்று, எப்போது ஒலி பரப்புச் செய்யப்பட்டது என்ற தகவல் இல்லை. கேள்விகளுக்குப் பதில் சொன்னார்கள்... பூராவும் நான் படித்துப் பார்த்தேன்.



பெரும்பாலும், சிறைக்கைதிகளுக்கு வசதி வாய்ப்புகள் தரப்படுகின்றன. புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னால் கல்வித் துறையில் அதிகமாக முன்னேற்றம் அடைய சிறைக்கைதிகள் வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்பதைச் சொல்லியிருப்பதை நான் பார்த்தேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவரவர்களே, சில விசேஷ நாட்களிலே பல கைதிகளை விடுதலை செய்கிறது அரசாங்கம். அப்படி விடுதலை செய்யப்படும் கைதிகள் அந்தக் குழுவினரால் பரிசீலிக்கப்படுகிறார்களா, அல்லது அரசாங்கத்திற்கு அனுப்பப் படுகிறதா ? அல்லது அரசாங்கமே விடுதலை செய்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கேள்வி முழுவதும் புரியவில்லை. விசேஷ நாட்களில் ரெமிஷன் கொடுக்கிறோம். காந்தி நூற்றாண்டு விழா என்று ரெமிஷன் கொடுக்கப்படுகிறது, உலகத் தமிழ் மாநாட்டிற்காக ரெமிஷன் கொடுத்தோம். அதேபோல் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவிற்காக ரெமிஷன் கொடுக்க இருக்கிறோம். ரெமிஷன் கொடுப்பதைப்பற்றி லிஸ்ட் இருக்கிறது. அதன்படி கழித்துக்கொள்ளப்படுகிறது. அப்படிக் கழித்துக்கொள்ளப்பட்டு விடுதலை செய்வதற்குரிய அப்படிப் பட்டவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள். 'ப்ரிமெச்சூர் ரிலீஸ்' கேஸ்கள் அரசாங்கத்திற்கு வருகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், ஆயுள் தண்டனைக் கைதிகளை வானொலி நிலைய அதிகாரிகள் பேட்டி கண்டது, அவர்களுடைய வசதிகளை மட்டும் தெரிந்து கொள்வதற்காகவா அல்லது அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலே எப்படி குற்றவாளிகள் ஆனார்கள் என்பதைத் தெரிந்து அதை வானொலியிலே பரப்பினால் மற்றவர்கள் குற்றம் செய்யாமல் தடுப்பதற்கு உதவி செய்வதாக இருக்குமென்று அதைச் செய்தார்களா ? அப்படிச் செய்யவில்லை என்றால் அப்படி ஒரு ஏற்பாடு செய்வதினால் சமூகத்திற்கு நன்மை ஏற்படாதா என்பதைப்பற்றி அரசின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கேள்வி-பதிலிலேயிருந்து அப்படிப்பட்ட ஒரு நோக்கம் வானொலி நிலையத்திற்கு இருப்பதாக ஊகித்துக்கொண்டேன். காரணம், அவர்கள் பதிலிலே, அந்தச் சூழ்நிலையில் எதிர்பாராமல் நிகழ்ந்து விட்டது, அதற்காக நான் வருத்தப்படுகிறேன்" என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

### Acquisition of lands for Salem Steel Plant

*59 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government has started proceedings to acquire lands foi the Salem Steel Plant?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆம். சேலம் உருக்காலைத் திட்டத்திற்குத் தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு ஏற்கெனவே எடுத்துள்ளது.

நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் 4(1) பிரிவின்கீழ் தொடக்க அறிவிப்பு 1964-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. பிறகும் 1968 டிசம்பர், 1969 ஜனவரியில் அச் சட்டத்தின் 6-வது பிரிவின்கீழ் வரைவு அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : Sir, how many acres of land suitable for this Salem Steel Plant are proposed to be acquired? Is there any resistance from the local people for the acquisition? Do the Government propose to start this industry by themselves or do they propose to leave it to the Central Government to do it by themselves?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மூன்று கேள்விகள். முதல் கேள்விக்கு 25,516 ஏக்கர் 26 சென்ட். இரண்டாவது கேள்விக்கு, எப்போதும்போல நிலம் ஆர்ஜிதப்படுத்தும்பொழுது சில மனுக்கள் வரும். அவற்றைப் பரிசீலித்து நாம் முடிவு செய்கிறோம். அதேபோல், இதற்கும் சில கிராமத்தார்கள் மனுக்களை அனுப்பியிருக்கிறார்கள். அவை பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்படும். சேலம் உருக்காலையைப் பொறுத்தவரையில் மத்திய அரசு இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. அவர்கள்தான், ஆர்ஜிதம் செய்யலாம் என்று முன்னமே நம்முடைய அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். அதன்படி நாம் இதைத் துவங்கியிருக்கிறோம். இந்த அரசாங்கம் பொறுப்பேற்றபிறகு சேலம் உருக்காலைப் பிரச்சினை பின்னாலே முடிவு செய்யப்பட்டாலும், முதல் கட்டமாக 'பெல்லட்டைசேஷன் ப்ளாண்ட்' ஒன்று போடவேண்டும். அதற்காக, இரும்புக் கனிப் பொருள்களை வெளியே எடுத்து சிறிய உருண்டைகள் செய்து விடுவதற்காக ஐந்தாண்டுத் திட்டத்தில் அதையும் சேர்க்க வேண்டும். மத்திய அரசு முடிவெடுக்கும்பொழுது இதைப்பற்றியும் முடிவு செய்யலாம் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவரவர்களே, சேலம் உருக்காலைக்காக 25,000 ஏக்கர்கள் ஆர்ஜிதம் செய்ய 4(1) நோட்டிபிகேஷன் செய்திருக்கிறார்கள். இதில், இப்பொழுது 10,000 ஏக்கர்கள் தேவையில்லை, பிறகு தேவைப்படும் நேரத்தில் எடுத்துக்கொள்ளலாம் என்று ஏற்கெனவே நோட்டிபை செய்த 25,000 ஏக்கர் நிலங்களில் 10,000 ஏக்கர் நீக்கிவிடலாம் என்று சர்க்கார் பரிசீலனை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்படிப்பட்ட பெரிய திட்டங்களுக்கு ஏராளமான ஏக்கர் நிலங்கள் நாம் நோட்டிபை செய்யும்பொழுது, அதில் கொஞ்சம் அதிக காலதாமதம் செய்து, நமக்குத் தேவை என்று தெரியவந்தால் அந்த நிலங்களை பரிசீலிக்க வேண்டும். ஒரேயடியாக விட்டுவிட வேண்டுமென்றால் நம்முடைய தொழிற்சாலைத் திட்டம் பாதிக்கப்படலாம். ஆகவே, எடுக்கும்வரை அவர்கள் அனுபவத்திலே விடலாமா அல்லது குத்தகைக்கு விடலாமா என்பன போன்றவைகளை அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.





THIRU K. VINAYAKAM : Sir, the neighbouring States like Andhra Pradesh are clamouring that the Central Government should start a major steel plant of this type in the public sector. But if the Central Government are not prepared to start this industry of their own accord, will this State Government give an assurance to this House that it would embark upon that kind of adventure of their own accord with their own resources and start this industry at least in the first year of the Fourth Plan period?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சேலம் உருக்காலைக்கு யார் பணம் போடுவது, எப்படிப் பணம் போடுவது என்பது இப்பொழுது பிரச்சினையாக இருக்கிறது. அந்தப் பிரச்சினை ஒரு தனிப் பிரச்சினை. சேலம் உருக்காலைக்கு அனுமதி கிடைப்பது முதல் கட்டம். அது தீர்மானிக்கப்பட்ட பிறகு யார் பணம் போடுவது, எப்படிப் பணம் போடுவது, எந்த நாட்டோடு தொடர்புகொண்டு நடத்துவது என்பதைப்பற்றி இந்த அரசாங்கம் கொஞ்சம்கூடத் தயங்காமல் முடிவெடுக்கும்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, if I understood correctly, it was told sometime ago that the policy of the Government would be that they would carry out the work regarding the steel plant without any reference to the Central Government even if they were not willing to give financial assistance to this Government. Now I want to know from the Hon. Minister whether this Government have got permission for it from the Central Government or not? Further, I want to know the reasons for the delay in the issue of 4(1) and 6 notifications as there is an interval of two to four years in the issue of these two notifications?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நோட்டிபிகேஷன் டேட்ஸ், பரிந்துரைகளில் பெரிய தத்துவம் அடங்கியிருப்பதாகக் கருதவில்லை. சேலம் உருக்காலையைப் பொறுத்தவரையில், புதிய ஒரு உருக்காலை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறுவப்பட வேண்டுமா என்ற முடிவையெடுக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கிறது. அவர்கள் அந்த முடிவை எடுத்ததற்குப் பின்னாலே நாமாகச் செய்யலாமா, மத்திய அரசு எந்த அளவுக்கு உதவி செய்யும், வேறு எந்த நாட்டோடு தொடர்புகொண்டு செய்ய வேண்டுமென்பதுபற்றி நாம் முடிவெடுக்க வேண்டும். ஆகவே, அவர்கள் அந்த முடிவைச் செய்யாமலிருக்கும்பொழுது, நாமாக நடத்துகிறோம், பணம் போடுகிறோம் என்று சொல்வது அவர்கள் தர இருப்பதை வேண்டாம், வேண்டாம் என்று சொல்வதைப் போன்றிருக்கும். கனம் அங்கத்தினர் அவர்கள் இப்படிப்பட்ட ஆசையை வைத்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** சபாநாயகரவர்களே, இந்த நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பல வருஷங்களாகத் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதால் அந்த நிலத்தின் உடைமையாளர்கள் வேறு பாகங்களை வாங்குவார்கள் என்ற நிலையிலே அருகாமையிலுள்ள நிலங்களுக்கு விலை ஏறி வருகிறது. அதே

நோக்கில் அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்காமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இதைப்பற்றி விரைவில் முடிவு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்த முயற்சியிலே நாம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம்.

### சென்னை நகரிலுள்ள நடைபாதை கோயில்கள்

* 60 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து **கீழ்க்கண்ட** வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலுள்ள நடைபாதை கோயில்களை அப்புறப்படுத்த மாநகராட்சி மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு அரசு ஆதரவு தந்துள்ளதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இது மாநகராட்சியின் நிர்வாகத்திற்கு உட்பட்டதாகும். எனவே அரசின் ஆதரவு எதுவும் வேண்டப்படவில்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவரவர்களே, இந்த நடைபாதைக் கோயில்களில் நீண்ட நெடும் நாட்களாக இருக்கும் கோயில்களை விட்டுவிட்டு, திடீர் திடீரென்று வந்திருக்கிற கோயில்களை அப்புறப்படுத்தியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதேபோல, மற்ற முக்கிய நகராட்சிகளும் செயல்படுத்தினால் அரசு ஆதரவு அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாநகராட்சியும், மற்ற நகராட்சி மன்றங்களும், அவைகளுக்குரிய இடங்களிலே தடைப்படுத்தக்கூடிய கோயில்களையோ மற்றவைகளையோ ஏற்படுத்தினால் அவற்றை அகற்றுவதற்கு முழு அதிகாரங்களும் அந்த நகராட்சிகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்த நிலையில் அகற்றுவதற்கான முயற்சிகளில் அவர்கள் ஈடுபடுவார்களேயானால் அவைகளுக்குக் குறுக்கே நிற்காது.

**திரு. கே. விநாயகம் :** சார், நடைபாதையிலே இருக்கிற கோயில்களை அகற்றுவதிலே யாருக்கும் சந்தேகம் இல்லை. அந்தப் பகுதி கவுன்சிலர்களுடைய ஆதரவு இருந்தால் அங்கு ஒருசில கோயில்களை மாத்திரம் விட்டுவிட்டு, மற்ற, கவுன்சிலர்களுடைய ஆதரவு இல்லாத கோயில்கள் அகற்றப்படுகின்றன என்ற புகார் வந்திருக்கிறது. இதுவரையிலே எத்தனை கோயில்கள் அகற்றப்பட்டன? பாரிகார்னர் லைனிலே—பஸ் டிரான்ஸ்போர்ட் அலுவலகத்திற்கு எதிரிலே இருக்கிற அம்மன் கோயிலை—நான் பிறப்பதற்கு முன்னாலேயிருந்து அது இருப்பதாக செய்தி வந்திருக்கிறது—அகற்றுவதற்குக் காரணம் என்ன? எந்தவிதத்திலே அது நடைபாதைக்குத் தொல்லையாக இருக்கிறது என்று சொல்லமுடியுமா?



**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நீண்டகாலமாக ஆண்டவர்களை, இருக்கக்கூடிய இடத்திலிருந்து அகற்றுவது என்பதும், அது தேவையானால் அகற்றுவது என்பதும் மாநகராட்சிமன்றத்தைப் பொறுத்தது. நீங்கள் குறிப்பிட்டது எந்த ஆண்டு வைக்கப்பட்டது, எப்பொழுது அதை நீக்கினார்கள் என்ற விவரம் இருக்குமானால் ஏன் அது நீக்கப்பட்டது என்பதைப் பற்றி மாநகராட்சியிடமே விளக்கம் கேட்கலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், ரோடு புறம்போக்கு களிலே வீடு வாசலே இல்லாத பரம ஏழைகளாக இருக்கக் கூடியவர்கள் குடிசை போட்டு வாழ்கிறார்கள் என்று திடீர் திடீரென்று அவைகளை அப்புறப்படுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கும் பொழுது, நடைபாதையிலே இப்படி சின்னச் சின்ன பொம்மைகளை வைத்துக் கொண்டு, அதை ஒரு தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிற நிலையில் அந்தக் கோயில்களை அகற்றுவதற்கு எதற்காக இந்த சர்க்கார் தயக்கம் காட்டுகிறது? ஆகவே, கொஞ்சமும் தயக்கம் காட்டாமல், காங்கிரஸ்காரர்கள் எதிர் பிரச்சாரம் செய்வார்களோ என்று அச்சப்படாமல் . . . .

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. I object to **this kind of insinuation. I may claim your attention and say that during question hour, insinuations should not be permitted. At that rate** I could have also very well stated like that.

நான் கூட தி.மு. கழகத்தவர்களுக்கு கோயிலிலே நம்பிக்கையில்லையென்று சொல்லியிருக்கலாம். ஆனால் சொல்லமாட்டேன். அதை அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்விகளிலே குற்றச்சாட்டு வேண்டாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** துணைத் தலைவரவர்களே, இதில், காங்கிரஸ்காரர்கள் நடைபாதைக் கோயில்களை அகற்றுவதில் எதிர்ப்பாக இருக்கிறார்கள் என்று கூறியது கூடத் தவறானதே. மாநகராட்சி மன்றத்திலே இருக்கிற காங்கிரஸ்காரர்களும் சேர்ந்து நடைபாதைக் கோயில்களை அகற்றுவதில் மிகுந்த அக்கறை கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, நகரின் முன்னேற்றத்தில் காங்கிரஸ்காரர்களும் முன் நிற்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியின் பத்திரிகைகள் என்று சொல்லுகிற சில பத்திரிகைகளில்தான் அதைப் பற்றித் தவறான கருத்துக்களும் எதிர்ப்புகளும் காட்டப்படுகிறதேயல்லாமல், மாநகராட்சியில் உள்ள காங்கிரஸ்காரர்கள் ஆஸ்திக, நாஸ்திக சர்ச்சைகளுக்கு இடம் தராமல் நகரின் மேன்மைகளை மாத்திரம் முன் வைத்து கோயில்களை அகற்றுவதில் ஒத்துழைக்கிறார்கள்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவரவர்களே, நடைபாதையில் உள்ள மரங்களை அகற்றுவதில் குறிப்பாக தியாகராயநகரில் பாண்டி பஜாரில் கூட, நீண்ட காலமாக அழகுபட நிழல் தருகின்ற

[1969 ஆகஸ்ட் 21

மரங்களை அகற்றுவதாக அறிகிறேன். நடைபாதைக்கு இடம் வேண்டும் என்று அகற்றுவதாகக் கேள்வியுற்றேன். வண்டிப் போக்குவரத்துக்கு ஒரே வழியைக் கடைபிடித்து, இந்த மரங்களை அகற்றுவதை நிறுத்த அரசு ஆணையிடுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவரவர்களே, எப்படி இப்பொழுது சேலம் இரும்பாலைக்குத் தேவையான நிலங்களை கையகப்படுத்தி, அதன்மூலம் காரியங்களை நடத்தவேண்டுமென்று கருதுகின்றோமோ, அதாவது நீண்டகாலமாக அந்நிலங்களை அனுபவித்து வருகிறவர்களிடம் கையகப்படுத்துகிறோமோ, அதுபோல் நம்முடைய மாண்புமிகு ம.பொ.சி. அவர்கள் குறிப்பிட்ட பாண்டி பஜார் பகுதியிலே இருக்கக் கூடிய பாதையில் இப்பொழுது போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, முன்பிருந்ததைவிட பல மடங்கு அதிகமாக வண்டி, வாகனங்கள் செல்ல வேண்டியிருப்பதால், அதற்குத் தேவையான கடன்களை அரசாங்கம் மாநகராட்சிக்குக் கொடுத்து, அதற்கான பணிகளை மேற்கொள்ளச் சொல்லியிருக்கிறது. நீண்டகாலமாக ஓங்கி வளர்ந்திருக்கிற மரங்களை மக்களுக்காக அகற்றவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் ஓரளவுக்கு விரைவாக அவர்களுடைய ஒப்புதலை அளித்து, பணிகளை விரைவாகச் செய்ய வழிவிடுவார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. நா. வீராசாமி :** சென்னை நகர நடைபாதைகளில் திடீர் திடீரென்று இந்த விநாயகர் கோயில்கள்தான் அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன. அந்த கோயில்களில் பல தவறான செயல்களிலே ஈடுபடுகிறார்கள். எனவே, நடைபாதைகளில் அப்படிப்பட்ட கோயில்களை அமைக்கக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** எந்த ஊரிலும் " விநாயகர்கள் " தொல்லை இருந்துகொண்டுதான் இருக்கிறது. விநாயகர் இல்லாத ஊரே இல்லை. ஆகவே, சுலபமாக ஏற்படுத்தக் கூடிய சாமி விநாயகர் என்று கருதித்தான் பாதையிலே வைக்கக்கூடும். எந்த விநாயகராக இருந்தாலும் பொதுநலத்திற்கு இடைஞ்சலாக இருந்தால் கட்டாயம் அகற்றப்படும்.

**திரு. டி. மார்டின் :** சார், சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில் பிரச்னைகள் ஏராளமாக இருக்கின்றன. கொசுத் தொல்லைகள் ஏராளமாக இருக்கின்றன. குடி தண்ணீர் பிரச்னை பெரியதாக இருக்கிறது. இந்தவிதமான பல அத்தியாவசியமான பிரச்னைகள் எல்லாம் இருக்கும்போது, ஏதோ திடீர் திடீரென்று ஏற்பட்ட கோயில்களாக இருந்தாலும், அவற்றை திடீர் திடீர் பக்தர்கள் வைத்துக் கொண்டாலும், மேற்சொன்ன முக்கியமான பிரச்னைகளை எல்லாம் விட்டுவிட்டு, நடைபாதையில் இருக்கக் கூடிய



1969 ஆகஸ்ட் 21]

அந்தக் கோயில்களை அகற்றுகின்ற நிகழ்ச்சியில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். அது வேண்டாம். இந்தமாதிரியான சுகாதார நன்மைகளை முதன்மையாக நீங்கள் கருதவில்லை. ஆகவே அதை நல்லமுறையில் கவனித்து, மக்களுக்கு நல்ல பணி ஆற்றுங்கள் என்று அரசு, மாநகராட்சிக்கு குறிப்பு அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாநகராட்சி மன்றத்தினுடைய இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற குடிசைகளையும் பொது சுகாதாரத் தேவைகளை முன்னிட்டு அகற்றுகின்ற பணியிலே மாநகராட்சிமன்றம் ஈடுபட்டுத்தான் வருகிறது. திடீர் திடீரென்று தோன்றினாலும், திடீர் பக்தர்களால் தோற்றுவிக்கப்பட்டாலும் 20 இலட்சம் மக்கள் வாழ்கிற சென்னை மாநகரினுடைய நலனைக் கருதி அப்பணியைச் செய்யவேண்டியிருக்கிறது. நாம் இருக்கிற வீடுகளுக்கான வசதிகள், பாதாள சாக்கடைத் திட்டம், தண்ணீர் வசதி, மற்ற குடிசைப்பகுதிகளுடைய வசதி இவைகளையெல்லாம் கவனிக்கவேண்டியிருக்கிறது. அம்முறையில் மாநகராட்சி மன்றம் செயலாற்றி வருகிறது. இவ்வளவு நெருக்கடியான நேரத்திலும் மாநகருக்குத் தேவையான தண்ணீரை முடிந்த அளவுக்குப் பல்வேறு பகுதிகளிலேயிருந்து கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருப்பதையொட்டி, நாங்கள், இந்த அரசாங்கம், இந்த மாநகராட்சியை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**திரு. க. மு. ராசகோபால் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டில் ஆண்டவனைப்பற்றி எவ்வளவோ சொல்லப்பட்டிருக்கிறது. அவனன்றி அணுவும் அசையாது, ஆயிரம் கண்ணுடையாள் என்றெல்லாம் கூறி இருக்கிறார்கள். ஆகவே, மாநகராட்சி மன்றத்துக்கும் அந்த ஆண்டவனுக்கும்தான் வாதம் இருக்க வேண்டுமேயொழிய சட்டமன்றத்திலே ஒரு சாரார் ஆண்டவனைப் பற்றி பரிந்து பேசவேண்டிய நியாயத்தை விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மனிதனால் ஒரு புழுவைக் கூட உண்டாக்க முடியாது, ஆனால் ஆயிரக்கணக்கான கடவுள்களை உண்டாக்குகிறான் என்று ஒரு புலவர் பெருமகன் சொன்னது என்னுடைய நினைவிற்கு வருகிறது. மனிதர்களாக, நெறியுடையவர்களாக இருக்கவேண்டுமென்பதற்காகத்தான் கடவுள்களை அகற்றுகின்ற பணியிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கு நம்முடைய மாநகராட்சி மன்றமும் ஒத்துழைக்க வேண்டுமென்பதுதான் நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய கேள்வியினுடைய பொருள் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

[1969 ஆகஸ்ட் 21

## பேரையூர் அருகில் பாலம்

*** 61 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பேரையூரிலிருந்து மேலப் பட்டிக்குப் போகும் சாலையில் பேரையூரிலிருந்து ஒன்றுவது மைலில் உள்ள பாலத்தில் மோசமான நிலையில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது பழுதுபார்க்கப்படும் ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) & (இ): இந்தப் பாலத்தில் உள்ள இடைவெளி விரிசல் அல்ல. அது ஒரு விரிவு இணைப்பேயாகும். இந்த பால அமைப்பு நல்ல நிலையில் உள்ள தென்றும் இதில் அபாயம் எதுவும் இல்லையென்றும் நெடுஞ்சாலை கிராமப்பணிகள் துறைத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

## கல்லல் பஞ்சாயத்துக் கணக்குகள்

*** 62 வினா.—திரு. சா. மெய்யப்பன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கல்லல் பஞ்சாயத்துக் கணக்குகள் 1960-ம் வருடம் முதல் எப்பொழுதாவது ஆடிட் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது செய்யப்பட்டது ?

(உ) இல்லை எனில் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம். 1966 முதல் 1967-ம் ஆண்டு வரை தணிக்கை செய்யப்பட்டுள்ளது.

(இ) 1959-60, 1960-61, 1961-62, 1962-63-க்குரிய கணக்குகள் 1963-ம் ஆண்டு மே திங்களிலும், 1963-64-க்குரிய கணக்குகள் 1965-ம் ஆண்டு மார்ச் திங்களிலும், 1964-65-க்குரிய கணக்குகள் 1965-ம் ஆண்டு அக்டோபர் திங்களிலும், 1965-66-க்குரிய கணக்குகள் 1967-ம் ஆண்டு டிசம்பர் திங்களிலும், 1966-67-க்குரிய கணக்குகள் 1968-ம் ஆண்டு மார்ச் திங்களிலும் தணிக்கை செய்யப்பட்டுள்ளன.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. சா. மெய்யப்பன் :** தணிக்கைகளில், கையாடல், ஊழல்கள், அல்லது தப்புக் கணக்குகள், அங்கீகாரம் பெறாத செலவினங்கள் கண்டு பிடிக்கப்பட்டனவா ? தவறிழைத்தவர்கள் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? சட்டப்படி பஞ்சாயத்து கணக்குகள் அரையாண்டுக்கு ஒரு முறையாவது ஆடிட் செய்யப் படவேண்டுமென்ற முறை கையாளப்படுமா ?



1969 ஆகஸ்ட் 21]

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தணிக்கை குறிப்புகளிலே கண்டிருக்கிற குறைகளின் மேல் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சட்டப்படி நடைபெற வேண்டிய அந்த தணிக்கைகளை அவ்வப்பொழுது நடைபெறச் செய்யவேண்டுமென்று அதிகாரிகளுக்கு அரசாங்கம் அறிவித்து கொண்டுதானிருக்கிறது. அப்படி தவறுகிற இடங்களிலே தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## *Foreshore Estate Colony*

*** 63. Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether tap connections to all the flats individually have been proposed in the Foreshore Estate Colony at Santhome by the State Housing Board?**

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அரசிதழ் பதிவு பெறு ஊழியர்கள் வசிக்கும் அங்கணம் ஒவ்வொன்றிலும் தனித்தனி குழாய்கள் வகை செய்யப்பட்டுள்ளன. குடிநீர் தவிர பிற பயன்களுக்காக இக்குழாய்களில் கிணற்று நீர் வழங்கப்படுகிறது. மாநகராட்சி நீர் தெருக்குழாய் மூலம் வழங்கப்படுகிறது. பட்டினப் பாக்கம், குறைந்த வருமானத் தொகுதியினர் அங்கணங்களில் மாநகராட்சித் தண்ணீருக்கென்று தனித்தனி குழாய்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் டெப்டி ஸ்பீக்கர் ஸார், பட்டினப் பாக்கத்தில் வாழ்கின்ற சர்க்கார் ஊழியர்கள் குடி தண்ணீருக்காக ஒவ்வொரு பிளாக்கிற்கும் முன்னால் உள்ள பொது பைப்பிலிருந்து தண்ணீர் எடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிற காரணத்தினால், ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போன்று இருக்க வேண்டிய அவர்களிடையே சிற்சில நேரங்களில் மோதல்கள் ஏற்பட்டு, அவர்களிடையே அமைதியின்மை ஏற்படுகிறது என்பதை அவர்கள் அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறார்களா ? அவ்வாறு தெரிவித்திருந்தால், அவர்கள் பிளாக்குகளுக்கு முன்னால் ஒரு பைப், இரண்டு பைப் வைப்பது என்ற முறையை மாற்றி, ஒவ்வொரு வீட்டிற்கும் தனிக் குழாய் மூலம் குடி தண்ணீர் வழங்குவதற்கு வசதி செய்ய இந்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களுக்காக 668 குடியிருப்புகள் இருக்கின்றன. அவர்களுக்கு குடி தண்ணீர் தவிர, மற்ற தண்ணீருக்காக ஓவர்ஹெட் டாங்கு ஒன்றை அமைத்து, அவர்களுக்கு ஒவ்வொரு அங்கணத்திற்கும் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. ஆனால், குடி தண்ணீரைப் பொறுத்த மட்டில் அப்படி சப்ளை செய்வதற்கு இயலவில்லை. காரணம், கார்பரேஷனைக் கேட்டதற்கு, இப்பொழுது இருக்கிற நிலைமையிலே ஒவ்வொரு அங்கணத்திற்கும் குழாய்

மூலம் தண்ணீர் சப்ளை செய்வதற்கு இயலாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு பிளாக்குக்கும் எதிரில் தனியாக பைப் வைத்து, அதன் மூலம் குடி தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது.

**திரு. கே. விநாயகம் :** பிஃபோர் ஷோர் எஸ்டேட்டில் கட்டப்பட்டிருக்கிற வீடுகளில் வசிக்கின்ற அரசிதழ் பதிவு பெறாத உத்தியோகஸ்தர்களுடைய காலனியில் குழாய்கள் போட்டிருந்தும், குழாயைத் திறந்துவிட்டால் தண்ணீர் வராமல் வெறும் காற்றும் அல்லது ஓசையும் தான் வருகிறது என்று அவர்கள் புகார் செய்திருக்கிறார்களா ? அதிலே உண்மை இருக்கிறதா ? குழாய்கள் போட்டும் அவர்களுக்கு தண்ணீர் வராமல் இருந்தால், போட்ட பணம் வீணாகத்தானே போகும் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்திருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அப்படிப்பட்ட புகார்கள் வருவதாகத் தெரியவில்லை. ஆனால், குடி தண்ணீர் தவிர மற்ற தண்ணீரை ஒரு ஓவர் ஹெட் டாங்கில் ஏற்றி, அதன் மூலம் கொடுக்கப்பட்டு வருகிறது. குடி தண்ணீர் கார்ப்பரேஷன் குழாய் மூலம் ஒவ்வொரு பிளாக்குக்கும் சப்ளை செய்யப்படுகிறது.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் டெப்டி ஸ்பீக்கர் ஸார், கார்ப்பரேஷன் தண்ணீர் பட்டினப்பாக்கத்தில் வருகிற நிலையில், கார்ப்பரேஷன் தண்ணீரை ஓவர் ஹெட் டாங்கில் ஏற்றி, அந்தத் தண்ணீரை வீடுகளுக்குள்ளே தனியாக வழங்குவதற்கு, ஒரு குறிப்பிட்ட நேரத்திலாவது வழங்குவதற்கு, ஒரு அவசியமான நிலைமையை அரசாங்கம் ஆலோசித்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அதைப்பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது இருக்கிற நிலைமையில் அதன்படி தண்ணீர் சப்ளை செய்ய முடியாது என்று கார்ப்பரேஷன் அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. நா. வீராசாமி :** சென்னை நகரத்தில் பொதுவாக ஏற்பட்டிருக்கிற தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாகத்தான் பட்டினபாக்கத்திற்கும் நமது நகர மன்றம் தண்ணீர் வழங்க முடியவில்லை என்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** இப்பொழுது இருக்கிற பற்றாக்குறையின் காரணமாகத்தான், போதுமான தண்ணீர் இல்லாத காரணத்தினால்தான், நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

**திரு. தி. பொன்னுமலை :** இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்கள் பக்கத்திலுள்ளவர்கள், வெளியில் இருப்பவர்களிடத்தில் தகவல் தெரிந்து கேள்வி கேட்பது இந்த மன்றத்திற்கு முறையா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).



## கோயில்களுக்கு யுனஸ்கோ உதவி

* 64 வினா.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு தஞ்சை, சீரங்கம் தவிர மற்றக் கோயில்களின் பாதுகாப்பிற்கு யுனஸ்கோ உதவி பெறும் வகையில் மத்திய அரசிடம் சிபார்சு செய்ய கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்தக் கோயில் இதில் சேர்க்கப்படும் ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. வை. சுவாமிநாதன் :** அப்படியானால் எந்தெந்தக் கோவில்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** ஸ்ரீரங்கம், தஞ்சாவூர் கோவில்கள் தவிர, இராமேசுவரம் கோவிலை இந்த யுனஸ்கோ அஸிஸ்டன்ஸுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று ஸ்டேட் ஒரு தீர்மானம் போட்டிருக்கிறது. அதன்படி யுனெஸ்கோ கமிட்டி இராமேசுவரம் கோவிலை எடுத்துக் கொள்ளலாமா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** யுனெஸ்கோ மூலமாக நமக்குக் கிடைக்கிற உதவியை வைத்துக் கொண்டு ஸ்ரீரங்கம், தஞ்சாவூர் கோவில்களில் இதுவரையில் என்ன அபிவிருத்தி வேலை செய்யப்பட்டிருக்கிறது ? அதற்கு எவ்வளவு பணத்தை அவர்கள் செலவு செய்திருக்கிறார்கள் என்பதுபற்றி அரசாங்கத்தினிடம் ஏதாவது குறிப்பு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தஞ்சாவூர்க் கோவில் ஆர்கியலாஜிகல் டிபார்ட்மெண்டில் இருக்கிற காரணத்தினால், அதற்கு யுனெஸ்கோ அஸிஸ்டென்ஸ் தேவையில்லை என்று கருதுவதாக யுனெஸ்கோ கமிட்டி தெரிவித்திருக்கிறது. ஆனால் ஸ்ரீரங்கம் கோவிலுக்கு யுனெஸ்கோ அஸிஸ்டென்ஸ் 12,000 டாலர் மதிப்புள்ள புக்லெட்ஸ், ரெனொவேஷனுக்காகவும், 3,000 டாலர் புஸ்தகங்களும் கொடுப்பதற்கு வாக்களித்திருக்கிறார்கள். 12,000 டாலர் என்பது ரூ. 90,000-க்கு சமம். அது கூடப் பணமாக இல்லை. அதுவும் மெடீரியல்ஸாக அனுப்பி, அப்படிப்பட்ட உதவி செய்வதாக இருக்கிறார்கள். அந்த மெடீரியல்ஸும் பெரும்பகுதி இந்தியாவிலே கிடைக்காதவையாக அவர்கள் அங்கே கொடுப்பதாக இருக்கிறார்கள்.

**திரு. சு. துரைசாமி :** தமிழகத்தில் சிறப்பு வாய்ந்த கோவை மாவட்டத்தில் இருக்கிற பேரூர் கோவிலுக்கு இந்த ஸ்தாபனத்தினிடமிருந்து உதவி வாங்குவதற்கு நமது சர்க்கார் மத்திய சர்க்கார் மூலம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** ஸ்டேட் யுனெஸ்கோ கமிட்டி இன்னும் 10 கோவில்களை அந்த யுனெஸ்கோ அஸிஸ்டென்ஸுக்காக தேர்ந்தெடுக்கவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்கள். அந்தப் பத்து கோவில்கள் எவை என்று தெரியவில்லை. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கோவிலை எடுத்துக் கொள்ளலாம் என்றும் நமக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

## *Common Law for Religious Endowments*

* 65 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the **Minister for Religious Endowments** be pleased to state whether the views of the State Government have been sought for by the Union Government on th administration of Common Law for **Religious Endowments?**

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** ஆம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, பப்ளிக் டிரஸ்டு ஆக்ட் என்று ஒரு சென்டிரல் ஆக்ட் போடுவதாக ஏற்கனவே சர் சி. பி. ராமசாமி அய்யர் அவர்களின் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, அந்தக் கமிட்டி இந்தியா பூராவுக்கும் சாரிடபிள் எண்டௌமெண்ட்ஸ் அண்டு டெம்பிள்சுக்காக ஒரு சென்டிரல் ஆக்ட் போடவேண்டும் என்று சொன்னதன் பேரில், சென்டிரல் கவர்ன்மெண்டார் அவர்கள் மாகாண கவர்ன்மெண்டாரை அப்படிப்பட்ட ஒரு சென்டிரல் பப்ளிக் டிரஸ்டு ஆக்ட் கொண்டுவரலாமா என்று கேட்டதற்கு, அது அவ்வளவு உகந்தது அல்ல, இங்கே தமிழ் நாடு அரசைப் பொறுத்தமட்டில் ஆக்ட் 22 ஆஃப் 1959 என்று ஒரு ஆக்ட் இருக்கிறது. அது எந்த வகையிலும் பாதகமாகத் தெரியவில்லை, ஸ்டேட்டில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது, ஆகவே, தனியாக சென்டிரல் ஆக்ட் தேவையில்லை என்று சொல்லி பதில் அனுப்பப்பட்டது. இந்த சென்டிரல் ஆக்டில் கூட, சீக், ஜெயின் டெம்பிள்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். அதுபோலவே, முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் வாக்ஃப் ஆக்ட் இருப்பதால், தனியாகச் சலுகை அளிக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். வாக்ஃப் ஆக்ட், 1954 சென்டிரல் ஆக்ட் ஒன்று அப்படி இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு சென்டிரல் ஆக்ட் தனியாக தேவையில்லை, சென்னை மாகாணத்தில் ஒரு தனி ஆக்ட் இருக்கிறது, சென்டிரல் ஆக்ட் வருவதினால் மாகாணத்தின் அதிகாரங்கள் பறிக்கப்படுமோ என்ற பயம் இருக்கிற காரணத்தினால், அப்படிப்பட்ட ஒரு சென்டிரல் ஆக்ட் தேவையில்லை என்று இந்த அரசாங்கம் கருதுகிறது.

**திரு. கே. விநாயகம் :** இப்பொழுது இருக்கிற நிலைமையில் அந்தந்த மாகாணத்தில் இருக்கிற கோவில்கள் நிர்வாகத்தை அந்தந்த மாநில சர்க்கார் நடத்துகிறது. குறிப்பாக ஆந்திர



மாகாணத்தில் இருக்கிற திருப்பதி கோவிலுக்கு ஏராளமான பணம் வருவாய் வருவதினாலே, அதை சென்டிரல் ஆக்டின் கீழ் கொண்டுவந்து, அதற்கு வருகிற வருவாயை, பக்கத்திலுள்ள அந்தக் கோவிலை ஆதரிக்கிற நான்கு மாநிலங்களுக்கு பிரித்துக் கொடுக்கலாம் என்ற ஒரு கருத்தில் இம்மாதிரி ஒரு சென்டிரல் ஆக்ட் கொண்டுவரலாம் என்று சொல்கிறார்கள். அது நமக்குச் சாதகமாக இருக்காதா? அப்படியிருக்கும்பொழுது இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காருக்கு இந்தச் சட்டத்திற்கு விரோதமாக சிபார்சு செய்திருப்பது ஏன் என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் ஹிண்டு ரிலிஜியஸ் அண்டு சாரிடபிள் எண்டௌமெண்ட்ஸ் ஆக்ட் என்று ஒரு ஆக்ட் இருக்கிறது. ஒவ்வொரு கோவிலுக்கும் தனித்தனி விதமான நடைமுறைகள் இருந்து வருகின்றன. அதைப் போலவே ஒவ்வொரு மதத்திற்கும் ஒரு நடைமுறை இருக்கிறது. அதைப்போல மாகாணத்திற்கு மாகாணம் நடைமுறைகள் வேறுபடுகின்றன. அதைப்போல ஜாதிக்கு ஜாதி வெவ்வேறு நடைமுறைகள் இருக்கின்றன. ஆகவே, பல தொல்லைகள் வருகிற காரணத்தினால், இப்படிப்பட்ட ஒரு சென்டிரல் ஆக்ட் தேவையில்லை என்ற கருத்துத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

## மின்சாரக் கட்டணம் செலுத்துதல்

*** 66 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சாரக் கட்டணம் செலுத்துவதில் மாதம் ஒரு முறை என்ற முறையை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** (அ) & (இ) ஒவ்வோர் ஆண்டும் பெருமளவில் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப் படுவதற்கு ஒப்பளிப்பு வழங்குவதைத் தவிர்க்கும் பொருட்டு இரண்டு மாதங்களுக்கொரு முறை மின்சாரக் கட்டணம் வசூலிக்கும் முறையை செயலுக்குக் கொண்டு வரத் தமிழ்நாடு மின்சார வாரியம் திட்டமிட்டது. ஆனால் இது பின்னர் கைவிடப் பட்டது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இந்த மாதிரி மின்சார வாரியத்தில் பில்கள் தயாரிப்பது, பணம் வசூலிப்பது போன்றவற்றை, ஏஜன்சி முறையைப் பின்பற்றிச் செய்ய முடியுமா என்பதை அரசாங்கம் யோசிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** அதைப் பரிசீலிக்கலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சார், அந்த முறை கைவிடப் பட்டது என்று அமைச்சர் கூறினார்கள். எந்தக் காரணத்தை ஒட்டி அது கைவிடப்பட்டது? இரண்டு மாதத்திற்கு ஒரு முறை யில் கட்டணத்தை வசூலிக்கலாம் என்று எந்தக் காரணத்திற்காக முடிவு செய்தார்கள், அந்த முடிவை அவ்வாறு செயல்படுத்த வேண்டாம் என்றும், வேறு முடிவுக்கு வருவதற்கும் காரணம் என்ன என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** இரண்டு மாதத்திற்கு ஒரு முறைதான் பில் பணத்தை வசூலிக்க வேண்டும் என்கிற சூழ் நிலை இருந்தால் அதனால் சிலபேர்களுக்கு வேலை போய்விடும் சூழ் நிலை வரலாம் என்பதனால் அது கைவிடப்பட்டது.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் டெப்டி ஸ்பீக்கர் ஸார், கிராமப் புறங்களிலே விவசாயிகள் பல மைல்கள் நடந்து சென்று ஒரு நாள் பூராவும் வேலையெல்லாம் கெட்டு, மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்கென்று மின்சார வாரிய அலுவலகங்களுக்குப் போக வேண்டியதாக இருக்கிறது. என்னுடைய தொகுதியாகிய திருச்செந்தூர் தாலுக்காவில் சில கிராம மக்கள் நாங்குநேரி தாலுகா திசையின்விளைக்குப் போகவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த முறையை மாற்றி, மீட்டர் ரீடிங் எடுக்கப் போகும் அலுவலரே பணத்தையும் வசூல் செய்து, பணத்தை விவசாயி களிடமிருந்து வாங்கி, அலுவலகத்தில் செலுத்தக் கூடிய சாதாரண வசதியை வாரியம் செய்து கொடுக்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** அப்பேற்பட்ட புகார் எதுவும் உறுப்பினர் தொகுதியிலிருந்து இதுவரைக்கும் என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. அப்படி ஏதாவது வந்தால் அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவர் அவர்களே, இந்த மின்சாரக் கட்டணத்தை இரு மாதத்திற்கு ஒரு முறை கட்டுவது என்று ஏற்பாடு செய்வதில் சிலபேர்களுக்கு வேலைபோகும நிலை இருக்கிறது என்பதால் அது கைவிடப்பட்டது என்று அமைச்சர் சொன்னார்கள். அது மட்டும்தான் உண்மையான நிலைமையா அல்லது இரண்டு மாதக் கட்டணமாக இருந்தால் அது விவசாயி களுக்குக் கட்டுவதற்குச் சிரமமாக இருக்கும், மாதம் ஒரு முறையாக இருந்தால் குறைந்த தொகை கட்ட வேண்டியதாக இருக்கும், அது நல்லது என்று அந்த முடிவுக்கு வந்தாகளா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** அதற்கு என்ன காரணம் என்று இப்பொழுது காட்டப் படவில்லை.

**திரு. அ. ஆறுமுகம் :** மின்சாரக் கட்டணத்தை மாதம் ஒரு முறை கட்டவேண்டும் என்பதற்குப் பதிலாக, கிராமத்திலேயே வசூல் செய்தால் நலமாக இருக்கும். அப்படி நான்கு முறை களில் வசூல் செய்யும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?





**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** அப்படிப் பட்ட சிக்கல்கள் கவனத்திற்கு வரவில்லை. வாரியம் இப்பொழுது இருக்கும் முறையே சிறந்தது என்று கருதுகிறது. இப்பொழுது கூறப்படும் கருத்துக்களும் பரிசீலனை செய்யப்படலாம்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** சார், மாதாமாதம், கட்டணத் தொகையைச் செலுத்தாவிட்டால், கனெக்ஷன் எடுக்கப் பட்டு விடுகிறது. அதனால் அநேக சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, வசதியுள்ளவர்கள், அட்வான்ஸ் டெபாசிட்டாக, ஆறுமாதத் திற்கோ அல்லது ஒரு வருஷத்திற்கோ மொத்தமாக முதலிலேயே கட்டுவதற்கு வழிவகை செய்யமுடியுமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** தனிக் கேள்வி போடவும்.

**திரு. கே. சகாதேவ கண்டர் :** உதவித் தலைவர் அவர்களே, மின்சாரக் கட்டணம் செலுத்துவதில், விவசாயிகளுக்கு கஷ்டங் களும் சிரமங்களும் இருக்கின்றன. ஒரு நாள் முழுதும் செல வழிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த முறையை மாற்றி, குறிப்பு எடுக்க வருகிறவர்களே கட்டணத்தையும் வசூலிக்கும் வகையில் மாற்றியமைக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** ஏற்கனவே பதிலில் நான் சொன்னேன், திரு. மார்ட்டின் அவர்கள் கூறியதற்கு, அவருடைய தொகுதியிலிருந்து புகார் எதுவும் வரவில்லை என்று. நண்பர் அவர்களுடைய கருத்தையும் பரிசீலிக்கலாம்.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** விவசாயிகள் மாதம் ஒரு முறை இந்த மின்சாரக் கட்டணத்தைக் கட்ட வேண்டும் என்பதற்குப் பதிலாக, அறுவடைக் காலத்தில், மூன்று மாதத்திற்கு ஒரு முறை விவசாயிகள் மட்டும் கட்டலாம் என்று வழிவகை செய்யப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** அப்படியொரு யோசனை இப்பொழுது இல்லை.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, சில விசேஷ நாட்களில், திருமணம் போன்ற தினங்களில், மின்சாரத்திற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை அட்வான்சாகக் கட்டுகிறோம். ஆனால், பின்னால் மின்சாரம் எவ்வளவு செலவழிந்ததோ அதற்குப் போக பாக்கித் தொகையைக் கொடுக்கும்போது ஸ்டேட் பாங்கியில் செக்காகக் கொடுக்கிறார்கள். குறிப்பிட்ட மீதத் தொகை ரூ. 25 என்று வைத்துக் கொண்டால், ஸ்டேட் பாங்கியில் அதை வாங்க வேண்டும் என்றால், ரூ. 50 கட்டி அக்கவுண்ட் வைத்துக் கொள் என்கிறார்கள். ஆகவே ஸ்டேட் பாங்கியில் அக்கவுண்ட் இல்லாதவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அப்படிப் பட்ட தொகைகளைப் பணமாகவே கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

[1969 ஆகஸ்ட் 21

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** அதற்கான விவரம் இங்கே இல்லை, மூலக் கேள்வி வேறாக இருப்பதால். தனிக் கேள்வி போட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Timber Depot at Denkanikota*

*67 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(a) Whether there is any proposal to start a Government timber depot at Denkanikota in Hosur; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there is an extensive forest area near Denkanikota in the Hosur taluk and there is excellent timber available there. But we do not know where it goes and how it is used. But the people are not getting any benefit from this timber. Even to make a window frame or door frame people have to go to Bangalore or Vellore. So, considering the requirements of the people, will the Government think of opening a Timber Depot at Denkanikota?

THE HON. THIRU O. P. RAMAN : At present, we have got timber depots in four places, viz., Pollachi, Mettupalayam, Nagerkoil and Pettai. There are no timber extraction areas anywhere in the vicinity of Denkanikota. Therefore, there is no proposal at all to open a depot at Denkanikota.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாரஸ்ட் இலாகாவிற்கு அதிகமாக ஊழியர்கள் இல்லாத காரணத்தால், தடிகள், மரங்கள் இவைகள் கடத்தப்படுகின்றன, அதனால் அரசாங்கத்திற்குப் பேரிழப்பு ஏற்படுகிறது. பாதுகாப்பு அதிகமாகத் தேவை என்கிற கருத்து மக்கள் மத்தியில் பரவலாக இருக்கிறது என்பதை அரசாங்கம் உணருமா? ஆம், என்றால், அதில் உண்மை இருந்தால், அதற்காக உடனடியான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா, பாதுகாப்பை அதிகப்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** தலைவர் அவர்களே, மூலக் கேள்வி டிம்பர் டெப்போ பற்றியது. தனிக் கேள்வி போட வேண்டும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, all the places where there are timber depots—mentioned by the Hon. Minister—are far away from Denkanikota and that is why I have made a request that the Government should consider the opening of a timber depot at Denkanikota?



1969 ஆகஸ்ட் 21]

THE HON. THIRU O. P. RAMAN : I have already stated that there is no proposal to open a timber depot there because there is no extraction area in the vicinity of that place and therefore at present the proposal is not under consideration at all.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, மரக் கிடங்குகள் நான்கு வன இலாகாவில் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதே போன்று சந்தன மரங்களைச் சேமித்து வைக்கும் கிடங்குகள் நம்முடைய மாநிலத்தில் எங்கு எங்கு இருக்கின்றன என்று தெரிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** முழு விவரம் இங்கே இல்லை. தனிக் கேள்வி போட்டால் நன்றாக இருக்கும் என்று தெரிவிக்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, in the forest at Denkanikota Sandalwood, Rosewood and teak are abundantly available but there is no industry in the Hosur taluk. So, in view of this and in order to create employment for the poor, will the Government come forward to start a Sandalwood Oil Factory at this place where sandalwood is abundantly available?

THE HON. THIRU O. P. RAMAN : It may be taken into consideration.

THIRU K. VINAYAKAM : May I know from the Hon. Minister whether there is any forest area in Denkanikota or near-about that place as to enable this Government to open a timber depot or any other depot for wood suitable for the construction of work and whether the required wood is available in that area?

THE HON. THIRU O. P. RAMAN : There are some forest areas but timber is not available there.

### *Meeting of National Development Council*

*54. *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. Minister for Finance be pleased to state whether the then Hon. the Minister for Law and Co-operation attended the meeting of the National Development Council about the 14th September, 1968?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கலந்துகொண்ட நமது அமைச்சர் அவர்கள், தமிழகத்தின் சார்பிலே கூறிய கருத்துக்கள் எவை எவை? அவர் கூறிய எந்தெந்தக் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன? எவை எவை தள்ளுபடி செய்யப்பட்டன என்பதைக் கூற முடியுமா?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: I shall place the paper on the table of the House.

DR. H. V. HANDE: Will the Hon. Minister tell us briefly what he discussed during this National Development Council meeting, whether our requirements for the Fourth Plan had been placed before them or whether the requirement of greater devolution of resources to the States was placed before them?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: I think I need not place the paper on the table of the House. I shall explain the whole thing. The subjects broadly discussed were :—

(i) Principles for the distribution of Central assistance to States during the Fourth Five-Year Plan.

(ii) Classification of schemes as Centrally sponsored in the Fourth Five-Year Plan.

(iii) Consideration of the question of imbalances as between the States in the light of the recommendation of the National Integration Council.

These three subjects were broadly discussed. The Committee of the National Development Council at its meeting held in July 12, 1968 agreed that the following criteria should govern distribution of Central Assistance among States during the Fourth Five-Year Plan.

(1) Population.

(2) Per Capita income.

(3) Per Capita taxation in relation to per capita income.

(4) Spill over expenditure on account of continuing major irrigation and Power Scheme.

(5) Special problems of the State.

It also decided that the requirements of the three States Assam, Nagaland and Jammu and Kashmir should be first met out of the divisible pool of Central Assistance. As regards weightage that should be given to each of the above criteria it was decided that the Planning Commission should work out different models of distribution of Central assistance among the States. The Planning Commission was asked to carry out some exercise. It suggested the following recommendation :—

Population—55 per cent.

Per Capita State income—20 per cent.

Per Capita taxation in relation to per capita income—5 per cent.

Continued major irrigation and power projects and the special problems of individuals—20 per cent



Our Hon. Minister for Co-operation who participated on behalf of the Hon. Chief Minister suggested that the criteria fixed by the Finance Commission to correct imbalances should be taken into account in fixing central assistance for State Plan. He did not agree to the reduction of weightage of population to 55 per cent and suggested it may be raised to at least 60 per cent. It was agreed to by the National Development Council. The criteria for population is now 60 per cent. As regards weightage to tax efforts, the Planning Commission suggested 5 per cent. Our Minister on behalf of our Government suggested that it may be raised to 10 per cent. That was also agreed to. Regarding weightage to per capita income, our Minister for Co-operation wanted that it should be retained at 20 per cent. It was not agreed to. It was reduced to 10 per cent. As regards spill over projects, we suggested that weightage assigned be 8 per cent and in calculating the assistance, the condition of cost Rs. 20 crores should not be applied. It was not conceded.

Regarding classification of scheme as centrally sponsored in the Fourth Five-Year Plan, subject to few changes the National Development Council adopted the report of the officials committee.

Regarding the third point, viz., consideration of the question of imbalances as between States in the light of the recommendation of the National Development Council, the Planning Commission Member suggested that two working groups should be set up to examine this question. One of the Working Groups would go into the question of fiscal and financial concessions that should be given for development of industries in the backward areas and the second group would lay down the criteria for identifying the backward areas in the States. Our Minister for Co-operation who took part in the discussion suggested that the number of industries in a particular State or the Central investment in that State should not be the only factor to be taken into account in considering the regional imbalance. The per capita income was the important criterion for determining the degree of backwardness of a State. That was the point our Minister made. The regional imbalance of every State should be considered, for, even developed States had a large number of backward areas or tracts. Certain States did not have the potential for large agricultural development or power production and naturally they had to depend on industries. Referring to the point made by some of the Chief Ministers that while minerals and raw materials were available in some States, industries relating to them had been set up in other States and that this needed to be corrected, our Minister for Co-operation observed that such a step would not lead to national integration but on the other hand would result in national disintegration. Some industries had already developed in some areas with raw material obtained from other areas and if this arrangement was disturbed by giving special concession to some other areas, the existing industries in a State like Madras would be adversely affected.

It was decided by the National Development Council that for a careful study of the question of regional imbalances, two working groups as proposed by the Planning Commission Member be set up. The Working Groups were set up and they have submitted their reports to the National Development Council which met in April 1969 for consideration.

THIRU K. VINAYAKAM : Having heard the elaborate points which the Hon. Minister for Finance was able to cull out from the large notes in his possession, will the Hon. Minister be pleased to tell us what were the points on which our Minister projected his views for the interest of our State and what were the points which were agreed upon at the suggestion of our Minister by the National Development Council, what were the points on which there was difference of opinion which were subsequently rejected by the Committee and in so doing what is the extra benefit which this Government has derived out of the projecton of its views?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, நான் என்னுடைய பதிலிலேயே சொன்னேன். இதை நிர்ணயிக்கிற போது, ஜனத்தொகை 55 சதவீதம் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். நாம் 60 சதவீதமாக இருக்க வேண்டுமென்று சொன்னோம். பெர் கேபிடா இன்கம் 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதம் வரையில் கூடுதலாக்க வேண்டும் என்று சொன்னோம். அது பத்து சதவீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. பெர் கேபிடா டாக்சேஷன் இன் ரிலேஷன் டு பெர் கேபிடா இன்கம் 20 சதவீதம் என்று சொன்னது, அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அது குறைக்கப் பட்டிருக்கிறது. ஸ்பில் ஓவர் மேஜர் இரிகேஷன் அண்டு பவர் பிராஜட் 8 சதவீதம் இருந்து, 20 கோடி ரூபாய்க்கு மேலாக இருக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்ளவில்லை.

அடுத்தபடியாக, பேக்வேர்ட் ஸ்டேட் என்பதற்காக பத்து சதவீதம் மத்திய உதவி அளிக்கப்பட வேண்டுமென்றதால் நமக்குக் கிடைக்காத நிலை ஏற்பட்டது. எந்தெந்தப் பகுதி வளர்ச்சி குன்றியிருக்கிறதோ அந்தப் பகுதிகளுக்குத்தான் அவை கொடுக்கப்பட வேண்டுமென்று முடிவாகி இருக்கிறது. அவர்கள் சொல்லும் கணக்குக்கு நமது மாநிலம் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. இதனால் நமக்கு பாதகம் ஏற்படுகிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள்

It will be distributed among the States not considered back ward with reference to the excess of the per capita income of the State concerned over the national average multiplied by the population of the State." என்று கூறினார்கள். இதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் சொன்னதெல்லாம் பாபுலேஷன் 5 சதவீதத்தை அதிகப்படுத்தியிருப்பதாலும், டாக்சேஷன் 10 சதவீதம் இருக்கிற காரணத்தாலும் முடியாது என்று சொன்னார்கள். இதனால் நமக்கு நஷ்டம்தான். நாம் சொன்னவைகளை அவர்கள் ஒத்துக் கொண்டிருந்தால் சௌகரியமாக இருந்திருக்கும்.





**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மத்திய மாநில நிதி உறவுகள் பற்றி ஆராய்வதற்கும், அவர்களுக்குள் ஏற்படுகிற தகராறுகளுக்குத் தீர்வு காண்பதற்கும் நிதிக் குழுவை நிரந்தரமாக்க வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கோரிக்கை விட்டிருந்தார்கள். அதுபற்றி நாஷனல் டெவலப்மெண்டு கவுன்சிலில் எடுத்துரைக்கப்பட்டதா? விவாதிக்கப்பட்டதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மத்திய மாநில உறவு நிலையை மையமாகக் கொண்டுதான் மத்திய அரசு இப்போது சுழல்கிறது. இதுபற்றிப் பல்வேறு வகையில் விவாதிக்கப்படுகிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் ஒரு நிபுணர் குழுவை அமைத்திருப்பது பற்றிச் சொன்னார்கள். இது சம்பந்தமாக பல்வேறு புது சிந்தனைகள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. நாம் அமைத்துள்ள கமிட்டியின் சிபார்சுகளை வைத்து இந்தப் புதுச் சிந்தனைக்கு உருக்கொடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

## அரசு போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்கள் திடீர் வேலை நிறுத்தமும் பொது மக்கள் அல்லலும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சட்டப் பேரவை விதி 42-இன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானங்களை திரு. என். எஸ். வி. சித்தன், திரு. கோவிந்தராசன், திரு. மார்டின் ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள். இந்த மூன்றும் ஒரே கருத்துடைய தீர்மானங்களாகும். ஆயினும் திரு. கோவிந்தராசன் அவர்களும், திரு. மார்டின் அவர்களும் பேரவை ஆரம்பித்த பின்னர் தான் தங்கள் தீர்மானத்தைக் கொடுத்தார்கள். ஆகவே இந்த இரண்டையும் அவை முன் வைக்க அனுமதி மறுக்கிறேன். திரு. சித்தன் அவர்கள் இப்போது தன்னுடைய தீர்மானம் எப்படி சட்டப் பேரவை விதி 42-இன் கீழ் வரும் என்பதை சுருக்கமாக விளக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

THIRU N. S. V. CHITHAN : Mr. Deputy Speaker, Sir, under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, I give notice of the following adjournment motion for the purpose of discussing a definite matter of urgent public importance, namely, the inconvenience and hardship experienced by the general public due to the lightning strike by the State Transport workers on 20th and 21st August 1969.

*** திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் சில காலமாக சென்னையிலும் சரி, மற்ற இடங்களிலும் சரி, மாணவர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1969 ஆகஸ்ட் 21

மோதல் ஏற்பட்டுக்கொண்டே வருகின்றன. தொடர்ந்து அவ்வப்போது பல சம்பவங்கள் நடைபெற்றும் கூட அரசு இத்துறையில் போதிய கவனம் செலுத்தவில்லை. இத்தகைய தகராறுகளுக்கான காரணத்தை முற்றும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது வருத்தமளிக்கிறது.

சென்னையில் நேற்றையதினம் பஸ் தொழிலாளர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறுகளின் காரணமாக பஸ் தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்திருக்கிறார்கள். இதன் காரணமாக இன்றைக்கு சட்டசபைக்கு உறுப்பினர்கள் வருவதற்குக் கூட பஸ்கள் ஓடவில்லை. மக்களில் பலர் தங்கள் அலுவலகங்களுக்குப் போக முடியாமல் தவிக்கிறார்கள். இதைக் காட்டிலும் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை எதுவும் இல்லை. ஆகவே பேரவை இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க நான் கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, எந்தக் கோரிக்கையையும் வைத்து பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யவில்லை. வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தும் இந்த வேலை நிறுத்தத்தைச் செய்யவில்லை. அரசாங்க பஸ் போக்குவரத்துத் துறைக்கும், தொழிலாளர்களுக்கும் இடையில் எந்தவித தகராறும் ஏற்பட்டு, அதன் காரணமாக இந்த வேலை நிறுத்தம் திடீரென ஏற்பட்டது என்றும் கூற முடியாது. நேற்று 20—8—1969 காலை, கடற்கரைச் சாலையில் மாணவர்களுக்கும் பஸ் டிரைவர், கண்டக்டர்களுக்கும் தகராறு ஏற்பட்டது. உடனடியாகக் காவல்துறையினரும், போக்குவரத்துத் துறை அதிகாரிகளும் தலையிட்டு நிறுத்தப்பட்ட பஸ்களை எடுத்து ஓட்டுமாறு செய்தனர். நேற்று 20—8—1969 மாலையில் ஸ்டர்லிங் ரோடுக்கு அருகில் மாணவர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும் தகராறு ஏற்பட்டது. அதிகாரிகள் உடனடியாகத் தலையிட்டு அமைதி ஏற்படுத்த முயற்சித்தனர். கூட்டமாகத் திரண்டுவந்த மாணவர்களை அதிகாரிகள் அமைதிப்படுத்தி திரும்ப அனுப்பி வைத்தனர். பஸ் தொழிலாளர்கள் நகரில் பல இடங்களில் உடனடியாக பஸ்களை நிறுத்திக் கொண்டு, போக்குவரத்து தடைப்படும் அளவுக்கு நிலையை உருவாக்கினர். பிறகு அதிகாரிகளும் யூனியன் தலைவர்களும் தலையிட்டதின் பேரில் இரவு எல்லா பஸ்களும் டெப்போக்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இன்று காலையில் பஸ்களை ஓட்ட டிரைவர்களும் கண்டக்டர்களும் மறுத்து அதன் காரணமாக பஸ்கள் ஓடவில்லை. மாணவர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும் ஏற்படும் இத்தகைய தகராறுகளில் தனிப்பட்ட முறையில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் நடவடிக்கைகள் எடுக்கவும் தயக்கம் காட்டப்படப் போவதில்லை. இரு சாராரில் யார் தவறு செய்திருந்தாலும் சட்டம், தன்னுடைய கடமையைச் செய்தே



1969 ஆகஸ்ட் 21] [திரு. மு. கருணாநிதி]

தீரும். அரசியல் காரணமல்லாத தனிப்பட்ட தகராறுகளை இரு சாராரும் இந்த அளவுக்குப் பெரிதுபடுத்தி, பொதுமக்களுக்கு அசௌகரியமான சூழ்நிலையை உருவாக்குவது நல்லதல்ல.

இன்றைய நிலையைக் கூட அதிகாரிகள் கலந்து யோசித்து பஸ் தொழிலாளர்களிடம் பேசிக் கொண்டிருப்பதாகச் செய்தி வந்துள்ளது. ஒரு மாணவருக்கும் ஒரு தொழிலாளருக்கும் ஏற்படுகிற தகராறு மாணவ சமுதாயத்துக்கும் தொழிலாள சமுதாயத்துக்கும் பகையாக மூண்டு நாட்டின் அமைதிக்கும் களங்கம் உண்டாக்க முனைகின்ற அளவுக்கு விரிவடைவது வேதனையானது.

இன்று எழுந்துள்ள சூழ்நிலைக்குப் பரிகாரம் தேட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆகவே ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு அவசியமில்லை என்பது என் கருத்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தின்படி இந்த விஷயத்திற்காக இந்த அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். அரசாங்க அன்றாட அலுவல்களில் இது வருகிறதாகையால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு சட்டப் பேரவை விதிமுறை 50-வது பிரிவு 8-வது உட்பிரிவின்படி நான் அனுமதி வழங்க மறுக்கிறேன்.

### 3. முதலமைச்சரின் விளக்க உரை.

### சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டம் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்தபடியாக, சட்டப் பேரவை 82-வது விதியின் படி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்தப் பேரவைக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்க அனுமதி கோரியிருக்கிறார்கள். அதற்கு நான் இப்போது அனுமதி அளிக்கிறேன்.

* **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 12,000 குழாய்க் கிணறுகள் அமைக்கும் தீவிரத் திட்டம் குறித்து இந்த அறிக்கையை சட்டப் பேரவை விதி 82-ன் கீழ் அளிக்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளில் தொடர்ந்து வான் பொய்த்து விட்டது. அதனால் சென்னையில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினை மக்களுக்கும் அரசுக்கும் கவலையை உண்டாக்கியிருக்கிறது.

தாமரைப்பாக்கம், பஞ்செட்டிப்பகுதிகளில், பூமிக்கடியிலிருக்கும் தண்ணீரை அதிகபட்ச அளவுக்கு அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டுள்ளது. அதன் மூலம் ஒரு நாளைக்கு அதிகபட்சம் 22 மில்லியன் காலன் தண்ணீர்தான் எடுக்க முடியும். அந்தத் தண்ணீர்

மாநகராட்சி குடிநீர்க் குழாய்கள் மூலம் கொண்டுவரப்பட்டு மக்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. பூமிக்கடியிலிருந்து ஒரு நாளைக்கு 22 மில்லியன் காலன்கள்தான் அதிகபட்சம் கொண்டுவர முடியும், என்ற நிலை ஏற்பட்டிருப்பதால் வேறு வழியின்றி கையினால் இயக்கப்படும் குழாய்க் கிணறுகள் அதிக அளவில் உடனடியாகப் போடவேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கிறோம். ஆகவே சென்னை மாநகராட்சி எல்லைக்குள் 12,000 குழாய்க் கிணறுகளை சுமார் ரூ. 25 லட்சம் செலவில் உடனடியாக நிறைவேற்றுவதென்று அரசு முடிவெடுத்துள்ளது. இந்த வேலையை மிகக் குறைந்த காலத்திற்குள் அதாவது 10 முதல் 20 நாட்களுக்குள் தீவிரமாக அமுலாக்கப்படவேண்டுமென்ற நோக்கத்தில் சென்னை மாநகரை ஒவ்வொன்றும் 24 மாநகர ஆட்சி பிரிவுகளைக் கொண்ட (Divisions) ஐந்து பகுதிகளாக (Zones), பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு தலைமைப் பொறியாளரைப் பொறுப்பாளராக நியமிக்க முடிவெடுக்கப் பட்டுள்ளது.

பொதுச் சுகாதார தலைமைப் பொறியாளர் ஒன்று முதல் 24 பிரிவுகளையும் நெடுஞ்சாலைத் தலைமைப் பொறியாளர் 25 முதல் 48 பிரிவுகளையும் கட்டடத் தலைமைப் பொறியாளர் 73 முதல் 96 பிரிவுகளையும், பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் 97 முதல் 120 பிரிவுகளையும் பொறுப்பேற்று திட்டத்தை நிறைவேற்றுவார்கள்.

இந்தக் குழாய்க் கிணறுகள் மாநகராட்சி பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் 100 என்ற விகிதத்தில் அரசுக்கோ அல்லது மாநகராட்சிக்கோ சொந்தமான நிலத்தில் பொதுமக்கள் பயன் படுத்துவதற்கு வசதியான இடங்களில் அமைத்துக் கொடுக்கப் படும். இதற்காகும் முழுச் செலவுத் தொகையாகிய ரூ. 25 இலட்சத்தையும் அரசே ஏற்றுக்கொண்டு திட்டத்தைத் தானே நேரடியாக நிறைவேற்றி வைக்கும்.

(திரு. கே. விநாயகம் எழுந்தார்)

MR. DEPUTY SPEAKER: There can be no debate on this.

THIRU K. VINAYAKAM: I am not raising any debate. I am only asking for an explanation which will be helping the Government.

இன்று அல்லது நேற்று வந்த செய்தியில் சென்னை நகருக்கு சப்ளை செய்வதற்குப் போதுமான தண்ணீர் பத்து நாட்களுக்குத் தான் இருக்கின்றது என்று அதிகாரபூர்வமாக கமிஷனர் அறிவித் திருக்கிறார். ஆகவே, இப்போது மேற்கொள்ளப்படுகிற திட்டம் பத்து நாளைக்குள் பூர்த்தியாகி மக்களுக்குப் போதுமான தண்ணீரைக் கொடுக்க உதவி செய்யுமா? அல்லது இவைகள் எல்லாம் அப்படியே சிவப்பு நாடா முறைப்படி இரண்டு மாதம், மூன்று மாதம் என்று தள்ளிப்போய் மக்களை சிரமத்திற்கு உள்ளாக்கிவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: முன்புதான் சிவப்பு நாடாக்கள் அவிழ்க்கப்படாமல் இருந்தன. இப்போது கத்தரிக்கப் பட்டு வருகின்றன.

திரு. பி. ஜி. கருத்திருமன்: கத்திரிப்பு பயன் உள்ளதாக இருக்குமா என்பது தான் கேள்வி.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பயன் உள்ளதாக இருக்க வேண்டுமென்றுதான் அமைச்சர்கள் அதிகாரிகளோடு கலந்து பேசி இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: முன்பு அப்படித்தான் காவேரித் தண்ணீரைக் கொண்டு வருவதாகச் சொல்லி அஸ்திவாரக்கல் போட்டு சினிமா பாணியில் பொம்மை வைத்து விழா எடுத்தார் கள். 2½ வருஷமாகிறது. வீராணம் ஏரியில் இருந்து காவேரித் தண்ணீர் எங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எதிர்க் கட்சித் தலைவருடைய சினிமா மோகத்தை வரவேற்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அஸ்திவாரம் போட்டு சினிமா எடுத்தீர்களே, ஏன் கொண்டுவரவில்லை?

* மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஒரு கேள்வி கேட்க வேண்டும் என்பதற்காக பொறுப்புள்ள எதிர்கட்சித் தலைவர் இப்படிப் பேசுவது முறையல்ல. வீராணத்திலிருந்து காவேரித் தண்ணீர் கொண்டுவரும் திட்டம் போடப்பட்டு அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டது. ஆயினும் அத்திட்டத்திற்கு திட்டக் கமிஷன் அங்கீகாரம் பெற்றாக வேண்டும் என்பது இன்றுள்ள நிலை. ஒரு மாநிலம் இவ்வளவு ரூபாய்க்கு மேல் ஒரு திட்டத்தைப் போட்டால் அதற்கான அங்கீகாரத்தை மத்திய சர்க்காரிடம், திட்டக் கமிஷனிடம் பெற வேண்டியிருக்கிறது. அந்த அங்கீகாரம் நமக்கு வந்து சேர ஓராண்டுக்காலம் ஆயிற்று. சிவப்பு நாடா என்று சொன்னார்களே—அது அங்குதான் ஆழமாக இருக்கிறது. எல்லா வேலைகளும் இப்போது தொடங்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு வாரத்திற்கு முன்தான் அறிவித்திருக்கிறார்கள். டிசம்பர் மாதம் முதல் குழாய்கள் போடும் வேலை நடைபெறுகின்றது. இதுபற்றி எதிர்க் கட்சித் தலைவர் மற்ற விவரங்களைத் தெரிந்துகொள்ள விரும்பினால் அதிகாரிகளுடன் நேரிடையாக அவரே பேசித் தெரிந்துகொள்ள வாய்ப்பளிக்கத் தயாராய் இருக்கிறேன். சினிமா விஷயங்களைக் கூறி காவேரி அன்னையை இழிவுபடுத்த வேண்டாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: உதவி சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் என்று சொல்லி பொறுப்பற்ற தன்மையைச் சொல்லுகிறார்கள் போல் தெரிகிறது . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மன்னிக்கவும், பொறுப்புள்ளவர் என்று நான் மனப்பூர்வமாகத்தான் சொன்னேன.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இப்போது வருவதற்கு முன்னாலேயே அப்படிப்போர்மை வைப்பதுதான் பொறுப்புள்ள சர்க்காரா? தண்ணீர் வந்ததற்குப் பிறகு செய்திருக்க வேண்டும். ஏதோ இடைக்காலத் தேர்தல் வந்ததற்காக அப்படிச் செய்திருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்டப் பேரவை விதிகள் 82-ன்கீழ் இதன்மீது விவாதம் நடத்தக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்ததற்குப் பிறகு மீண்டும் விவாதிக்க நான் அனுமதி மறுக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதற்குப் பதில் சொல்லவிரும்புகிறேன் . . .

**THIRU K. VINAYAKAM:** Sir, on a point of order. Under what rule the Hon. Chief Minister is speaking? When the Chair has given a ruling that the discussion has been closed, he has no right to say anything now.

**MR. DEPUTY SPEAKER:** I have only denied a debate but the Hon. Chief Minister is entitled to give any explanation if he wants.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதைப்பற்றி விளக்க விரும்புகிறேன். எந்தத் திட்டமும் அங்கீகாரம் அளித்ததற்குப் பிறகுதான் நிறைவேற்றப்படும். ஆனால் அந்த அவசர திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னால் இப்படிச் செய்வது ஆவலின் காரணமாகத்தான். திட்டக் குழுவின் அங்கீகாரம் கிடைப்பதற்கு முன்பே போன தேர்தலுக்கு முன்பு திருமானூர் பால வேலைக்கு முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் அடிக்கல் நாட்டினார் என்பதை திரு. ராமலிங்கம் அவர்கள் அறிவார்கள் என்பதை அவர் சிரிக்கிறார், அதிலேயிருந்தே புரிந்துகொள்ளலாம். எனவே, அவர் ஆவலின் காரணமாகத்தான் செய்தார், தேர்தலுக்காகச் செய்தார் என்று நான் நம்பவில்லை. ஆவலின் காரணமாகத்தான் செய்திருக்கலாம். எனவே, அதே முறையிலே தான் இதையும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அதனால் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபொழுது திட்டப்படி செய்துகொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** பிரெஞ்சு எக்ஸ்பர்ட் ஒருவர் சென்னையிலிருந்து 16 மைல் தூரத்திலிருக்கின்ற கூர்த்தலையாற்றிலே கலெக்ட் சிஸ்டத்தின் மூலம் சுலபமாக, மலிவாக தண்ணீர் எடுக்கமுடியும் என்றும் அப்படிச் செய்தால் சென்னையை



"ஃப்ளட்" அதாவது வெள்ளத்தில் மூழ்கடிக்கக் கூடிய அளவுக்குத் தண்ணீர் கொண்டுவரமுடியும் என்று தெரிவித்து இருப்பதாக பத்திரிகையிலே பார்த்தேன். அதன்மீது பரிசீலனைசெய்து அவசர நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இவையெல்லாம் ஆராயப்பட்டு வருகிறது.

## 4. அரசினர் தீர்மானங்கள்

### ( ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 23-வது விதியைத் தளர்த்தி இப் பேரவை இன்று தனியார் அலுவல்களை எடுப்பதற்கு முன்பு கீழ்க்கண்ட சாதாரண அரசினர் அலுவல்களை நடத்த வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 5. அரசினர் மசோதாக்கள்

### (i) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதா

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1969-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு, ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இம்மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இம்மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

### (ii) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாயக் கூலி மசோதா

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர் நியாயக் கூலி மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இம்மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இம்மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

### 6. அறிவிப்புகள்

#### (i) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழ் நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதாவை சட்டப்பேரவைமுன் அறிமுகம் செய்வதற்கும், அம்மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 5. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி

#### (iii) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இம்மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இம்மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

### 4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

#### (ii) அவையுரிமைக் குழுவிற்கு தேர்தல்

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ் நாடு சட்டப்பேரவையின் 183-வது விதியின்கீழ் 1969-70-ம் நிதியாண்டுக்குரிய அவையுரிமைக் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி மேற்கொண்டும் இரண்டு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



### 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

#### (ii) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், அவையுரிமைக் குழுவிற்கு (Privileges Committee) ( ) மேற்கொண்டும் இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 23—8—1969 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 23—8—1969 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 25—8—1969 திங்கட்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது இரண்டிற்கு மேற்படுமாயின் 26—8—1969 செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை, சென்னை கோட்டையில் இருக்கும் உறுப்பினர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### 4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

#### (iii) அவையினர் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ் நாடு சட்டப்பேரவையின் 221(1)-வது விதியின்கீழ் 1969-70-ம் நிதியாண்டுக்குரிய அவையினர் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி மேற்கொண்டும் இரண்டு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

#### (iii) அவையினர் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், அவையினர் குழுவிற்கு (House Committee) / மேற்கொண்டும் இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 23-8-1969 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

[பேரவைத் துணைத் தலைவர்] [1969 ஆகஸ்ட் 22

நியமனத்தாள்கள் 23—8—1969 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 25—8—1969 திங்கட்கிழமை மாலை 5 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது இரண்டிற்கு மேற்படுமாயின் 26—8—1969 செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை சென்னை கோட்டையில் இருக்கும் உறுப்பினர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## 7. தனியார் அலுவல்கள்

### தனித் தீர்மானங்கள்

(i) அரசாங்கப் பணிமனைகளிலும், தொழில் நிறுவனங்களிலும் தனியார் தொழிலகங்களிலும் அணுமின் இயந்திரத்தைப் புகுத்துதல்—தொடர்ச்சி.

திரு. சி. கோவிந்தராசன் எழுந்தார் . . . .

**Dr. H. V. HANDE** : Sir, on a point of order. This resolution has already been moved and the discussion on it is inconclusive.

**Mr. DEPUTY SPEAKER** : The discussion on the resolution will be continued now.

**திரு. சி. கோவிந்தராசன்** : என்னுடைய தீர்மானத்தை முன்மொழிந்து நான் ஏற்கனவே பேசியிருக்கிறேன். எனவே வேறு யாராவது பேசுவதாயிருந்தால் பேசலாம்.

**Dr. H. V. HANDE** : Sir, with regard to the Resolution moved by my hon. Friend, Thiru Govindarajan, I wish to offer a few remarks. With regard to automation, it is a very problematical subject in which we can have two opinions. There are certain people who feel that automation is absolutely necessary for the growth of the nation and the growth of the material progress. There is another section of people who feel that automation displaces a number of workers and causes a great unemployment problem. My only submission is that when we discuss this subject in this House we must not be obsessed by ideological conflicts or political considerations. Whatever we say, let us say frankly for the welfare of the humanbeings and the country. That is my submission. In this connection, I would like to remind what a brilliant author, Mr. Alexi Carol, had stated some years ago. He said ' whatever we discover, we discover by accident '. After we discover something, we put it to certain uses and when we put it to certain uses, there are certain changes in the material progress of the nation and at the same time there is also a sudden change in the habits. For instance, let us take the skyscraper. It is all built as a result of certain ideas created in the minds of the people. So, as stated by Mr. Alexi Carol in his book, ' Man the Unknown ' we do not know what we want



1969 ஆகஸ்ட் 21] [Dr. H. V. Hande]

but we suddenly discover certain things. If we put them to use they produce harmful effects. That is the most important aspect of the matter which we must bear in mind before we pronounce our judgement with regard to the application of automation either in the industry or in the office.

Then, what is ' automation '? That is a subject which we must properly understand. Is it different from the machines that were discovered in the 13th Century in the United Kingdom which were responsible for the industrial revolution. Now I shall quote certain excerpts from the ' Selected Papers ' of Walter P. Reuther, who is a labour leader in the United States of America. He is the leader of one million and 60 thousand automobile workers there. He has stated as follows—

' In other words, automation is a technique by which whole batteries of machines, in some cases almost whole factories and offices, can be operated according to predetermined automatic controls. The raw material is automatically fed in, the machine automatically processes it, the product is automatically taken away, often to be fed automatically into still another machine that carries it automatically through a further process. In some cases the machine is self-regulating—that is, it is set to turn out a product within certain tolerances as to size or other factors, and if those tolerances are exceeded, the machine itself detects the variation and automatically adjusts itself to correct it. '

That is how Americans or the Russians are able to send rockets to the skies and also land men on the Moon. The landing on the Moon has been made possible by the use of automatic gadgets or computers which come under ' automation '. Now we have to consider how automation is different from the industrial revolution. The Industrial Revolution came as a result of the discovery of certain machines. The manual labour which did most of the work has been replaced by machines. But still there must be somebody to control the machine. So, it does not displace manpower to the extent the automation displaces them. That is a significant factor which must be taken into consideration.

Another question is whether the automation is the result of the capitalist ideology or some other ideology. My submission is that it is the result of the growth of man and the growth of the man's intellect and the inner urge of the man who suddenly discovers certain things. Now we have to consider to what extent they are put to use. For instance, there is automation in Russia, East Germany and in almost all the other East European countries. We have also automation in the democratic countries. Therefore, it is not as though automation is the product of only democratic countries. In this connection, I want to point out what has happened in the Madras City sometime ago. One of the East European countries—I do not know the name of that country—wanted to start a factory to manufacture gadgets or computers in Tamil Nadu. On

**that occasion one of the Hon. Ministers—I think the Hon. Thiru** Madhavan—had stated that we could not completely do away with **automation because that factory was going to produce computers which would help a great deal in finding a solution to the unemployment problem.** That is also a point.

Then a question would be raised with regard to the Khadi Scheme. What is the purpose of Mahatma Gandhi starting this Khadi Scheme? Mahatma Gandhi started it for two reasons. Firstly, he wanted to silence the Manchester Mills. Secondly, he wanted to give some jobs to the unemployed so that he can earn at least 75 Paise or one rupee. That is a brilliant strategy adopted by our revered Mahatma Gandhi to solve the unemployment problem. Under that scheme, a man need not totally starve but can take a small charka and spin a yarn which will yield him 75 Paise or even one rupee if he is slightly skilled. Then came the Ambar Charka which does the work of four persons and a person operating it can earn even Rs. 3. At that time I was wondering whether it was necessary to develop Ambar Charkas when the mills were functioning and whether we were going two or three centuries back. I am pointing out all these facts to impress a particular point, viz., that there is always an urge in the minds of the men to develop certain things and increase the production of certain things if necessary by automation.

The next point we have to determine is to what extent can we introduce automation? If somebody were to ask me a question "are you against automation totally", I will say "No". As a man who believes in advanced development of economy of the country and the material standard of life of the people, I will not oppose automation totally. But the point is, to what extent can we introduce automation? That is the most important thing. With the permission of the Chair, I shall again quote from Walter Reuther—

"We welcome the potential benefits which automation can and should bring. But we oppose those who would introduce automation blindly and irresponsibly. In our experience with employers, the one sure way of making them socially responsible is to make them financially responsible for the social results of what they do or fail to do."

That is the important thing.

As far as we, in India, are concerned, we have to take note of it. Suppose in the Life Insurance Corporation we bring in a machinery. Suppose that gadget does not start operating after some time. What to do then? I know of a case in the Public Health Department wherein they brought a particular machinery, viz., vacuum cleaner. I was surprised that such a fine gadget had been brought to Madras. But that particular gadget had not been made full use of. I find that gadget lying idle in a place today. The



most important point we should consider is whenever we bring automatic machines, we must immediately realise that we should start manufacturing it in our own country. That sort of mentality should develop. When we have a machine, we must be able to have persons who will be able to handle and operate that machine. They must be discovered and trained, I mean persons who can operate and repair the machine. That is very important. We must be able to manufacture spare parts for that machine in India. We must clearly plan all these things beforehand. It should not be suddenly brought and put on the head of L.I.C. It should come from within. Suppose for instance one gadget is installed in L. I. C. and for some reason it gets spoiled later (I do not think people in L.I.C. would spoil it), then the whole machinery will be idle. It means loss of several lakhs of rupees. We must beforehand try to train people who could operate and repair it. The process must start from within and not from outside. In America, England or East European countries, if a machinery is discovered, it comes from within. When a machinery is discovered, the several gadgets composing the machinery are analysed and people are trained to operate the several gadgets. They get accustomed to it. They are able to manufacture the tools comprising the gadget. The result is, if something goes wrong, it could be set right from within the country itself. Our distinguished member of the Planning Commission and the previous Minister for Industries in Madras, Thiru R. Venkataraman was once talking to me about multi-storeyed buildings in Madras City. I told him "all right. We can have multi-storeyed buildings but we can have lifts there". He said "we have not trained men who could repair and operate lifts". If it goes out of order, the utilisation of the building collapses. That is what he said. There is a point in what he said. The cultivation of the habit of utilisation must start from within. It will not be very far once you start developing it. That habit will come. You must make a start.

Again if we have such machinery in our country, what are the chances of its success? Here again I would like to quote from the author, regarding a case in United States:—

"There are workers who can't keep up with automation." Suddenly you introduce a complicated machine the worker may not be able to operate it.

I again quote:—

"Stanley Tylak, 61 and for 27 years a job setter at Ford, was shifted from the River Rouge Foundry machine shop to the new automated engine plant. He was given a chance to work at a big new automatic machine.

Simply straightforwardly, he told his story: "The machine has about 80 drills and 22 blocks going through. You had to watch all the time. Every few minutes you had to watch to see everything was all right. And the machine had so many lights and switches—about 90 lights. It, sure, is hard on your mind.

[Dr. H. V. Hande] [1969 ஆகஸ்ட் 21

If there is a break in the machine the whole line breaks down. But sometimes you make a little mistake, and it is no good for you, no good for the foreman, no good for the company, no good for the union."

The American worker baffled by the machine could not keep up with it and had to take another job, at a later date. So the argument that if automation comes, no person will be taken away has its counter-argument also. We have also to remember that whenever a new machine is installed, workers had to be trained in its operation. The mentality of the workers also should be taken into consideration. I again quote :---

"The workers of 150 years ago who tried to smash the machines that had taken away their jobs had ample foundation for their complaints. They were wrong only in their methods. Their real complaint was not against the machines, but against the blindness of society which allowed the machines to be used as a means of exploitation."

To what extent there is exploitation is a matter to be considered. Our country is not like America wherein they have a comfortable standard of living. A worker there working previously for 8 hours was made to get higher pay by working lesser time with new machine. What about our country?

Let me again quote Thomas J. Watson, President of the giant IBM Corporation, one of the giant USA companies manufacturing computers. He says:—

"We cannot argue that technological change and automation are no labour-saving devices. Of course they are. They do cause displacement of people. In fact, to do so is one of their major purposes."

This statement comes from the President of a very big company of America, manufacturing computers.

Let me now come to local problem. We have the Coimbatore Textile crisis. There is a lesson which we can learn. The Capitalists complain against the labourers and against the State Government that they have given certain benefits to labourers, etc. They also complain against the Central Government. The Central Government issues permits, etc. The whole thing is pinned to the permit-licence-raj. The workers and trade union leaders have their own grievances against the capitalists and Government. They say the capitalists have completely disregarded the claims of labour. The State Government complains against the Central Government. The Central Government again blames the capitalists and State Government. It goes on like this. But one point we have to remember is that there is no market for the product. I am trying to say that before persons here, who are interested in the growth of State economy. Unless a product has a market, you cannot sell it. But due to there being no market we find the goods are not being sold.



1969 ஆகஸ்ட் 21] [Dr. H. V. Hande]

Today instead of cotton everybody is using terrylene shirts submission is that even terrylene and nylon are a sort of automation. In the sense that a shirt made of terrylene or nylon can displace half a dozen cotton shirts. If a person has got one or two cotton shirts, he can wash and wear them and look decent. But we find labourers, students, etc., make a decent investment of forty or fifty rupees on the purchase of terrylene or nylon shirt which displaces the shirt made from mill cloth. When the demand for cotton yarn itself goes down, it will be impossible to solve the problem whatever be the remedial measures taken or injections or chloroform administered. The root cause itself is different. Unless there is a change in the habit of the people or unless the mills produce what is required by the market, now can we solve the problem of glut of cloth in the market? Today there is a glut of mill cloth in the textile shops in China Bazaar and other areas. The production itself has gone down considerably in Coimbatore Ahmedabad and other areas where there are textile mills. When there is trouble in West Bengal, there is difficulty in getting Insulin. When there is less of production, immediately a palpable effect is felt in the market and we find the prices of the goods going up. In spite of the high prices, there is a glut of goods in the market. If we go on producing the same goods, the glut in the market will be accentrated. This is a simple economic proposition. Mill cloth has to be marketed and how can this be done unless we bring forward a rule that everybody should wear only dress made of mill cloth? Terrylene and nylon are also a sort of automation. They also have created a problem. Many people have not made mention of this effectively to show that use of terrylene or nylon is something like the use of automation. Politicians and everybody else must be frank and let us not make political capital out of it. Let us tell the position to the people. Unless the mills diversify their production and start manufacturing terrylene or nylon or whatever is required to satisfy the taste of the public, the mills cannot thrive. This is a most important point which I want to stress.

The next question is whether the workers of the Life Insurance Corporation are justified in opposing automation. Automation is going to be introduced in the railways also shortly. There are certain types of work which can be done only by automatic gadgets; there are certain types of work which can be done by both the automatic gadgets and human beings. My special plea is that automatic gadgets have to be there for work which cannot be done by human beings, and we have no other choice. Suppose a Minister from Madras wants to go to Delhi to take part in the proceedings of the National Development Council, he cannot go in a bullock cart. Similarly if one wants to go to Tirunelveli, he cannot go on a bicycle. If a work can be done by half a dozen men without loss of efficiency, we have to remember what Mahatma Gandhi has told us and see that the men are at the job. I am glad that a committee has been constituted under the chairmanship of the Ex-Minister Shri R. Venkataraman to go into the subject of automation. I wish

that the politicians belonging to different political parties sit together, think over this ticklish problem and see that the genuine and just grievances of the workers are met. At the same time there is no point in saying that automation should be completely done away with. If it is possible to do the same type of work with the help of human beings, it should be done only through human beings. In bringing in automation we should assure ourselves that unemployment will not result and retrenchment will not take place. Retrenchment is a ticklish problem and it can take place in two ways. One is by immediate removal from service. The other is by cutting down promotional opportunities and employment potential. Every year so many persons are taken in an organisation and that may be stopped. Every year there is promotion to higher posts and that may be stopped. If a person is denied the promotion which he would have got but for the introduction of automation, it will be undesirable. It is only such grievances that the workers of the Life Insurance Corporation have put forward.

(Thiru N. Dharmalingam in the Chair)

Automation has to come one day and there is no doubt about it. In fact it has already come. I want the problems of introduction of automatic gadgets in industrial concerns, banks, the southern Railway and the Life Insurance Corporation to be viewed in a humanitarian way. At the same time without loss of efficiency and speed, the grievances of the workers should be considered and a proper solution found. I hope and trust that the subsequent speakers also will give some brilliant ideas as to how best to solve this ticklish problem. Mr. Vezhavendan, the Minister for Labour, has got a good grasp of the subject and I look forward to some good solutions from the Government side also. Thank you, Sir.

* ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : தலைவர்களே, மின் அணு இயந்திரத் திணிப்பை எதிர்த்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராசன் அவர்கள் கொண்டுவந்துள்ள தனி நபர் தீர்மானத்தை ஆதரிக்கும் முகத்தான் இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் சார்பில் நான் பேசுகிறேன். நிலவுலகத்திலே வாழ்ந்து கொண்டிருந்த மனிதன் நிலா உலகத்திற்குச் சென்று, தன்னுடைய பாதத்தைப் பதித்து மீண்டும் இந்த நிலவுலகத்திற்கு வந்திருக்கின்றான் என்கின்ற விஞ்ஞான உண்மையைப் பாராட்டி வரவேற்றுக்கொண்டிருக்கும் நேரத்தில் அந்த விஞ்ஞானத்தினுடைய ஒரு கூறாக இருக்கின்ற இந்த ஆட்டோமேஷன் இயந்திரத்தை, மனித சமுதாயத்தினுடைய வாழ்விற்குத் துணையாக விரும்புவதை, புகுத்தப்படுவதை, நாம் எதிர்க்கிறோம் என்றால் அதற்கு ஒரு அடிப்படைக் காரணம் இருக்கிறது என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மனிதன் தன்னுடைய உழைப்பைச் சுருக்கிக்கொண்டு, அந்த அளவுக்குத் தன்னுடைய வசதியைப் பெருக்கிக்கொள்ள விஞ்ஞானம் எந்த



அளவுக்கெல்லாம் துணை புரிகிறதோ அந்த அளவுக்கு விஞ்ஞானத்தை வரவேற்பதற்குத் தயாராகவிருக்கிறோம். ஆனால், மனித சக்தி மிக அதிகமாகப் பெருக்கெடுத்திருக்கின்ற இந்தியத் துணைக்கண்டத்திலே, மனிதர்களுடைய உழைப்பைச் சுருக்கி, அதே நேரத்தில் வேலை தருகின்ற நிலையில் இந்த மின் அணு புகுத்தப்பட்டாலும், இப்பொழுதிருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தை அடிப்படையாக வைத்து, இந்த மின் அணு இயந்திரம் புகுத்தப்படுவதைவிட மனித சக்தியை முறையாகப் பயன்படுத்தி, வேலை கொடுக்கக்கூடிய வாய்ப்பை மேலும் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் தான் நாங்கள் எதிர்க்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அணுயுகத்தில் அன்று நம்முடைய அன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரியவராகத் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்த மின் அணு இயந்திரங்கள் புகுத்தப்படுவதை எதிர்த்து நடத்திய ஒரு மாநாட்டில் பேசும்பொழுது இப்படி ஒரு கருத்தைக் கூறியிருப்பதை நான் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். "நாம் விஞ்ஞான வளர்ச்சிக்கு விரோதிகளல்ல என்று. விஞ்ஞானத்தால் விளைகின்ற நல்லவை எவற்றையும் நாம் விரும்பி ஏற்றுக் கொள்வோம். விஞ்ஞானப் புதுமைகள் என்றால் மனிதன் உழைப்பை எளிதாக்கக் கூடியதாக இருக்கவேண்டும். கைவிசிறியை விட மின்விசிறி உதவிகரமானது. இதுபோன்றவை நாம் வரவேற்கத்தக்கவை. ஆனால் எல்.ஐ.சி. போன்ற பெரிய நிறுவனங்களில் புகுத்தப்பட்டிருக்கும் இயந்திரங்கள் இப்படிப்பட்டவையல்ல. ஓர் இயந்திரம் பல்லாயிரம் கணக்கான ஊழியர்களின் வாழ்வைப் பலிகொள்ளும் சக்திபடைத்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் எண்ணற்ற கோடி மக்களை அழிக்க வல்ல ஆற்றல் படைத்த அணுகுண்டும் விஞ்ஞானத்தின் விளைவு தான். ஆனால் இந்த அணுகுண்டுகளை இந்தியா தயாரிக்காதது அவற்றை நாம் உற்பத்தி செய்ய முடியாது என்ற காரணத்தினால் அல்ல; உற்பத்தி செய்யக்கூடாது என்ற காரணத்தினால்தான். இதன் உற்பத்தி உலக அமைதிக்கு ஊறு விளைவிக்கும் என்ற நம் அரசின் கொள்கைக்கு அது எதிரானது என்பதால் அணுகுண்டு உற்பத்தி செய்யாத இந்த ஆட்சியாளர்கள் நாட்டுமக்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பினை நல்கிட வேண்டும் என்பது இந்த அரசாங்கத்தின் மையமான கொள்கையாக இருக்க, அதற்கு முற்றிலும் மாறாக இயந்திரத் திணிப்பை மேற்கொண்டுள்ளது ஏன் என்று கேட்க விரும்புகிறேன்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள். உண்மையிலே இது வரவேற்கத்தக்க ஒரு மு.ப. 11-00
தத்துவம். இந்த தத்துவத்தை அடிப்படையாக வைத்துத்தான் நாமும் இந்த ஆட்டோமேஷன் புகுத்தப்படுவதை எதிர்க்கின்றோம்.

[ஹாஜி ம. மு. பீர் முஹம்மது] [1969 ஆகஸ்ட் 21

அதுமாத்திரம் அன்று. இந்த ஆட்டோமேஷன் தத்துவத்தினுடைய பிதா என்று சொல்லப்படுகின்ற ஜான் டயபோல்டு என்பவர் கூறுகின்றார்: " ஆட்டோமேஷன் என்பது ஒரு சாதாரண இயந்திர மாற்றமோ அல்லது தொழில் நுணுக்க மாற்றமோ அல்ல. அது உற்பத்தித் தத்துவத்தின் ஒரு அடிப்படை மாற்றம் ஆகும்" என்று. இந்த உற்பத்தி தத்துவத்தின் அடிப்படை மாற்றம் என்பதே மனித உழைப்பிடம் இருந்து இயந்திரத்தின் பக்கம் மனித உழைப்பை மாற்றி வருகின்ற ஒரு தத்துவம். மனிதன் இன்றைக்கு உழைப்பதற்கு வாய்ப்பும் உண்பதற்கு உரிய நிலையும் இல்லாத ஒரு நிலை நம்முடைய நாட்டில் இருக்கிறபொழுது மனித வாழ்க்கையினுடைய அடிப்படைக்கு ஆதாரமாக இருக்கிற உழைத்துப் பெறுகின்ற ஊதியத்தை அடிப்படையாக வைத்து உயிர்வாழ வேண்டுமென்கின்ற நம்முடைய நாட்டில் இந்த தத்துவத்திற்கு எதிரான தடை ஏற்பட வேண்டியதில்லை என்கின்ற அடிப்படையில்தான் நாம் இதை எதிர்க்கின்றோம்.

அதுமாத்திரமன்று. நம்முடைய மதிப்பிற்குரிய, இந்தியப் பொன்னாட்டின் முடிசூட்டக்கூடிய, குடியரசின் முதல்மகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மாண்புமிகு திரு. வி. வி. கிரி அவர்கள், " இந்தியா போன்ற பின்தங்கியநாட்டில் வேலை வாய்ப்புகள் குறைவாகவும், வேலையற்றோர் தொகை ஏராளமாகவும் இருக்கும் நிலையில் கண்மூடித்தனமாக ஆட்டோமேஷனைப் புகுத்துவது இந்நாட்டின் தொழிலாளர் சமுதாயத்திற்கு பெருந் தீங்கு விளைவிப்பதாகும்" என்று கூறுகிறார். இந்த அடிப்படைகளை எல்லாம் வைத்து பார்க்கும்போது, நம்முடைய இந்த மின் அணு இயந்திரம் புகுத்தப்படுவது இன்றைய நம்முடைய தொழில் நலனுக்கு மிகவும் குந்தகம் விளைவிக்கக்கூடியது. அதிகமான தொழிலாளர்களை வேலையற்றவர்களாக ஆக்கிவிடும். அப்படி வேலையற்றவர்களாக ஆக்கிவிடுவதன் மூலம் உயிர் வாழ்வதற்கும் நாட்டின் ஜனநாயகத்திற்குமே தீங்கு விளைவிக்கக்கூடிய இந்த தத்துவத்தை தடைப்படுத்துவதற்குரிய முயற்சியில் நம்முடைய அரசு ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு படுத்தி, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராசன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் ஆதரித்து வலியுறுத்துகிறேன்.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவரவர்களே, எனக்கு முன்னாலே இந்த மின் அணு இயந்திரத்தை, மக்களுடைய வேலையை குறைக்கின்ற, மக்களுடைய உழைப்பைக் குறைக்கின்ற முறை தவறு என்று கொண்டு வந்த தீர்மானத்தை ஓரளவு ஆதரித்தும் எதிர்த்தும் பேசியதைக் கேட்டோம். உண்மையிலே இப்பொழுது வந்திருக்கிற பிரச்னை, குறிப்பாக, எல்.ஐ.சி-யை பொறுத்தமட்டில் பலபேருக்கு வேலை வாய்ப்பு இழக்க வேண்டியிருக்கிறது என்பது. இம்மாதிரி பலபேருடைய வேலை வாய்ப்பை



1969 ஆகஸ்ட் 21] [திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்]

கொள்ளை கொண்டிருக்கிற இந்த ஆட்டோமேஷனைக் கொண்டு வரக்கூடாது என்கிறார்கள். இதிலே பல கருத்துக்களை நாம் கவனிக்க வேண்டி இருக்கிறது. இது யாருடைய நன்மைக்காக புகுத்தப்படுகிறது என்பதை முதலிலே நாம் கவனிக்கவேண்டும். சாதாரணமாக மிக ஏழைகளும், சாதாரண மக்களும் தங்கள் பிற்கால வாழ்வுக்குத் தேவையாக சேமிக்கவேண்டுமென்ற முறையிலே சேமிப்பதற்காகவும் பிற்கால வாழ்வுக்காகவும்தான் எல்.ஐ.சி-யிலே இன்ஷூரன்ஸிலே முதல் போடுகிறார்கள். இந்த நிறுவனத்திலே சாதாரணமாக இருந்து கொண்டிருக்கிற, வேலை செய்கின்ற பலபேருக்கு ஆட்டோமேஷன் மூலமாக வேலை வாய்ப்பு போய் விடுகின்றது என்ற நோக்கத்திலே இதை வேண்டாமென்று சொல்கிறார்கள். இரண்டு தரப்பையும் நோக்கியாக வேண்டும். அவர்களுக்கு வேலை வாய்ப்பு போவது உண்மைதான். ஆனால், தாங்கள் சேமிக்கவேண்டுமென்று வைத்துள்ள பணத்தை பலபேர் இருந்துகொண்டு சாப்பிட்டு, அந்த சேமிப்பை கட்டுப்படுத்துவதை பார்க்கவேண்டுமா என்பதையும் கவனிக்கவேண்டும். இரண்டு துறைகளையும் பார்க்கவேண்டும்.

ஓர் உதாரணம் சொன்னால் தவறாக இருக்காது என்று நினைக்கிறேன். ஒரு கருடன் குஞ்சு பொறித்து காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. அந்தக் குஞ்சு தானியம் தின்னாது. கோழிக் குஞ்சை அதன் தாய் கொண்டு வந்து கொடுத்தால்தான் அது பிழைக்கும். ஆனால் அந்தக் குஞ்சை எடுக்கின்ற பொழுது அதன் தாயும் குஞ்சும் படுகின்ற பாட்டை சொல்ல முடியாது. ஒன்று அது பிழைக்கவேண்டும், அல்லது இது பிழைக்கவேண்டும். அதாவது ஒன்று செத்து மற்றொன்று பிழைக்கவேண்டிய நிலை கூட இயற்கையிலேயே அமைந்திருக்கிறது. அந்தத் துறையிலே இயற்கை இப்படி அமைந்திருந்தாலும் கூட இந்தத் துறையிலே நிச்சயமாக பல கோடிக்கணக்கான மக்களுடைய பணத்தை சில பேர்கள் தங்களுடைய தேவைக்காக, தங்களுடைய வேலை வாய்ப்பு வேண்டுமென்பதற்காக அவர்களுடைய வருவாயை, ஆதாயத்தைக் குறைப்பது என்பது உண்மைதான். ஆனால், நிச்சயமாக மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவேண்டும். நாட்டிலே மக்கள் வளம் பெற்று வாழ வேண்டுமென்பதுதான் உண்மை. இதை மறுக்க முடியாது. அதற்காக, பலபேருடைய வேலையை இந்த இயந்திரம் செய்கிற போது மீதமாகிற பணம் வெறுமனே கழிந்து விடாது. அதைக்கொண்டு, உற்பத்திக்கு, நாட்டுக்கு, உபயோகப்படக்கூடிய முறையிலே, உற்பத்தியை பெருக்கக்கூடிய முறையிலே, அவர்களுடைய உழைப்பின் பலனை நாட்டுமக்கள் அத்தனைபேரும் உணரக்கூடிய முறையிலே இந்த தொழில் வாய்ப்புகளைப் பெருக்கவேண்டும். இந்த ஆட்டோமேஷன் மூலமாக வேலை வாய்ப்பை குறைக்கவேண்டியதில்லை. இருக்கிற பணத்தைக்கொண்டு வீண் செலவு செய்வதாலே வேலை வாய்ப்பு குறைந்துகொண்டு போகிறது. ஆகையினாலே இந்தச் செலவை

[ஹாஜி ம. மு. பீர் முஹம்மது] [1969 ஆகஸ்ட் 21

அதுமாத்திரம் அன்று. இந்த ஆட்டோமேஷன் தத்துவத்தினுடைய பிதா என்று சொல்லப்படுகின்ற ஜான் டயபோல்டு என்பவர் கூறுகின்றார், "ஆட்டோமேஷன் என்பது ஒரு சாதாரண இயந்திர மாற்றமோ அல்லது தொழில் நுணுக்க மாற்றமோ அல்ல. அது உற்பத்தித் தத்துவத்தின் ஒரு அடிப்படை மாற்றம் ஆகும்" என்று. இந்த உற்பத்தி தத்துவத்தின் அடிப்படை மாற்றம் என்பதே மனித உழைப்பிடம் இருந்து இயந்திரத்தின் பக்கம் மனித உழைப்பை மாற்றி வருகின்ற ஒரு தத்துவம். மனிதன் இன்றைக்கு உழைப்பதற்கு வாய்ப்பும் உண்பதற்கு உரிய நிலையும் இல்லாத ஒரு நிலை நம்முடைய நாட்டில் இருக்கிறபொழுது மனித வாழ்க்கையினுடைய அடிப்படைக்கு ஆதாரமாக இருக்கிற உழைத்துப் பெறுகின்ற ஊதியத்தை அடிப்படையாக வைத்து உயிர்வாழ வேண்டுமென்கின்ற நம்முடைய நாட்டில் இந்த தத்துவத்திற்கு எதிரான தடை ஏற்பட வேண்டியதில்லை என்கின்ற அடிப்படையில்தான் நாம் இதை எதிர்க்கின்றோம்.

அதுமாத்திரமன்று. நம்முடைய மதிப்பிற்குரிய, இந்தியப் பொன்னாட்டின் முடிசூட்டக்கூடிய, குடியரசின் முதல்மகனாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மாண்புமிகு திரு. வி. வி. கிரி அவர்கள், "இந்தியா போன்ற பின்தங்கிய நாட்டில் வேலை வாய்ப்புகள் குறைவாகவும், வேலையற்றோர் தொகை ஏராளமாகவும் இருக்கும் நிலையில் கண்மூடித்தனமாக ஆட்டோமேஷனைப் புகுத்துவது இந்நாட்டின் தொழிலாளர் சமுதாயத்திற்கு பெருந் தீங்கு விளைவிப்பதாகும்" என்று கூறுகிறார். இந்த அடிப்படைகளை எல்லாம் வைத்து பார்க்கும்போது, நம்முடைய இந்த மின் அணு இயந்திரம் புகுத்தப்படுவது இன்றைய நம்முடைய தொழில் நலனுக்கு மிகவும் குந்தகம் விளைவிக்கக்கூடியது. அதிகமான தொழிலாளர்களை வேலையற்றவர்களாக ஆக்கிவிடும். அப்படி வேலையற்றவர்களாக ஆக்கிவிடுவதன் மூலம் உயிர் வாழ்வதற்கும் நாட்டின் ஜனநாயகத்திற்குமே தீங்கு விளைவிக்கக்கூடிய இந்த தத்துவத்தை தடைப்படுத்துவதற்குரிய முயற்சியில் நம்முடைய அரசு ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு படுத்தி, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராசன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் ஆதரித்து வலியுறுத்துகிறேன்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவரவர்களே, எனக்கு முன்னாலே இந்த மின் அணு இயந்திரத்தை, மக்களுடைய வேலையை குறைக்கின்ற, மக்களுடைய உழைப்பைக் குறைக்கின்ற முறை தவறு என்று கொண்டு வந்த தீர்மானத்தை ஓரளவு ஆதரித்தும் எதிர்த்தும் பேசியதைக் கேட்டோம். உண்மையிலே இப்பொழுது வந்திருக்கிற பிரச்னை, குறிப்பாக, எல்.ஐ.சி-யை பொறுத்தமட்டில் பலபேருக்கு வேலை வாய்ப்பு இழக்க வேண்டியிருக்கிறது என்பது. இம்மாதிரி பலபேருடைய வேலை வாய்ப்பை



1969 ஆகஸ்ட் 21] [திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்]

கொள்ளை கொண்டிருக்கிற இந்த ஆட்டோமேஷனைக் கொண்டு வரக்கூடாது என்கிறார்கள். இதிலே பல கருத்துக்களை நாம் கவனிக்க வேண்டி இருக்கிறது. இது யாருடைய நன்மைக்காக புகுத்தப்படுகிறது என்பதை முதலிலே நாம் கவனிக்கவேண்டும். சாதாரணமாக மிக ஏழைகளும், சாதாரண மக்களும் தங்கள் பிற்கால வாழ்வுக்குத் தேவையாக சேமிக்கவேண்டுமென்ற முறையிலே சேமிப்பதற்காகவும் பிற்கால வாழ்வுக்காகவும்தான் எல்.ஐ.சி-யிலே இன்ஷூரன்ஸிலே முதல் போடுகிறார்கள். இந்த நிறுவனத்திலே சாதாரணமாக இருந்து கொண்டிருக்கிற, வேலை செய்கின்ற பலபேருக்கு ஆட்டோமேஷன் மூலமாக வேலை வாய்ப்பு போய் விடுகின்றது என்ற நோக்கத்திலே இதை வேண்டாமென்று சொல்கிறார்கள். இரண்டு தரப்பையும் நோக்கியாக வேண்டும். அவர்களுக்கு வேலை வாய்ப்பு போவது உண்மைதான். ஆனால், தாங்கள் சேமிக்கவேண்டுமென்று வைத்துள்ள பணத்தை பலபேர் இருந்துகொண்டு சாப்பிட்டு, அந்த சேமிப்பை கட்டுப்படுத்துவதை பார்க்கவேண்டுமா என்பதையும் கவனிக்கவேண்டும். இரண்டு துறைகளையும் பார்க்கவேண்டும்.

ஓர் உதாரணம் சொன்னால் தவறாக இருக்காது என்று நினைக்கிறேன். ஒரு கருடன் குஞ்சு பொறித்து காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. அந்தக் குஞ்சு தானியம் தின்னாது. கோழிக் குஞ்சை அதன் தாய் கொண்டு வந்து கொடுத்தால்தான் அது பிழைக்கும். ஆனால் அந்தக் குஞ்சை எடுக்கின்ற பொழுது அதன் தாயும் குஞ்சும் படுகின்ற பாட்டை சொல்ல முடியாது. ஒன்று அது பிழைக்கவேண்டும், அல்லது இது பிழைக்கவேண்டும். அதாவது ஒன்று செத்து மற்றொன்று பிழைக்கவேண்டிய நிலை கூட இயற்கையிலேயே அமைந்திருக்கிறது. அந்தத் துறையிலே இயற்கை இப்படி அமைந்திருந்தாலும் கூட இந்தத் துறையிலே நிச்சயமாக பல கோடிக்கணக்கான மக்களுடைய பணத்தை சில பேர்கள் தங்களுடைய தேவைக்காக, தங்களுடைய வேலை வாய்ப்பு வேண்டுமென்பதற்காக அவர்களுடைய வருவாயை, ஆதாயத்தைக் குறைப்பது என்பது உண்மைதான். ஆனால், நிச்சயமாக மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவேண்டும். நாட்டிலே மக்கள் வளம் பெற்று வாழ வேண்டுமென்பதுதான் உண்மை. இதை மறுக்க முடியாது. அதற்காக, பலபேருடைய வேலையை இந்த இயந்திரம் செய்கிற போது மீதமாகிற பணம் வெறுமனே கழிந்து விடாது. அதைக்கொண்டு, உற்பத்திக்கு, நாட்டுக்கு, உபயோகப்படக்கூடிய முறையிலே, உற்பத்தியை பெருக்கக்கூடிய முறையிலே, அவர்களுடைய உழைப்பின் பலனை நாட்டுமக்கள் அத்தனைபேரும் உணரக்கூடிய முறையிலே இந்த தொழில் வாய்ப்புகளைப் பெருக்கவேண்டும். இந்த ஆட்டோமேஷன் மூலமாக வேலை வாய்ப்பை குறைக்கவேண்டியதில்லை. இருக்கிற பணத்தைக்கொண்டு வீண் செலவு செய்வதாலே வேலை வாய்ப்பு குறைந்துகொண்டு போகிறது. ஆகையினாலே இந்தச் செலவை

நல்லமுறையிலே பலபெருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய முறையிலே செய்து, உற்பத்தியைப் பெருக்கி, அவர்களுடைய ஊதியத்திற்கு ஆதாயம் கொடுக்கவேண்டிய முறையிலே ஏற்பாடு செய்யவேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய, டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னமாதிரி ஒருவன் ஒரு டெரிலின் சட்டை போடுவதாலே, 10, 15 சாதாரண சட்டைகள் போடுவது குறைகிறது. அதன் காரணமாக, பல மில் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போய்விடும். இரண்டு பேர் ஒரு மரத்தை அறுத்தால், ஒரு நாளெல்லாம், ஒரு சதுரம் அறுக்கமுடியாது. ஆனால் ஒரு இயந்திரம் 100, 200 சதுரம் அளவு வேகமாக அறுக்கமுடிகிறது. அதன் காரணமாக பலபேருக்கு வேலை வாய்ப்பு குறைகிறது. அதை யார் தடுக்கமுடியும்? அதைத் தடுத்தால் இன்றைக்கு மக்களால் பிழைக்க முடியாது. நிச்சயமாக ஒரு சர்க்கரை ஆலையிலே உற்பத்தி செய்கிற சர்க்கரையை சாதாரணக் குடிசைத் தொழிலாகச் செய்தால், பல ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும். காந்தியடிகள் சொன்னார்கள், புருஷோத்தம்தாஸ் தாண்டன் அவர்கள் சொன்னார்கள். பல கோடிக்கணக்கான மக்களை சர்க்கரை இயந்திரங்களினூடே எல்லாம் புகுத்துகிறோம், என்று சொன்னார்கள். அதேமாதிரி இந்த இயந்திர உலகத்திலே வாழ்கின்ற நாம் இந்தத் துறையிலே பெருக்குவதின்மூலம் நாட்டினுடைய செல்வைக் கூட்டுகின்றோம் என்றுதான் சொல்லவேண்டும். ஆகவே, இந்த வீண் ஊதாரித்தனங்கள் பல இடங்களிலே கையாளப்படுவதை, தாங்கள் சம்பாதித்த பணத்தை இவர்கள் மிச்சம் செய்யவேண்டுமென்று கேட்டதற்கு நேர் மாறாக பலனை பல இடங்களிலே அனுபவிக்கவேண்டியிருப்பதால், இந்த ஆட்டோமேஷன் என்பது நிச்சயமாக வரவேற்கத்தக்கதே.

ஆனால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு அரசாங்கம் தீவிர அக்கறை செலுத்தி, இந்த முதலை எல்லாம் இலாபகரமாகப் புகுத்தி, அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். பலரும் வரவேண்டும். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்து அவர்கள் செய்கின்ற வேலையைக் கொண்டு உற்பத்தியைப் பெருக்கி அவர்களுக்கும் ஆதாயம் ஏற்படுத்தி, நாட்டுக்கும் ஆதாயம் ஏற்படுகின்ற முறையிலே காரியங்களைச் செய்யவேண்டும். இப்பொழுது நாட்டிலே அத்தனையும் இயந்திரமயமாகத்தான் வளர்ந்து கொண்டிருக்கிறது. இல்லாவிட்டால் வாழமுடியாது. ஒரு சோடி மாடுகளைக் கொண்டு 3/4 ஏக்கர் உழ முடியாது. ஆனால் இயந்திரம் நூறு ஏக்கர் உழுகிறது. டிராக்டர்களினாலே வேலை வாய்ப்பு குறையும் என்று சொல்கிறார்கள். நிச்சயமாக குறையாது.' அனுபவத்திலே இதைச் சொல்கிறேன். வேலை வாய்ப்பு குறையாமல் நாட்டுக்குச் செல்வமும் வளரும். அதற்கு மாறாக, டிராக்டர்களைப் புகுத்தாமல் இருந்தால் அது





முறை இல்லை. ஒரு மனிதன் ஒரு சோடி மாடுகளைக் கொண்டு, 3/4 ஏக்கர் உழுகிறான் என்றால், அவனால் முப்பது ஏக்கர்களும் அப்படியே உழ எத்தனை எருதுகளும் ஆளும் வேண்டும்? நாம் டிராக்டர்களைப் பற்றி சந்தேகப்படலாம். நான் என்னுடைய அனுபவத்திலே சொல்லுகிறேன். ஒரே காலத்தில் மழை பெய்கிறது. ஒரே சமயத்தில் அத்தனை பேரைக் கொண்டு வேலை செய்யமுடியாமல் விவசாயம் சிறக்க முடியவில்லை. ஆனால் இயந்திரத்தைக் கொண்டு ஏகமாக வேலை செய்வதால், விவசாயம் நல்லமுறையிலே வளரும், வேளாண்மை நடவு செய்தல், களை எடுத்தல், அறுவடை செய்தல் இன்னும் எத்தனையோ வேலைகளை செய்து வேலை வாய்ப்பைப் பெருக்கி நாட்டுக்குச் செல்வமும் வளர்ச்சியும் நிச்சயமாக கொடுக்கமுடியும் என்பதை அனுபவ பூர்வமாகச் சொல்கிறேன். உண்மையிலே இயந்திரம் புகுத்துவதற்கு முன்பு என்னுடைய பண்ணையிலே மாதம் ரூ. 100 கூலி கொடுத்தேன். இப்பொழுது வாரம் ரூ. 500 கூலி கொடுத்துக் கொண்டு வருகிறேன். ஒரு துறையிலே புகுத்தினால் இதனால் நிச்சயம் வேறு துறையிலே உற்பத்தி பெருகும், வளம் பெருகும். இந்த நாட்டிலே அதைப் புகுத்தவேண்டுமென்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராசன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஆட்டோமேஷனை புகுத்தக் கூடாது, ஆட்டோமேஷனை எதிர்த்து இந்த மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றவேண்டுமென்று கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்து, என்னுடைய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நமது நாடு மிகவும் பின்தங்கிய நாடு. ஆட்டோமேஷன் போன்ற மின் அணு இயந்திரத்தை புகுத்துவதன் மூலம் பல்லாயிரக் கணக்கான தொழிலாளிகள் வேலை வாய்ப்பை இழக்கக்கூடிய ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே, ஆட்டோமேஷனை, புகுத்துவதை எந்தக் காரணத்தைக்கொண்டும் அனுமதிக்கக்கூடாது என்று நினைக்கிறேன். ஏனென்றால், நம்முடைய நாட்டில் இன்று வேலையில்லாமல் தவிக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள், படித்தவர்கள் கூட வேலையில்லாமல் இருக்கக்கூடிய நேரத்தில், இப்பொழுது வேலை செய்துகொண்டிருப்பவர்களும் வேலை வாய்ப்பை இழக்கக் கூடிய முறையில் மின் அணு இயந்திரத்தைக் கொண்டு வைத்து, அதன் மூலம் கணக்குப் பார்ப்பது என்றால், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையை இழப்பார்கள். மக்களின் பாதுகாப்பிற்கு, சகல மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை மேம்படச் செய்வதற்கு ஏற்பட்டிருக்கிற க்ஷேம நல சர்க்காரின் லட்சியத்தில் இருக்கும்படியான நோக்கங்களுக்கு அர்த்தமே இல்லாமல் போய்விடும்,

[திரு. சோ. அழகர்சாமி] [1969 ஆகஸ்ட் 21

இன்றைக்கு பல நாடுகளிலும் இம்மாதிரி இயந்திரங்கள் புகுத்தப்படவில்லையா என்று கேட்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் கூட சில இயந்திரங்களை உதாரணமாக எடுத்துச் சொன்னார்கள். மின் அணு இயந்திரங்களை புகுத்துவதன் மூலம் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்வது பாழாக்கப்படும். வேறு நாடுகளில் அம்மாதிரி இயந்திரங்கள் புகுத்தப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அந்த நாடுகளில் வேலைக்கு ஆள்தேவை இருக்கிறது, வேலை வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. ஆனால், நம்முடைய நாட்டில் வேலை வாய்ப்புகள் மிகமிகக் குறைவு. அதே நேரத்தில் வேலை வேண்டும், வேலை வேண்டும் என்று தேடக்கூடியவர்கள் அதிகமான எண்ணிக்கையுள்ள மக்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். விஞ்ஞான படிப்பு படித்து பட்டம் பெற்றவர்கள் கூட வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்த நாட்டிலுள்ள இன்றைய நிலைமையில் அதிகமான மக்களுக்கு வேலை இல்லை, வேலை வேண்டும் என்று தேடிக்கொண்டிருக்கிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது, இப்பொழுது வேலை செய்து கொண்டிருப்பவர்களையோ பாதிக்கக்கூடிய மின் அணு இயந்திரத்தைக் கொண்டு வந்து, ஆட்டோமேஷனை புகுத்த முயற்சிப்பது என்பது கூடாது. அது எந்த ஸ்தாபனமாக இருந்தாலும் சரி, எல்.ஐ.சி.யாக இருந்தாலும் சரி, பெரிய தனிப்பட்ட முதலாளிகளாக இருந்தாலும், சர்க்கார் துறையாக இருந்தாலும் சரி, ஆட்டோமேஷனைப் புகுத்தக்கூடாது என்று இந்த மன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புவதன் மூலம், உண்மையாகவே வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறவர்களுக்கு பாதுகாப்பாகவும், இப்பொழுது வேலை செய்து கொண்டிருப்பவர்கள் வேலையை இழக்காமல் இருக்கக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்த முடியும்.

அதுமட்டுமல்ல. நம் நாடு பின்தங்கிய நாடு. இப்படிப்பட்ட ஒரு நிலையில் இம்மாதிரி ஒரு எண்ணம் ஏற்படுகிறது என்று சொன்னால், தொழிலாளர்களைப்பற்றி அதிகமாக கவனம் இல்லாமலும், உழைக்கின்ற மக்களின் நலனில் அக்கறை இல்லாமலும் இருக்கிற நிலைமைதான் ஏற்படும். ஆகவே, அந்த எண்ணம் ஏறவே கூடாது. ஆட்டோமேஷனைப் புகுத்தினால் ஆயிரக் கணக்கான பேர்கள் வேலை வாய்ப்பை இழக்க நேரிடும், அது வராமல் தடுக்கவேண்டும், அதை எதிர்த்துக் கொண்டுவந்திருக்கக் கூடிய இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பி. எஸ். தனுஷ்கோடி : தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியைச் சார்ந்த திரு. கோவிந்தராசன் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய



1969 ஆகஸ்ட் 21] [திரு. பி. எஸ். தனுஷ்கோடி]

கருத்தைக் கூற விரும்புகிறேன். இந்திய நாடு ரொம்ப பின்தங்கிய நாடு, தொழில் வளம் அதிகமாக இல்லாத நாடு. இந்த நாட்டில் ஆட்டோமேஷனைக் கொண்டுவருவதன் மூலம் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போய்விடும். அதுமட்டுமல்ல. ஆட்டோமேஷனைக் கொண்டுவருவதன் மூலம் தனிப்பட்ட முதலாளிகள் லாபம் சம்பாதிப்பதற்குத்தான் அது வழிகோலும். இயந்திரங்களைப் புகுத்துவதனால், இந்த நாட்டில் இன்னும் பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை இல்லாமல் இருக்கக் கூடிய ஒரு நிலை இருந்தும், இப்பொழுது வேலை செய்து கொண்டிருப்பவர்களும் வேலை வாய்ப்பை இழக்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே, தமிழக அரசு இந்த மாமன்றத்தில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. இன்றையதினம் பின்தங்கிய நாடாகிய இந்த விவசாய நாட்டில் பல நவீன இயந்திரங்களைக் கொண்டு வந்து உணவு உற்பத்தியைப் பெருக்கு வதன் மூலம் லாபம் இருந்தாலும், கிராமத்தில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் வேலை வாய்ப்பை இழக்கக்கூடிய முறையில் இம்மாதிரி நவீன இயந்திரங்களைக் கொண்டுவரக்கூடாது, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மகாத்மா காந்தியடிகள் இந்த நாட்டில் குடிசைத் தொழில்கள் வளர்ச்சி அடையவேண்டும், விஞ்ஞான வளர்ச்சியின் மூலம், குடிசைத் தொழில்கள் நசித்து விடக்கூடாது, கிராமப் புறத்திலுள்ள மக்களுக்கு வேலையில்லாமல் போகக்கூடிய நிலைமையை ஏற்படுத்தக்கூடாது என்று தன்னுடைய சுய சரிதையில் கூறியிருப்பதை நாம் அறிவோம். மக்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் செய்து, உற்பத்தியைப் பெருக்குவதற்காக பல நவீன இயந்திரங்களைக் கொண்டு வந்தால், அது மேலும் பல சிக்கல்களை உண்டுபண்ணக்கூடும். அம்மாதிரி செய்தால், பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையை இழக்கக்கூடும், அதேசமயத்தில் தனிப்பட்டவர்கள் தங்களுடைய சுய லாபத்தைப் பெருக்கிக்கொள்வதற்கு உதவி செய்யுமே தவிர, வேறு ஒன்றுமில்லை. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுவதை தடுத்து நிறுத்துவதற்கு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பல நாடுகளில் மக்களுக்காக உற்பத்தியைப் பெருக்குவதற்கு, உற்பத்தியை சமுதாயத்திற்குச் சொந்தமாக் பல நாடுகளில் கொண்டு வந்திருக்கிறார்கள். நமது நாட்டில் உற்பத்திப் பெருக்கத்தை யெல்லாம் சமுதாயத்திற்குச் சொந்தமாகக் கொண்டுவரவில்லை. ஆகவே, தனியார்கள் லாபம் அடைகிறார்களே தவிர, அந்த லாபத்தை மக்களுக்குச் சொந்தமாக்கக் கூடிய அளவிற்கு நவீன இயந்திரங்கள் வந்தால், அதை நிச்சயம் வரவேற்கலாம். ஆனால்,

[திரு. பி. எஸ். தனுஷ்கோடி] [1969 ஆகஸ்ட் 21

நாட்டு மக்களுக்கு இடையூறாக வரக்கூடிய ஆட்டோமேஷனை எதிர்த்து எங்களுடைய கட்சியின் சார்பிலே கொண்டுவந்திருக்கக் கூடிய தீர்மானத்தை நான் ஆதரித்து விடைபெறுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது விவாதத்திற்குக் கொண்டுவந்திருக்கக் கூடிய இந்தத் தீர்மானத்திலே இயந்திரங்களை புகுத்தக்கூடாது, இயந்திரங்களால் காரியங்கள் செய்யக்கூடாது என்பது வற்புறுத்தப்படுகிறது. முதலில் இந்தத் தீர்மானத்தில் எத்தகைய இயந்திரங்கள் தேவை, எது கூடாது, எது சமுதாயத்திற்கு நல்லது செய்வதற்கு இருக்கிறது என்பதையெல்லாம் யோசிக்கவேண்டியது மிக மிக அவசியம் என்று கருதுகிறேன்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்ததன் நோக்கம் நாட்டில் உற்பத்தியைப் பெருக்குவதோ அல்லது தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழக்க நேரிடுவதைத் தடுப்பதோ அல்ல என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன். ஏதோ அரசியல் நோக்கத்தை வைத்து, ஒரு சில பேர்கள் சில அரசியல் லாபம் பெறுவதற்கு இந்தத் தீர்மானம் பயன்படுமே தவிர, வேறு ஒன்றுமில்லை. நான் ஒரு விவசாயி. எனக்கு 25, 30 வருஷங்களாக விவசாயத்தில் அனுபவம் உண்டு. என்னுடைய விவசாயத்தில் கூட நான் இயந்திரங்களை அதிகமாகப் புகுத்துவதில்லை. என்னால் புகுத்த முடியாது. ஆனால், சில சமயங்களில், சில சந்தர்ப்பங்களில் புகுத்தவேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. கணக்குப் போட்டுப் பார்க்கும்பொழுது, இயந்திரங்களைப் புகுத்துகிறோம். அப்படி புகுத்தும்பொழுது, வேலை வாய்ப்பு குறைகிறது என்று சொன்னால், இந்தக் காலத்தில் 1969-ல் அதை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனால் வேலை வாய்ப்பு குறையும், மக்களுக்கு வேலையில்லாமல் போய்விடும் என்ற குற்றச்சாட்டை நான் ஏற்க முடியாது.

10 வருஷங்களுக்கு முன்னால் என் பகுதியிலே கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைப்பதற்கு மின்சாரம் பொருத்தப்பட்ட போது, சாதாரண அரிஜனத் தொழிலாளர்களிடம் சில அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் போய் பிரசாரம் செய்தார்கள். 'இது என்ன அக்கிரமம்! இது உங்களையெல்லாம் பாதிக்கும், தோல் தைக்கின்ற வேலையை இழக்க நேரிடும், உங்களுக்கு வேலையே இருக்காது, எலக்டிரிஸிடி மூலம் என்ஜின் வைத்து தண்ணீர் இறைத்தால் உங்களுக்கு வேலை போகாதா? என்றெல்லாம் கிளப்பிவிட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் என்று நினைக்கிறேன். அங்கு வந்துவிட்டார்கள். 'கிணற்றிலிருந்து எலக்டிரிஸிடி மூலம் தண்ணீர் இறைத்தால், உங்களுடைய தொழில் என்ன ஆவது, பரிகளை தைக்கும்படியான தொழிலே நசித்துவிடும்' என்றெல்லாம் கிளப்பிவிட்டார்கள். ரொம்ப அட்ராக்டிவாக, ரொம்ப ஜோராக இருந்தது. நான் தயவு



1969 ஆகஸ்ட் 21] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

செய்து ஒரு வருஷம் பொறுங்கள் என்று சொன்னேன். பரி தைக்கின்ற தொழிலாளர்களுக்கு தொழில் இல்லாமல் போய் விடலாம், இல்லை என்று சொல்லவில்லை. 4 பரி வைத்து இறைத்தால் ஒரு ஏக்கராவுக்கு தண்ணீர் பாயும். எலக்டிரிஸிடி மூலம் தண்ணீர் இறைத்தால் மூன்று ஏக்கராவுக்கு தண்ணீர் பாயும். முன்பு நான்கு ஆள் வேலை செய்தால், இப்பொழுது 12 ஆட்களுக்கு வேலை கிடைக்கும், அரிஜனங்களுக்கு வேலை கிடைக்கும். சும்மா உட்கார்ந்து கொண்டு, வேலை கிடைக்கவில்லை என்று சொன்னால் பலன் இல்லை. அதைவிட உற்பத்தியை பெருக்குவதற்கு 12 பேர்கள் சேர்ந்து வேலை செய்வார்களேயானால், அவர்களுக்கு வேலை கிடைக்கும். இப்பொழுது 700 கிணறுகளுக்கு எலக்டிரிஸிடி பொருத்தப்பட்டிருக்கிறது. முன்பு 1,000 பேர்கள் வேலை செய்தால், இப்பொழுது 3,000 பேர்களுக்கு வேலை இருக்கிறது. நாட்டில் இப்பொழுது ஒரு நோய் இருக்கிறது. வேலை செய்யாமல் எல்லாம் கிடைக்கவேண்டும், வேலை செய்யாமல் எல்லா வசதிகளும் கிடைக்கவேண்டும், நாம் வேலை செய்யக்கூடாது என்று இப்படிப் பட்ட ஒரு மனப்போக்கு இருக்கும்வரையில், இந்த நாட்டிலுள்ள பிரச்சினையை நிச்சயம் தீர்க்க முடியாது என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வேலை செய்ய வேண்டும், அதற்கான ஊதியத்தைப் பெற வேண்டும். முதல் போட்டவர்கள் லாபமும் பெறவேண்டும். அப்படிப் சொல்வதானால் நான் அதை ஆதரிக்கிறேன். இப்பொழுது இருக்கும்படியான தீர்மானம் என்ன? ஏன், சொல்லுங்களேன், இன்னமும் கிணற்றிலிருந்து குடத்தால் தண்ணீர் இறைத்துக் கொட்ட வேண்டும் என்று; அப்படி ஊற்றினால், ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கலாம். அப்பொழுது எலக்டிரிஸிடியே வேண்டியதில்லை. பின் எதற்காகச் சொல்லுகிறார்கள் 50,000 பம்புசெட்டுகள் கொடுத்தோம் என்றெல்லாம். அதெல்லாம் வேண்டாம், குடத்தால் எடுத்து ஊற்றினால் ஒரு கோடி மக்களுக்கு வேலை கொடுக்கலாம். இயந்திரத்தைப் புகுத்துவது, ஆடோமேஷன் வேண்டாம் என்று எதற்காகச் சொல்லுகிறார்கள்? நாட்டில் குழப்பத்தை உண்டு பண்ணினால், கட்சியை வளர்த்துக் கொள்ளலாம் என்று செய்கிறார்கள்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், கரும்புத் தொழிற் சாலைகளை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கெல்லாம் சங்கங்களை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். 'கோ-ஸ்லோ பாலிஸி' என்று பேசுகிறார்கள். பத்து கரும்பு கொடுப்பதற்குப் பதிலாக, ஒரு கரும்பு கொடுக்கிறார்கள். இதையெல்லாம், முதலாளி என்பவர் பார்த்துக் கொண்டு இருக்கவேண்டும். ஆயிரம் டன் கரும்பு உபயோகிக்கும் ஒரு தொழிற்சாலையில், ஒரு கரும்பு கொடுப்பேன் என்றால், எப்பொழுது வேலை நடப்பது, எப்படிச் சர்க்கரை உற்பத்தி செய்வது? பேசுவதற்கென்ன பேசுவார்கள், பார்த்தீர்களா, முதலாளிகள் பெரிய பெரிய கார்களில்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 ஆகஸ்ட் 21

போகிறார்கள், அவருடைய சம்சாரம் வைரத்தோடு போட்டிருக்கிறார், என்று. வந்தால் இவர்களும் போட்டுக் கொள்வார்கள். போட்டுக் கொள்ளட்டுமே. இது என்ன 'கோ-ஸ்லோ பாலிஸி'? நம் நாட்டு தொழிலாகிய விவசாயத்தில் நன்றாக வேலை செய்தால் தான் உற்பத்தி பெருகும். ஏர் ஓட்டினால் தான் சோறாகும். உற்பத்தி பெருகும். பத்துப் பேர் பார்த்துக் கெடுத்தான் என்பார்கள். அப்படி, ஏர் ஓட்டுமிடத்தில், ஒன்பது பேர்களுடைய வேலையைக் கெடுத்துப் போடலாம். ஒரு நாளைக்கு 3 ஏர்களைக் கொண்டு ஒரு ஏக்கர் உழலாம் என்றால், அதைக் கெடுத்துப் போடலாம். சும்மா, வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விடுவார்கள் நடுவிலே ஏரைப் பிளந்து விடுவார்கள்.

ஆகவே, இயந்திரம் வேண்டாம் என்று சொன்னால் என்ன அர்த்தம்? விவசாயத்தை கெடுக்கிறார்கள், உற்பத்தியைக் கெடுக்கிறார்கள் என்றுதான் அர்த்தம். 4 ஏர் ஓட்டுவதை விட ட்ராக்டர் வைத்து உழுதால் அதிகமாக உழலாம், ஆழமாக உழலாம். நன்றாகப் புழுதி செய்து உழுதால்தானே நல்ல சேர் உண்டாகும். அதிகமாக உற்பத்தியையும் காண முடியும்? ஆகவே, இதன் மூலம் விவசாயத்தைக் கெடுத்து, விவசாயம் தெரியாதவர்கள்தான் இதைச் சொல்வார்கள் என்பது என்னுடைய எண்ணம். விவசாயம் நன்றாக நடந்தால், உற்பத்தி அதிகமாகும். அதனால், நாட்டுக்கு நலம், நாட்டுக்கு லாபம், மக்களுக்கு லாபம், இந்த மாதிரியான நிலையில், தஞ்சாவூரில் ட்ராக்டருக்கு எதிராகக் கிளர்ச்சி. எனக்கும் ஆளும் கட்சிக்கும் எத்தனையோ அபிப்பிராய வித்தியாசம். ஆனால், நானும், மாண்புமிகு முதல் அமைச்சரும், ஒரு கருத்தைச் சொன்னோம். முதல் அமைச்சரே ஒரு இடத்தில் பேசியிருக்கிறார்கள். இந்த இயந்திரக் கலப்பை போட்டு உழுவதால், விவசாயம் பாதிக்கப்படமாட்டாது. தொழிலாளிகள் பாதிக்கப்படமாட்டார்கள் என்று. அதை நான் நூற்றுக்கு நூறு ஆதரிக்கிறேன். சந்தர்ப்பம் கிடைத்தால் அதைச் சொல்லுகிறேன் என்று சொன்னேன். ஆகவே, இயந்திரத்தை உபயோகிப்பதால் வேலை வாய்ப்புக்கள் குறைவு என்று சொல்வது தவறு. அது இருக்க முடியாது.

விவசாயிகளில் மட்டும் எல்லோரும் இயந்திரக் கலப்பையை உபயோகிக்க முடியுமா என்ன? அப்படிப்பட்ட நிலை வர 40, 50 வருஷங்கள் ஆகும். ட்ராக்டர்களை வைத்துக் கொண்டு, அதிகமாக ஆழமாக உழவு செய்ய முடியும்.. ஏரைக் கொண்டு, அப்படிச் செய்ய முடியாது. அதிலும், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருப்பவர்களும், இன்னும் குத்தகைக்கு எடுத்திருப்பவர்களும் அதையெல்லாம் உபயோகிக்க முடியாது. 30, 40 ஏக்கர் வைத்திருப்பவர்கள்—ஸீலிங் வந்த பிறகு அப்படிப்பட்டவர்கள் மிக மிகக் குறைவு—செய்யலாம். அதுவும் எத்தனைபேர் செய்வார்கள். எனக்கும் பூமி இருக்கிறது. என் குடும்பத்திற்குச்



1969 ஆகஸ்ட் 21] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

சேர்ந்து 30, 35 ஏக்கர் இருக்கிறது. என்றாலேயே டாக்டர் வாங்க முடியவில்லை. ஒரு ட்ராக்டர் வாங்குவதானால் 20,000 ரூபாய் ஆகிறது. வட்டி என்ன? 2,500 ரூபாய் வட்டியாகிறது. அதன் மேல் டிப்ரீசியேஷன் எல்லாம் போட்டுப் பார்த்தால், ஏர் போட்டு உழுவதே மேல் என்று இருக்கிறது. ஆகவே, உற்பத்திப் பெருக்கத்திற்குக் குந்தகம் விளைக்கும் இந்த யோசனை வேண்டாம் என்று சொல்ல விரும்புகிறேன். இயந்திரம் வேண்டாம் என்றால் என்ன? உற்பத்தி பெருக வேண்டாம் என்று பொருள். வேலை வாய்ப்புக் குறையும் என்று சொல்லி, எங்கள் கட்சியை ஆதரியுங்கள் என்று கேட்பதாகத்தான் பொருள். கேட்கட்டும். அதில் நியாயம் இருக்க வேண்டும். அதிலே தர்மம் இருக்க வேண்டும். ஏதோ உள் நோக்கத்தோடு தீர்மானம் கொண்டு வருவது சரியாகாது.

இயந்திரமே வேண்டாம் என்றால் காரியம் ஆகுமா? எதற்கெடுத்தாலும் ரஷ்யாவைப்பார் என்கிறார்கள். ரஷ்யாவிலே, சீனாவிலே இயந்திரங்கள் எவ்வளவு இருக்கின்றன. அதெல்லாம் கன ரகம் என்பார்கள். அங்கெல்லாம், சாதாரணமாக அறுப்பதற்கு, அடிக்க, விதைபோட எல்லாவற்றிற்கும் இயந்திரம் தான் உபயோகிக்கிறார்கள். ரஷ்யாவிலே ட்ராக்டர்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் ட்ராக்டர்கள் ஜோராக ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆழமாக உழுகின்றன. அங்கெல்லாம் இயந்திரத்தை உபயோகிக்காமல் இருக்கிறார்களா? ஆகவே, இயந்திரத்தை வேண்டாம் என்றால், அது தவறானது. வேலை வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. நம் நாட்டிலே விவசாயத்தில் எவ்வளவுக்கெவ்வளவு இயந்திரங்களை உபயோகிக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு உற்பத்தி பெருகுவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இந்தத் தீர்மானத்தில் சொல்லுகிறார்கள். ஆபீஸ்களில் கூட வேலை வாய்ப்புக்கள் குறைந்துவிடும் என்று. எப்படிக் குறையும்? எனக்கு ஞாபகம், 10, 12 வருஷங்களுக்கு முன்னால் ஒரு கணக்கெடுத்தார்கள். ஒரு நாளைக்கு எத்தனை பைல்கள் டிஸ்போஸ் ஆகிறது என்று கணக்கெடுத்தார்கள். 2½ அல்லது 3 பைல் என்று வந்தது. எப்படியிருக்கிறது? கம்ப்யூட்டர் இருந்தால் இவ்வளவு வேலை என்று இருக்கிறது. ஆபீஸ்களில் என்ன செய்கிறார்கள். காலையில் வருகிறார்கள். வந்த உடனே என்ன செய்கிறார்கள்? லெட்டர்ஸ் பார்க்கிறார்கள். அதற்கு அரை மணியாகிறது. பிறகு ஒரு கப் டீ. அதன் பிறகு சாப்பாடு. இரண்டு மணி முதல் மூன்று மணி வரை ஓய்வு. நாலு மணிக்குப் பிறகு ஒருவரும் இருப்பதில்லை. ஆபீஸ்களுக்கு போன் செய்து பார்க்கிறோம். பிறகு அடுத்த நாள் வருகிறார்கள். தவறாக நினைக்கக் கூடாது. கம்ப்யூடர்ஸ் என்றால், இத்தனை வேலை செய்ய வேண்டும் என்கிற ஒரு அடிப்படை இருக்கும். அப்படியிருந்தால்தான் எஃபிஷென்ஸி பெருகும். திறமை அதிகமாக இருக்கும். [illegible] அதிகமானால், செலவினம் குறையும். லாபம் வரும். [illegible]

திறமை கிடையாது. எஃபிஷன்ஸி குறைந்துவிட்டிருக்கிறது. ஒரு நாளைக்கு பத்து பைல்கள் போடவேண்டும் என்று இருக்க வேண்டும். அப்படி ஒரு அளவிருந்தால்தான், அதிகமான வேலை நடைபெறும்.

கம்ப்யூடர்ஸ் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டு இருந்தால், சந்திர மண்டலத்திற்கு எப்படிப் போக முடியும்? "பழையன கழிவதும், புதியன புகுவதும்" காலப் போக்கில் ஏற்படுவது.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இயந்திரம் வேண்டும் என்று சொல்லும்போது, கைராட்டினம் வேண்டாம் என்று கொள்கையளவில் சொல்லுகிறார்களா ?

**திரு. பி. ஜீ. கருத்திருமன் :** எனக்குத் தெரியும் இப்படிக் கேட்பார்கள் என்று. இதுவரைக்கும் கேட்கவில்லையே என்று யோசனை பண்ணிக் கொண்டு இருந்தேன். கைராட்டினத்தோடு, மில்லும் வேண்டும் என்றுதான் நாங்கள் சொல்லுகிறோம். நானும் கைராட்டையில் நம்பிக்கை உள்ளவன்தான். கதர் போட்டுக் கொள்பவன்தான். ஆனாலும், மில் வேண்டாம் என்று சொல்லவில்லை. மூடிய மில்களைக்கூட ஏன் திறக்கவில்லை என்றுதான் கேட்கிறேன். கதரின் விலை அதிகம், நடுத்தர வர்க்கத்தினர், ஏழை மக்கள் மலிவான விலையில் வாங்கிப் போட்டுக்கொள்ளட்டும் என்பதற்காகத்தான் எங்கள் கட்சியில் கைராட்டை இயக்கத்தை ஆரம்பித்தோம். மற்றவர்கள் இப்படிக் கேட்டு, எங்களை ஏமாற்ற முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, கைராட்டையை ஒரு கொள்கையின் அடிப்படையில் வைத்திருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மேலும், கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் போன்றவை எல்லாம் வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை. அவைகளையும் நாம் ஆதரிக்க வேண்டும். நான் மில்கள் கூடாது என்றா சொன்னேன் ? மூடிய மில்கள் மூடியபடியே இருக்கட்டும், இன்னும் அதிகமான மில்களையும் மூடட்டும், கைராட்டையாலேயே நூல் நூற்று ஆடைகள் நெய்து கொள்ளலாம் என்றா சொன்னேன் ?

* **திரு. டி. எஸ். ஆதிமூலம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது குறுக்கிட்டு ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்புவது கொஞ்சமும் பொருத்தம் அல்ல என்பது எனக்குத் தெரியும். இன்று நான்-அபிஷியல் தினமாகும். இன்று ஏழு தனிநபர் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, பேசப்பட வேண்டும். இன்னும் ஒன்றரை மணிநேரம்தான் இருக்கிறது. தனிநபர் தீர்மானத்தை எடுத்துக் கொள்வது ஆண்டுக்கு ஒருநாள்தான் கிடைக்கிறது. தீர்மானம் கொடுத்தவர்கள் எல்லாம் பேச வேண்டும். ஆகவே,





சேர்மன் அவர்கள் கொஞ்சம் ரெஸ்ட்ரிக்ட் பண்ணி, நான்-அபிஷியல் தினத்தன்றே இவைகளையெல்லாம் முடித்துவிட வேண்டுமென்று ஒழுங்குப் பிரச்சினைமூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. தருமலிங்கம்) :** தனி நபர் தீர்மானங்கள் குறிப்பிட்ட தினத்தில் வருகிற காரணத்தால், தீர்மானம் கொடுத்த உறுப்பினர்கள் அதிக நகலைகளையெல்லாம் சொல்ல வேண்டியிருக்கிறது. என்றாலும், இருக்கின்ற கால நேரத்தை உத்தேசித்து, கனம் உறுப்பினர் அவர்கள் கூறியபடி, தங்களுடைய உரையை சீக்கிரம் முடித்துக் கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜீ. கருத்திருமன் :** மிக்க நன்றி. நானும் பேச்சை நீட்டிக்கொண்டே போக விரும்பவில்லை. இதன் காரணமாக விவசாயம் பாதிக்கக்கூடாது. உணவு உற்பத்தி பாதிக்கக்கூடாது என்பதைச் சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான் இவற்றைச் சொல்ல வேண்டி வந்தது. நான் இதை ஆர்க்குமென்ட், கவுன்டர் ஆர்க்குமென்டுக்காகச் சொல்லவில்லை. இயந்திரமே வேண்டாமென்று சொல்வதில் பொருத்தமில்லை. இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கக்கூடியவர்கள் நாட்டினுடைய உற்பத்திப் பெருக்கத்தை அதிகம் செய்வதற்கு வழி செய்ய வேண்டும். ஆகவே, இந்தத் தீர்மானத்தை வலியுறுத்தக்கூடாது என்று சொல்கிறேன். இதை சர்க்கார் பூரணமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு, இந்தத் தீர்மானத்தை என் கட்சியின் சார்பாக எதிர்த்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ ஓராண்டிக்கு முன்னால், சட்ட மன்ற உறுப்பினர்கள் திரு. சி. கோவிந்தராசன் அவர்களும், திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களும் கொடுத்த தனிநபர் தீர்மானங்கள் இன்றையதினம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இதிலே மிகச் சுவையான நிகழ்ச்சி என்னவென்றால், பொதுவுடைமை நண்பர்கள் கொடுத்திருக்கிற தீர்மானத்தை சுதந்திரா கட்சி நண்பர்கள் எதிர்ப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சுதந்திரா கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்களும் பேசியபோது, இதைத் தீவிரமாக எதிர்க்காமல் பாதிவரை வரவேற்று, இருதரப்பு வாதங்களையும் எடுத்துச் சொன்னார்கள். காங்கிரஸ் தரப்பில் கதராடை மூலமாக மிகப் பெரிய கொள்கைகளை விளக்க முயலும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்தக் கருத்தை வேறு விதமாக எடுத்துக் கொண்டு பேசி, தீர்மானத்தை எதிர்த்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. எது எப்படியிருந்தாலும், முதலிலே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

கொடுக்கப்பட்டிருக்கிற தீர்மானம் ஆட்டோமேஷனை—அணுமின் இயந்திரத்தை—எதிர்த்துத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர மெகனைசேஷன்—இயந்திர மயமாகிற—கொள்கையை எதிர்த்து அல்ல.

இந்த நாட்டிலே இயந்திரம் வேண்டாமென்று இந்தத் தீர்மானம் கொடுக்கப்படவில்லை. இந்தத் தீர்மானங்கள் கொடுக்கப்படுவதற்கு முன்னாலேயே, புதிதாக பொறுப்பை ஏற்றிருக்கிற தமிழக அரசு தீர்க்கமான முடிவுக்கு வந்து, அப்போது தொழிலாளர் நலத் துறை பொறுப்பை ஏற்றிருந்த மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள், கொள்கை விளக்க அறிக்கையிலே இந்தக் கொள்கையை வலியுறுத்தியிருக்கிறார். அணுமின் இயந்திரக் கொள்கையை தீவிரமாக இந்த அரசு எதிர்க்கிறது என்பதை நாட்டுக்கு அறிவித்திருக்கிறார். அதுமட்டுமல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் நாட்டின் முதல்வராக இருந்த காலத்தில் அவரிடம், பல்வேறு தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளைத் தரும்போது எல்லாம், அண்ணா அவர்கள் மிக நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்து, இதிலே தீவிரமான கவனம் செலுத்தி, தன் கைப்பட மத்திய அரசாங்கத்திற்கு இதுகுறித்து கடிதம் எழுதியிருக்கிறார்கள். தென்னிந்திய இரயில்வேத் துறையில் இப்படிப்பட்ட இயந்திரங்கள் அமைக்கப்பட்டதை எதிர்த்து, அண்ணா அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு ஆணித்தரமான முறையில் தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

" That the Madras State is opposed to innovations like automation and computerisation as a Labour saving device has been brought to the notice of the Government of India and the Prime Minister. In that background I have to reiterate the opposition of this State against the move to install an Electronic Computer in the Southern Railway offices: I am of the considered view that the decision of the Railway Ministry needs to be reviewed.

அதுமட்டுமல்ல,

The State cannot but take note of the serious discontent prevailing among the workers and its open expression through continuous agitations. On behalf of the State I request you to kindly suspend all the present steps being taken by the Railway Administration to install the machine, until such time the complete details including repercussions are discussed with the organised Labour. It is also the considered view of the State that the said move to install an Electronic Computer should be abandoned, because even now the problem of rehabilitating the Ceylon and Burma repatriates is defying a satisfactory solution. There is no essential need to introduce Electronic Computerisation in the Railways or other sectors. "

என்று அப்பொழுதே அண்ணா அவர்கள் வலியுறுத்தி எழுதியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கமும் அதற்குரிய கவனத்தைப் பெற வேண்டுமென்று நாம் திருப்பித் திருப்பி வலியுறுத்தியிருக்கிறோம்.





இன்றைக்கு அணுமின் இயந்திரங்கள் தேவையென்றால், அதன் காரணமாக வேலைவாய்ப்பை இழப்பவர்களின் தொகை பெருகுகிறது. வேலைவாய்ப்பைப் பெறுகிறவர்களின் தொகையும் குறையும். நான் ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். மேலை நாடுகளிலே, மிக வளர்ச்சி அடைந்திருக்கிற நாடுகளிலே இயந்திரங்கள் புகுத்தப்படுகின்றன, கணக்கு இயந்திரங்கள், அதாவது கம்ப்யூட்டர் இயந்திரங்கள் புகுத்தப்படுகின்றன. ஆனால் நம்முடைய நாட்டிலே மனித சக்தி அதிகம் இருப்பதாலே, இந்த இயந்திரங்கள் புகுவதால் மனிதர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காமல் போய்விடுகின்றன. அன்றையதினம் இந்தியாவைப்பற்றி, இந்தியாவினுடைய மனித சக்தியைப்பற்றி, மாகவி பாரதியார், ' முப்பது கோடி முகமுடையாள் ' என்று பாடிவிட்டுப் போய் நீண்ட நாட்களாகிவிடவில்லை; ஆனால், இதற்குள் இந்தியாவைப்பற்றி, ' ஐம்பது கோடி முகமுடையாள் ', ' அறுபது கோடி முகமுடையாள் ' என்று பாட்டைத் திருத்திப் பாட வேண்டிய கட்டத்திற்கு நாம் வந்திருக்கிறோம்.

மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் ஐரோப்பாவைச் சுற்றிவிட்டு வந்து ஒரு செய்தி அளித்தார். " நான் ஸ்வீடன் நாட்டிற்குப் போய் இருந்தேன். அந்த அரசாங்கம் பல்வேறு தொழிற்சாலைகளுக்கு என்னை அழைத்துப் போய் காட்டியது. அங்கே மிக நன்றாக ஓடக்கூடிய இயந்திரங்கள் ஓடாமல் இருக்கின்றன. அவைகள் அத்தனையும் புதிதாக இருந்தன. நான் அவர்களை, ' ஏன் இந்த இயந்திரங்களை ஓட்டாமல் சும்மா வைத்திருக்கிறீர்கள் ? ' என்று கேட்டேன். அதற்கு அந்த அதிகாரிகள், ' இங்கே மேன் பவர் '—மனித சக்தி இல்லை. இந்த இயந்திரங்களை ஓட்டுவதற்கு ஆட்கள் இல்லை. ஷிப்ட் முறையில்தான் இந்த இயந்திரங்களைப் பயன்படுத்துகிறோம். இயந்திரங்கள் சில நாட்கள்தான் ஓடுகின்றன; மற்ற நாட்களில் ' ஐடிலாக ' இருக்கின்றன " என்று குறிப்பிட்டார்கள். ஆனால், நம் நாட்டிலே நிலைமை தலைகீழாக இருக்கிறது. இங்கே வலுவான கரங்கள், உழைக்கத் துடிக்கும் தோள்கள், வயிற்றிலே பசி இவையெல்லாம் இருக்கின்றன. இந்த நாட்டிலே உழைப்பதற்கு மக்கள் இருக்கின்றார்கள். மனித சக்தி ஏராளமாக இருக்கின்றது. ஆகவே, உழைப்பதற்கு மக்கள் இருக்கிற நோக்கிலே, இயந்திரங்கள் மயமாவதை ஏற்படுத்தினால், தங்களுடைய வேலைவாய்ப்புகளுக்கு இழப்பு வருமே என்று அஞ்சுகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள், இதுபற்றி மத்திய அரசாங்கத்திற்குக் குரல் கொடுத்ததன் பின்னால், நம்முடைய கலைஞர் அரசாங்கமும் இந்தக் கொள்கையை மிகமிக வரவேற்று, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

தீர்மானம் கொண்டு வந்துள்ளவர்கள் இன்னொரு கருத்தை வற்புறுத்தினார்கள். தனியார் துறையினர், அதாவது பி. அண்டு சி. மில்களில், ஷா வாலெஸ் நிறுவனம் போன்றவைகளில் இதைக்

கொண்டுவர விரும்புகின்றனர் என்று சொன்னார்கள். அப்படித் தனியார் தங்களுடைய சொந்தத் தேவைக்கு இப்படிப்பட்ட இயந்திரங்களை வாங்குகிற நேரத்தில் எந்த உணர்வோடு உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்துப் பேசினார்களோ அந்த உணர்ச்சிபூர்வமான நோக்கோடு இந்த அரசாங்கமும் அந்த ஸ்தாபனங்களுக்குத் தங்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறது. எல்.ஐ.சி.-யைப் பொறுத்தவரையில் முன்பு பம்பாயில் புகுத்தப்பட்ட இயந்திரம் தமிழ்நாட்டிற்கும் வரலாம் என்ற சூழ்நிலை இருந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் நோக்கோடு எடுத்த நடவடிக்கை காரணமாகவும், இந்த அரசாங்கத்தின் எதிர்ப்புக் காரணமாகவும், தொழிற்சங்கத் தலைவர்களுடைய கருத்துக் காரணமாகவும் நம் தமிழ்நாட்டில் எல். ஐ. சி. நிர்வாகத்தில் இப்படிப்பட்ட இயந்திரம் புகுத்தப்படவில்லை என்று தெரிகிறது. உடனடியாக அச்சப்படுவதற்கான சூழ்நிலை எதுவும் இல்லை. ஆயினும்

> வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
> வைத்தூறு போலக் கெடும்.

என்கிற கருத்தினையொட்டி இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் வைத்து நாம் கலந்துபேசி நம்முடைய கருத்தை வலியுறுத்துவதன் மூலமாக—எல்லாக் கட்சித் தலைவர்களும் தங்களுடைய கருத்தை எடுத்துச்சொல்வதன் மூலம் மீண்டும் வற்புறுத்துகிறோம்.

மொத்தத்தில் இப்படிப்பட்ட ஆட்டமேஷன் கொள்கையை அகில இந்திய ரீதியாகப் பார்க்கவேண்டுமென்று கருதுகிறேன். அண்ணா அவர்கள் இந்தக் கடிதத்தை எழுதிய பின்னால் மத்திய சர்க்காரிடம் இருந்து என்ன பதில் வருமோ என்று எதிர்பார்த்தோம். மதிப்பிற்குரிய திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் தலைமையில் மத்திய அரசும் ஒரு குழுவை இதுபற்றி ஆராய்வதற்காக நியமித்திருக்கிறது என்றும், அந்தக் குழு இன்னும் தம் முடிவுகளை வெளியிடவில்லை என்ற விவரம் இப்போது நமக்குத் தெரியவருகிறது. ஆகவே, அகில இந்திய ரீதியாகவே இதற்கு ஒரு நல்ல தீர்வு ஏற்படும் என்று எதிர்பார்த்திருப்போம் என்ற கருத்தை நான் இந்த நேரத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திருப்பித் திருப்பி ஒரு கருத்தைச் சொன்னார்கள். டிராக்டர்கள் உபயோகிப்பதை சில பேர் எதிர்க்கிறார்கள். நான் ஒரு விவசாயி—டிராக்டர்கள் உபயோகத்தை எதிர்ப்பதை நான் ஆதரிக்கவில்லை என்பதாகச் சொன்னார்கள். இந்தத் தீர்மானத்தின் மூலம் விவசாயிகளைப் பற்றிய பிரச்சினையே எழவில்லை. தொழிலாளர்களைப் பற்றிய பிரச்சினையே இல்லை. இந்தத் தீர்மானத்தை நன்கு ஆராய்ந்தவர்களுக்குத் தெரியும். படித்துப் பட்டம் பெற்றவர்களை வேலை இல்லாமல் செய்வதைத் தடுக்கும் தீர்மானம் இது. படித்துவிட்டு விவசாயம் என்றால்



என்ன என்றே தெரியாது—மண்வெட்டி வேலை செய்வதை மறந்துவிட்டு—பி.காம். படித்துவிட்டோம், பி.எஸ்.ஸி. படித்துவிட்டோம், பேனா பிடித்தே பிழைத்தாகவேண்டும் என்ற நிலையில் இருக்கக் கூடிய ஒரு சமுதாயத்தின் வேலையில்லாப் பிரச்சினையைப் பற்றியது. ஆட்டமேஷன் வருவதன் மூலமாக இதுபோன்ற பல்லாயிரக்கணக்கானவர்கள் வேலையிழக்க நேரிடும் என்ற காரணத்தினால் இந்தத் தீர்மானத்தின் கருத்து நாட்டில் பொதுவாகவே நிலவுகிறது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் மிக விரிவாகத் தம் கருத்துக்களை பல ஆதாரங்களுடன் சொன்னார்கள். மேலைநாட்டுக்கும், நம் நாட்டுக்கும் உள்ள வித்தியாசத்தையும்—இரண்டு புறத்தில் இருந்தும் எடுத்துக்காட்டி வாதாடினார்கள். வாதம் சிறப்பாக இருந்தது. பட்டிமன்றத்திற்கு ஏற்ற அமைப்பு இருந்தது. பொதுவாக இந்த ஆட்டமேஷன் வந்த நேரத்தில் அமெரிக்க நாட்டுப் பெருந்தலைவர் திரு. கென்னடி அவர்கள் கூட கவலை அடைந்திருக்கிறார்கள். அவரது கருத்தை நான் மொழி பெயர்த்துச் சொல்கிறேன். "ஆட்டமேஷன் வருவதன் காரணமாக இருபத்தையாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலை இழக்கும் பிரச்சினையில் புதிய வேலை வாய்ப்பை 1960 முதல் 1970 வரை—பத்தாண்டுக் காலம் எப்படி ஏற்படுத்தித் தருவது என்கிற பிரச்சினையைத்தான் எதிர்நோக்க வேண்டியிருக்கும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். செல்வம் கொழிக்கும் அமெரிக்க நாட்டுப் பெருந்தலைவர்களே இப்படி பயப்படக் கூடிய நிலை இருக்கிறது. மேலைநாட்டுத் தொழிற்சங்க தலைவர்கள் சிலர் ஆதரித்திருக்கிறார்களே என்று குறிப்பிட்டார். தொழிற்சங்கத தலைவர் ஆதரித்திருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் ஏழு, எட்டு ஸ்தான கூட்டல், கழித்தல்; பெருக்கல் போன்ற பெரும் கணக்குகளைப் போட இவை உதவியாக இருக்கும் என்கிற காரணத்தினால் தான். ஆனால் நம்முடைய நாட்டின் தலைவலி வயிற்றுப் பிரச்சினைதான். எத்தனை வேலைப்பளுவையும் சமாளிக்கத் தயார். எங்களுக்கு வயிறு பசிக்கிறது, வேலை கொடுங்கள் என்கிற நிலை தான் நம் தேசத்தில் இருக்கிறது. வேலை செய்யலாம், ஆனால் நீண்ட நேரம் ஆகிறதே என்று சொல்ல முடியும். நீண்ட நேரப் பிரச்சினையைக் காட்டிலும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினைதான் அதிகமாக இருக்கிறது. இதை எல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான் உடனடியாக முழுக்க முழுக்க இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதை அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு வரியில் குறிப்பிட்டார்கள்.

முழுக்க, முழுக்க ஆட்டமேஷன் கொள்கையை எப்போதும் எதிர்ப்பது என்றல்ல, எந்தக் காலத்திற்கும் இது தேவையில்லை என்று சொல்லமாட்டோம். நாம் கையில் கட்டியிருக்கிற கடியாரத்திற்கு 2 நிமிடம் சாவி கொடுக்கவேண்டியிருக்கிறது. இரண்டு நிமிடம் சாவி கொடுக்கச் செலவிட்டால் தான் நாள்

பூராவும் ஓடிக்கொண்டிருக்கிறது. என்றைக்கு இந்த 2 நிமிடம் கூடச் செலவழிக்க முடியாத நிலைக்கு நாம் ஆகிறோமோ அன்றைக்கு தானே கை அசைப்பில் சாவி கொடுத்துக் கொள்ளும் ஆட்டோமேடிக் ரிஸ்ட்வாச் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அதுபோல என்றைக்கு ஆட்டமேஷன் வந்தாகவேண்டிய சுபிட்சமான சூழ்நிலை வருகிறதோ அந்த நேரத்தில் இதுபோன்ற இயந்திரங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார்கள். இதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை. அண்ணா அவர்கள் வரையறுத்துச் சென்ற இந்த கொள்கை அடிப்படையிலேயே இந்த அரசாங்கமும் தொடர்ந்து செயல்படும்.

மேலும் இப்போது உடனடியாக இந்த ஆட்டமேஷன் பற்றிப் பயப்படுவதற்குக் காரணங்கள் இல்லை. எல்.ஐ.சி.-யில் புகுத்தப்படுமோ என்று அங்கு பணியாற்றுகிறவர்கள் அஞ்சுகிறார்கள். பலவிதமான மெமராண்டங்களைக் கொடுத்து வருகிறார்கள். அவர்கள் எந்த அளவு பயத்தோடு, அச்சத்தோடு இருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடிகிறது. நாமும் இதுபற்றி அடிக்கடி கடிதங்களின் மூலமாகவும், நேரிடையாகப் பேசும்போதும் மத்திய அரசுக்கு இது கூடாது என்று வலியுறுத்தி வருகிறோம்.

ஆகவே, இப்போது நான் சொல்வது எல்லாம் இந்தத் தீர்மானத்தைக்கொண்டு வந்திருக்கிறவர்களுடைய உணர்ச்சியைத் தான் இந்த அரசாங்கமும் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேயே கடிதங்கள் மூலமாகவும் தொடர்ந்து பல பல சந்தர்ப்பங்களில் எழுதியும் வந்திருக்கிறது. ஆகவே இதை வலியுறுத்தத் தேவையில்லை என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இனியும் தொடர்ந்து இதை எதிர்ப்பதற்கு இந்த அரசு காத்து இருக்கிறது. ஆகவே, தீர்மானத்தைக் கொண்டு விரிவாக—விளக்கமாகப் பேசிவிட்ட காரணத்தினால் இதை அதிகம் வற்புறுத்த வேண்டாம் என்று தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. சி. கோவிந்தராசன்** : தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிந்து பேசும்போது இப்படிப்பட்ட மின் அணு இயந்திரங்கள் அரசாங்கத்தினுடைய இலாக்காக்களிலும், தனியார் துறைகளிலும் புகுத்தப்படுவதன் மூலமாக இன்றைக்கு இருக்கிற வேலை வாய்ப்பை எப்படி பாதிக்கும், எதிர்காலத்தில் ஏற்படும் வேலை வாய்ப்பை எவ்வாறு பாழ்படுத்தும் என்கிற முறையில் ஏராளமான புள்ளிவிவரங்களைக் கொடுத்துப் பேசியிருக்கிறேன்.

அதுமட்டும் அல்ல. அணுமின் இயந்திரம் கொண்டுவரப்பட்ட அமெரிக்காவில் இந்த இயந்திரத்தைக் கண்டுபிடித்துக் கொண்டுவந்த ஐ.பி.எம். ஸ்தாபனத்தாரே வாரத்திற்கு எத்தனை





ஆயிரம் பேர்களுக்கு வேலையில்லாமல் போகிறது என்கிற புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டினேன்.

அதுமட்டும் அல்ல. தொழில் வளர்ச்சியில் அதிகமாக முன்னேறியுள்ள அமெரிக்காவிலேயே பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் நாளாவட்டத்தில் எப்படி வேலையிழந்து தவிக்கும் நிலைக்கு வந்தார்கள் என்பதைப் புள்ளி விவரத்தோடு அப்போது கூறியிருக்கிறேன். அன்றைக்குப் பிரசிடென்ட் ஆக இருந்த திரு. ஜான்சன் அவர்கள் ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு கொடுத்த பரிந்துரைகளையும் கூறினேன். திட்டவட்டமாக அணுமின் இயந்திரம் கொண்டுவரப்படுமானால் பல்லாயிரக்கணக்கானவர்கள் நிச்சயமாக வேலை இழக்க நேரிடும் என்று அக்குழு பரிந்துரை கொடுத்துள்ளது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

ஆனால், நம்முடைய மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறும்பொழுது இது ஏதோ அரசியல் நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டது என்று குற்றஞ்சாட்டினார்கள். எந்த அளவுக்கு அந்தக் குற்றச்சாட்டு சரியானது என்பதைப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். இந்தத் தீர்மானத்தை நான் கொண்டு வந்த காரணத்தாலேயே இதை அரசியலாகப் பயன்படுத்தலாம் என்று அவர் நினைக்கிறாரோ என்னவோ? அணுமின் இயந்திரங்களைப் புகுத்தக்கூடாது என்ற கருத்தை நாங்கள் மட்டுமல்ல, எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, ஏற்கெனவே பல நண்பர்கள், நம்முடைய அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல நம்முடைய மறைந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பல்வேறு பொதுக் கூட்டங்களிலும், எல்.ஐ.சி. ஊழியர்கள் மாநாட்டிலும் பேசுகின்றபொழுது அணுமின் இயந்திரங்களைப் புகுத்துகின்ற காரணத்தால் தொழிலாளர்களின் வேலையை அது பாதிக்கும் என்ற கருத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் மட்டுமல்ல, நம்முடைய மதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள், இது உற்பத்திப் பெருக்கிற்கு உகந்தது என்று ஒரு சாரார் கூறுகிறார்கள், வேலை வாய்ப்பைக் குறைக்கும் என்று இன்னொரு சாரார் கூறுகிறார்கள், இதைப் பரிசீலித்துப் பார்த்து முடிவு எடுக்கவேண்டுமென்று கூறினார்கள். ஆனால் அவர்களுடைய தலைவரான ராஜாஜி அவர்கள் திட்டவட்டமான கருத்தை, ஆட்டோமேஷன் புகுத்தப்பட்டால் இந்திய நாட்டின் தலையாய சொத்துக்களில் ஒன்றாகிய உழைப்புத்திறனை இழப்பதில் முடியும் என்று சொல்லி அதன் காரணமாக இதைப் புகுத்தக்கூடாது என்று அறிவித்திருக்கிறார்கள். மத்திய திட்டக் குழுவினுடைய உப தலைவராக உள்ள டாக்டர் காட்கில் அவர்கள் இதைப் பரிசீலனைசெய்து இந்த

[திரு. சி. கோவிந்தராசன்] [1969 ஆகஸ்ட் 21

ஆட்டோமேஷன் வெகுவாக முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது, இது நம் நாட்டிற்குத் தேவையில்லை என்று கூறியிருக்கிறார்கள்.

இவ்வாறு திட்டக்குழு உபதலைவர் திரு. காட்கில், ராஜாஜி, அறிஞர் அண்ணா அவர்கள், இன்னும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஆட்டோமேஷனைப்பற்றிக் கருத்தைத் தெரிவிக்கும் பொழுது நாங்கள் கொண்டுவந்தது அரசியல் நோக்கமுடையது என்று எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டுவது ஏன் என்று புரியவில்லை. இன்னும் சில கருத்துக்களையும் அவர்கள் சொன்னார்கள். ஆட்டோமேஷனைக் கொண்டுவராமல் குடத்தில் தண்ணீர் கொண்டு போவதா, இயந்திரங்களை உபயோகப்படுத்திக் காரியங்களைச் செய்யக்கூடாதா என்று கேட்டார்கள். விஞ்ஞான அபிவிருத்தியை நாம் எதிர்க்கவில்லை. கை விசிறிக்குப் பதிலாக மின் விசிறியை பயன்படுத்துவதை எதிர்க்கவில்லை, நடந்து போவதற்குப் பதிலாக விஞ்ஞானத் துறையிலே அபிவிருத்தி யடைந்ததன் காரணமாக ஏற்பட்டுள்ள பல்வேறு வாகனங்களின் மூலமாக காலையிலே இங்கே டிபன் சாப்பிட்டுவிட்டு புறப்பட்டால் மத்தியானச் சாப்பாட்டிற்கு அமெரிக்காவிற்கோ லண்டனுக்கோ போய்ச் சேரக்கூடிய முன்னேற்றங்களை நாம் எதிர்க்கவில்லை. அவற்றை வரவேற்கிறோம். விஞ்ஞானத்தை நாம் எதிர்க்கவில்லை. அதனுடைய அபிவிருத்தியை மறுப்பவர்கள் அல்ல நாங்கள்.

ஆனால் எந்த நோக்கத்தோடு இது கொண்டுவரப்பட்டு இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டுவிட்ட பிறகும் அரசினுடைய கணக்கின்படி 2½ கோடி பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்ற சூழ்நிலையில் இதைப் புகுத்துவதன்மூலம் மேலும் மேலும் வேலையில்லாத் திண்டாட்டம் வரும், அது கூடாது என்ற நோக்கத்தோடுதான் இது கொண்டுவரப்பட்டு இருக்கிறது. வேலை யில்லாத் திண்டாட்டம் பெருகுவதோடு, மேலும் மேலும் பொருளாதார நெருக்கடியை கஷ்டப்படுகிற மக்களுக்கு ஏற்படுத்துகிற நிலைமை வருமாதலால் இது நம்முடைய நாட்டிற்குப் பொருந்தாது, இது தேவையில்லை என்று நாங்கள் கருதுகிறோம். மறைந்த முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஒரு கூட்டத்தில் கூறுகின்ற பொழுது 1966-67 அல்ல, 1967-68 அல்ல, 1970-80 அல்ல, இன்னும் குறைந்த பட்சம் ஒரு நூற்றாண்டுக் காலத்திற்குள் இன்றைய தினமுள்ள பொருளாதார நெருக்கடிச் சூழ்நிலையைப் பார்த்தால் இதைப் புகுத்தினால் அது பெரிய அபாயத்தைத் தோற்றுவிக்கும் என்று சொன்னார்கள். இங்கே மீண்டும் ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் கூறுகிறேன்.

சி.டி.சி. 3600 என்ற கம்ப்யூட்டர் டாடா இன்ஸ்டிட்யூட் ஆப் பண்டமெண்டல் ரிசர்ச் என்ற இடத்தில் இருக்கிறது. இது ஒரு விநாடிக்குள் 6 லட்சம் கூட்டல் கழித்தல்களையும், 2 லட்சம்



1969 ஆகஸ்ட் 21] [திரு. சி. கோவிந்தராசன்]

பெருக்கல் வகுத்தல்களையும், 15 ஸ்தானங்களில் உள்ள எண்களுக்கு செய்யமுடியும் என்று சொன்னால்—இது ஏற்கனவே வந்த மெஷின் —இன்றைக்கு இன்னும் அபிவிருத்தி அடைந்து இருக்கலாம். இதனால் எத்தனை குமாஸ்தாக்களுக்கு வேலையில்லாமல் போகக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சென்ற தடவை இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழியும் பொழுது பல உதாரணங்களைக் குறிப்பிட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ரஷ்யாவிலே இயந்திரங்கள் இல்லையா ? அணுமின் இயந்திரங்கள் வரக்கூடாதா என்று கேட்டார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம் இருக்கக்கூடிய நம் நாட்டில் இதைப் புகுத்துவது உகந்ததல்ல என்று கூறுகிறோம். ரஷ்யாவிலே மட்டுமல்ல, தொழில் வளர்ச்சியில் முன்னேற்ற மடைந்திருக்கின்ற பல்வேறு நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாத நிலைமை இருப்பதால் வேலைகளைக் குறைவாகவும், எளிதாகவும் செய்வதற்காக இதைப் பயன்படுத்து கிறார்கள். அதன் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பயங்கரமான விளைவுகள் அங்கே ஏற்படவில்லை. அவர்கள் வேலைகளை எளிதாகச் செய்வதற்காகவும் நாட்டினுடைய அபிவிருத்தியைப் பெருக்குவதற்காகவும், உற்பத்தியை அதிகமாக்குவதற்காகவும் பயன்படுத்துகிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டை எடுத்துக் கொண்டால் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகமாக்கும் என்பதுதான் என்னுடைய வாதம்.

மத்திய திட்டக் கமிஷன் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒரு டைரக்ஷன் கொடுத்திருக்கிறது. கூடுமானவரை மனித சக்தியைப் பயன்படுத்தக்கூடிய முறையில் திட்டம் அமைய வேண்டுமென்று கொடுத்திருக்கிறது. எனவே, அரசியல் நோக்கத்தோடு இது கொண்டுவரப்பட்டதல்ல. குமாஸ்தாக்கள் மட்டுமல்ல, தொழிலாளர்களும் இதனால் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. எனவே நம்முடைய நாட்டிற்கு அது வரக் கூடாது என்ற முறையிலேதான் இது கொண்டுவரப்படுகிறது. ஆனால் நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இந்த நிலைமையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருகின்றவர்களுடைய உணர்ச்சிகளோடு இந்த அரசு பங்குகொள்வதாகவும், ஏற்கனவே மறைந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், நாங்களும் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம் என்றார், எனவே வற்புறுத்தத் தேவை யில்லை என்றும் கூறினார்கள். உண்மை. ஆனால் என்ன பயம் என்றால் எல்.ஐ.சி.யில் புகுத்த முயற்சி நடைபெற்று வருகிறது. இங்கே ரயில்வேயில் ஜெனரல் மானேஜர் ஆபீஸ், இண்டக்ரல் கோச் பேக்டரி, பின்னி அண்ட் கம்பெனி, ஷா வாலஸில் சிறிய அளவில் இது புகுத்தப்பட்டிருக்கிறது. ரயில்வே சிப்பந்திகள் புகுத்தக் கூடாது என்பதற்கான எதிர்ப்பைத் தெரிவித்தும்

அவர்கள் உண்ணாவிரத இயக்கம் நடத்தியும் அது கைவிடப்படவில்லை. அண்ணா அவர்கள் ரயில்வே இலாகாவோடு தொடர்பு கொண்டு கடிதம் எழுதியும்கூட இன்றுவரை அதை அகற்றவில்லை என்பது உண்மை.

அதுமட்டுமல்ல. சமீபத்தில் 1969 ஜனவரி மாதத்தில் இங்கு வந்த எல்.ஐ.சி. சேர்மன் எம். ஆர். படே அவர்கள் "அடுத்த கம்ப்யூட்டர் சென்னையிலோ அல்லது பெங்களூரிலோ அமைக்கப்படும்" என்று கூறியிருக்கிறார். சென்னையை இலக்காக வைத்ததற்குக் காரணம் சௌத் ஸோன் தலைநகரம் இங்கு இருப்பதுதான். சென்னையில் புகுத்திவிட்டால் எல்லா இடங்களுக்கும் சாதகமாக இருக்கும் என்ற முறையில் இந்தக் கருத்தை ஜனவரி மாதத்தில் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, நிச்சயமாகக் கொண்டுவரக் கூடிய நிலைமை இருக்கிறது. எல்.ஐ.சி., ரயில்வே ஆகியவை மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தவை என்ற முறையில் மாநில அரசாங்கம் கடிதப் போக்குவரத்து நடத்துவதைத் தவிர வேறு வழி இல்லாத நிலைமை ஏற்படுகிறது. அதை என்னால் உணர முடிகிறது. அதே சமயத்தில் கேரளத்தில் மேற்கு வங்காளத்தில் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த ரயில்வேயாக இருந்தாலும் சரி, எல்.ஐ.சி. நிறுவனமாக இருந்தாலும் சரி, திட்டவட்டமான கொள்கையைக் கடைப்பிடித்து அணுமின் இயந்திரங்களைத் திட்டவட்டமாகப் புகுத்தக்கூடாது என்று அறிவித்து அதற்கான தக்க நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள்.

ஆகவே, நாம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினால் கூடப் போதாது. ஏற்கனவே நிறுவப்பட்டிருப்பதைக் கூட எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இதிலே மாநில அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது. மத்திய அரசாங்க நிறுவனத்திலே எப்படித் தலையிடுவது என்ற நிலை வேண்டியதில்லை. ஆயிரக் கணக்கான, லட்சக் கணக்கான தொழிலாளர்களுக்கு, சிப்பந்திகளுக்கு வேலை இல்லாத நிலை ஏற்பட்டால் அவர்களுக்கு வேலை கொடுக்கும் பொறுப்பு மாநில அரசாங்கத்திற்கு உண்டு. அதோடு கூட அந்தத் தொழிலில் "அன்ரெஸ்ட்" ஏற்படுவதன் மூலம் "லா அண்டு ஆர்டர்" கெடும். ரயில்வேயாக இருந்தாலும், எல்.ஐ.சி.யாக இருந்தாலும் அவர்கள் இந்த மாநிலத்திலிருந்துதான் ரிசோர்ஸஸை (வருவாயை)ப் பெறுகிறார்கள். ஆகவே, இந்தப் பிரதேசத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடாது. நாடு முழுவதிலும் எல்.ஐ.சி.யில் பணியாற்றுகின்றவர்கள் மிகப் பெரிய அளவுக்கு எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி எல்.ஐ.சி. ஊழியர்கள், ரயில்வே ஊழியர்கள், மற்றும் தனிப்பட்ட கம்பெனி ஊழியர்கள் இந்த அணுமின் இயந்திரத்தைப் புகுத்துவதை எதிர்த்துப் போராடும்போது மாநில அரசு அதற்கு ஆதரவு கொடுத்து நம்முடைய நோக்கத்தை வலியுறுத்த வேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும். அப்படிப்



போராடுகின்றவர்களின் ஒத்துழைப்பையும் பெற்று மத்திய அரசாங்கம் அணுமின் இயந்திரங்களைப் புகுத்துவதைத் தடுத்து நிறுத்த தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே, கடிதம் மூலம் எழுதுவதோ, தீர்மானத்தை நிறைவேற்றிவிடுவதோ மட்டும் போதாது.

இந்தச் சூழ்நிலையில் அமைச்சர் அவர்களுடைய விளக்கப்படி இந்தத் துறையில் தீவிர நடவடிக்கை எடுப்பதற்கு மாநில அரசு முயற்சி செய்ய வேண்டும், அனைத்துத் தொழிலாளர்கள் ஒத்துழைப்பையும் பெற வேண்டும்; நடவடிக்கை தீவிரமாக எடுக்க வேண்டும்: அதுதான் பிரதான நோக்கமே தவிர, தீர்மானத்தை மட்டும் நிறைவேற்ற வேண்டுமென்பதல்ல. ஆகவே, அந்த நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்ற அமைச்சர் அவர்கள் கொடுத்த உறுதியின் அடிப்படையில் தீர்மானத்தை வற்புறுத்தாமல் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

## (ii) தமிழ் நாட்டில் சிமெண்ட் தொழிற்சாலைப் பிரிவுகள்

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : என் பெயரில் இருக்கும்படியான கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

"This House views with great concern the consequences to the cement manufacturing units in Tamil Nadu including the Government unit under construction at Alangulam, such as curtailment of production, large scale unemployment in the primary and secondary industries leading to labour unrest and big loss of revenue to the State Government, from the termination of control over price and distribution and abrogation of freight pooling for cement with effect from 1st January 1970 notified by the Government of India, and requests the Government of Tamil Nadu to impress upon the Government of India to retain the present arrangement for countrywide freight pooling for cement so that the cement surpluses of Tamil Nadu could continue to be utilised beneficially to relieve shortages in other parts of the country for as long as may be necessary."

THIRU S. RAMALINGAM : I second the motion.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : தலைவர் அவர்களே, 1—1—1970-ல் இருந்து மத்திய சர்க்கார் இப்போது இருக்கும்படியான நிலையை மாற்றி, போக்குவரத்துச் செலவை சர்க்கார் ஏற்றுக்கொள்ளும்படியான 'சென்ட்ரல் பூல் சிஸ்டம்'த்தை நீக்கிவிட இருக்கும் நிலையிலே தமிழகத்திலே சிமெண்ட் உற்பத்தி மிக மிகப் பாதிக்கப்படும் என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எவ்வளவு தூரம் சிமெண்ட் உற்பத்தியாகிறது, எந்தெந்தப் பகுதியில் எவ்வளவு உற்பத்தியாகிறது என்ற விவரங்களைச் சொல்லலாம்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 ஆகஸ்ட் 21

என்று விரும்புகிறேன். சிமெண்ட் உற்பத்தி செய்யப்படும் பகுதிகள் நம்முடைய பாரத நாட்டிலே நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

**Northern region comprising Utter Pradesh, Rajasthan, Punjab, Jammu and Kashmir, Himachal Pradesh, Haryana, Delhi and Chandigarh.**

1968-ம் ஆண்டு முடிவில் இங்கே உற்பத்தியாகும்படியான சிமெண்ட் 2.71 மிலியன் டன்.

**Eastern region comprising Assam, Bihar, Orissa, West Bengal,** Manipur, Nagaland, Bihar, Nefa, Nepal, Sikkim, Bhutan and **Tripura.**

இங்கே உற்பத்தியாகும் சிமெண்ட் 2.54 மிலியன் டன் ஆகும்.

**Western region comprising Gujarat, Maharashtra, Madhya Pra-** desh, Goa, Dadra and Nagahaveli.

இங்கே உற்பத்தியாகும் சிமெண்ட் 4.60 மிலியன் டன் ஆகும்.

**Southern region comprising Tamil Nadu, Andhra Pradesh, Mysore, Kerala, Pondicherry, Andamans and Laccadives.**

இங்கே உற்பத்தியாகும் சிமெண்ட் 5.03 மிலியன் டன் ஆகும்.

ஆகவே, மொத்தத்தில் 1968-ம் ஆண்டு முடிவில் 14.88 மிலியன் டன் சிமெண்ட் உற்பத்தியாகியிருக்கிறது. சதவிகிதத்தைப் பார்த்தால் வடக்குப் பிராந்தியத்திற்கு 18 சதவிகிதமும், கிழக்கு பிராந்தியத்திற்கு 17 சதவிகிதமும், மேற்கு பிராந்தியத்திற்கு 31 சதவிகிதமும், தெற்குப் பிராந்தியத்திற்கு 34 சதவிகிதமும் ஆகிறது. 1968-க்குப் பிறகு தமிழகத்தின் உற்பத்தி விகிதத்தைப் பார்த்தால் இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 14 சதவிகிதமும், தெற்கு பிராந்தியத்தின் உற்பத்தியில் 42 சதவிகிதமும் ஆகும். அதாவது, 2.12 மிலியன் டன் அளவுக்கு உற்பத்தியாகும் நிலை இருக்கிறது. 1971-ம் ஆண்டில் தமிழகத்தில் இந்தியா சிமெண்ட்ஸ்-ல் புதிய இரண்டு யூனிட்டுகள் மூலம் 0.6 மிலியன் டன்னும், செட்டி நாட்டில் 0.2 மிலியன் டன்னும், சர்க்கார் துறையில் உள்ள ஆலங்குளம் யூனிட்டில் 0.4 மிலியன் டன்னும் ஆக மொத்தம் 3.32 மிலியன் டன் தமிழகத்தில் மட்டும் அதிகமாக உற்பத்தியாகக்கூடிய நிலைமை இருக்கிறது. இங்கே உற்பத்தியாகக்கூடிய சிமெண்டில் இங்கேயே பயன்படுத்தியது போக 40 சதவிகிதத்திற்கு மேல் வெளிப் பிராந்தியங்களுக்கு அனுப்பினால்தான் உற்பத்திச் செலவைச் சரிக்கட்ட முடியும் என்பது சர்க்காருக்கும் தெரியும். அப்படி இருக்கும் நிலையில் போக்குவரத்துச் செலவை மத்திய சர்க்கார் எடுத்துவிடும் நிலை ஆதரவு கொடுக்கும் நிலையாக இருக்க முடியாது. கிழக்குப் பிராந்தியம், வடக்குப் பிராந்தியத்தில் பற்றாக்குறை நிலை இருக்கும், இங்கே அதிகமாக இருக்கும். இங்கிருந்து 500 மைல், ஆயிரம் மைல் என்று எடுத்துக்கொண்டு போய் அங்கே கொண்டு போய் விற்கும்போது போக்குவரத்துச் செலவையும் சேர்க்கும்போது அங்கே உற்பத்தியாகக்கூடிய



1969 ஆகஸ்ட் 21] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

சிமெண்டை விட இது அதிகமான விலையாக இருக்கும். இந்த நிலைமையின் காரணமாக தமிழகத்தில் சிமெண்ட் உற்பத்தி நிச்சயமாகப் பாதிக்கப்படும் என்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

இந்தப் 'பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றால் அதற்கு இரண்டு வழிகள் உண்டு. அதாவது சர்க்கார் புதுப்புதுத் திட்டங்களைப் போட்டு, தமிழ்நாட்டில் கான்க்ரீட் ரோடுகள் போடுவது, புதுப்புதுக் கட்டடங்கள் கட்டுவது, சர்க்கார் பெரிய தொழிற்சாலைகளைக் கட்டி நடத்தும்படியான நிலை இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் தான் உற்பத்தியாகும் சிமெண்டை நாம் உபயோகப்படுத்த முடியும். ஆனால் இப்போதுள்ள நிலையில் எந்தவிதமான திட்டங்களையும் எடுத்துக்கொள்வதாகவோ அல்லது எந்தவிதமான திட்டங்களையும் நடத்துவதாகவோ அல்லது நடத்திக்கொண்டிருக்கும்படியான நிலை இல்லாதிருக்கும்போது சிமெண்ட் தேங்கிக் கிடக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே இந்த சர்க்கார் மத்திய சர்க்காரை வலியுறுத்தி 1—1—1970 முதல் வர இருக்கும்படியான நிலை இல்லாமல் இப்போதுள்ள நிலையையே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் 300 மைல்களுக்கு அப்பால் போகும் சிமெண்ட்டிற்கான ஃப்ரெயிட் சார்ஜை மத்திய சர்க்கார் ஒத்துக்கொண்டால் நம் சிமெண்ட் தொழிற்சாலைகளை சரியாக நடத்த முடியும். வடக்கேயுள்ள சிமெண்ட் தொழிற்சாலைகளுடன் போட்டியிடும் அளவிற்கு நம் தொழிற்சாலைகளின் நிலைமை இருக்க வேண்டும். இப்போது சிமெண்டின் விலையும் அதிகமாகிவிட்டது, உற்பத்திச் செலவும் அதிகமாகிவிட்டது. ஆகவே நான் மேற்கூறியபடி செய்ய வேண்டும். இல்லாவிடில் சிமெண்ட் தொழிற்சாலைகள் பாதிக்கப்படுவதோடு இதனால் ஏற்பட்டிருக்கக் கூடிய உப தொழில்களும் பாதிக்கப்படும். இப்போதே வேலை கிடைக்காதிருக்கும்படியான நிலை இருக்கிறது. ஆகவே 300 மைல்களுக்கு அப்பால் போகும்படியான சிமெண்டிற்கான போக்குவரத்துச் செலவை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்படியான நிலை ஏற்பட வேண்டும். எந்தப் பகுதியிலிருந்து சென்றாலும் ஒரே விலை, நிலையான விலை இருக்க வேண்டும்.

நிலக்கரியை எடுத்துக் கொண்டால் வடக்கே ஒரு டன்னுக்கு ரூ. 17 அல்லது ரூ. 18 என்றிருக்கிறது. ஆனால் தெற்கே இங்கு வரும்போது அதன் விலை ரூ. 35, ரூ. 40 ஆகிறது. எந்தப் பொருள் எங்கே விற்கப்பட்டாலும் ஒரேவிதமான விலை இருக்கும்படியான நிலை இருந்தால்தான் அதை உற்பத்தி செய்வோருக்கு தாக்கு பிடிக்க முடியும். சிமெண்ட் மிகவும் முக்கியமானது. தென்னாட்டில், தமிழ்நாட்டில் இப்படி அதிகப்படியான அளவில் உற்பத்தி செய்யத் தக்க அளவிற்கு தொழிற்சாலைகளை அமைத்திருப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இப்போது நம் தேவைக்குமேல் 40 சதவிகிதத்திற்கு மேல் சிமெண்ட் வெளியிடங்களில் விற்கப்படும் நிலை இருக்கிறது. ஆகவே கிழக்கு அல்லது வடக்குப் பகுதியில்

இருப்பவர்களுக்கு கிடைக்கும் லாபத்தில் ஓரளவு லாபமாவது, நியாயமான அளவிற்குள்ள லாபம் நம் தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கும்படியான ஒரு நிலையை ஏற்படுத்தும் வகையில் மத்திய சர்க்காரிடம் நாம் ஆலோசனை கூற வேண்டும். அதை கண்டித்துச் சொல்லி, இடித்துச் சொல்லி செய்யவேண்டும் என்று நம் மாநில சர்க்காரைக் கேட்டுக்கொண்டு, இத்தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் இத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

* **மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய ஒரு பிரச்சினையைப் பற்றியும், மிகத் தெளிவாக அந்தப் பிரச்சினையை மத்திய அரசினிடத்தில் நாம் சொல்ல வேண்டிய முறைகளைப் பற்றியும் இங்கு விளக்கிக் கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய தீர்மானத்திலுள்ள நல்ல பொருளையும் தத்துவத்தையும் அரசாங்கம் முற்றிலும் ஏற்றுக்கொள்கிறது. இந்தச் சட்டமன்றத்தில் இந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட்டு இம்மன்றத்திலுள்ள எல்லாத் தரப்பு உறுப்பினர்களும் இந்தப் பிரச்சினையை உணர்ந்திருக்கிறார்கள். மத்திய அரசினிடம் மாநிலத்திலுள்ள பிரச்சினையை எடுத்துக் கூறக் கூடியதொரு ஆற்றல் எங்களுக்கு உண்டு என்பதை தெரிவிப்பதற்கும் இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே இந்தப் பிரச்சினையை எடுத்துப் பேசியிருப்பது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள எந்தத் துறையானாலும்சரி அல்லது எந்த அரசியல் கட்சி எந்தக் கருத்தைக் கொண்டிருந்தாலும்சரி தமிழ் நாட்டைப் பொறுத்த அளவிற்கு ஏதாவது ஒரு சிக்கல் ஏற்படுமானால் நாங்களெல்லாம் ஒருமித்த கருத்தைச் சொல்வோம் என்பதை எதிர்க்கட்சியில் அமர்ந்ததற்குப் பின்னாலாவது காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் உணர்ந்திருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. காரணம் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்த காலத்தில் இதைத்தான் வலியுறுத்துவோம். மத்திய ஆட்சிப் பொறுப்பை காங்கிரஸ் கட்சி ஏற்றிருப்பதால் நீங்களும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்திருந்தாலும் தமிழ் நாட்டின் மொத்தப் பிரச்சினைபற்றி பேசும்போது எல்லோரும் சேர்ந்து ஒருமித்த கருத்தை தைரியமாக எடுத்துச் சொல்வோம் என்று சொல்லியிருக்கிறோம். இன்றைக்கு நாங்கள் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்து எதிர்க்கட்சியில் காங்கிரஸ் கட்சி அமர்ந்திருந்தாலும், இப்படிப்பட்ட நல்ல கருத்துக்களை அவர்கள் சொல்லும்போது உண்மையிலேயே நாங்கள் எங்கள் மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தளவிற்கு அரசாங்கம் உடனடியாக உணர்ந்து ஏற்கெனவே நம்முடைய பிரதம அமைச்சர் அவர்களுக்கு நம் முதல் அமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருக்



கிறார்கள். இங்கு வந்திருந்த காலத்தில் கூட நேரடியாக அவர்களிடத்தில் இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதித்து இங்குள்ள, தமிழ் நாட்டிலுள்ள சிமெண்ட் தொழில்கள் பாதிக்கப்பட்டு விடாமல் இருப்பதற்கு உடனடியாக அதில் கவனம் செலுத்த வேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய முறை நீடிக்கப்பட வேண்டும் என்பதை தமிழக அரசின் சார்பில் நம் முதல் அமைச்சர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், அவைக்கும் தெரிவித்துக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

இந்த சிமெண்ட் தொழில் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இரண்டு விதமான கட்டுப்பாடு மத்திய ஆட்சியில் இருந்தது. ஒன்று சிமெண்டின் விநியோகத்தைக் கட்டுப்படுத்துவது, சிமெண்ட் கண்ட்ரோல். அந்தக் கண்ட்ரோலை, கட்டுத்திட்டத்தை எடுத்து விட வேண்டுமென்று மத்திய ஆட்சி சொல்கிறது. அதில் நமக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் தீர்மானத்திலும் அதைப்பற்றிக் குறிப்பிடவேயில்லை. சிமெண்ட் கண்ட்ரோலை டி-கண்ட்ரோல் செய்வதற்கு இந்த ஆட்சிக்கோ அல்லது இந்தத் தீர்மானத்திலோ எந்தவிதமான ஆட்சேபணையும் தெரிவிக்கப்படவில்லை. இன்னொரு பகுதி, விலைக் கட்டுப்பாடு, ப்ரைஸ் பூல் ஸிஸ்டம் என்றிருக்கிறது. அதை மத்திய சர்க்கார் எடுத்து விடவேண்டுமென்று சொல்வதை நாம் ஆட்சேபிக்கிறோம். நம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அவர்களது தீர்மானத்தில் அதைத்தான் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

இது எப்படி நடைபெறுகிறது என்பதை மட்டும் நாம் சிறிது சிந்தித்துப் பார்ப்பது நல்லது என்று கருதுகிறேன். இந்திய நாட்டின் பல பகுதிகளில் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதில் சிமெண்ட் தொழிற்சாலைகள் மட்டும் பல பகுதிகளில் இருக்கின்றன. ஒவ்வொரு பகுதியிலும் உற்பத்திச் செலவு இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. அதற்குக் காரணம் அதற்குத் தேவையான மூலப் பொருள்கள், ரா மெட்டீரியல்ஸ், அடிப்படைப் பொருள்கள் அதிகமாக எந்த இடத்தில் கிடைக்கிறதோ அங்கு தான் இந்தத் தொழிற்சாலைகளை வைக்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். உற்பத்திச் செலவு குறைவது என்பது இடத்திற்கு இடம் மாறுபடும் சூழ்நிலையில் இருக்கிறது. எல்லாப் பகுதிகளிலும் ஒரே விலை இருக்க வேண்டும், ஒரு பகுதியில் கூடுதலாக இருந்து இன்னொரு பகுதியில் குறைவாக இருந்தால் மக்களுக்கும் அதில் பாதிப்பு ஏற்படுகிறது, தொழிற்சாலைகளையும் நாட்டின் பொருளாதாரம் நல்ல முறையில் அமைவதற்கு ஏற்ற முறையில் நடத்தமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது என்பதற்காக ப்ரைஸ் பூல் ஸிஸ்டம் கொண்டு வரப்பட்டது. இதன் விளைவாக இந்தியா முழுவதும் ஒரே விலை இருக்கக்கூடிய சூழ்நிலையை நம்மால் உருவாக்க முடிகிறது.

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், எந்தத் தொழிற்சாலைக்கும் பாதகம் இல்லாமல் எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் சீராக நன்மை கிடைக்க வேண்டும். இப்பொழுதிருக்கின்ற

[திரு. செ. மாதவன்] [1969 ஆகஸ்ட் 21

நடைமுறையிலே நாம் அதைக் கொண்டுவந்திருக்கிறோம். ஒரு தொழிற்சாலை தன்னுடைய உற்பத்திச் செலவைவிட அதிகமான செலவு அவர்களுக்கு இருக்குமானால் இந்தக் கட்டுப்பாட்டின் அடிப்படையிலே அவர்கள் அந்த அதிகமான செலவைப் பெறுகிறார்கள். இன்னொரு தொழிற்சாலைக்குக் குறைவாக இருக்குமேயானால் அவர்கள் எந்த அளவுக்கு லாபம் அடைகிறார்களோ அதை இந்தக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையிலே மற்ற தொழிற்சாலைகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள். அதையெல்லாம் பங்கிடும் பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளுகிறது. ஆக, இந்தக் கட்டுப்பாடு இருக்குமானால் எந்தத் தொழிற்சாலையும் பாதகம் அடையாமல் இருப்பதற்கு வாய்ப்பிருக்கும் அடிப்படையிலேதான் இதை விரும்புகிறோம். ஆனால், மத்திய அரசு 70-ஆம் ஆண்டுக்குப் பிறகு எடுத்துவிட வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அதன் விளைவுகள் என்ன என்பதைப் பரிசீலிக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நன்றாகச் சொன்னார்கள். இப்படி எடுத்ததற்கான காரணங்கள் "எதைச் சொன்னாலும், எதைச் சொன்னாலும்" என்று தைரியமாகச் சொல்லியிருக்கிறார்கள், எந்தக் கருத்தைச் சொன்னாலும் அதை நாம் பொருட்படுத்தாமல் 'இதை வலியுறுத்த வேண்டுமென்று சொல்லியிருப்பது மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கிறது. காரணம், அவர்கள் சொல்லும் நேரத்தில், இந்தத் தொழிற்சாலை, அந்தத் தொழிற்சாலை என்று பார்த்து காரணம் சொல்லுகிறார்கள். வடநாட்டுத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் ஒரு விளைவு ஏற்படும், தென்னாட்டுத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் ஒரு விளைவு ஏற்படும் என்று அவர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். ஆனால், நம்மைப் பொறுத்தவரையில், வடநாட்டுத் தொழிற்சாலை, தென்னாட்டுத் தொழிற்சாலை என்று பாராமல் எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் நன்மை ஏற்பட வேண்டும், எல்லாப் பகுதி மக்களுக்கும், பொதுமக்களுக்கும் நன்மை ஏற்பட வேண்டுமென்பதை நாம் வலியுறுத்துகிறோம். அதனுடைய விளைவுகள் என்ன? அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல், தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யும் சிமெண்ட் 40 சதவிகிதம் நம் தேவைக்கு அதிகமாக இருக்கிறது. இதை வெளிநாடுகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் அனுப்ப வேண்டும். இப்படிப்பட்ட ஒரு நிலையை எடுத்துவிட்டால், அதனுடைய விளைவு என்னவாகும்? பற்றாக்குறை வடமாநிலங்களில் ஏற்படும். நாம் அங்கு கொண்டுபோய் விற்றால் போக்குவரத்துச் செலவையும் அதில் வைத்துத்தான் விற்க முடியும். விலை அதிகமாகத்தான் விற்க முடியும். இது அங்கேயுள்ள, வட நாட்டிலேயுள்ள சிமெண்ட் தொழிற்சாலைக்கு ருசிகரமான தகவலாக இருக்கும். அவர்கள் நம்முடைய தொழிற்சாலையோடு போட்டி போடக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். "நீ என்ன விலை கொடுக்கிறாய், அதற்கு 5 ரூபாய் குறைத்துக் கொடுப்பதற்கு கூடிய சக்தி எனக்கிருக்கிறது" என்று சொல்லக்கூடிய வாய்ப்பு வடநாட்டுத் தொழிற்சாலை அதிபர்களுக்குக் கிடைக்கும். அவர்கள் இவ்வாறு போட்டியிடும் சூழ்நிலை இருக்கிறது. அது மட்டு-



1969 ஆகஸ்ட் 21] [திரு. செ. மாதவன்]

மல்ல, வடநாட்டுத் தொழிற்சாலை உற்பத்தி செய்யும் சிமெண்டுக்கு ஒரு விலை நிர்ணயிக்கும் பொழுது, அவர்களுடைய உற்பத்திச் செலவு மிகமிகக் குறைவாயிருந்தாலும், அதற்குமேலே விற்கக் கூடிய சூழ்நிலை நமக்கு ஏற்பட்டுவிடக் கூடிய துர்ப்பாக்கியமான நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, அவர்களுடைய சிமெண்டுக்கும் விலையை எக்கச்சக்கமாக ஏற்றிக்கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது. முதலாளிகளும் லாபம் பெறுகிறார்கள், பொதுமக்களும் பாதிக்கப்படுகின்றார்கள். இது நியாயம்தானா? குரல் கொடுப்பது நாங்கள் மட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவரவர்களும் சேர்ந்து குரல் கொடுக்கிறார்கள். ஆகவே, டெல்லியிலுள்ள அரசு இதைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டுமென்பதில் தமிழ்நாட்டிலுள்ள எல்லோருக்கும் ஏகோபித்த எண்ணம் இருக்கிறது என்பதைத் தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தில் நடைபெறும் வாதம் டெல்லிக்கு எடுத்துக்காட்டும் என்று எனக்கு நல்ல நம்பிக்கையிருக்கிறது. இதுபற்றி நிச்சயமாக மத்திய அரசு முன் வரவேண்டுமென்று நாம் தெளிவாக உணர்த்துவதற்கு இது பயன்படும் என்று கருதுகிறேன். நம்மைப் பொறுத்தவரையில் நாம் வாதாடுவதெல்லாம், இன்னொரு கருத்தை அவர்கள் அழகாக எடுத்துச் சொன்னார்கள், நிலக்கரியைப் பொறுத்து. அதையும் இந்த அரசாங்கம் டெல்லி ஆட்சிக்கு தொடர்ந்து எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகிறது. நிலக்கரி மட்டுமல்ல, அவர்கள் சொல்லுகின்ற தத்துவம் எல்லாப் பொருள்களுக்கும் பொருத்தமாக இருக்கும். ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசுகிறோம். அவர்கள் அதைச் சொல்லவில்லை. அவர்கள் இருக்கும் இடம் சங்கடமான இடம். ஆகவே, நான் அதைச் சொல்லுகிறேன், ஒருமைப்பாடு வேண்டுமென்று கேட்ட கட்சி மத்திய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது, ஒரே நாடு என்று சொல்லக்கூடியவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். அவர்கள் இந்தத் தத்துவத்தைப் பார்த்தால், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்லக்கூடிய பொருளாதாரத் தத்துவம் மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கும். எந்தப் பொருள், எந்தப் பகுதியிலே அதிகமாக உற்பத்தி செய்தாலும், இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் குறைந்த விலையிலே அல்லது குறிப்பிட்ட விலையிலே கிடைக்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலே நம்முடைய திட்டங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று பொருளாதாரத் தத்துவத்தை அவர்கள் சொன்னார்கள், அது முற்றிலும் உண்மை. இன்று ஸ்டீலைப் பொறுத்தவரையில், ஸ்டீல் ப்ராடக்ட்டுக்கு இப்படிப்பட்ட ஒரு கட்டுத்திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இந்த சிமெண்டைப் பொறுத்தவரையில், 1970-ஆம் ஆண்டுவரை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இது இடைக்காலத் திட்டமாக இல்லாமல், எல்லாப் பொருள்களும் மக்களுக்கு ஒரே விலையிலே கிடைக்க வேண்டுமென்ற ஒரு நல்ல திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுமானால் இந்தப் பிரச்சினை எளிதாகத் தீர்க்கப்பட முடியும். நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நமக்குத் தேவையான நிலக்கரிப் பொருள்களையெல்லாம் வட பகுதி

யிலிருந்து கொண்டுவர வேண்டும். இதற்கான போக்குவரத்துச் செலவுகளைக் கொடுக்கிறோம். இதனால் நம்முடைய உற்பத்திச் செலவு அதிகமாகிறது. இதனால் உற்பத்தி செய்யும் பொருளின் விலையும் அதிகமாகிறது. ஆகவே, நம்முடைய பொருளுக்குச் சந்தை கிடைப்பது கஷ்டமாகயிருக்கிறது. இதை உணர்ந்து தான், பொருளாதாரம் சீரான முறையிலே இந்திய துணைக் கண்டத்திலே இருக்க வேண்டுமென்ற இந்த நல்ல கருத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு, எல்லா மக்களுக்கும், எல்லாப் பொருளும் ஒரே சீராகக் கிடைக்கக்கூடிய ஒரு திட்டத்தின் அடிப் படையில் கூறியதை நான் முற்றிலும் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

இரண்டு வழிகள் இருப்பதாக எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். ஒன்று, நாமே நேரடியாகக் கேட்டு விடுவது. இரண்டாவது, உற்பத்தி செய்யும் சிமெண்ட் எவ்வளவு ஆனாலும், நாமே செலவழிப்பது. இதைத் தொடங்கினார்களே தவிர, அதிலே அவர்களுக்கும் நம்பிக்கையில்லை, ஆகவே, கடைசியிலே கொஞ்சம் மாற்றி மெருகிட்டுச் சொன்னார்கள். அவர்கள் அவர்கள், நேற்று 10 மணிக்கு ஏற்பட்ட நிலையைக் கவனத்தில் சொன்னதைப்போல், 40 சதவிகிதத்தையும் சாலைகள் போடுவதற் கென்று, சில ஆலை அதிபர்கள் என்னிடம் சொன்னார்கள், நிச்சய மாக எதிர்க்கட்சித் தலைவரவர்களையும் சந்தித்திருப்பார்கள். நாமே எடுத்துக் கொண்டால், நம்முடைய நாட்டுப் பொருளாதார திட்டங்களுக்குப் பொருந்தாது என்று அவர்கள் கருதியதால் முற்றிலும் வலியுறுத்தாமல் விட்டுவிட்டார்கள். நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை மத்திய அரசிடம் வலியுறுத்துவதில் நாம் முனைந்து செயல்படுகிறோம்.

அண்மையில், பிரதம அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு நீண்ட கடிதம் நம்முடைய முதலமைச்சரவர்களுக்கு வந்திருக் கிறது. மீண்டும் இதைப்பற்றி வாதாடப்போகிறோம். அப்படியும் ஒரு முடியாத நிலை ஏற்பட்டால், நம்முடைய எதிர்க்கட்சித் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. தீர்மானத்தைக் கொடுத்த தலைவர்கள் முடியாது என்று கருத மாட்டார்கள், இன்னும் வைத்திருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். இப் பொழுதிருக்கும் சூழ்நிலை, டெல்லி அரசுக்கு என்ன சொன்னாலும் நடக்கக்கூடிய சூழ்நிலை உள்ளதை ஊகித்ததினால் இந்த தீர் மானத்தை வலியுறுத்திப் பேசியிருக்கலாம், அல்லது அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே நாம் கொண்டுவர வேண்டியிருக்கிறதே என்ற வருத்தத்தோடு கொண்டு வந்திருக்கலாம். ஆனால், இங்கே எதிர்க்கட்சியும், ஆளுங்கட்சியும் ஒன்றாகச் சேர்ந்திருக்கிறது, ஒரு தொழிலைப் பாது காப்பதற்காக என்பதில் நாம் மகிழ்ச்சி கொள்ளலாம். அவர் களால் முடிவெடுக்கப்படவில்லை. அப்படி மறுத்துவிட்டால் நாம் என்ன செய்வது ? தமிழ்நாட்டிற்கு உள்ளாக என்ன செய்வது ? தொழிலைப் பாதுகாப்பதற்கு என்ன செய்வது ? தமிழகத்திலிருக்கும் மிகுதியான சிமெண்ட் என்ன செய்வது ?





என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். ஆகவே, அதற்குள் அடுத்த கட்டத்திற்குப் போக வேண்டாமென்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருந்தால் சட்டமன்றத்திற்கும் நாங்கள் தகவல் தெரிவித்து, எப்படி நம்முடைய தமிழ்நாட்டில் சிமெண்ட் உற்பத்திக்கு நாம் பாதுகாப்பு கொடுப்பது என்பதை நிச்சயமாக நம்முடைய அரசு பரிசீலித்து ஒரு முடிவெடுக்கும் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் உறுதிகூற விரும்புகிறேன். இப்படிப்பட்ட ஒரு நல்ல செயலுக்காகத் தீர் மானத்தைக் கொடுத்திருப்பதற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இதைப்பற்றி அவர்களுடைய தத்துவத்தை அரசும் முற்றிலும் ஏற்றுக்கொள்கிறது என்பதால் இதை அவர்கள் வலியுறுத்தத் தேவை இல்லை. எனவே, இந்தத் தீர்மானத்தை அவர்கள் வலியுறுத்த மாட்டார்கள் என்ற நம்பிக் கையோடு, வலியுறுத்த வேண்டாமென்று அவர்களை வேண்டிக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகரவர்களே, நான் தீர்மானத்தைக் கொண்டுவந்தவன் என்ற ஒரு பொறுப்பிலே சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அமைச்சரவர்கள் இதைப் பாராட்டியதற்காக என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நாட்டின் நன்மைக் காக, மக்கள் நன்மைக்காக, நாட்டிலே தொழில்வளம் பெருகு வதற்காக இந்தத் திட்டத்தை, அது எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரியே, எந்தக்கட்சியாக இருந்தாலும் சரியே, அதற்கு ஆதரவு தருவது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு. அவர்கள் சொன்னார்கள் நேற்று 10 மணிக்குக் கொடுத்தார்கள் என்று 3, 4 நாட்களுக்கு முன்னாலேயே இதைக் கொடுத்தாகிவிட்டது. நேற்று இரவு 10½ மணியைப்பற்றியோ, 10 மணியைப் பற்றியோ எனக்கு அக்கறை கிடையாது. பிரச்சினை வந்துகொண்டிருக்கும், மக்கள் இருப்பார்கள், மக்கள் பிரதிநிதிகள் இருப்பார்கள். எனவே, யார் அங்கேயிருக்கிறார்கள் என்ற பிரச்சினையல்ல. யார் நல்லது செய்கிறார்களோ, ஒழுக்கத்துடன் இருக்கிறார்களோ, கட்டுப் பாட்டுடன் இருக்கிறார்களோ அவர்கள் பக்கம் மக்கள் சேர்ந்து கொண்டிருப்பார்கள். யார் ஒழுங்கை மீறுகிறார்களோ, யார் கட்டுப் பாட்டை மீறுகிறார்களோ, அவர்களுக்கு மக்களே தீர்ப்பும் கொடுத்து விடுவார்கள். அதைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நீங்கள் சொல்வது 'எங்களுக்குப் புரியவில்லை) புரியாமல் இருக்கலாம். அதேமாதிரி இந்த சிமெண்ட் கட்டுப்பாடும் சராசரியாக ஒழுங்காக இருக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நான் நன்றியறிதலைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். இப்படிப்பட்ட சமயத்தில் நல்ல காரியங்களைச் செய்வதற்கு தெளிவாக எங்களோடு ஒத்துழைக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், சம்பிரதாயப்படி இதை வலியுறுத்தி

வேண்டிய நிலை இல்லை. அப்பொழுது நான் அனுமதிக்கிறேன் என்று சொல்கிறார்களோ, இந்த விதத்திலே ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறார்களோ, அப்பொழுதே நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள். அதற்கு உறுதுணையாக எனக்கு இருக்கும்படியான தனிப்பட்ட செல்வாக்கையோ, அல்லது கட்சிக்கு இருக்கும்படியான செல்வாக்கையோ, அல்லது தனிப்பட்ட முறையிலோ, பயன்படுத்துகிறேன் என்று சொல்லிக் கொண்டு இந்த விஷயத்தை வற்புறுத்தவில்லை. இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டு அமர்கிறேன்.

தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதி யோடு திரும்பப் பெறப்படுகிறது.

### (iii) மாநில தன்னாட்சி பெற மத்திய அரசிடம் உள்ள அதிகாரங்களைப் பரவலாக்குதல்.

* **திரு. ம. பொ. சிவஞானம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை இந்த அவையில் முன்மொழிகிறேன் :---

"மாநிலங்கள் சுயாட்சி அந்தஸ்தை உடையனவாக இருக்கும் வகையில் அவற்றிற்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்கவும், மத்தியில் மேலும் மேலும் அதிகாரங்கள் குவிந்து கொண்டிருப்பதைத் தவிர்க்கவும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு ஆவன செய்யுமாறு மத்திய அரசினை வற்புறுத்தும்படி தமிழ்நாடு அரசுக்கு இப்பேரவை பரிந்துரை செய்கிறது".

**திரு. என். சங்கரய்யா :** நான் இத்தீர்மானத்தை வழிமொழி கிறேன்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** இப்பொழுது நம் நாட்டிலுள்ள அரசியல் சட்டத்தைப் பொதுவாக நாம் ஏற்றுக்கொண்டிருக் கிறோம். அந்த அரசியல் சட்டத்திற்கு விசுவாசப் பிரமாணம் எடுத்துத்தான் நான் இங்கே அங்கம் வகிக்கிறேன். ஆனாலும், அந்த அரசியல் சட்டத்திலேயே ஒரு விதி இருக்கிறது. அதன்படி, காலமாறுதலுக்கேற்ப, அரசியல் சட்டத்தை மாற்றுமாறு கோரலாம், மாற்றவும் செய்யலாம். அந்த விதியின்படிதான் இந்தத் தீர்மானத்தை இந்த அவையின் முன்பு கொண்டு வருகிறேன்.

நம் நாட்டிலுள்ள அரசியல் சட்டம் ரொம்ப விசித்திரமானது. அது, மூன்று அதிகாரப் பட்டியல்களைக் கொண்டிருக்கிறது. ஒரு பட்டியல், 'சென்ட்ரல் லிஸ்ட்' மத்திய அரசினுடையது. அந்தப் பட்டியலிலுள்ள எந்த அதிகாரத்தையும் மாநில அரசு கோரிப் பெற முடியாது.





இரண்டாவதாக, மாநிலத்திற்கென்று ஒரு பட்டியல் இருக்கிறது. அந்தப் பட்டியலில் உள்ள அதிகாரங்கள் பொதுவாக மாநிலத்திற்கே உரியவை என்றாலும், மத்திய அரசு விரும்பினால், இராஜ்ய சபை மூலம் அந்த அதிகாரங்களில் எதையும் பறித்துக் கொள்ளலாம். இராஜ்ய மந்திரிசபை மீது மத்திய அரசுக்கு அவநம்பிக்கை ஏற்படுமானால், "சட்டம் ஸ்தம்பித்துவிட்டது" என்று சொல்லி அனைத்து அதிகாரங்கள் மீதும் ஆதிக்கம் செலுத்த —ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வரலாம்.

மூன்றாவதாக, மத்திய அரசுக்கும் மாநிலத்திற்குமான பொதுப் பட்டியல் ஒன்றும் இருக்கிறது, 'கன்கரன்ட் லிஸ்ட்' என்று. ஆனால், அந்தப் பட்டியலிலே சுப்ரீம் பவர், மத்திய அரசுக்கேயொழிய, மாநில அரசுக்கு இல்லை என்று அரசியல் சட்டம் தெளிவாகக் கூறுகிறது. பொதுவாகப் பார்த்தால், அதிகாரங்கள் எல்லாம் மத்திய அரசுக்குத்தான். அது நல்லெண்ணம் காட்டி விட்டுக் கொடுப்பதை, விட்டுக் கொடுக்கின்ற காலம்வரை, மாநில அரசு வைத்துக் கொள்ளலாம். இப்படி ஒரு அரசியல் சட்டம் சமஷ்டி நாடு எதிலும் இல்லை, இதனை சமஷ்டி நாடுகளின் அரசியலமைப்புகளை ஆராய்ந்து பார்த்தே சொல்லுகிறேன்.

கதை ஒன்று சொல்கிறேன். தென்னை மரம் ஏறத் தெரியாத ஒருவன், மரம் ஏறத் தெரிந்தவனைக் கூப்பிட்டு, தன் மரத்தில் ஏறித் தேங்காய் பறிக்கச் சொன்னான். "மரம் ஏறிய உனக்கு 2, மரத்தின் சொந்தக்காரனான எனக்கு 2, ஆக 4 காய் பறி" என்று சொன்னானாம். மரம் ஏறியவன் தேங்காயைப் பறித்துக்கொண்டு கீழே இறங்கி, "ஏறியதற்கு ஒன்று, இறங்கியதற்கு ஒன்று, நீயாகக் கொடுக்கிறேன் என்று சொன்னது ஒன்று, நானாக எடுத்துக் கொண்டது ஒன்று" என்று சொல்லி நான்கையும் எடுத்துக்கொண்டு போய்விட்டானாம். அதைப்போல், மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் அதற்கே. மாநில அரசுக்குக் கொடுத்ததையும் விரும்பினால் எடுத்துக் கொள்ளக்கூடிய அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு. இரண்டு பேருக்கும் பொதுவான அதிகாரங்களிலே, முடிவான அதிகாரம் மத்திய அரசுக்கே. இந்த அரசியல் அமைப்பு முறை சமஷ்டி முறைக்கே மாறுபட்டதாக இருப்பதைப் பார்க்கிறோம். வேறு எந்த நாட்டிலும், 'கன்கரன்ட் லிஸ்டி'-லே, இவ்வளவு அதிகாரங்களைக் குவித்து வைத்து இவர்களுக்குத்தான், சமஷ்டிக்குத்தான் முடிவான அதிகாரம் என்று வைக்கவில்லை.

அரசியல் சட்டம் ஒரு பக்கம் இருக்கட்டும். நடைமுறையில் பார்த்தால் திட்டக் கமிஷன் ஒன்று இருக்கிறது. திட்டக் கமிஷன் வந்த பிறகு இராஜ்யங்களுக்கு உள்ள அதிகாரங்கள் எல்லாவற்றிலும் தலையிடக்கூடிய ஒரு போட்டி அரசாங்கமாகவே அது இருக்கிறது. பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், இந்தத் திட்டக் கமிஷனைப் பற்றி, "நான் எதிர்பார்க்காத அளவுக்கு இது போட்டி அரசாங்கத்தைப்போல வளர்ந்து தொலைத்து விட்டது" என்று

[திரு. ம. பொ. சிவஞானம்] [1969 ஆகஸ்ட் 21

மிக வருத்தத்தோடு சொல்லிவிட்டார். திட்டக் கமிஷன் கல்வித் துறையிலே தலையிடலாம், விவசாயத்திலே தலையிடலாம், அது இடுகின்ற ஆணைகளை மாநில அரசானது ஏற்றுக்கொள்ள வேண்டிய சந்தர்ப்ப-சூழ்நிலை இருக்கிறது. கல்வித் துறை மாநிலங்களுக்கே உரியது என்று சொல்லப்பட்டாலும் பல்கலைக் கழக மானியக் குழு என்று ஒன்று இருக்கிறது. கொஞ்சம் பணத்தைக் காட்டி, மாநிலங்களிடத்திலிருந்து கல்வி நிலையங்களையே அது எடுத்துக் கொள்ளலாம்.

தொழில் அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்கள் தினத் தந்தியிலே கல்வித்துறையைப்பற்றி, அவர்கள் சில திங்கள் அந்தத் துறையை நிர்வகித்த அனுபவத்தைப்பற்றி, எழுதினார்கள். எப்படி எல்லாம் சுற்றி வளைத்து, இராஜ்யத்தின் கல்வித் துறையிலே பல்கலைக் கழக மானியக் குழு மொத்தல் போட முயல்கிறது என்பதை எடுத்துச் சொன்னபோது, "மிகுந்த வேதனையோடு" என்ற வார்த்தையை நிறையக் கையாண்டிருந்தார்கள். சொற்ப நாட்களே அந்தத் துறையிலே அனுபவம் பெற்ற அவர்கள், எவ்வளவு வேதனையை அனுபவித்து இருக்கிறார்கள்! இந்த இலட்சணத்தில் கல்வித் துறை முழுவதும் மாநிலத்திற்கே உரியது என்று அரசியல் சட்டத்தில் இருக்கிறது.

இங்கு இந்தி போதனை வேண்டாமென்று நாம் முடிவு செய்திருக்கிறோம். ஆனால் பல்கலைக் கழக மானியக் குழுவின் மூலம் இங்கு இந்தியைக் கொண்டு வருகிறது மத்திய அரசு. ஏன், இந்தி பல்கலைக் கழகத்தைக்கூட துவக்க முன்வருகிறது. ஆக, ஜனநாயகத்தைப் பறிக்கக்கூடிய அளவுக்குப் பல்கலைக் கழகமும், திட்டக் கமிஷனும் செயல்படுவதைப் பார்க்கிறோம். மொத்தத்தில் நடைமுறையில் அரசியல் சட்டம் கொடுக்கிற அதிகாரங்களைக் கூட மாநிலங்கள் அனுபவிக்க முடியாமல் பல்கலைக் கழக மானியக் குழுவும் திட்டக் கமிஷனும் இயங்குகின்றன.

இன்னொரு கட்டுப்பாடு அரசியல் சட்டம் கொடுக்கும் அதிகாரத்தைத் தணிக்கை செய்கிறது. அது கட்சிக் கட்டுப்பாடு. இந்த மாநிலத்திலேயே பார்க்கும்போது, மத்தியிலுள்ள ஆளுங் கட்சிதான் இங்கும் ஆளும் கட்சி என்றால், மத்தியிலே உள்ள கட்சியினுடைய மேலிடம், இங்குள்ள ஆளுவோரைக் கூப்பிட்டு, "இதை இப்பொழுது அமல்படுத்தாதே, இதை இப்பொழுது விரும்பாதே" என்று ஆணையிடுகிறது. அரசியல் சட்டம் அனுமதி கொடுத்தாலும்—அரசியல் சட்டம் மாநிலத்திற்கே உரிமை அளித்தாலும்—கட்சிக் கட்டுப்பாடு, மேலிடத்தின் உத்திரவு, அந்த உரிமைகளை அனுபவிக்க முடியாமல் தடையாக இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, மாநிலங்களுக்குரிய அதிகாரங்கள் இன்னின்ன என்பதைத் தெளிவுபடுத்தும் பிரச்சினையை மீண்டும் புனராலோசனை செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது என்று இந்தத் தீர்மானத்தின்மூலம் கூற விரும்புகிறேன்.



1969 ஆகஸ்ட் 21] [திரு. ம. பொ. சிவஞானம்]

அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்து 19 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த 19 ஆண்டு அனுபவத்தை வைத்துப் பார்த்தாலும்கூட, மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமான அதிகாரப் பங்கீடுபற்றிய சட்ட விதிகளை மீண்டும் புனராலோசனை செய்யவேண்டுமென்பதை எந்தக் கட்சியும்—என்னோடு வேறுபாடு உள்ள கட்சிகூட—ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது தெரிகிறது. எல்லா மாநிலங்களிலும் 20 ஆண்டுகள் ஒரே கட்சி அதிகாரத்தில் இருந்தபொழுது இந்தக் குறைபாடுகள் வெளியில் தெரியவில்லை, தெரியாமல் மறைக்கப்பட்டு வந்தன. ஆனால், அநேக மாநிலங்களில், வெவ்வேறு கட்சிகள் ஆள வந்துவிட்டன. அதனதன் சுதந்திரத்தை எடுத்துக்காட்டி, அனுபவித்தபிறகு, இந்த அரசியல் சட்டத்தில் உள்ள குறைபாடுகள், கோணல்கள் வெளிப்படுத்தப்பட்ட காரணத்தால், அரசியல் சட்டத்தையே மாற்ற வேண்டிய, அரசியல் அமைப்புபற்றிப் புனராலோசனை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

ஒரு சம்பவத்தைக் கூற விரும்புகிறேன். கேரளத்து முதல் அமைச்சர் ஒரு கருத்தைச் சொன்னார். அவர், "அரசியல் சட்டத்தை உடைக்கிறேன்" என்றோ, அல்லது "அரசியல் சட்டத்தைத் திருத்துகிறேன்" என்றோ, பத்திரிகைச் செய்தியே விவாதத்திற்குரியதாகிவிட்டது. அவர், "திருத்தந்தான் கோருகிறேன்" என்று சொன்னார். ஆனால், மத்தியினுடைய உள்துறை அமைச்சர், அழைப்பு விட்டு "வா" என்று கூப்பிட்டிருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்குக் குற்றவாளியைக் கூப்பிடுகிற மாதிரி, "டெல்லிக்கு வா" என அழைக்கிறார். அப்படிக் கூப்பிடுகிற முறையிலே டெல்லி உள்துறை அமைச்சகத்திற்கு அதிகாரம் இருக்கிறது. அரசியல் போக்கை மீறுகிற அரசாக அது இருக்கிறது.

தி. மு. கழகம் மக்களிடத்திலே மிகுந்த செல்வாக்குக் கொண்டுள்ளது. அதனை, அதற்கு ஏற்பட்ட பல சோதனைகளிலே கூட, அது உறுதிப்படுத்தி வந்திருக்கிறது. அத்தனை உபதேர்தல்களிலும் வெற்றி கண்டிருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் இத்தனை துணைத் தேர்தல்கள் அந்தந்த மாநிலத்தைச் சோதிக்கவில்லை. புதுப்புதுத் தேர்தல்கள் மேலும் மேலும் வருகின்றன.

இவ்வளவு செல்வாக்கை அது மக்களிடம் பெற்றிருக்கக் காரணம், ஏற்கனவே ஒரு கட்சி ஆட்சியிலிருந்தபொழுது இருந்த நிலையை மாற்ற முயல்வதுதான். மத்தியிலுள்ள ஆட்சிக்கு மாநில ஆட்சி அடங்கிச் சென்ற காலம் போய்விட்டது. மாநில மக்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கத்தக்க வகையில்—தவறுகள் இருந்தால் சுட்டிக்காட்டி—இந்த மாநிலத்தின் தனித் தன்மைக்கு, மாநிலத்தின் தனிப் பழக்கவழக்கத்திற்கு, மாநிலத்தின் தனிப் பாரம்பரியத்திற்கு, மாநிலத்தின் தனி வரலாறு உள்ளது என்பதற்கு மதிப்புக் கொடுக்க மத்திய அரசு தவறுகிறது. இதனால் வெறுப்பு அடைந்து, அதிருப்தி அடைந்து,

[திரு. ம. பொ. சிவஞானம்] [1969 ஆகஸ்ட் 21

அத்தகைய மனப்போக்கை மக்கள் அடைந்திருக்கிறார்கள். ஆகவே, தி. மு. கழகம்தான் நினைத்ததைச் செய்யும்; காங்கிரஸ் அல்லாத கட்சிகள் தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றும்; தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் என்ன எல்லாம் தங்களுக்குக் கிடைக்கும் என்று ஆசைப்பட்ட மக்கள் ஒன்றைக் தெரிந்து கொண்டார்கள். காங்கிரஸ் அல்லாத கட்சிகளை அரசாட்சியில் அமர்த்திப்பார்த்த பிறகு, ஒரு காங்கிரஸ் அல்லாத கட்சி மக்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்ற நல் எண்ணத்தோடு ஒன்றை நிறைவேற்ற நினைத்தால், அப்படி நிறைவேற்றப்பட அரசியல் சட்டம் முட்டுக்கட்டையாக இருக்கிறது என்பதை அறிந்துகொண்டார்கள். அரசியல் சட்டத்தைத் திருத்தி,—என்னுடைய சொந்த அபிப்பிராயத்தை நான் சொல்கிறேன், நான் சார்ந்திருக்கிற தமிழரசுக் கழகத்தின் சார்பாகச் சொல்கிறேன்—மத்தியில் போக்குவரத்து, அயல்நாட்டு உறவு, பாதுகாப்பு ஆகிய மூன்று அதிகாரங்களைமட்டும் வைத்து, மற்றவைகளையெல்லாம் மாநிலங்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்பது என் கொள்கை. ஆனால், நான் கொடுத்துள்ள தீர்மானத்தில் அப்படி வரையறுத்துச் சொல்லவில்லை. அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டிய அவசியம் இருக்கிறது; அதிகாரப் பங்கீட்டுப் பட்டியல்களை மாற்றி அமைக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது என்ற அளவுக்குப் பொதுப்படையாக இந்த மன்றம் ஒப்புக்கொண்டு, இந்த தீர்மானத்தை நிறைவேற்றி, தமிழக ஆட்சியினுடைய கருத்தைப் பலப்படுத்தி, மத்தியத்திற்கு அனுப்பினால் போதும், விவரங்களைப் பிறகு நடைமுறைக்கு வரும் போது பார்த்துக்கொள்ள விட்டுவிடலாம் என்ற எண்ணத்தால் தான் இந்தத் தீர்மானத்தில் விவரங்களைச் சொல்லாமல் விட்டு விட்டேன்.

முடிப்பதற்கு முன்பு ஒன்று சொல்கிறேன். நீண்ட நெடுங் காலமாக வாழ்ந்து, அனுபவித்து நான் தெரிந்துகொண்டதைச் சொல்கிறேன். காங்கிரஸில் 28 ஆண்டுக்காலம் இருந்து, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கலந்துகொண்டு எந்தெந்தக் காலத்தில், காங்கிரசிலே எப்படிப்பட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டிருக்கின்றன; எந்தத் தீர்மானம் எந்த உணர்ச்சியின் பின்னணியிலே நிறைவேற்றப்பட்டது என்பதெல்லாம் எனக்குத் தெரியும். திரிபுரா காங்கிரசிலும், ஹரிபுரா காங்கிரசிலும் நிறை வேற்றப்பட்ட தீர்மானம், பாதுகாப்பு—போக்குவரத்து—அயல் நாட்டு உறவு இந்த மூன்று அதிகாரங்களையும் மத்தியத்திற்கு விட்டுவிட்டு, மற்றவையெல்லாம் உடைய மாநில அரசுகள் சுதந்திர இந்தியாவில் அமையும் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறது. அந்தக் காங்கிரஸ் மகாநாடுகளில் தலைமை வகித்த நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் தலைமை உரையிலும் அவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, தேர்தல் பிரகடனங்களில் மாகாண சுயாட்சிக் கொள்கையைக் காங்கிரஸ் வற்புறுத்தியிருக்கிறது.



1969 ஆகஸ்ட் 21] [திரு. ம. பொ. சிவஞானம்]

இன்னும் பின்னே சென்றால், 1935-வது ஆண்டுச் சட்டத்தைக் காங்கிரஸ் நிராகரித்ததற்கான காரணம், மாநிலங்களுக்குப் போதிய சுயாட்சி வழங்கப்படவில்லை என்பதுதான். 1946-வது வருஷத்தில் வெளியான பிரிட்டிஷ் மந்திரி சபைத் திட்டத்தில் இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுத்தபொழுது இந்த மூன்று அதிகாரங்களும் மத்தியத்திற்கும், மற்றவைகளெல்லாம் மாநிலங் களுக்கும் என்று சொல்லப்பட்டது. இந்த மூன்று அதிகாரங்களி லிருந்து கிடைக்கின்ற நிதி வசதி மத்திய அரசுக்குப் போதுமா என்ற வினா எழுந்த நேரத்தில், ஒரு விதியைப் புகுத்தியிருக் கிறார்கள். அது, மத்திய அரசுக்கு வருவாய் போதாது என்றால், மாநிலங்களிலிருந்து மானியம் பெறலாம் என்பதாகும். இதை யெல்லாம் முழுமுழுப்பு இல்லாமல் ஏற்றுக் கொண்டு, இந்திய தேசியக் காங்கிரஸ் இந்திய சுதந்திரத்தை ஆகஸ்டு, 15-ம் தேதி பிரகடனம் செய்தது. இந்தத் திட்டத்தின் அடிப்படையில்தான் அரசியல் நிர்ணய மன்றம் அமைக்கப்பட்டது. அரசியல் நிர்ணய மன்றத்தில் முதல் நாள் கூட்டத்தில் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவில், "இந்த மூன்று அதிகாரங்கள் மத்தியத்திற்கு வழங்கி, மற்றைய அதிகாரங்களை யெல்லாம் உடைய சுயாட்சி மாநிலங்களைக்கொண்ட சுதந்திர இந்தியா உலகத்திற்கு ஒரு முன்னோடி; இந்த உலகத்திற்கு ஒரு வழிகாட்டி என்று நான் பெருமைப்படுகிறேன்" என்று பேசினார். ஆனால், பிற்கால நடைமுறையில் என்னென்னவோ நிகழ்ந்து, எல்லாம் தலைகுப்புறக் கவிழ்ந்துவிட்டதைப் பார்க்கிறோம்.

அரசியல் நுணுக்கங்கள் ஒரு புறம் இருக்கட்டும். நிர்வாக அடிப்படையில் இந்தப் பிரச்னையை அணுகினால், இங்கு ஒரு கல்வித் துறை, அங்கு ஒரு கல்வித் துறை. முழுப்பொறுப்பையும் ஏற்று உழைத்து வருகிற மாநில சர்க்காரிடம் ஒரு கல்வித் துறை இருக்கிறது. பொது மக்களுக்கு முழுக்க முழுக்க உதவுகிற அங்கே மத்தியத்திலும் ஒரு கல்வித் துறை இருக்கிறது. போலீஸ், சுகாதாரத் துறைகள் இங்கும் இருக்கின்றன, அங்கும் இருக்கின்றன. முழு அளவுக்குப் பொறுப்பேற்று நடத்துகிற மாநில சர்க்காரிடத்தில் ஒரு பொதுச் சுகாதாரத் துறை இருக்கிறது. இங்கு மத்தியத்திலும் ஒரு பொது சுகாதாரத் துறை இருக்கிறது. இந்த போலீஸ் ஒரு போலீஸ் துறை. அங்கு ஒரு போலீஸ் துறை. இந்த போலீஸ் அமைச்சரை நம்பாமல், அங்கு ஒரு போலீஸ் துறை எதற்கு? நம்முடைய மதிப்பிற்குரிய சவான் அவர்கள் மகாராஷ்டிர முதலமைச்சராக இருந்தபோது அவரைச் சந்தேகித்தது மத்திய உள்துறை. அவரே மத்திய உள்துறை அமைச்சராகிவிட்டபின் மாகாண உள்துறை அமைச்சரை அவர் சந்தேகிக்கிறார். மாநிலத்தில் உள்துறை அமைச்சராக இருப்பவரிடம் மத்திய உள்துறைக்கு ஐயப்பாடு இருப்பதால், அங்கே மத்தியில் ஒரு போலீஸ்துறை அவசியமாகிறது.

[திரு. ம. பொ. சிவஞானம்] [1969 ஆகஸ்ட் 21

மாநிலத்திற்கு ஆளுநராக உள்ளவர், அந்த மாநிலத்தைச் சேராதவராக இருக்கவேண்டும் என்ற மரபு உள்ளது. அரசியல் சட்டம் அப்படிச் சொல்லவில்லை. அரசியல் சட்டப்படித் தமிழகத்து ஆளுநர் தமிழராக இருக்கக்கூடாது என்பது இல்லை. வங்காளத்தில் ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. கேரளத்தில் ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. சுதந்திரம் பெற்று 23 ஆண்டுகள் சென்றும், தமிழ் நாட்டில் தமிழ் மகன் ஒருவர் ஆளுநராக இருந்த தில்லை. ஏதோ ஒரு ஐயப்பாட்டின் அடிப்படையில் இப்படிப்பட்ட ஒரு மரபு இருக்கிறதேதவிர, அரசியல் சட்டம் அப்படி வற்புறுத்தவே இல்லை.

வலிமை வாய்ந்த மத்திய சர்க்கார் வேண்டும் என்று சொல்கிற தேச பக்தர்களோடு நான் இரண்டறக் கலந்து கொள்கிறேன். இந்திய ஒருமைப்பாடு காக்கப்படவேண்டும் என்பவர்களோடு உணர்ச்சிப் பூர்வமாக நான் ஒன்றுபடுகிறேன். ஆனால், வலிமை உள்ள சர்க்கார் வேண்டும் என்பதற்காக, சுகாதாரத்தையும், கல்வியையும் ஏன் மத்தியிலும் வைத்துக்கொள்ளவேண்டும் ? யாருக்கு எதிராக மத்தியில் வலிமை வாய்ந்த சர்க்கார் ? மாநிலங்களுக்கு எதிராக மத்தியத்தில் வலிமை வாய்ந்த சர்க்கார் இருக்க வேண்டும் என்று சொல்வது, மக்களுடைய தேச பக்தியையே சந்தேகிப்பது ஆகும். மத்திய சர்க்கார் மாநில சர்க்கார்களிடம் சந்தேகத்தை 20 ஆண்டுகளாக வளர்த்துவந்த விளைவுதான் நேற்றிரவு 10½ மணிக்குத் தெரிந்த முடிவு. அந்த முடிவு நம்மிடையே நல்ல மாறுதலை ஏற்படுத்த வேண்டும், வெற்றி வெறியோடு நான் சொல்லவில்லை, விரோத உணர்ச்சியோடு நான் சொல்லவில்லை. நேற்றிரவு 10½ மணிக்கு அறிவிக்கப்பட்ட முடிவு, வோட்டுகள் எப்படிப் பிரிந்துள்ளன, மாகாணங்கள் எப்படிக் காங்கிரஸ் கையைவிட்டுப் போய்க் கொண்டிருக்கின்றன என்பதை உணர்த்துகிறது. வெற்றி, நான் வோட்டுப் போட்ட பக்கம் என்று இருந்தாலும்கூட, கவலை இருக்கிறது. அது பகைமையில் போகக் கூடாது. உறவில் முடிய வேண்டும். அந்த உறவை வளர்க்க, அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்பதைத்தவிர, வேறு வழி ஒன்றும் தெரியவில்லை. இனியும் இந்தத் தீர்மானத்தின் மீது நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. விவாதத்தின் முடிவில் ஏதேனும் சொல்ல வேண்டுமானால் சொல்லுகிறேன் என்று கூறி, இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர். யாருக்கு வோட்டுப் போட்டார்கள் என்பதை ஸீக்ரெட்டாக வைத்துக்கொள்ள வேண்டும். அந்த ஸீக்ரஸியை வெளிப்படுத்தக் கூடாது. யாருக்கு வோட்டுப் போட்டார் என்ற ஸீக்ரஸியை அவர் வெளியே சொல்லிவிட்டார். ஆகவே, அவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.



1969 ஆகஸ்ட் 21]

**திரு. ம. பொ. சிவஞானம் :** நான் யாருக்கு வோட்டுப் போட்டேன் என்பதை அந்த ஸீக்ரஸியைப் பிறர் வெளிப்படுத்தக் கூடாது. ஆனால், நான் வெளிப்படுத்தலாம், அதில் தவறு இல்லை என்றுதான் நான் சொல்கிறேன். நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இது ஒருமைப்பாட்டு முயற்சிக்குக் கேடானது என்றால், அதை அவர் எடுத்துச் சொல்லலாம். இதில் என்ன கேடு வந்துவிடும் ? சுகாதாரத்தை, கல்வியை மாநிலங்களுக்கே விடுவதினால் இந்தி யாவில் பலம் வாய்ந்த சர்க்கார் மத்தியில் இருக்காதா ? நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் ஒன்றை திரு. ஹனுமந்தையா தலைமையில் மத்திய சர்க்கார் நியமித்தது. அந்தக் கமிஷனும் சிபார்சு செய் திருக்கிறது, "அதிகாரப் பங்கீட்டு முறைகள் மாற வேண்டும்" என்று. நிதி வசதி கூடுதலாகக் கிடைக்கும் அளவுக்கு மாநிலங் களுக்கு உரிமை கொடுக்க வேண்டும். திட்டங்களை நிறைவேற்ற மாநிலங்களுக்கு சுதந்திரம் தரவேண்டும், மாநிலக் கவுன்சில் ஒன்று வேண்டும் என்றெல்லாம் நிர்வாக சீர்திருத்தக் கமிஷன் சிபார்சு செய்துள்ளது. காங்கிரசின் கையிலுள்ள மத்திய அரசு நியமித்த நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷனே இப்படிச் சிபார்சு செய்துள்ளது. எதிர்க்கட்சித் காங்கிரஸ் தலைவர்கள்கூட மறுக்கமாட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒருவேளை என்னைப் பிடிக்கவில்லை என்றால், நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் செய்துள்ள சிபார்சுகளின் பிடித்தத்தின் பேரிலாவது இந்தத் தீர்மானத்தை அவர் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஸீக்ரஸி என்பது மனதில் இருக்க வேண்டும். தான்கூட அதை வெளியில் சொல்லக்கூடாது. ஒரு வேளை இவருடைய ஸ்டேட் அடானமியில் அப்படி ஸீக்ரஸியை வெளியிலே சொல்லலாம் என்று ஏற்படுமோ என்னவோ எனக்குத் தெரியாது. ஸீக்ரஸி என்பது தன் மனதிற்குள்ளேயே இருக்க வேண்டும், தானும் வெளியில் சொல்லக்கூடாது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** என்னைப்பற்றிச் சொல்வதால் திரும்பவும் விளக்கம் கூறுகிறேன். வோட்டுப் போடுவது முடிந்து எண்ணிக்கையெல்லாம் வெளிவந்துவிட்டது. வோட்டுப் போட்ட மாநிலங்கள் எவை என்பது வெளியே வந்துவிட்டது. மாநிலங்கள் எவை என்ற ஸீக்ரஸி வெளியே வந்திருக்கும்பொழுது, நான் வோட்டுப் போட்ட ஸீக்ரஸி வெளியே வந்ததினால் ஒன்றுமில்லை. இதெல்லாம் முடிந்துபோன விஷயம், மக்கள் பேசவேண்டிய விஷயம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எவ்வளவு வோட்டுகள் என்ற நம்பர் வெளியாகலாம். தான் இப்படித்தான் வோட்டுப் போட்டார் என்று ஐடெண்டிபிகேஷனை வெளிப்படுத்தக்கூடாது.

[1969 ஆகஸ்ட் 21

திரு. சா. மெய்யப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ம. பொ. சிவஞானம் ஐயா அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானத்தை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். "மாநிலங்கள் சுயாட்சி அந்தஸ்தை உடையனவாக இருக்கும் வகையில் அவற்றிற்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்கவும், மத்தியில் மேலும், மேலும் அதிகாரங்கள் குவிந்து கொண்டிருப்பதைத் தவிர்க்கவும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு ஆவன செய்யுமாறு மத்திய அரசினை வற்புறுத்தும்படி" அவர்கள் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். முன்காலத்தில் அரசர்கள் ஆண்ட செய்தியை நாம் அத்தனை பேர்களும் அறிவோம். இப்பொழுதுகூட நாம் நிர்வாகத்தைக் கோபுரத்திற்கு ஒப்பிட்டுப் பேசுகிறோம். முன் காலத்தில் அரசர் ஆண்ட செய்தியைப் பார்த்தால், ஒரு சக்கரவர்த்தி இருப்பார், அரசர்கள் இருப்பார்கள், அதற்குக் கீழாகப் பல சமஸ்தானங்கள் இருக்கும். அதற்குக் கீழாகப் பல ஜமீன்தார்கள் இருப்பார்கள். அதற்குக் கீழாக இன்னும் எத்தனையோ பேர்கள் இருப்பார்கள். அவர்களுக்குக் கீழாக பேஷ்கார்கள், கர்ணங்கள் மற்றும் தலையாரிகள், வெட்டியான்கள் முதலியோர்கள் இருப்பார்கள். இப்படி இருந்துகொண்டு, முதலிலே சக்கரவர்த்தி தன் கையிலேயே எல்லா அதிகாரங்களையும் வைத்துக் கொண்டிருப்பார். இன்றைக்குத் தண்ணீர் என்பதற்குப் பதிலாக பானி என்று வரவேண்டும் என்ற நோக்கத்தில்தான் நிர்வாகமும் நடந்துகொண்டு இருக்கிறது. அந்த அளவில்தான் நமது அரசியல் அமைப்பும் இருக்கிறது. அங்கேயிருந்து கொண்டு அவர்கள் முக்கியமான அதிகாரங்களை அவர்கள் வைத்துக் கொள்ளவேண்டும். முக்கியமான அதிகாரங்களில் ஒரு சில அதிகாரங்களைமட்டும், மாநிலங்களுக்கு வழங்க வேண்டும் என்றிருக்கிறது. அது எப்படியிருக்கிறது என்றால், சத்திர நிர்வாகத்தையும், மட நிர்வாகத்தையும் போன்று, நமக்கு அதிகாரங்களை வழங்கவேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். மக்கள் நம்மைக் கேட்கிறார்கள். அவர்கள் கேட்கிறார்கள் என்ன, இந்த இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமே என்று அப்பொழுது நாம் சொல்லுகிறோம், செய்வது நாங்கள் இல்லை, நாம் நம்முடைய பேரரசுக்குச் சொல்ல வேண்டும் என்று இருக்கிறது. பேரரசு திட்டம் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அவர்கள் தொகைகள் கொடுக்க வேண்டும். அதன் பின்புதான் மாநில அரசு எதையும் செய்யமுடியும் என்றிருக்கிறது என்பதைச் சொல்லுகிறோம். அவர்களிடம் 'ரெசிடுவரி பவர்ஸ்' என்ற முறையில், எல்லாவற்றையும், எல்லா அதிகாரங்களையும் தங்கள் கையில் குவித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதிகாரங்களைக் குவித்து வைத்துக் கொள்ள, வைத்துக் கொள்ள, நிர்வாகத் திறமை குறைபடுகிறது. இதை உணர்ந்திருந்தால் அதிகாரங்களைக் குவித்து வைத்துக் கொள்ள மாட்டார்கள். நிர்வாகத் திறமை குறைந்துவிடும் என்பதை உணர்ந்து பரவலாக அதிகாரங்கள்



1969 ஆகஸ்ட் 21] [திரு. சா. மெய்யப்பன்]

இருந்தால் அது இந்தியப் பேரரசுக்கே நல்லது என்றிருந்தால் நாம் அந்தப் பேரரசுக்கு நன்றி செலுத்துவோம். கோபுரத்திற்கு ஒப்பிட்டுப் பேசினால், உச்சியில் ஒரு பாகம் எங்கிருந்து பார்த்தாலும் தெரிகிறது. அப்படி அதிகாரம் இருக்கிறது. எங்கிருந்து பார்த்தாலும் உச்சி தெரிகிறது. ஆனாலும் உச்சியைத் தாங்கிக் கொண்டு இருப்பது அடித்தளம்தான். ஆக, அடித்தளத்தில்தான் அதிகாரங்கள் இருக்கவேண்டும். அதுதான் பலமாக இருக்க வேண்டும் என்ற ஒரு கொள்கையை மத்திய சர்க்கார் வைத்துக் கொண்டிருந்தால், மாநிலங்களுக்கு அப்படி முன் இடம் தந்தால், கொடி கட்டியிருக்கும் கோபுரம் உலகத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கும்.

ஆகவே, ம.பொ.சி. ஐயா கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானத்தில், 'சுயாட்சி அந்தஸ்தை' என்பதைமட்டும் மாற்றியமைத்து, அந்தத் தன்மை கிடைக்கும் அளவிற்கு இருக்க வேண்டும் என்று கருதுகிறேன். மத்திய சர்க்கார் வைத்துக் கொள்வது, போக்குவரத்து, அயல் நாட்டுறவு, ராணுவம், இந்த அதிகாரங்களை அவர்கள் கண்டிப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். உலகத்திற்கு யுனைடெட் நேஷன்ஸ் போல, மத்திய சர்க்கார் தன்னைக் கருதிக்கொண்டு, பரவலாக அதிகாரங்களை மற்ற மாநிலங்களுக்குக் கொடுத்து, ஊக்கமளித்தால், நலமாக இருக்கும். அந்த நிலை நமக்கு வரவேண்டும் என்றால், நம்முடைய அரசியல் சட்டத்தைத் திருத்தியே ஆகவேண்டும். அரசியல் நிர்ணயச் சட்டம் ஆரம்பிக்கும்போதே, முதல் பாராவிலேயே,

**The States and the territories thereof shall be as specified in the First Schedule** என்று போட்டுவிட்டு,

**The territory of India shall comprise the territories of the States** என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, அதிலிருந்து மாநிலங்கள் அத்தனையும் இருந்தால்தான் இந்தியப் பேரரசு. அந்த வகையில் மாநிலங்கள் தன்னந்தனியரசு இயங்கும் வகையில் பரவலாக அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும். இப்பொழுது பார்க்கிறோம், மக்கள் கேட்கிறார்கள்; பஞ்சாயத்துத் தலைவர் கேட்கிறார்; முனிசிபல் தலைவர் கேட்கிறார்; இவர்களெல்லாம் மாநில அரசிடமிருந்து தங்களுக்கு அதிகாரம் வேண்டும் என்று, சில உரிமைகளை எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்கிறார்கள். மத்திய சர்க்காரிலிருந்து கேட்பதைப் பார்க்கிறோம். அந்த முறையில்தான் நம்முடைய பஞ்சாயத்துக்களும், நகர சபைகளும், நம்மிடத்திலிருந்து கேட்பதைப் பார்க்கிறோம். அந்த முறையில் தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும், அரசியல் வளர்ச்சியும் பண்பாட்டு வளர்ச்சியும் ஏற்படும். ஆக, அத்தனை வளர்ச்சிக்கும் இது போன்று அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். மத்திய சர்க்காரிடத்தில் குவியக் கூடாது. ஆகவே, இந்தத் தீர்மானம் ஒரு பொருத்தமான தீர்மானம். அந்த [illegible] எங்களுடைய பெருந்தலைவர் ராஜாஜி அவர்கள் [illegible]

[திரு. சா. பெய்யப்பன்] [1969 ஆகஸ்ட் 21

'டெலிகேட்டட் லெஜிஸ்லேஷன்' செய்யப்பட வேண்டும் என்று சொல்வதற்கு [illegible]. இந்த மாமன்றத்தில் இந்தத் தீர்மானம் ம.பொ.சி. ஐயா கொண்டுவந்திருப்பது முழு மனதோடு நிறைவேற்றப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, தமிழரசுக் கழகத் தலைவர் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் கொண்டுவந்திருப்பதன் முக்கிய நோக்கம், மத்தியில் குவிகின்ற அதிகாரங்கள் தடுக்கப்பட்டு, அந்த அதிகாரங்கள் மாநிலங்களுக்கு ஏராளமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் என்று கருதுகிறேன். மாநில சுயாட்சி என்று தீர்மானத்திலே இருந்தாலும், இந்தியப் பேரரசோடு ஒட்டிக்கொண்டு, உறவு வைத்துக்கொண்டு வாழவேண்டும் என்பதுதான் நோக்கம் என்றும் கருதுகிறேன். சுயாட்சி என்ற சொல், மத்திய அரசோடு வெட்டிக்கொண்டு, தன்னந்தனியாக இயங்கவேண்டும் என்ற பொருளில் இந்தத் தீர்மானத்தில் இல்லை என்று கருதுகிறேன். மாநிலங்களுக்கு அதிகாரங்கள் போதாது, பரவலாக இருக்கவில்லை. மத்திய அரசிடம் குவிந்துபோய் இருக்கிறது என்கிற கருத்து இன்றைய தினம் ஏற்பட்டது அல்ல. இந்திய அரசியல் சட்டம் உருவான காலத்திலிருந்தே அந்தக் கருத்து கூறப்பட்டு வருவதை நாம் அறிவோம். நம்முடைய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட நேரம், இந்தியாவிற்கு பிரிட்டிஷ்காரர்களிடமிருந்து சுதந்திரம் கிடைத்த பூரிப்பான நேரத்தில், இந்திய அரசியல் நிர்ணய சபை நிறுவப்பட்டது. அந்தச் சபையை அன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்ணய சபை என்று ஒப்புக்கொள்ளப்பட முடியாத நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்களும், மாநிலச் சட்ட மன்றத்திலிருந்து சில பிரதிநிதி களும் சென்று, எல்லோருமாக உட்கார்ந்து அரசியல் நிர்ணயம் செய்தார்கள். அப்படிப்பட்ட சபையில், திரு. அல்லாடி கிருஷ்ண சாமி அய்யர் போன்ற சிறந்த வழக்கறிஞர்கள் இருந்தார்கள் என்றாலும், அன்றைய தினம் இருந்த சூழ்நிலையில், மிக சக்தி வாய்ந்த ஒரு மத்திய சர்க்கார் இருக்கவேண்டும் என்ற கருத்தில் அன்றைக்குச் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு உலகத்தின் அரசியல் வல்லுநர்களால் நமது அரசியல் சட்டம் ஆராயப்பட்ட போது, ஐவார் ஜென்னிங்ஸ் போன்ற நிபுணர்கள் நம்முடைய அரசியல் சட்டத்தை எடுத்து ஆராய்ந்து, இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் எந்த அடிப்படையில் செய்யப்பட்டிருக்கிறது என்று பார்த்தால், ஒரு தெளிவான அடிப்படையில் இந்த அரசியல் சட்டம் நிர்ணயம் செய்யப்படவில்லை என்று குறிப்பிட் டிருக்கிறார்கள். அரசியல் நிர்ணயம் உலகத்தில் இரண்டு விதமாக இருக்கின்றன. ஒரு முறை, 'யூனிடரி ஃபார்ம் ஆப் கவர்ன்மெண்ட்'; இன்னொரு முறை, 'பெடரல் பார்ம் ஆப் கவர்ன்மெண்ட்'. இன் றைய தினம் அமெரிக்க நாட்டை எடுத்துக் கொண்டால், அந்த



1969 ஆகஸ்ட் 21] [திரு. இராம அரங்கண்ணல்]

நாட்டின் அரசியல் சட்டம் 'பெடரல் ஃபார்ம் ஆப் கவர்ன்மெண்ட்'. பிரெஞ்ச் நாட்டை எடுத்துக் கொண்டால், அல்லது ஆஸ்டரேலிய நாட்டின் முறையைப் பார்த்தால், அவை 'யூனிடரி பார்ம் ஆப் கவர்ன்மெண்ட்'. யூனிடரி பார்ம் ஆப் கவர்ன்மெண்டில் எல்லா அதிகாரங்களும் மத்திய சர்க்காருக்கு இருக்கும். மத்திய சர்க்கார் தான் மாநிலங்களுடைய தலைவிதியை நிர்ணயிக்கும். அப்படி எல்லா அதிகாரங்களையும் வைத்திருப்பதற்கு யூனிடரி பார்ம் ஆப் கவர்ன்மெண்ட் என்று பெயர். அந்தக் காரணத்தினால்தான், இந்திய யூனியன் என்று சொல்வதில் பூரிப்பு அடைந்திருந்தாலும், இந்தியா ஒரு யூனியன் இல்லை, இந்திய யூனியன் என்று அழைக்கப் பட முடியாது, வேண்டுமென்றால், 'ரிபப்ளிக்' என்று அழைக்கலாம் என்ற கருத்தை அன்றைய தினமே எடுத்துக் காட்டினார்கள். நம்முடைய அரசியல் அமைப்பை நாம் பெடரல் பார்ம் ஆப் கவர்ன்மெண்ட் என்று ஒரு பக்கத்தில் சொல்லிக்கொண்டு இருந்தாலும், அதில் பெடரல் பார்ம் இருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் சொல்லவேண்டும். மாநிலங்களுக்கு ஏராளமான அதிகாரங்கள் இருக்கும் பெடரல் பார்ம் ஆப் கவர்ன்மெண்டில், தங்களைத் தாங்களே ஆண்டுகொண்டு, சில யோசனைகளையும் பொதுவான காரியங்களையும் நடத்தும் அதிகாரம் மத்தியில் வைத் திருப்பார்கள். அன்றைய தினம் நம்முடைய அரசியல் சட்டத்தில் அப்படி தெளிவாக்கத் தவறிவிட்டார்கள். இதனால் நான் அரசியல் சட்டத்தைக் குறை கூறுகிறேன் என்று அர்த்தம் அல்ல. அரசியல் நிர்ணயச் சட்டத்தைச் செய்தவர்கள் அவசரத்தினாலோ, புதிதாக சுதந்திரம் பெற்ற ஆர்வத்தினாலோ, வெகு சீக்கிரமாகச் செய்ய வேண்டுமென்ற வேகத்தினாலோ, பிரான்ஸ் நாட்டு அரசியல் சட் சட்டத்திலிருந்து கொஞ்சம், ஆஸ்திரேலியா நாட்டு அரசியல் சட்டத்திலிருந்து கொஞ்சம், அமெரிக்க அரசியல் சட்டத்திலிருந்து கொஞ்சம், ஸ்விட்ஸர்லாந்து நாட்டிலிருந்து ஒரு சில பகுதிகளையும் எடுத்துக்கொண்டு, அமெரிக்க பெடரல் முறைகளிலிருந்து ஒரு சிலவற்றையும், இங்கிலாந்து நாட்டின் பார்லிமெண்டரி முறைகளில் சிலவற்றையும் எடுத்துக்கொண்டு ஒரு அவியலாகச் செய்து வைத்துவிட்டார்கள். இதனால்தான் மத்திய அரசுக்கு இன்னின்ன அதிகாரம் இருக்க வேண்டுமென்றும், மாநிலங்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்க வேண்டுமென்றும், மத்திய அரசுக்கும் மாநில அரசாங்கங்களுக்கும் உள்ள உறவு முறைகள் குறித்தும் தெளிவாகக் குறிப்பிடவில்லை. இந்த இந்தக் காரியங்களைத்தான் மாநிலங்கள் கவனிக்க வேண்டும், இந்த இந்தப் பொறுப்பு மத்திய அரசிடம் இருக்க வேண்டும், இரு அரசும் கவனிக்கப்படவேண்டியது கன்கரண்ட் சப்ஜெக்ட் என்றும் சொல்லியிருக்கிறார்கள். கடந்த 21 ஆண்டுகளின் வரலாற்றைப் பார்த்தால், தமிழக அரசின் வரலாற்றைப் பார்த்தால், இது தெரியும். இன்னின்னவை என்று அரசியல் சட்டம் சொல்லியிருக்கிறதேயொழிய, அந்த அதிகாரங்களையெல்லாம் மத்திய அரசு பிரித்துக் கொடுத்திருக் கிறதா என்றால் இல்லை. அந்த அதிகாரங்கள் மாநிலங்களுக்கு [illegible]

பி ப. 1-00

[illegible]

[திரு. இராம. அரங்கண்ணல்] [1969 ஆகஸ்டு 21

வழங்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், மாநில அரசாங்கங்களின் அதிகாரங்களை மத்திய அரசு பிடுங்கி எடுத்திருக்கிற நிலையை நாம் பார்க்கிறோம்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்கள் குறிப்பிட்டது போல், இங்கே ஒரு சுகாதார இலாகா என்றால் மத்தியிலும் ஒரு சுகாதார இலாகா, சுகாதார அமைச்சர் இருக்கிறார். சுகாதாரத்தை வளர்ப்பதற்கான பூரண அதிகாரங்களையும், பூரண உரிமைகளையும் மாநிலந்தான் பெற்றிருக்கவேண்டும். மத்திய அரசில் ஒரு சுகாதார அமைச்சர் ஏன்? அங்கு ஒருவர் அமைச்சராக மத்தியில் அமர்ந்துகொண்டு, ஃபேமிலி பிளானிங் என்று அவர் ஒரு அறிக்கை அனுப்புவதும், அதற்கு இங்கு இருக்கிற அமைச்சர் பதில் அனுப்புவதும் ஏன்? இதன் காரணமாக பொதுமக்களின் பணம் விரயமாகும் முறை இருக்கிறது.

அதுமட்டுமல்ல, இங்கே ஒரு உணவு இலாகா, உணவு அமைச்சர் என்றால், மத்தியிலும் ஒரு உணவு இலாகா, அதற்கென்று ஒரு மந்திரி, அதற்காகப் பல ஆபீசர்கள், இவையெல்லாம் அவசியந்தானா? என்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்கள் கேட்டார்கள். அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமென்பது ஒரு கட்சிப் பிரச்சினை அல்ல. ஏதோ பிரிவினை கேட்டவர்கள் இப்படிச் சொல்லுகிறார்களே என்று யாரும் கருதிவிடக் கூடாது. நாம் எதிர்காலத்தைப்பற்றி எண்ண வேண்டியிருக்கிறது. பாராளு மன்றத்தில் இன்றைய தினம் சுமார் 500 உறுப்பினர்கள் இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். ஐந்தாண்டுக்கு ஒரு முறை சட்டம் திருத்தப்பட்டு ஜனநாயக அடிப்படையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிற நேரத்தில், இன்னும் இருபது ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, இந்திய நாட்டு மக்கள் தொகை இன்றைக்கு நாற்பது கோடியாக இருப்பது 100 கோடியாக உயர்ந்துவிடும். கிட்டத்தட்ட 20 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு 1,500 பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பார்கள். அந்தந்த மாநிலங்களிலும் இரண்டு பங்கு, மூன்று பங்கு சட்ட மன்ற உறுப்பினர்கள் இருப்பார்கள். இருபதாண்டுக் காலத்திற்குப் பிறகு இந்தியாவின் அரசியல் சட்டம் திருத்தப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இப்பொழுதே பாராளுமன்றம் 500 பேர்களை வைத்துக்கொண்டு சரியாக இயங்க முடியவில்லை. இருபதாண்டுக் காலத்திற்குப் பிறகு மக்கள் தொகை 100 கோடியான பிறகு, அப்போதைய நிலைகளைச் சந்திக்க வேண்டும் என்பதை இப்போதே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்பதற்குக் காரணம், பொதுமக்களின் பணம் ஏராளமான அளவில் நிர்வாகம் என்ற முறையில் செலவழிந்து கொண்டிருக்கிறது. அன்றைய தினம் வெள்ளைக்காரன் ஆண்ட காலத்தில் ஒரு ரூபாய் செலவாகிறது என்றால், இன்றைய தினம் ஐந்து மடங்கு, ஆறு மடங்கு நிர்வாகத்திற்குச் செலவாகிறது. அன்றைய தினம் வைஸ்ராய்க்கு



1969 ஆகஸ்ட் 21] [திரு. இராம. அரங்கண்ணல்]

பேர்கள்தான் அட்வைசர்களாக இருந்து இந்திய நிர்வாகத்தை நடத்திச் சென்றார்கள். ஆனால் இன்றைய தினம் என்ன நடக்கிறது? இந்தியப் பூபாகத்தை வைஸ்ராய், அந்த ஐந்து அட்வைசர்களுடன் நடத்திச் சென்றார். இன்றைய தினம் ஐந்து பேர்கள் இருந்த இடத்தில் நூறு பேர்கள் இருநூறு பேர்கள் மந்திரிகளாகயிருந்து செயல்படுகிறார்கள். அப்படியும் காரியங்கள் வேகமாக நடைபெறுவதில்லை. இப்போதிருக்கிற 100, 200 பேர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம், மற்றச் செலவுகள் என்ன என்பதைப் பார்க்க வேண்டும்.

இந்தியக் குடிமகன் ஒருவனுக்கு இரண்டு எஜமானர்கள் இருக்கிறார்கள். ஒன்று மாநில எஜமான், இன்னொன்று மத்தியிலே இருக்கும் எஜமான். இந்த இரண்டு எஜமானர்களும் தங்களுடைய வேலைகளைக் கருத்து ஒற்றுமையாகச் செய்கிறார்களா என்றால், இல்லை. கருத்து வேற்றுமை இவர்கள் இருவருக்கும் ஏற்படுமானால் இடையில் குடிமகன்தான் மூழ்க வேண்டியவனாக இருக்கிறான். மனிதனாகப் பிறந்தவன் தலைவன் எதுவும் இல்லாமல், கட்டுப்பாடு எதுவும் இல்லாமல், சுதந்திர மனிதனாக எண்ணங்களைச் சொல்லி, நல்ல இலாபத்தையும் பெற்று, பூரண சுதந்திர மனிதனாக வாழ வேண்டும் என்று சொன்னால், மாநிலங்களுக்கு அதிகாரம் ஏராளமாக இருக்க வேண்டும். "டெல்லியில் ஒரு சர்க்கார் இருக்கக்கூடாது; இந்தியா சிதறுண்டு போகவேண்டும்; இந்தியா பற்பல இனங்களாகப் பிரிய வேண்டும்" என்று நான் சொல்லவில்லை. மத்திய அரசிலே இருப்பவர்கள் இன்றைய தினம் தங்களிடம் குவிந்திருக்கிற அதிகாரங்களைக் கொடுத்துவிட்டு, கட்டுப்பாட்டையும், ஒற்றுமையையும் உருவாக்கத் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

எனக்குமுன் பேசிய நண்பர் திரு. மெய்யப்பன் அவர்களும் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மறைந்துவிட்ட மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே இதைப்பற்றிச் சொன்னார்கள். அந்தக் கருத்துத்தான் வெற்றி பெறும் என்று கருதுகிறேன். "யுனைடெட் ஸ்டேட்லில் ஐக்கிய நாடுகள் சபை (யு.என்.ஓ.) இருக்கிறது. அங்கு கிட்டத் தட்ட 120 நாடுகளுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் அங்கம் வகிக்கிறார்கள். அவர்கள் அந்த சபையில் பல நாட்டுப் பிரச்சனைகளைப் பேசி, அலசி, ஆராய்ந்து, தக்க தீர்மானம் செய்கிறார்கள். அதே போல் டெல்லியிலும் இந்தியன் நேஷனல் ஆர்கனைசேஷன் என்று இருக்க வேண்டும். 'நேஷனல்' என்ற வார்த்தை வேண்டியதில்லை என்று சொன்னாலும், இந்தியன் ஸ்டேட்ஸ் ஆர்கனைசேஷன் என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, மாநிலங்களில் இருக்கிற கவர்னர்கள் அங்கே அங்கம் வகிக்க வேண்டும். இப்போதிருக்கும் கவர்னர் நியமன முறை சரியல்ல. கவர்னர் சட்டமன்றத்தின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராகவோ, அல்லது பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராகவோ இருக்க வேண்டும்.

[திரு. இராம அரங்கண்ணல்] [1969 ஆகஸ்ட் 21

அப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 17 மாநில கவர்னர்களும் தங்கள் தங்களுடைய மாநிலத்தின் குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த 17 மாநிலக் கவர்னர்கள் தங்களுக்குள் ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். பொதுவாக, தமிழ்நாட்டிற்கும் மைசூருக்கும் தகராறு என்று சொன்னால், தமிழ்நாட்டிற்கும் ஆந்திராவிற்கும் தகராறு என்று சொன்னால் அந்தத் தகராறை இந்தியன் ஸ்டேட்ஸ் ஆர்கனைசேஷன் தீர்க்க வேண்டும். பொதுவான விஷயங்களைக் கூடி ஆராய்ந்து யோசனை வழங்க, ஐ. எஸ். ஓ. சபையாக ஏற்பட்டால் மிகவும் நல்லது. மேலும், ஒவ்வொரு சட்டமன்றத்திலிருந்தும், பாராளுமன்ற உறுப்பினர்களை அனுப்புவதுபோல், ஐந்து பேர் அல்லது பத்து பேர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். இப்படி அனுப்பப்படுபவர்களின் தொகை சுமார் 200 என்று இருக்கலாம். அவர்கள் அத்தனைபேரும் அமர்ந்து, இந்தியா பூராவிற்கும் உள்ள எல்லாப் பிரச்சினைகளையும் ஆராய்ந்து, நாட்டின் ஒற்றுமைக்கான வழிவகைகளை ஆராய்ந்து, நாட்டினுடைய ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் பாதுகாக்கவும் உறுப்பினர்கள் அங்கே இருப்பார்கள் என்ற நிலைமை ஏற்படும். இந்தியா ஜனநாயக முறையில் விளங்க ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும். ஆகவே, மாநிலங்களுக்கு இன்னும் அதிகமான அதிகாரங்களை வழங்கக் கூடிய பிரச்சினையில் நாம் இருக்கிறோம்.

இந்தக் கருத்தை எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகம் மிகவும் வலியுறுத்தி வருகின்ற காரணத்தினால் இன்றைய தமிழக அரசு இதைப்பற்றி ஆராய்வதற்குப் பல்லாண்டு பொதுவாழ்வில் அரசியல் சார்பின்றி இருந்தவர்களைக்கொண்டு ஒரு குழுவை அமைத்திருக்கிறது. குறிப்பாக கால் நூற்றாண்டு பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருந்த திரு. லட்சுமணசுவாமி முதலியார் அவர்களையும், நீதி மன்றத்துறையில் சிறப்பாகப் பணியாற்றி புகழ்பெற்ற திரு. ராஜமன்னார், திரு. சந்திராரெட்டி ஆகியவர்களையும் கொண்ட ஒரு கமிஷனைப் போட்டு யோசனை கேட்க ஆரம்பித்திருக்கிறது. இந்த யோசனையைப் பெற்ற பிறகு, அதற்குத் தகுந்தவாறு சட்டமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி உள்ள எல்லாக் கட்சியினரும் எண்ணிப்பார்க்கவேண்டும். நேற்றையதினம் காங்கிரஸ் கட்சிக்கு இருந்த நிலை இன்றைக்கு இல்லை. இன்றைக்கு இருப்பது நாளை எப்படி மாறும் என்று சொல்ல முடியாது. நாங்களும் இதை எண்ணிப்பார்க்கவேண்டும். சுதந்திராக் கட்சியினரும், கம்யூனிஸ்ட் கட்சியினரும் இதனை எண்ணிப்பார்க்கவேண்டும். இப்படி ஜனநாயக யுகத்தில் அந்த அந்தக் கட்சியினர்கள் எண்ணிப்பார்ப்பதில் தவறு இல்லை. எதிர்கால நிலைமையை ஆழ்ந்து சிந்தித்து எண்ணிப்பார்த்தே நாம் செயல்பட வேண்டும். அப்போதுதான் ராஜ்யங்கள் இன்பத்தைப் பெற முடியும். ஆகவே இந்த உயர்ந்த கருத்துக்குச் சட்டமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி, நல்லதொரு அபிப்பிராயத்தை உருவாக்கவேண்டுமென்று சொல்லி நான் அமர்கிறேன்.



1969 ஆகஸ்ட் 21]

**திரு. என். சங்கரய்யா** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம் அவர்களால் முன்மொழியப் பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை என் சார்பிலும், நான் சார்ந்திருக்கிற மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி சார்பிலும் ஆதரித்து, அரசும், இந்த மன்றமும் இதை ஏற்கவேண்டுமென்று சில கருத்துக்களைக் கூற நான் நிற்கிறேன்.

இன்று இருக்கக்கூடிய அரசியல் அமைப்புச் சட்டம் நிறை வேற்றப்பட்டபோது இருந்த அரசியல் நிலைமை இன்றைக்கு மாறிப்போய் இருக்கிறது. சட்டத்தை அன்றைக்கு நிறைவேற்றும் போது இதுபோன்ற மாறுதல் ஏற்படக்கூடும் என்றே அவர்கள் எண்ணிப்பார்த்திருக்க முடியாது. இருபதாண்டுக்குள்ளாகப் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு ஜனநாயகக் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட மாற்றுக் கட்சி அரசாங்கங்கள் ஏற்படக்கூடும் என்பதைக்கூட எண்ணிப்பார்க்காது அரசியல் அமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆகவேதான் இப்போது ஏற்பட்டிருக்கிற இந்த அடிப்படையான மாறுபட்ட சூழ்நிலைக்கு ஏற்றவாறு அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்து வதற்கு மக்கள் கவனத்தோடு செயலாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் இன்றைக்கு ராஜ்யங்களில் உள்ள காங்கிரஸ் அல்லாத அரசாங்கங்கள், மத்திய அரசின் ஆணையின் கீழ் செயல்பட மறுத்தால் அதைக் கலைத்து விடுவோம் என்று பகிரங்கமாக, தொடர்ச்சியாக மிரட்டிக்கொண்டு வருவதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நிலைமை ஏன் ஏற்படுகிறது? மத்திய அரசாங்கம்தான் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டதா? மாநில அரசாங்கங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லையா? மாநில அரசாங்கங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாததுபோல எண்ணிக்கொண்டு அவர்கள் இப்படிப் பேசுவது ஜனநாயக அடிப்படைக் கருத்துக்கே முரணானது ஆகும். அதையொட்டித்தான் இந்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சர் அரசியல் ரீதியாக, சித்தாந்த ரீதியில் ஒரு மாநில முதல் அமைச்சர் வெளியிட்ட கருத்துக்கு விளக்கம் கோரினார். அப்படி விளக்கம் கோர உரிமை உண்டு என்கிற முறையில் செயல்பட்டார். இதன் காரணமாகத்தான் அந்த மாநில முதல் அமைச்சர் தாம் அரசியல் கட்சி சித்தாந்த ரீதியில் வெளியிட்ட அறிக்கைக்கு மத்திய அரசாங்கத்திற்குப் பதில் சொல்ல எந்தவிதத்திலும் கடமைப்படவில்லை என்கிற பதிலை அளிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஆகவேதான் நான் கருதுகிறேன். இந்திய நாட்டில் உள்ள மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தரப்படவேண்டும் என்பது இந்தியாவில் வாழும் மக்களுடைய அடிப்படை ஜீவாதார ஜனநாயகப் பிரச்சினையாகும். இன்னும் சுருக்கமாகச் சொல்லப் போனால் இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு மாநிலங்கள்

[திரு. என். சங்கரய்யா] [1969 ஆகஸ்ட் 21

பல்வேறு தேசிய இனங்களை அடிப்படையாகக் கொண்டவை. பலபல மொழிகள் பேசும் பலபல சுதந்திர இனங்களைக் கொண்ட, சுதந்திர நாடுகளைக் கொண்டதொரு அமைப்பைப் போன்றதாகும். இன்றைக்கு உலகத்தில் சுதந்திர நாடுகளாக உள்ளவற்றையும்விட அதிகமான அளவு ஜனத்தொகை கொண்ட மாநிலங்கள் இருக்கின்றன. ஆகவேதான் இப்படிப்பட்ட தனித் தன்மை வாய்ந்த தேசிய இனங்களைக் கொண்ட மாநிலங்களை எல்லாம் சேர்த்த ஒரு கூட்டாட்சியை மத்தியில் ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கையை நாங்கள் ஆதரிக்கிறோம்.

இன்றைக்கு இருக்கும் நிலை என்ன ? ஒரு மாநிலம் தன்னுடைய மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக ஒரு சட்டத்தை நிறைவேற்றுவது என்றால் அந்தச் சட்டத்திற்கு முன் அனுமதியை இந்திய சர்க்காரிடம் இருந்து பெறவேண்டும். சட்டம் நிறை வேற்றப்பட்ட பிறகும் மத்திய சர்க்காரின் அனுமதி பெற வேண்டும். எதற்காக இந்தவிதமான இடைஞ்சல்கள் இருக்க வேண்டும் ? இப்படிப்பட்ட பல இடைஞ்சல்கள் இருப்பதன் காரணமாகத்தான் மக்களுக்குச் சில சௌகரியங்களைச் செய்வதற்குப் பொருளாதார ரீதியில் சமுதாய ரீதியில் செயலாற்ற அரசியல் அமைப்புச் சட்டம் தடங்கலாக விளங்குகிறது. நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரவேண்டுமென்றால் அதற்கு மத்திய அரசாங்கத்தின் முன் அனுமதி தேவை. பின் அனுமதி தேவை. இப்படிப்பட்ட இடைஞ்சல்களை நடைமுறையில் பார்க்கும்போது தான் மக்களுக்குச் செய்யவேண்டிய குறைந்தபட்சக் கடமைகளைக் கூட நிறைவேற்ற முடியாது அரசியல் அமைப்புச் சட்டம் அமைந் திருக்கிறது. ஆகவேதான் இது திருத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

மற்றொரு விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் ராஜ்ய சபாவுக்கு அந்த அந்த மாநிலங்களில் உள்ள ஜனத்தொகை விகிதாச்சாரத்தில் உறுப்பினர் எண்ணிக்கை கொடுக்கிறார்கள். உண்மையில் இதுகூட எல்லா ராஜ்யத்திற்கும் சமமான எண்ணிக்கை உள்ள உறுப்பினர்கள் வரும்படி அமையவேண்டும். ஒரே எண்ணிக்கையுள்ள பிரதிநிதிகள் இருந்தால்தான் எல்லா மாநிலங்களுக்கும் சமமான உரிமை இருக்கும். இன்றைக்கு நாட்டில் இருக்கக் கூடிய அரசியல் அமைப்பைப் பயன்படுத்தி அதிக வசதிகளைப் பெற்றுக்கொண்டு இருக்கக்கூடிய கூட்டங்கள்தான் முற்போக்கான மாற்றங்களுக்கு இடம் அளிப்பதாக இல்லை.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கோரப்படுவதுபோல மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் அதிக அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்பதைத் ஜனநாயகத்தின் அடிப்படை அம்சமாகவே நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஆகையால் இன்றைக்கு நமது அரசாங்கம் ஒரு குழுவை அமைத்து இதைப்பற்றி ஆராய்ந்தறியச் செய்திருக்கிறார்கள் என் கிறபோது ஒரு உண்மையை நாம் கவனிக்கவேண்டும். மொழிவாரி



1969 ஆகஸ்ட் 21] [திரு. என். சங்கரய்யா]

யாக மாநிலங்கள் அமைக்கப்படுவதையே எதிர்க்கின்றவர்கள் இருக்கிறார்கள். மொழிவழி மாநிலங்கள் அமைகின்ற கருத்தை ஏற்றுக்கொண்டவர்கள்தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கவேண்டும் என்கிற கருத்தையும் ஏற்க முடியும். இத்தகைய வர்களைக் கொண்ட குழுவினால்தான் சரியான கொள்கையை ஏற்படுத்த முடியும். இதுபற்றிப் பரிசீலிப்பதற்கு ஏற்றதொரு சூழ்நிலை இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு இந்தத் தீர்மானத்தை ஏற்று மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெறுவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, சபையில் வைக்கப்பட்டிருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவஞானம் அவர்களுடைய தீர்மானத்தை ஆதரித்து இரண்டொரு வார்த்தை கள் கூற விரும்புகிறேன். இன்றைக்கு ராஜ்யங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டுமென்ற உணர்வு ஒவ்வொரு நாளும் அதிகப்பட்டுக்கொண்டே வருகிறது. இப்படி அதிகப்பட்டு வருகிற உணர்வுகளை சீராகப் பரிசீலித்துச் சரியாக நிறைவேற்ற வேண்டு மானால் இன்றைக்கு இருக்கிற அரசியல் சட்டத்தை மாற்றியாக வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்துவேறுபாடு இருக்க முடியாது.

சுதந்திரம் கிடைத்தவுடன் நாடு பெரியதொன்றைப் பெற்று விட்டது என்ற உணர்வில் அன்றைக்கு இருக்கிற சூழ்நிலைக்கு ஏற்ப அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. அப்போது உண்டாக்கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டம் எல்லாக் காலத்திற்கும் சரியானது என்றோ, எல்லோரும் எல்லாக் காலத்தும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதோ சரியானது அல்ல. அப்போது இருந்த சூழ்நிலை வேறு, உணர்வுகள் வேறு. இன்றைக்குள்ள நிலைமையை நன்கு சீர்தூக்கிப் பார்த்துச் சீர்திருத்திக் கொள்ளவேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. இன்றைக்கு எல்லாவிதமான உணர்வுகளும் மாறிவிட்டது. தன்மையும் மாறிவிட்டது. பழக்க வழக்கங்கள், உடைகள், உணவுகள் கூட மாறி வருகின்றன. இன்றைக்கு அரசியல் ரீதியாக ஒரு கட்சியிலேயே இரண்டு கருத்துக்கள்—ஒருவிதமான கருத்து மோசமானது என்று சொல்வது ஆகிய நிலை எல்லாம் ஏற்பட்டு வருகிறது. அப்படி இவற்றைச் சரியாகச் செய்யவேண்டுமென்று சொன்னால் இன்றைக்குச் சொல்லப்பட்ட கருத்து அல்ல அது. வெகு நாளைக்கு முன்னாலே சோஷலிஸ்ட் கட்சி 4 தான் அரசியல் என்று தேர்தல் பிரகடனப்படுத்தியிருக்கிறது. 4 தான் அரசியல் என்று சொன்னால் கீழேயிருந்து மேலே வரையிலும் எப்படி எப்படி அதிகாரங்கள் இருக்கவேண்டுமென்று வரையறுத்துச் சொல்லியிருக்கிறது. நாங்கள் சரியானது என்று ஏற்றுக்கொள் கொள்வோர் ஆராய்வோர்.

எதற்கோ அன்றைக்கு நிலைமை உருவாகி வளரவில்லை. இன்றைக்கு உருவாகி வளர்ந்து அதனுடைய பிரதிபலிப்பாகத்தான் இந்தத் தீர்மானம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் அதற்காக ஒரு போராட்டத்தையே நடத்த வேண்டுமென்று முடிவெடுத்து அதைத் துவக்கியிருக்கிறார்கள் என்பதையும் இந்தச் சபை அறியும். அரசியல் சட்டத்தை மாற்றவேண்டுமென்பதைப் பொறுத்தவரையிலே அபிப்பிராய வித்தியாசம் இல்லை. அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்கவேண்டுமென்பதிலேயும் அபிப்பிராய வித்தியாசம் இல்லை. ஆனால் எப்படிப் பகிர்ந்து அளிப்பது என்பதிலேதான் மாறுபாடான கருத்துக்கள் இருக்கின்றன.

வெளிநாட்டுறவு, ராணுவம் போன்ற சில காரியங்களை மத்திய அரசே வைத்துக்கொண்டு மற்ற அதிகாரங்களையெல்லாம் ராஜ்யங்களுக்குப் பகிர்ந்து அளிக்கவேண்டுமென்று சொன்னால் ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். தேசத்தைச் சுற்றி இன்றைக்கு இருக்கக்கூடிய அபாய நிலைமைகளை நாம் புறக்கணித்துவிட முடியாது. சுதந்திரம் நீடிக்கவேண்டும் என்றால் நமக்கு அதிகாரங்கள் இருக்கவேண்டுமென்றால் பாதுகாப்புள்ளவர்களாக, காரியங்களைச் செய்யக்கூடிய சக்தியுள்ளவர்களாக நாம் இருக்கவேண்டுமென்றால் எல்லையிலே இருக்கக்கூடிய அபாயங்களை நாம் சிறிதாக மதிக்கமுடியாது. மற்றவர்களின் படையெடுப்பிலிருந்து நம்மைப் பாதுகாக்கவேண்டும். அதற்காக தேவைப்படும் பணத்தை நாம் எங்கேயிருந்து எடுத்துக்கொள்வது? கிட்டத்தட்ட ஆயிரம் கோடி ரூபாய் பாதுகாப்புக்காக வருடத்திலே செலவாகிக்கொண்டு இருக்கிறது.

மத்திய அரசாங்கத்திடத்திலே சில அதிகாரங்களைக் கொடுத்துவிட்டு பணத்தை அது எடுத்துக்கொள்வதற்கு வழிவகைகளைச் சொல்லாமல் விட்டுவிடமுடியாது. தேசத்தைப் பாதுகாக்கக்கூடிய முறையில் வலுவுள்ளதாக்கக் கூடிய முறையில் நம்முடைய சக்தி இருக்கவேண்டும். இந்த அரசுக்கும் மத்திய அரசுக்கும் போட்டா போட்டி என்ற நிலைமையில் பார்க்காமல் ஒரே அரசு, தேசத்தினுடைய நன்மைக்காக இருக்கிற அரசுகள் என்ற உணர்வு இருந்தால்தான் இதைப் பிரச்சனையை நாம் தீர்க்கமுடியும். கீழேயிருந்து பஞ்சாயத்து முறையிலே இருந்து ராஜ்ய அரசு வரையிலும் அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்கவில்லையென்றால் சிக்கல்கள் வரும். பஞ்சாயத்துத் தலைவரை அங்குள்ள மக்களே நேர்ந்தெடுக்கவேண்டுமென்ற கருத்து இங்கே பலமுறை வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஜனநாயகம் தழைப்பதற்காக, ஜனநாயகம் வளர்வதற்காக, ஜனநாயகம் நிலைப்படுவதற்காக தேவையான மாற்றங்களைச் செய்துகொண்டு போவது நம்முடைய கடமைக்கு, அறிவுக்கு உகந்தது. இது ஒப்புக்கொள்ளக்கூடிய வாதம். ஜனங்களுடைய அறிவு வளரும்பொழுது, அனுபவம்



வளரும்பொழுது அதற்கு அனுசரணையாக சட்டங்களும், நடைமுறைகளும், கோட்பாடுகளும் மாறித்தான் ஆகவேண்டும். மாற்ற வேண்டுமென்ற நிலைமையில்தான் இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமை உருவாகி வளர்ந்து பக்குவமாகிக்கொண்டிருக்கின்ற தன்மையை நாம் பார்க்கிறோம். ஆனால் அதை எல்லோரும் ஒன்று சேர்ந்து விரும்பிச் செய்தால் சிறப்பானதாகச் செய்ததாக இருக்கும். மாறுதல்கள் வராமல் எப்படித் தடுக்கலாம் என்ற முறையில் குதர்க்க வாதம் பேசிக்கொண்டிருந்தால் மனஸ்தாபங்கள் தான் உண்டாகும், அதன்மூலம் பல கெடுதல்கள் உண்டாகும். இன்றையதினம் கொண்டுவந்திருக்கும் தீர்மானமானது இன்றைய நிலைக்கு மிகப் பொருத்தமானது, இதை நிறைவேற்றி அனுப்புவதன் மூலம் மத்திய அரசிலே உள்ளவர்கள் மாறிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுடைய மாற்றத்திற்கு இது ஒரு வேகமாக உற்சாகமாக, தெம்பாகச் சென்று சேரும் என்று கருதுகிறேன். பிரஜா சோஷலிஸ்ட் கட்சியானது மனநிறைவுடன் உற்சாகமாக இதை ஆதரிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இதன்மேல் விவாதம் அடுத்த தனியார் அலுவல்கள் எடுத்துக்கொள்ளும் நாளில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இன்று இதந் அளவோடு பேரவையின் நிகழ்ச்சிகள் முடிவுற்று மீண்டும் நாளை காலை 9 மணிக்கு பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## 8. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.* பி. ப. 1–25.

'Nil'.

### B. *Reports, Notifications and other papers.*

@ 35. An approach to the Fourth Plan by Hon. Thiru K. A. Mathialagan, Minister for Finance (English and Tamil).

@ 36. Speech of Hon. Thiru K. A. Mathialagan, Minister for Finance, presenting the Bill to further amend the Tamil Nadu Contingency Fund Act, 1954 (English and Tamil).

@ 37. Demands for Grants for Excess Expenditure for the year 1965–66 (English and Tamil).

@ 38. Notice of Demands for Grants for Excess Expenditure in the year 1965–66 (English and Tamil).

@ 39. Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1969–70 (English and Tamil).

@ 40. Notice of Demands for Grants for Further Expenditure in the year 1969–70 (English and Tamil).

@ 41. Speech of Hon. Thiru K. A. Mathialagan, Minister for Finance, presenting the Statement of Demands for Grants to cover excess expenditure relating to the year 1965–66 (English and Tamil).

@ 42. Speech of Hon Thiru K. A. Mathialagan, Finance Minister, presenting the First Supplementary Estimates for 1969-70 (English and Tamil).

* 43. The Constitution (Twenty-Second Amendment) Bill, 1969.

122526

V211,31 N69

N69.21.4-6

@ Laid on the Table of the House on 20th August 1969.

* Despatched to Members on the 19th August 1969.